# நீரில் விளக்கெரியும்
# நந்திக்கடல்



இளைய அப்துல்லாஹ்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய அப்துல்லாஹ்

# நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்

காலச்சுவடு பதிப்பகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்** • பத்திகள் • ஆசிரியர்: இளைய அப்துல்லாஹ் • © எம்.என். எம். அனஸ் • முதல் பதிப்பு: டிசம்பர் 2012 • வெளியீடு: காலச்சுவடு பப்ளிகேஷன்ஸ் (பி) லிட்., 669 கே. பி. சாலை, நாகர்கோவில் 629001.

காலச்சுவடு பதிப்பக வெளியீடு: 510

**niiril viLakkeriyum nantikkaTal**• Columns • Author: iLaiya abtullaah • © M.N.M. Anas • Language: Tamil • First Edition: December 2012 • Size: Demy 1 x 8 • Paper: 18.6 kg maplitho • Pages: 160 • Copies: 550 + 50.

Published by Kalachuvadu Publications Pvt. Ltd., 669 K.P. Road, Nagercoil 629 001, India • Phone: 91-4652-278525 • e-mail: publications @kalachuvadu.com • Wrapper Printed at Print Specialities, Chennai 600 014 • Printed at Mani Offset, Chennai 600005.

ISBN: 978-93-81969-65-6

12/2012/S.No. 510, kcp 910, 18.6 (1) 600

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கால்போன போக்கில் நான் அலைந்தபோது
என்னை யாரென்று தெரியாமல் அன்பாக வளர்த்த
உடுத்துறை மீனவத் தாய் மற்றும் உடுப்பிட்டி சிவஞானம் அப்பா,
ஆச்சி, மயிலிட்டி சம்மாட்டி சித்தப்பா,
பெரியண்ணாவுக்கும் அவரின் துணைவியாருக்கும்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி

பேராசிரியர் மு. நித்தியானந்தன்
என்னை உற்சாகப்படுத்தும் நண்பர் பவுத்த அய்யனார்
நண்பன் தயாநந்தா
நாவலாசிரியர் உதயணன்
நண்பன் கவிஞர் சேரன்
(தலைப்புக்கு)
நண்பன் றஷ்மி
(அட்டைப்படம்)

*காலச்சுவடு*, *உயிர்மை*, *தினக்குரல்* (இலங்கை),
*சுடரொளி* (இலங்கை), *தாய்வீடு* (கனடா)
மற்றும் என் ஜெனிக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆசிரியரின் பிற நூல்கள்

- ‘துப்பாக்கிகளின் காலம்’ (சிறுகதைகள்), 2004
- ‘பிணம் செய்யும் தேசம்’ (கவிதைகள்), 2004
- ‘அண்ணை நான் தற்கொலை செய்யப்போகிறேன்’ (கட்டுரைகள்), 2010
- ‘கடவுளின் நிலம்’ (கட்டுரைகள்), 2010
- ‘லண்டன் உங்களை வரவேற்பதில்லை’ (கட்டுரைகள்), 2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்

## இளைய அப்துல்லாஹ் (பி.1968)

இயற்பெயர் எம்.என்.எம். அனஸ். 1985ஆம் ஆண்டிலிருந்து சிறுகதைகள், இலக்கியக் கட்டுரைகள், கவிதைகள் மூலம் எழுத்துலகில் பிரவேசித்தவர். இலங்கை சாகித்திய மண்டலப் பரிசுபெற்ற எழுத்தாளர் ('பிணம் செய்யும் தேசம்' கவிதைத் தொகுதிக்கு 2005). இலங்கை பத்திரிகை ஸ்தாபனத்தின் 2006ஆம் ஆண்டுக்கான சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பிரசிறிவர்த்தன விருது பெற்றவர்.

புலம்பெயர் எழுத்தாளர்களில் முக்கியமானவராக அறியப்படுகிறார். 2000ஆம் ஆண்டு முதல் லண்டன் 'தீபம்' தொலைக்காட்சியில் இணைந்து செய்தி வாசிப்பாளர், விவரண தயாரிப்பாளர், அறிவிப்பாளராகப் பணிபுரிந்து வருகிறார்.

தற்போது லண்டனில் வசித்துவருகிறார்.

மனைவி: ஜெனி, மகள்: ஹரீரா, மகன்: முஹமட்


மின்னஞ்சல் : anasnawas@yahoo.com<br>
anasnawas@gmail.com

இணையதளம்: www.mnmanas.blogspot.com<br>
www.mnmanas.wordpress.com

YOUTUBE : www.youtube.com/user/anasnawas



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

*என்னுரை:*
சிட்டுக்குருவியின் அலகில் உள்ளதுபோல ஒரு துளி 11
நீரில் விளக்கெரியும் நந்திக்கடல் 19
முருகனை விழுங்கிய புத்தர் 24
ஈழப் பிரச்சினையில்
சிங்களப்பத்திரிகையாளர்களும் அறிவுஜீவிகளும் 33
இலங்கையில் ஆதிவாசிகள் 37
கென்டயினர் பயணம் 43
மூன்றாம் முள்ளிவாய்க்கால் 54
யாழ்ப்பாணம் போகின்ற வெளிநாட்டுத் தமிழர் 60
வயதாளிகளும் லண்டனும் 67
பாலியல் துஷ்பிரயோகம் 71
பற்றி எரியும் லண்டன் 75
லெஸ்பியன்கள் தொடர்ந்த வழக்கு 80
தாய்ப்பால் ஐஸ்கிறீம் 86
சிறீலங்காவின் கொலைக்களம் 93
சிலிக்கன் மார்பகம் 99
எனது அப்பா ஒரு பெண் 104
கலியாணம் என்கின்ற பயங்கரம் 109
முதல் காதல் 113

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| முதல் ஒப்பிறேசன் | 119 |
| எனது பள்ளிப்பராயம் | 126 |
| இரண்டாம் கலியாணம் | 132 |
| பயந்த கராட்டி மாஸ்டர் | 137 |
| 'வைரமாளிகை' யாழ்ப்பாணத்தின் விகடகவி | 141 |
| மரணங்களும் அஞ்சலிக் குறிப்பும் | 147 |
| திக்வயல் தர்மகுலசிங்கம் | 152 |
| பேராசான் கா. சிவத்தம்பி | 155 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னுரை

# சிட்டுக்குருவியின் அலகில் உள்ளது போல ஒரு துளி

இது எனது ஆறாவது நூல்.

எழுத்து எனும் பேராவல் எனக்குள்ளே பலவிதமான உணர்வுகளைக் கொண்டுவருகிறது. கூடவே பல நண்பர் களையும்தான். அதனால் தொடர்ந்தும் இயங்குகிறேன்.

இன்று உலகம் முழுவதும் பரந்துபோய் இருக் கின்ற தமிழர்கள் மத்தியில் அவர்களின் வாழ்வு தொடர் பாக பல நூல்கள் எழுதப்பட வேண்டும்.

மீனம்பாக்கம் விமான நிலையத்தில் வைத்து இமிகிறேசன் அதிகாரி என்னோடு பேசும்பொழுது "உங்களுக்கென்ன, நீங்கள் நல்ல வசதியோடு லண்டனில் இருக்கிறீர்கள்'' என்றார். கையில் இருந்த 'லண்டன் உங்களை வரவேற்பதில்லை' என்ற எனது நூலைக் கொடுத்தேன். "என்ன இப்படி எழுதியிருக்கிறீர்கள்'' என்றார். "உள்ளே வாசித்துப் பாருங்கள்" என்றேன்.

இலங்கைத் தமிழர்களின் அகதி வாழ்வு சுபீட்ச மானதாக இருக்கிறது. அவர்கள் லண்டனிலும் ஏனைய நாடுகளிலும் மிக நல்ல வசதியுடனேயே இருக்கிறார்கள் என்று ஊரில் உள்ளவர்கள் தொடர்ந்தும் பணம் கேட்டு கஸ்டப்படுத்தும் நிகழ்வுகள் நடந்தவண்ணமே இருப்பது எனக்குத் தெரியும்.

இங்கு வெளி நாடுகளுக்கு அகதிகளாக வந்ததன் பின்பு தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்ச நஞ்ச மல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு பெண் திருமணம் முடித்து இங்கு வந்து கணவனோடு வாழுகிறாள். அவள் அழகானவள். அவளுக்கும் கணவனுக் கும் பத்து வருட வித்தியாசம். அதனால் தினமும் அவளை அவன் அடித்து துன்புறுத்துகிறான். அவள்மீது சந்தேகமாம். ஆனால் அவளைப் போக விடுகிறானில்லை.

இன்னொரு பெண், பிள்ளைகளுக்காகக் கணவனோடு துன்பப்பட்டுப் பல வருடங்களாக வாழுகிறாள். பார்த்தால் பெரும் பணக்காரர்கள் அவர்கள்.

ஜேர்மனி, பிரான்ஸ் போன்ற ஐரோப்பிய நாடுகளில் இருந்து லண்டன் வந்து வாழ வழியில்லாமல் கிடந்து உழலு கின்றன பல தமிழ்க் குடும்பங்கள்.

இங்கிருந்து யாரோ ஆசை காட்ட கனடாவுக்குக் கள்ள விசாவில் போய் விமான நிலையத்தில் பிடிபட்டுப் பலர் லண்டன் அகதி தடுப்பு முகாம்களில் இருக்கிறார்கள்.

இங்கு வயோதிகர்கள் படும் கஷ்டம் பெருந்துன்பம். மனதளவில் அவர்கள் அவதிப்படுகிறார்கள்.

பிள்ளைகளால் பிரயோசனமில்லை என்று புலம்பும் பெற்றோர். வளர்ந்த பெண் பிள்ளைகள் ஆண் நண்பர்களோடு வீட்டுக்கு வரும்பொழுது மௌனமாக அழும் பல தாய்மாரை யும் தந்தைமாரையும் எனக்குத் தெரியும்.

இங்கு விசாவுக்காகத் திருமணம் முடித்துவிட்டு "ஏனடா கலியாணம் முடித்தோம்?" என்று புலம்புகின்றவர்கள் பலரை யும் எனக்குத் தெரியும்.

பணக்காரராக இருக்கும் பலரின் வாழ்வுக்குள் பெரும் பூகம்பம். கணவன் தன்னைக் கவனிக்கவில்லை என்று பல பெண்கள் மனநோய் பிடித்து இருக்கிறார்கள். தாய் பிள்ளை களைக் கொலை செய்யும் அளவுக்கு பிரச்சனை போயிருக்கிறது.

இங்கு வெளிநாடுகளில் வாழ்வின் ஒவ்வொரு பிரச்னை களையும் சவால்களாக எதிர்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை, தமிழர்களின் வாழ்வின் உண்மை யான தடங்களைத்தான் நான் எனது கட்டுரைகளில் பதிவு செய்கிறேன். அது எனது மரணத்தின் பின்பும் 'புலம்பெயர்ந்து வந்த தமிழர் வாழ்வு' தொடர்பான ஒரு பதிவாக இருக்க வேண்டும்.

நான் எழுதுவதைப்போல உண்மையை யாரும் வெட்ட வெளிச்சமாகப் பதிவு செய்வதில்லை என்று எனது நண்பர்கள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாசகர்கள் என்னிடம் நேரடியாகவே பல முறை சொல்லி இருக்கிறார்கள். அவர்கள் வாழ்வின் உண்மையை அனுபவிப் பதனால் தொடர்ந்தும் எனது புத்தகங்களை வாங்குகிறார்கள்.

இது சிட்டுக்குருவியின் அலகில் உள்ள ஒரு துளி போலத் தான். ஆனால் தோண்டத் தோண்ட வந்துகொண்டே இருக் கிறது புலம்பெயர் தமிழர் கதைகள்.

தமிழர்கள் புலம்பெயர்ந்த நாடுகளில் எப்படி எல்லாம் வாழ்கிறார்கள் என்பதற்கான வாழ்வு தொடர்பான சுவடுகள் தான் இந்தக் கட்டுரைகள். இது ஆய்வுக் கட்டுரைகள் அல்ல; அனுபவக் கட்டுரைகள். கட்டாயம் புலம்பெயர்ந்த தமிழர்கள் தொடர்பாக ஆய்வு செய்யப்பட வேண்டியது மிகவும் அவசியமானது.

அடுத்த பெரிய பிரச்சனை இந்த ஐரோப்பிய நாடுகளின் வெள்ளையின கலாச்சாரத்துக்குள் நமது பிள்ளைகளை வளர்ப்பது பெரும் சிரமமான விடயமாக இருக்கிறது.

இந்த விடயம் பல தமிழ்ப் பெற்றோரிடையே கலக்கத்தை அதிகரித்துவிட்டது. எனது நண்பரின் ஐந்து வயது மகன் வீட்டில் ஏசினால், அடித்தால் "நான் போய் எனது டீச்சரிடம் சொல்லிவிடுவேன்" என்று மிரட்டுகிறான்.

உண்மைதான். அவன் சொல்லிவிட்டால் கேட்டு கேள்வி இல்லாமல் ஒன்று இரண்டு விசாரணையில் நண்பருக்கு ஐந்து வயது மகனால் சிறைக்குப் போக வேண்டி வரலாம். எனவே பெற்றோர்கள் பிள்ளைகளைக் கண்டித்து வளர்த்த எங்களது காலம் மாறி இப்பொழுது பிள்ளைகள் பெற்றோரை ஐரோப்பிய, ஸ்கன்டிநேவிய நாடுகளில் வைத்து மிரட்டுகின்ற காலத்தில் இருக்கிறோம்.

இங்கு லண்டனில் 'வளர்ப்புப் பெற்றோராக இருக்க விருப்பமா?' என்று கேட்டு றோட்டில் பெரிய பெரிய விளம்பரங் களை கவுன்ஸில் வைத்திருக்கிறது. அவ்வளவுக்குப் பிள்ளைகள் அனாதைகளாக இருக்கிறார்கள்.

வெள்ளைக்காரரின் கலாச்சாரத்தோடு நாம் போட்டி போட முடியாமல் திணறுகிறோம். எமது இந்தியக் கலாசாரம், வெள்ளைக்காரக் கலாசாரம் என்ற இரட்டைப் படகில் கிடந்து அல்லலுறுகிறோம்.

வெளிநாட்டு படாடோபமான வாழ்க்கை, பொருளாதார மேம்பாடு என்ற சிறப்புகள் எம்மை ஆட்கொண்டாலும் குடும்பம், பிள்ளை வளர்ப்பு என்று வரும்பொழுது நடுத்தர மக்கள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பாக "ஆ காட்டம்மா" என்று சொல்லி பராக்கு காட்டி எமது குழந்தையைத் தூக்கிவைத்துக் கைகளால் சோற்றைப் பிசைந்து அன்பாக ஊட்டினால் அடுத்தநாள் பொலிஸ் வந்து எமது வீட்டு வாசலில் நிற்கிறது. நாம் எமது பிள்ளையைத் துன்புறுத்திவிட்டோமாம்.

இங்கே லிவர்பூல் பகுதியில் எனக்குத் தெரிந்த நண்பர் ஒருவர் தனது உடம்பு பிரட்டும் செல்லக் குழந்தையை ஆடை இல்லாத உடலோடு போட்டோ எடுத்து தனது மொபைல் போனில் வைத்திருந்து அழகு பார்த்ததற்குப் பொலிஸ் அவரை கைது செய்து சிறையில் அடைத்து வைத்தது. பிள்ளையைப் பறித்துக் கொண்டுபோய் 21 நாட்கள் சிறார் பராமரிப்பு நிலையத்தில் வைத்திருந்தார்கள். தாய்ப்பால் குடிக்கும் பிள்ளை இப்பொழுது தாய்ப்பாலை மறந்துவிட்டது.

காரணம் அவர் குழந்தைப்பிள்ளையை நிர்வாணமாக ரசிக்கின்ற ஒருவராம். 'ஐயோ' என்று அவர் தலையிலடித்துக் கதறுகிறார். நமது வீட்டு வரவேற்பறைகளில் நாங்கள் சின்னப் பிள்ளையாகக் குப்புறப் படுத்த நிலையில் இடுப்பில் அரைஞாண் கயிறோடு ஆடையில்லாமல் இருக்கின்ற போட்டோக்கள்தான் பிறேம் போட்டு மாட்டி வைத்திருக்கிறோம் என்பது வெள்ளைக் காரருக்குத் தெரியாதுதானே.

வெள்ளைக் கலாசாரத்தில் இங்கு ரத்த பந்தம் மற்றும் கணவன், மனைவி பந்தம் என்பதெல்லாம் ஒரு வகை போலித் தனத்தோடு இருப்பதால் அவர்கள் யாரையும் நம்பத் தயாராக இல்லை.

ஐரோப்பிய நாடுகளில் நடைபெறும் குற்றங்களில் அதிக மானவை கொலை. அதற்கு அடுத்தபடியாக இருப்பது சிறுவர்கள் மீதான பாலியல் துஸ்பிரயோகம்.

இங்கு திருமணம் என்பது கஷ்டமான விடயமாக பார்க் கிறார்கள். ஏன் ஒருவருக்கொருவர் பிடிமானமாக இருக்க வேண்டும் என்ற நம்பிக்கையீனத்தோடு அனேகமாக ஆணும் பெண்ணும் லிவ் இன் டுகெதராக வாழ்கின்றனர். தேவையான பொழுது பிரியலாம். அப்படித் திருமணம் செய்தாலும் சின்னச் சின்ன சச்சரவுகளினால் பிரிந்து போகிறார்கள்.

இங்குதான் பிள்ளைகள் பெரும் பிரச்சனையாகிறார்கள். அம்மா வேறு ஒரு ஆணோடு சேர்ந்து இருக்கும்போது அந்தப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்மணிக்கு இருக்கும் பெண் பிள்ளையைச் சித்தப்பா முறையானவர் வெறுப்பில் அடிக்கிறார்; அல்லது துன்புறுத்து கிறார் அல்லது பாலியல் ரீதியாக துஸ்பிரயோகம் செய்கிறார்.

இது மாறியும் நடக்கிறது. ஆண் மறுமணம் முடிக்கும் போதோ அல்லது இன்னொரு பெண்ணுடன் சேர்ந்து வாழும் போதோ ஆண் பிள்ளைகளோ அல்லது பெண் பிள்ளைகளோ இந்தப் பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்கிறார்கள். எனவே சிறுவர் மீதான சட்டங்கள் ஐரோப்பிய, ஸ்கன்டினேவிய நாடு களில் மிகவும் கடுமையாக இருக்கின்றன. அது பிள்ளைகள் மீது அதீத அக்கறை கொண்ட இந்தியர்கள் மீதும் இலங்கையர் மீதும் பாய்கின்றன.

என்னோடு அலுவலகத்தில் ஒன்றாக வேலை பார்க்கும் தமிழ்ப் பெண்ணொருவரின் மகள் நாலாம் வகுப்பில் படிக்கிறார். வகுப்பில் டீச்சர் "உங்கள் தந்தை உங்களைப் பாலியல் ரீதி யாகத் துன்பறுத்தினால் தங்களிடம் வந்து சொல்ல வேண்டும் என்றும் தந்தையோடு தூங்கக் கூடாது" என்றும் சொல்லியிருக் கிறார். அந்தக் குழந்தை வந்து "அப்பா நான் உங்களோடு தூங்குகிறேன். ஆனால் டீச்சர் கேட்டால் சொல்ல வேண்டாம்" என்று சொல்லியிருக்கிறாள். அவர் அந்தக் குழந்தையின் பாசத்தால் மனம் நெகிழ்ந்து கண்ணீர் சிந்துகிறார். சொந்தப் பிள்ளைகளுக்கும் எங்களுக்குமான உறவு ரத்த பந்த உறவு. எனது மகள் என்னைப் பாசத்தோடு முத்தமிடுவதை வெள்ளைக் காரன் பார்த்தால் தப்பாகிவிடும். என்ன அநியாயம் இது?

இங்குள்ள நடைமுறைகளை வைத்துப் பிள்ளைகளை வளர்க்க முடியாது என்று பிள்ளைகளைக் கூட்டிக்கொண்டு ஊரில் கொண்டு போய் வளர்க்கும் பலரை எனக்குத் தெரியும்.

நமது கலாசாரம் பண்பாடுகளை அடுத்தத் தலைமுறை விட்டுவிடும் என்ற பயம் இங்குள்ள தமிழ்ப் பெற்றோரிடம் இருக்கிறது.

ஒரு பாடசாலையில் மேல் வகுப்பு படிக்கும் தமிழ்ப் பெண் பிள்ளையின் தாயொருவர் பெற்றோர் ஆசிரியர் கூட்டத்தில் நிற்கும்பொழுது பெரும் பதட்டத்தோடு காணப்பட்டார். என்ன என்று விசாரித்தேன். பிள்ளை சுற்றுலா போகப்போகிறது. வளர்ந்த ஆண் பெண் பிள்ளைகள் சேர்ந்து போகிறார்கள். பெண் பிள்ளைக்குப் பாலியல் உறவு தொடர்பான விளக்கமும் கர்ப்பம் தரிக்காமலிருக்க 'கொண்டமும்' கொடுத்து அனுப்பும் படித் தாயிடம் டீச்சர் சொல்லியிருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்னதான் முற்போக்கு வெளிநாட்டு வாழ்க்கை என்று நாம் பேசினாலும் ஒரு தமிழ்த்தாயிடம் உனது மகளுக்கு 'கொண்டம்' கொடுத்து சுற்றுலா அனுப்பு என்பதை எப்படி ஏற்றுக்கொள்ளுவார். அவருக்குத் தலையில் ஓங்கி அடித்தது மாதிரி இருக்குமல்லவா?

இந்த நெருக்கடிக்குள்தான் நாங்கள் வெளிநாடுகளில் கஸ்டப்பட்டு வாழ வேண்டியிருக்கிறது. இரட்டைக் கலாச்சார சுழலுக்குள் சிக்கித் தவிக்கிறோம்.

அடுத்தது ஊரில் இருக்கும் எங்கள் உறவுகளின் அவலம் சொல்ல முடியாத துன்பமாக இருக்கிறது. அவர்களின் ஒவ்வொரு வீடுகளிலும் மரண அவலம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது.

நான் ஒரு வழிப்பாதை ஒன்றில் காரைத் தற்செயலாக விட்டதற்காக லண்டன் பொலிஸ் என்னைப் பிடித்தது. அப் பொழுது நான் சிரித்தபடியே பொலிஸூக்கு "ஹலோ'' என்று சொல்லிக்கொண்டு இறங்கினேன். முக மலர்ச்சியோடு இறங்கினால் அவருக்கு விருப்பமாக இருக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் பொலிஸ்காரருக்குக் கோபம் வந்து விட்டது. "இது ஜோக் இல்லை" என்று என்னை முறைத்தார்.

நான் மன்னிப்பு கேட்டாலும் அவர் நான் முக மலர்ச்சி யோடு இருப்பது ஏதோ நக்கலுக்குச் சிரிப்பதாக நினைத்துக் கொண்டார். பிறகு நான் மன்னிப்பு கேட்க, என்னை விட்டு விட்டார். ஆனால் அவர் ஏன் கோபப்படுகிறார் என்று சிந்தித்துப் பார்த்தேன். நான் சந்தோசமான முகத்தோடு அவரை எதிர் கொண்டது வெள்ளைக் கலாச்சாரத்துக்குப் பிழையானது. அந்த நேரத்தில் நான் முகத்தைத் துக்கமாக வைத்திருக்க வேண்டும். ஆனால் எமது ஊரில் என்றால் பொலிஸ் பிடித்தால் முகமலர்ச்சியாக இருந்து காரியத்தை எமக்குச் சாதகமாக மாற்றி விடலாம். இப்படி இங்குள்ள ஒவ்வொரு உணர்வு களையும் படிக்க எங்களுக்கு வயது போய்விடும். பிள்ளைகள் அதுதான் எங்களைப் புரிகிறார்களில்லை.

எனக்குத் தெரிந்த ஒருவருடைய மகன் தனது பெண் நண்பிகளைத் தான் படிக்கும் அறைக்கு அழைத்து வந்து சேர்ந்து படித்திருக்கிறான். அவனது மாமா அவனிடம் "தம்பி இப்படி பெண் நண்பிகளோடு பழகினால் உங்கள் அப்பா கவலைப் படுவார்" என்று சொல்லி இருக்கிறார். "மாமா, இந்த விசயத்தை நீங்கள் ஏன் அப்பாவுக்குச் சொல்கிறீர்கள். நீங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சொன்னால்தானே அப்பாவுக்குத் தெரியும். அவர்கள் என்னுடைய நண்பிகள் மட்டும்தான்" என்று சாதாரணமாகவே சொல்லிவிட்டான்.

தமிழர் கலாசாரம், அது இது என்று எப்படி எமது இளையவர்களுக்கு விளங்கப்படுத்துவது என்று அவர்கள் கவலைப்பட்டுக்கொண்டே இருக்கின்றனர். வாழ்க்கை எம்மை விட்டுவிட்டுப் பாரதூரமாக ஓடிக்கொண்டே இருக்கிறது. நாம் ஒன்றும் செய்ய முடியாமல் இருக்கிறோம்.

நான் பார்த்த புலம்பெயர் தமிழர் வாழ்க்கையைத்தான் எனது கட்டுரைகளில் பதிவு செய்திருக்கிறேன்.

இந்தக் கட்டுரைகள் வாசிக்கும் ஒவ்வொருவருக்கும் அவை நெருக்கமானவையாக இருக்கும். இந்த நூல் வெளிவரத் துணையாக நின்ற எல்லோருக்கும் எனது மனமார்ந்த நன்றிகள்

லண்டன்
*15 டிசம்பர் 2012*

**இளைய அப்துல்லாஹ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீரில் விளக்கெரியும் நந்திக்கடல்

மே மாதத்தில் எனது பிறந்த தினம் வந்தாலும் இப்பொழுதெல்லாம் மே மாதம் அவ்வளவு விருப்பத்திற் குரியதாக இல்லை. ஒரு துர்ச்சகுனமான மாதமாகவே இருக்கிறது.

நான் பிறந்தது முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில். அம்மா அங்குதான் என்னை பெத்தா. அப்படியே பிஞ்சுக் குழந்தையாக என்னைக்கொண்டு வந்து வளர்த்தியது முள்ளியவளை வீட்டில். அப்பொழுதே வன்னி மண் என் வாழ்வோடு ஒட்டிக்கொண்டுவிட்டது. நான் வன்னியில் பிறந்தவன்.

முள்ளியவளையில் இருந்து ஐயா அம்மாவை விட்டுவிட்டுப் போய்விட்டார். அய்யாவின் பிரிவுக்கு தங்கச்சி பிறந்ததுதான் காரணம் என்று எனது கிராம மக்கள் பேசிக்கொண்டனர்.

எங்கள் ஒட்டுசுட்டான் புளியங்குளம் கிராமம் எவ்வளவு அருமையானது. அதனோடு வாழ்ந்த வாழ்வைத் தான் இன்னும் நினைத்துக்கொண்டிருக்கிறேன். எழுதும் போதும் படிக்கும்போதும் அடிக்கடி எனக்கு நினைவுக்கு வருவது எனது கிராமம்தான்.

தமிழர்களும் முஸ்லிம்களும் ஒன்றாக மகிழ்வாக இருந்தது அந்த வன்னிக்கிராமங்களில். முள்ளியவளை யில் நீராவிப்பிட்டி பள்ளிவாசலுக்கு அடிக்கடிப் போயிருக்கிறேன். எங்கள் ஊரில் இருந்து எட்டு மைல். எங்கள் ஊரில் பாரூக் என்பவர் கூலி வேலைசெய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்ந்து வந்தார். அவரின் மனைவி காது நிறைய தோடு அணிந்திருப்பார். அவ எங்கள் வீட்டுக்கு வந்து கூலிக்கு மா இடித்து அம்மாவிடம் காசு வாங்கிக்கொண்டு போவா. முத்தையன்கட்டுக் குளத்துக்கு அண்மையில் மண்ணால் கட்டப்பட்ட ஒரு பள்ளிவாசல் இருந்தது.

யுத்தம் என்ற ஒன்று எங்கள் கிராமங்களைச் சூழும் என்று நாங்கள் அப்பொழுது கனவிலும் நினைக்கவில்லை. பரந்து விரிந்த புளியங்குளத்தை விட்டுவிட்டு நாங்கள் எல்லோரும் துரத்தப்படுவோம் என்றும் நினைக்கவில்லை.

எனது ஏழு வயதிலேயே அப்பா இறந்துவிட்டார். ஐயாவையும் அம்மாவையும் யாரோ சூனியம்வைத்துப் பிரித்துவிட்டார்கள் என்றுதான் அம்மா சொல்லுவா. சில வேளை இந்தக் காதல் கலியாணத்தில் விருப்பம் இல்லாத அம்மாவின் அண்ணன்தான் செய்திருப்பாரோ என்று அம்மா வுக்கு இன்னும் சந்தேகம்.

இப்போதும் அம்மா அதைத்தான் நினைத்துக் கொண் டிருக்கிறா. அப்பா அம்மாவை விட்டுவிட்டு போனதன் பிறகு அம்மய்யாதான் எங்களை வளர்த்தெடுத்தார். அம்மாவின் ஐயாவை அப்படித்தான் நாங்கள் கூப்பிடுவோம்.

அம்மய்யாதான் எனக்கு எல்லாம் என்றிருந்த காலம் அது. ஐயாவின் பாசம் என்பதை இறுதியாகக் கண்டது கருவேலன்கண்டல் குணமண்ணையின் தேத்தண்ணி கடையில் தோசையும் சம்பலும் வாங்கித் தந்த போதுதான். அந்த ருசியும் தோசையின் மணமும் ஐயாவின் மனமும் அடிமனத்தில் இன்னும் ஒட்டிப்போய்க் கிடக்கிறது.

ஐயா இல்லையென்றாகிப் போனபின்பு அம்மய்யாதான் எங்களுக்கு எல்லாம் என்றாகிவிட்டது. அம்மய்யா படிப் பறிவு இல்லாதவர். ஆனால் மிகப் பரந்த அனுபவ, அரசியல், சமூக அறிவு உடையவர். ஊரில் மிக நல்ல மனிதர். ஒட்டு சுட்டானில் அவரது பெயருக்கும் அவருக்கும் தனி மதிப்பு உண்டு. அவரைத் தெரிந்தவர்கள் எல்லாம் இன்றும் அவருக்காக என்னை மதிக்கிறார்கள். லண்டனிலும்கூட.

அவர் வாழ்ந்த, நான் வாழ்ந்த வீடு இப்பொழுது என்ன வாகிக் கிடக்கிறது என்று எனக்குத் தெரியாமலேயே போய் விட்டது. ஒட்டுசுட்டானில் இருந்து ஒரு மைல்தூரத்தில் இருந்தது செழிப்பான எனது கிராமம். வேலி நெடுக வாழை மரங்கள் நட்டார் அம்மய்யா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒவ்வாரு நாளும் வாழைப்பழம் சாப்பிடுவோம். வீட்டோடு சேர்த்து தென்னை மரங்கள், மாமரங்கள்; நெல்வயல், தோட்டக்காணி, இரண்டு கிணறுகள் என்று செல்வச் செழிப்போடு வாழ்ந்தவர்கள் நாங்கள்.

அவரும் அப்படித்தான் வாழ்ந்தார். எங்களுக்கான தனிவீடும் இல்லாமல் போய்விட்டது. தனிநாடு கேட்கப்போய் வந்தவினைதான் இதுவோ என்று எண்ணத் தோன்றுகிறது. நான் படித்த பள்ளிக்கூடம் இப்போ எப்பிடி இருக்கும்? அம்மய்யா பார்த்துப் பார்த்து கட்டிய வீடு அது என்னவாகி இருக்கும்? உடைந்து நாசமாகிப் போயிருக்குமா? அந்த மனிதர் செங்கல்லால் மட்டும் அதைக் கட்டவில்லை. காலையில் மண்வெட்டியைத் தோளில் தூக்கினால் பின்னேரம்தான் தோளில் இருந்து அது இறங்கும். வியர்வையால் கட்டிய வீடு அது. என் கிராமம் அவ்வளவு அழகானது; தண்ணீர் நிறைந்த குளம், பாடசாலைகள், சுற்றிவர வயல்வெளிகள், தோட்டங்கள், நல்ல மனிதர்கள். இப்பொழுது எல்லாம் மயானமாகிவிட்ட ஒரு பூமியாகிக் கிடக்கும். அல்லது வெறும்காடாகக் கிடக்கும்.

ஒவ்வொரு குச்சு ஒழுங்கையிலும் எனது கால்கள் பட்டுத் திரிந்த காலம் நினைவுக்கு வருகிறது.

வற்றாப்பளை அம்மாள் கோவில் என்னவாகிக் கிடக்கிறதோ? நந்திக்கடல்தான் அப்பொழுது எங்களுக்கு ஒரு புனித நீர்த்தடாகம். அதில் இருந்து வைகாசிப் பருவம் நேரம் தண்ணீர் எடுத்துக்கொண்டு வந்து காட்டு விநாயகர் கோவிலில் தண்ணீர் ஊத்தி விளக்கு எரிப்பார்கள்.

முல்லைத்தீவுக்கே அது பேரதிசயம். வண்டில் கட்டி, லொறி பிடித்து, உழவு மெசினில் எல்லாம் பெட்டி நிறைய ஆட்கள் வந்து தண்ணீரில் விளக்கு எரியும் அதிசயத்தைப் பார்த்து பரவசப்பட்டுப் போவார்கள்.

யாழ்ப்பாணத்தில் இருந்து லொறியில் எங்களது சொந்தம் பந்தம் எல்லாம் வரும். வைகாசி மாதம் எங்கள் வீடு களைகட்டிவிடும். வைகாசிக் காற்று ஒரு கிளுகிளுப்பை மனத்தில் ஏற்றும். முள்ளியவளையில் ஒவ்வொரு மணல் ஒழுங்கைகளுக்குள்ளும் கால்கள் புதையப் புதைய அந்த பனம்பழ வாசத்தோடும் கிளுவை வாசத்தோடும் நடந்தது இன்னும் அடிமனத்தில் ஒட்டிக்கிடக்கிறது.

எல்லாம் காடுபத்திக் கிடக்குமோ? என் தெருக்கள் ஒவ்வொன்றும் எனதானவை. ஆனால் இப்பொழுது அவை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிங்களவருக்கே ஆகிவிடுமோ என்று மனத்தில் பேரச்சமாக இருக்கிறது.

வற்றாப்பளையில் நின்று பார்த்தால் நந்திக்கடல் ஒரு தேவதையைப் பார்ப்பதுபோல பரவசமாயிருக்கும். ஆனால் இப்பொழுது அதுதான் ரத்தம்குடித்த கடலாகக் கிடக்கிறது. எமது வாழ்வின் எல்லா அதிசயங்களையும் முடித்துவைத்த ஓர் உப்போடையாகக் கிடக்கிறது.

இனி அதில் தண்ணீர் எடுத்து, காட்டு விநாயகரிடத்தில் கொண்டு வந்தால் விளக்கெரிந்து அற்புதம் காட்டுமா எனும் சந்தேகம் எழுகிறது.

முழு வாழ்க்கையையும் அழித்துவிட்டு இரத்த கடலாகக் கிடக்கிறது நந்திக்கடல். எல்லா வரலாறுகளையும் உடைத்து வீசிவிட்டது யுத்தம். முந்தியென்றால் பண்டாரவன்னியன் நினைவுக்கல்லுக்குக் கிட்டப்போனாலே ஒரு பரவசம் வரும். ஏனென்று தெரியாத பரவசம். வீரன் அவன் என்று. இப்பொழுது எங்களது கண்ணுக்கு முன்னால் எல்லாம் அழிந்துபோய்க் கிடக்கிறது. பண்டாரவன்னியன் ஆண்ட பூமி என்ற பெயர் மட்டுமே வெறுமையாக மனத்தினில் ஒட்டிக் கொண்டிருக் கிறது.

முந்தி சங்கிலியன் ஆண்ட பூமி என்று யாழ்ப்பாணம் குறித்துப் பெருமை பேசித் திரிந்தோம். இப்பொழுது எமக்கு எமக்கான எமக்கேயான எங்களுடைய ஒரு துண்டு நிலமாவது சொந்தமாகக் கிடைக்குமோ என்று யோசிக்கக்கூடப் பயமாக கிடக்குது.

நெடுங்கேணியில் காட்டுக்குள் இருக்கிற ஐயனார் கோவிலுக்கு ஒருமுறை போயிருந்தேன். எனக்குப் பத்து வயதிருக்கும். காடு முழுக்க தெய்வங்களை வைத்து வழிபட்டவன்தானே தமிழன். இதை வாசித்துக்கொண்டிருப்பவர்களில் எத்தனை பேர் போயிருப்பீர்கள்? எத்தனை பேருக்குப் பழைய நினைவுகள் வரும்?

அந்தக் காட்டுக்குள் ஐயனாருக்குக் கிடாய் வெட்டி அன்னதானம் வைத்து சமைத்து சாராயம் படைத்து ஐயனாரை இரவு பகலாகத் திருப்திப்படுத்திய காலம் அது.

ஆண்களும் பெண்களும் சிறுவர்களும் விடலைப் பருவத்துப் பிள்ளைகளும் என்று காட்டுக்குள் திருவிழா வலு கலாதியாக இருக்கும். ஐயனார் என்றால் பயம் ஒருபக்கம் மகிழ்ச்சி மறுபக்கமாக ஒரே குதூகலம்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வு என்பது அதுதான். இப்பொழுது அந்தக் காடுகளுக்கு அருகில்கூட போக முடியுமோ தெரியாது. எல்லாம் முடிந்து விட்டது. வாழ்வு, வளம் எல்லாம் முடிந்துவிட்டது. யுத்தம் எல்லாவற்றையும் சப்பித் துப்பிவிட்டது.

மனம் முழுக்க அந்தரமாக இருக்கிறது. அமைதியாக இருந்த எங்கள் வன்னிக் கிராமங்களுக்குள் யுத்தத்தைக் கொண்டு வந்த எல்லோர்மீதும் பெருங்கோபம் வருகிறது.

யுத்தம் சாகடித்த மனிதர்களுக்காக மூன்றாம் ஆண்டு திதி செய்யக்கூட விடுகிறார்களில்லை என்று ஒட்டுசுட்டானில் இருந்து தோழி ஒருத்தி அழுகிறாள். மரணம் துரத்திய எனது கிராமங்களை விட்டு ஓடி வந்துவிட்டோம். மே மாதம் முழுக்க மனம் பேதலித்துப் போய் இருக்கிறது. மரணங்களை மறக்க முடியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முருகனை விழுங்கிய புத்தர்

கதிர்காமம் முருகன் ஆலயம் இரகசியங்கள் நிறைந்தது. அந்த இரகசியங்களை அவிழ்ப்பதற்கு முயன்ற பலர் தோற்றுப் போனார்கள். ஒரு மந்திரக்கூடுதான் மூலம். அந்த மூலம் என்ன? அதில் என்ன எழுதியிருக்கிறது? என்பதுதான் கேள்வி. ஆனால் விடை தெரியாது. பலர் இன்னும் தலையை பிய்த்துப்போட்டு அலைகிறார்கள்.

வள்ளி முருகனை விட்டுப் பிரிய மனமில்லாது தேம்பி நிற்கிறாள்.

குறத்தி மகளை மணம்புரிந்த முருகனோ, முதலாவது மனைவியிடம் செல்ல முடிவெடுத்துவிட்டார்.

முத்துலிங்க சுவாமிகள்தான் தெய்வயானைக்கும் குரு. இரண்டு பெண்களுக்கு மத்தியில் அவர் கொஞ்சம் சிரமப்பட்டுப்போனார்.

முத்துலிங்க சுவாமிகளிடம் முருகனை அடக்கி தன் வசம் வைத்துக்கொள்ளும் யந்திரம் இருந்தது.

வள்ளியிடம் இருந்து முருகனைப் பிரித்தெடுத்து தெய்வயானையிடம் கொண்டு போக வந்த முத்துலிங்க சுவாமிகள் வள்ளியின் உருகுதலுக்கும் கண்ணீருக்கும் இரங்கிவிட்டார்.

தன்னிடம் மாங்கல்யப் பிச்சை கேட்ட வள்ளிக்கு "தீர்க்க சுமங்கலி பவ" என்று ஆசீர்வாதம் கொடுக்க வள்ளி முத்துலிங்க சுவாமியிடம் கேட்டது அந்த முருகனை அடக்கிவைத்திருக்கும் யந்திரப் பேழையை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வள்ளியின் வேண்டுகோளைத் தட்ட முடியாத முத்துலிங்க சுவாமி மாணிக்க கங்கையில் நீராடி அந்த இடத்தைப் பரிசுத்தப் படுத்தி யந்திரப் பேழையை ஒரு மேடையில் வைத்துக் குடிசை கட்டி, அவரும் தங்கிவிட்டார். இந்தியா போகவில்லை.

இரண்டாவது மனைவியாகிய வள்ளியோடு முருகன் யந்திரமாய்க் கட்டுப்பட்டுக் கதிர்காமத்திலேயே தங்கி விட தெய்வயானையும் வேறு வழியில்லாமல் பிள்ளையாரையும் அழைத்துக்கொண்டு கதிர்காமம் வந்து இருந்துவிட்டார்.

ஆனால் சக்களத்தி தனது புருசனைப் பறித்துவிட்ட கோபம் இன்னும் அவரிடம் இருக்கிறது. அதனால்தான் முருகனைத் திரும்பிப் பார்க்காமல் அவர் மறுபுறமாக இருக் கிறார். கதிர்காமம் போனால் நீங்கள் இதைப் பார்க்கலாம்.

மாணிக்க பிள்ளையார் ஆலயம் முருகன் கோயிலுக்கு வலது புறமாகவும், தெய்வயானை ஆலயம் இடதுபுறமாக முதுகு காட்டியும், காதல் வள்ளி முருகனைப் பார்த்தபடியும் முத்துலிங்க சுவாமிகள் சமாதி வள்ளிக்கு அருகிலும் அமைந் திருப்பதற்கு இந்தக் காரணங்களைத்தாம் வரலாறு சொல்கிறது.

செல்லக்கதிர்காமம் வள்ளி பிறந்த இடம் என்று பக்தர்கள் முழு நம்பிக்கையோடு வழிபடுகிறார்கள்.

ஆனால் எப்படிப் பெரிய பெரிய விகாரைகளைக் கட்டி புத்தர் வந்திறங்கிய பூமிபோல சிங்களவர்கள் ஆளுகிறார்கள் என்பதுதான் பெரும் மனக் கஸ்டமாக இருந்தது எனக்கு.

நாம் சென்று பார்த்தபொழுது ஏதோ பௌத்தர்களின் புனித பூமிக்கு வந்துவிட்டோமோ என்ற சந்தேகம் எனக்கு வந்துவிட்டது. தமிழ்க் கடவுள் முருகனைக் கதரகம தெய்யோ ஆக்கித் தமிழர் கலாச்சாரத்தையே புரட்டிப்போட்டு விட்டார்கள் சிங்களவர்கள்.

திஸ்ஸ மகாராமயில் இருந்து 22 கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கிறது கதிர்காமம்.

நாம் சென்றது முருகன் கோவில் இறுதித் திருவிழாவுக்கு. அதையும் சிங்களத்தில் பெரஹரா என்றே மாற்றிப் போட்டார்கள்.

மக்கள் வந்து குவிந்துகொண்டே இருந்தார்கள். மாணிக்க கங்கையில் தண்ணீர் குறைவாகவே இருந்தது. ஆனால் லட்சக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணக்கான மக்களைக் கங்கை இரவு பகலாகக் குளிப்பாட்டிக் கொண்டே இருந்தது.

வற்றாப்பளை கண்ணகை அம்மன் பொங்கல் வைகாசி மாதம் திருவிழா முடிய யாத்திரிகர்கள் அங்கிருந்து கால் நடையாகவே கதிர்காமம் முருகன் ஆலயத்திற்கு வரத் தொடங்கி விடுவார்கள்.

"எனக்குத் தெரிந்த வரை 1856இலிருந்து எனது முப் பாட்டன் பரம்பரை காலத்திலிருந்து இருந்து பூசைகள் நடை பெறுகின்றன். 1937இல் இருந்து எனது நேரடிப் பரம்பரையினர் தான் பூசைசெய்து வருகின்றனர். நான் 37 வருடமாக பூசை செய்கிறேன். 1900இலிருந்து இந்த முருகனின் வரலாற்றை சிங்களவர்கள் மாற்றத் தொடங்கிவிட்டனர் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத் தொடங்கியவர்கள் இப்பொழுது முழுதாகவே மாற்றிவிட்டார்கள்.

முத்துலிங்க சுவாமிதான் தொன்மையானது. முத்துலிங்க சுவாமி வேசமிட்டு வந்தது சிவன். அதனால்தான் முத்துலிங்க சுவாமியைச் சிவன் ஆலயமாக அமைத்து மாணிக்க கங்கையை அண்மித்து வழிபடுகிறோம்.

இப்பொழுது என்ன மாற்றம் வந்தாலும் கதிர்காம கந்தன் ஆலயம் எப்பொழுதும் அருளுக்காகவே இருக்கிறது. அருளோடேயே இருக்கிறது. பொருளுக்காக அல்ல. இங்கு வருபவர்களும் நேர்த்திக்கடன் வைத்துப் பாத யாத்திரை யாகவே வருவார்கள். அவர்களுக்கு அருள் கிடைக்கும் என்கிறார் முத்துலிங்க சுவாமிகள் ஆலயத்தில் பூசாரியாக இருக்கும் பாலா.

இங்குள்ள எல்லா ஆலயங்களிலும் மௌனப் பூசைதான் நடைபெறுகிறது. மந்திர உச்சாடனம் இல்லை. வாய் கட்டி பூசைகளை நடத்துகிறார்கள். சிங்களத்தில் அவர்களைக் கப்புறாளை என்று அழைக்கிறார்கள். பூசாரிகள்தாம் அவர்கள் பிராமணர் அல்லாதவர்கள்.

கதிர்காமத்தில் கந்தன் கோவிலை அண்மித்து பள்ளிவாசல் ஒன்று இருக்கிறது. இலங்கையில் இப்படிக் கோவிலை அண்மித்த பள்ளிவாசல் ஒன்றை புத்தளம் உடப்பு பகுதியில் கண்டிருக்கிறேன். அடுத்தது இங்கே கதிர்காமத்தில்தான் கண்டேன்.

இஸ்லாமியர்கள் நாற்பந்தைந்து குடும்பம் அளவில் கதிர்காமத்தில் இருக்கின்றனர். அவர்களின் தொழில் வியாபார



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மும் விவசாயமும். கதிர்காமம் பள்ளி வாசலில் ஜும்மாத் தொழுகை மற்றும் ஐவேளை தொழுகைகள் நடைபெறுகின்றன.

பள்ளிவாசல் கொடியேற்றத்துடன்தான் முருகன் ஆலயத் திருவிழா ஆரம்பமாகிறது. திருவிழாவின் நிறைவு நாளன்று பள்ளிவாசலில் கந்தூரி (அன்னதானம்) கொடுத்துதான் நிறைவு செய்யப்படுகிறது.

பள்ளி வாசலை நிர்வகிப்பவர்கள் காலியைச் சேர்ந்தவர்கள். ஒரு மௌலவி ஐவேளை தொழுகைகளுக்காக இருக்கிறார். ஹிள்ர் (அலைஹிஸ்ஸலாம்) நபிகளார் இங்கு வந்து தங்கியிருந்த தாகச் சொல்கிறார்கள். ஆனால் அது செவிவழிக் கதையாகவே இருக்கிறது. அதற்கு சஹீஹான (உண்மையான) ஹதீஸ் ஆதாரம் எதுவும் கிடைக்கவில்லை.

இந்தியாவில் இருந்து வந்த முஸ்லிம்கள் ஒரு பள்ளி வாசலைக் கட்டியதாகவும் சொல்கிறார்கள். அங்கு மரணித்த ஒரு அவ்லியாவின் (இறை நேசர்) கல்லறையும் இருக்கிறது. ஆனால் வியாபாரத்துக்கு வந்த முஸ்லிம்கள் ஏன் காட்டுப் பகுதியில் வந்து ஒரு பள்ளிவாசலைக் கட்டினார்கள் என்ற கேள்வி வருகிறது. ஆனால் பள்ளி வாசல் தமிழகக் கட்டட கலை வடிவமாகவே இருக்கிறது. இன்னும் பழமையைப் பேணுகிறார்கள்.

முற்காலத்தில் பள்ளிவாசலும் முருகன் கோவிலும் விகாரையும் அமைத்து வழிபட்டிருக்கிறார்கள் மூவின மக்கள்.

இப்பொழுதும் பள்ளி வாசலில்தான் கொடியேற்றத் திருவிழா ஆரம்பிக்கிறது.

"சிங்களம், தமிழ், முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக இருப்பதற்காக எல்லாம் வல்ல இறைவனால் அருளப்பட்ட ஓர் இடம் இது என்று நினைக்கிறேன். இந்தப் பள்ளிவாசல் 4500 வருடத்துக்கு முன்வாழ்ந்த ஒரு நபியின் நினைவாக இருக்கிறது. ஹயாத்து அப்பா நபி என்பதே எங்கள் நம்பிக்கை.

ஜாதிமதம் இல்லாமல் இந்தப் பள்ளிவாசலுக்கு வந்து நிய்யத்து(நேர்த்திகடன்)வைத்தால் அது நிறைவேறுகிறது.

மூன்று மதத்தவர்களும் ஒன்று சேர இருப்பது மிகவும் மகிழ்சியாக இருக்கிறது. நான் 1952இல் இருந்து நிர்வாகியாக இருக்கிறேன். இங்கு முஸ்லிம் யாத்திரிகர்கள் வருகிறார்கள். இன்றும் பசி ஆயிரக்கணக்கானவர்கள் வருகிறார்கள். எந்தப் பிரச்னையும் இல்லாமல் நாம் பள்ளிவாசலை நிர்வகிக்கிறோம்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றார் காலியில் இருந்து வந்திருக்கும் கதிர்காமம் பள்ளி வாசல் நிர்வாகி முஹமட் உஸைர் அப்துல் ஜப்பார்.

"வருடாந்தம் அதிகமானர்கள் வருகிறார்கள். அவர்கள் பக்திப் பரவசத்தோடு வருகிறார்கள். கதிர்காமம் தேவஸ்தானத் துக்குள் வியாபாரம் செய்யப்படுவது இல்லை. வியாபாரம் முழுக்க வெளியில்தான் செய்யப்படுகிறது. பள்ளிவாசலில் முஸ்லிம்களுக்கான ஏற்பாடுகளை எமது சக்திக்கு ஏற்றவாறு நாங்கள் அமைத்துக் கொடுக்கிறோம். முஸ்லிம்களும் பௌத்தரும் இந்துக்களும் ஒன்று சேர்ந்திருப்பது மகிழ்ச்சியான விசயம் தானே" என்கிறார் பள்ளிவாசலில் கடமையாற்றும் மௌலவி அப்புஸ்ஸமது.

மாணிக்க கங்கையில் நீராடி நேர்த்திக்கடன்களை நிறை வேற்றிய வண்ணம் இருந்தனர் மக்கள்.

கிளிநொச்சி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருகோண மலை என்று நாட்டின் எல்லாப் பகுதிகளிலிருந்தும் மக்கள் வந்துகொண்டே இருந்தனர். சன நெரிசல் எள்ளுப்போட்டால் எண்ணெய் வந்துவிடும்.

மாணிக்க கங்கைக்கு மேலால் போடப்பட்டிருந்த பாலம் இலட்சக்ககணக்கான மக்களின் போக்குவரத்திற்கு வழி விடமுடியாமல் பிதுங்கிகொண்டிருந்தது. முட்டி மோதி இடித்து நெருக்கிப் பல சிரமங்களைக் குழந்தைகளும் பெண்களும் முதியவர்களும் அனுபவித்தனர்.

"எவ்வளவு வருமானம் வருகிறது ஒரு பெரிய பாலத்தை மக்களின் போக்குவரத்தக்கு கட்டினால் என்ன?" என்று நசுங்கிப்போன ஒரு பெண்மணி சபித்தார்.

"என்ரை நேர்த்திக்கடன் அப்பு, என்ரை மகன்மார் இரண்டு பேரை 1996இலை நாவற்குழியில் வைச்சு ஆமி புடிச்சுக் கொண்டு போனது. சித்திரவதை செய்து கஸ்டப்படுத்திபோட்டு ஒரு பெடியனிலை ஒண்டுமில்லை எண்டு சொல்லி விட்டுப் போட்டாங்கள். மற்ற மகனை விடவில்லை. அவன் இருக்கிறான் எண்டுதான் என்ரை மனம் சொல்லுது. அவனை ஆமிக்காரர் விடவேணும் எண்டதுதான் என்ரை நேர்த்திக்கடன். காணாமல் போன மகனுக்கு மூண்டு பிள்ளைகளும் மனுசியும் இருக்குது.

அதுகள் எப்பவும் கண்ணீரும் கம்பலையும்தான். ஒரு முடிவும் இல்லை. முடிவும் தெரியாது. யாரிட்டை போய் கேக்கிறது எண்டும் தெரியேல்லை. ஆமிக்காரர் மகனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடவேணும். அவன் வீட்டுக்கு வரவேணும். இந்த முருகன்தான் வழி விடவேணும்" எனக் கண்ணீருடன் என்னிடம் சொன்னார் சாவகச்சேரியை சேர்ந்த ஜெயராசா மகேஸ்வரி என்ற தாய்.

ஒவ்வொருவரும் ஒவ்வொரு நேர்த்திக்கடனைச் சுமந்து கொண்டு வந்திருந்தனர். பல நேர்த்திக்கடன்கள் இப்படித்தான் கண்ணீரோடு கலந்து இருந்தன.

பௌத்த கலாச்சாரமும் விகாரைகளும் மிகப் பிரமாண்டமானதாக இருக்க, முருகன் கோவில் சிறுத்து விட்டது. எங்குப் பார்க்கினும் சிங்கள மொழியும் அதன் ஆதிக்கமும் நிறைந்து காணப்பட்டன. பௌத்த பிக்குகள் மஞ்சள் உடையோடு ஓடியாடி பௌத்தத்தைப் பாதுகாக்கும் விஸ்தரிக்கும் பணியில் இருந்தார்கள்.

அங்கு வைக்கப்பட்டிருந்த விளக்கப் பலகைகளில்கூட தமிழை நன்றாக குறைத்துச் சிங்களத்தை விரிவுபடுத்தும் முயற்சிகளில்தாம் இருந்தார்கள்.

சூரன்கோட்டை என்னும் வரலாற்றுச் சிறப்புமிக்க இடத்தை கிரிவெஹர என்று பெயர் மாற்றிவிட்டார்கள்.

கதிரமலையில் இருந்த முருகனின் வேலைப் பின்புறமாகத் தள்ளி விட்டு பென்னம்பெரிய புத்த விகாரை ஒன்றைக் கட்டிவிட்டார்கள்.

ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தை மூடிவிட்டு அங்கு நூதனசாலை அமைத்துவிட்டார்கள். தமிழுக்கு முக்கியத்துவம் கொடுத்ததால் தான் அது மூடப்பட்டது.

சூரன்கோட்டை என்னும் பெயரைச் சிங்களவர்கள் மாற்றினாலும் தமிழர்கள் இன்னும் சூரன்கோட்டை என்றே சொல்கிறார்கள்.

கதிர்காமம் மூலஸ்தானம் எப்பொழுதும் திரை மூடியே இருக்கும் நிர்வகிப்பவர்கள், பூசாரிகள் எப்பொழுதும் இரகசியம் பேணுபவர்களாக இருப்பார்கள்; இருக்க வேண்டும்.

மூலஸ்தானத்துக்குப் போக அனுபதிக்கப்பட்ட பஸ்நாயக்க போன்றவர்கள் இங்குக் கோவிலில்தான் தங்க வேண்டும் வெளியாருடன் தொடர்பு வைத்திருக்க முடியாது என்ற நிபந்தனைகள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இங்கு அன்னதானம் கிரமமாக நடைபெறுகிறது. எந்தக் குறையும் இல்லை இங்கு 25 வருடங்களாக இருக்கிறேன். சிங்கள ஆதிக்கம் அதிகரித்துக் கொண்டு போகிறது. அதுதான் எனக்குக் கவலை" என்று பல விசயங்களையும் பற்றி பேசினார் அன்னதான மடத்துக்குப் பொறுப்பானவரும் மகாராஸ்டிரா மாநிலத்திலிருந்து இலங்கைக்கு வந்து 25 வருடங்களாக கோவிலில் சேவைசெய்து வருகின்ற எஸ்.பி. ஜோஸி. அவர் உருதுவிலும் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் கலந்து பேசினார்.

இங்கு யானைக்காரர்கள் நல்ல வருமானம் பார்க்கிறார்கள். ஒரு யானை தும்பிக்கையால் தலையைத் தொடுவதற்கும் யானையின் நான்கு கால்களுக்கு நடுவால் சுற்றி வருவதற்கும் 50 ரூபாய் அறவிடுகிறார்கள்.

வெள்ளைக்காரரைக் கண்டால், டூ ஃபிப்டி, திறீ கன்றட் என்று சொல்லிப் பழகிக்கொண்டு காசை கறந்து விடுகிறார்கள்.

ஒரு என்ஜிஓ முக்கியமான வேலை ஒன்று செய்து கொண்டிருந்தது. மனதுக்கு மகிழ்ச்சியாக இருந்தது. பிளாஸ்டிக் பைகளில் ஆட்கள் கொண்டுவரும் சாமான்களை வாங்கிப் புதிய துணிப்பைகளில் போட்டுவிட்டு பிளாஸ்டிக் பைகளைக் குப்பைத்தொட்டியில் போட்டுக்கொண்டிருந்தனர். அவர்களை மனதாரப் பாராட்டினேன்.

ஆனாலும் பிளாஸ்டிக் பைகள் குப்பைகள் என்று கதிர்காம மலைப்பிரதேசம் குப்பைக்காடாகிக் கொண்டிருக்கிறது. அரசு விகாரைக் கட்டும் அக்கறையில் இதையும் கொஞ்சம் கவனிக்க வேண்டும்.

ஏழுமலை உண்மையில் ஓர் அற்பதமான இடம்தான். நில மட்டத்தில் இருந்து 1200 அடிக்கு மேல் இருக்கிறது. அங்குக் கால் நடையாகவே யாத்திரிகள் போனார்கள். இடையில் தங்கிப் போவதற்கு வசதியாகச் சிறிய சிறிய கோவில்களும் தங்குமிடங்களும் இருக்கின்றன. குடி தண்ணீர் வசதி செய்யப்பட் டிருக்கிறது. வயதானவர்கள் பெண்கள் மலை ஏற முடியா தவர்கள் காசு வசதியானவர்களுக்கு ஜீப் வண்டி இருக்கிறது. கதிரமலைக்குப் போகிறவர்களுக்கான வாகனத்தின் நான்கு டயர்களும் பெரிய மொத்தமானவை.

என்ஜினியர்மார் அவ்வளவு உயரத்துக்குப் பாதை போடு வதற்குப் பாதுகாப்பு கருதி அனுமதிக்கவில்லையாம். கரணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தப்பினால் மரணம்தான். ஆனால் பௌத்த பிக்கு ஒருவர் தனது வருமானத்திற்காகப் பிடிவாதமாக றோட்டை வெட்டினாராம்.

நாம் பிக் – அப் வாகனத்தில் போனோம். மலையில் மேலே மேலே போகிறது. கீழே உள்ளவை எல்லாம் புள்ளிகளாகத் தெரிகின்றன போய்க்கொண்டிருக்கும்பொழுது ஒரு முறை பிக் – அப் வாகனத்தின் கியர் விழ மறுத்துவிட்டது. உச்சி மலையில் இருந்து ஒரு சறுக்கல். றைவர் சுதாகரித்துவிட்டார். உயிர் உதறும் என்பார்களே அப்பொழுது அதை அனுபவித்தேன்.

"ஏழு வயதில் தொடங்கி கடந்த 45 வருடங்களாக நான் கதிர்காமத்துக்கு வருகிறேன். 11 வருடங்கள் கால்நடையாக வந்தேன். ஆரம்பத்தில் இருந்து கதிர்காமத்தில் மாற்றத்தைப் பார்க்கிறேன்.

ஏழுமலையில் முதலில் வேல் மட்டும்தான் இருந்தது. தனி வேல் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது. அந்த நாட்களில் பக்திப் பரவசமாய் நிற்போம். முற்காலங்களில் மலையில் ஏறுவதற்குப் படிகள் ஏதும் இருக்கவில்லை. இப்பொழுது படிகள், தண்ணி வசதி என்று நல்லதுதான்.

ஆனால் வேலை நகர்த்திவிட்டுப் பென்னம் பெரிய விகாரை ஒன்றைச் சிங்களவர்கள் கட்டி வேலின் தனித்துவத்தையே இல்லாமல் செய்துவிட்டார்கள்.

மனம் ஒன்றித்து வணங்குவதற்குப் பெரும் சிரமமாகப் பெரிய விகாரை இடைஞ்சலாக இருக்கிறது. நான் கண்மூடி வேலை மட்டும்தான் தரிசிப்பேன்.

ஏன் இப்பிடி விகாரைகளைக் கட்டி கதிர்காமத்தின் தனித்துவத்தை அழிக்கிறார்களோ தெரியாது. எங்கும் பாருங்கள், தமிழ்க் கடவுளை இப்பிடிப் பௌத்தமாக்கி போட்டார்கள். ஏன்?

முன்பு ஒரு யானையில் யந்திரப் பேழையை மட்டும் கொண்டு போவார்கள். இப்பொழுது பாருங்கள் இருபத்தைந்து முப்பது யானைகள் போகின்றன. இதை பௌத்த கலாச்சார முறைப்படி பெரஹரா என்றே சொல்கிறார்கள். இது முருகன் கோவில் திருவிழா போலவே இல்லையே; இது கண்டி தலதா மாளிகை பெரஹரா போலத்தான் நடக்கிறது.

"இங்குப் பக்திப் பரவசத்தோடு தமிழர்கள்தாம் அதிகமாக வந்து நேர்த்திக்கடன் செய்கிறார்கள். காணிக்கை கொடுக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறார்கள். ஆனால் இப்பொழுது ஒரு பௌத்த கோவிலுக்கு வருவதுபோல இருக்கிறது. முருகனும் இதைப் பார்த்துக்கொண்டு தானே இருக்கிறார்" என்று மனம் பதறுகிறார் திருகோண மலையில் இருந்து வந்த பக்தர் வரதராஜா.

முருகனுக்கு வள்ளி பசியாறக்கொடுத்த தேனும் தினை மாவும் குழைத்து மாவிளக்கு ஏற்றி, வேலை பக்தர்கள் வழிபடு கிறார்கள். எங்கும் கிடைக்காத அரியவகை தேனும் தினை மாவும் குழைத்த அருமையான உணவை இங்கு மட்டும்தான் சுவைக்கலாம்.

வெளிநாடுகளில் இருந்தெல்லாம் தமிழர்கள் இங்கு வருகிறார்கள்.

எல்லாம் பறிபோய்விட்டதாகவே தமிழர்கள் புலம்பு கிறார்கள்.

கதிர்காமக்கந்தனை 'கதரகம தெய்யோ' ஆக்கிவிட்டார்கள் மற்றுமொரு கலாச்சாரத் தொன்மையை தமிழர்கள் இழந்தே விட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈழப் பிரச்சினையில் சிங்களப் பத்திரிகையாளர்களும் அறிவுஜீவிகளும்

சிங்களவர் என்ற இனத்துவ அடையாளத்தோடு நாங்கள் பார்த்த முதல் மனிதர்களே ஆயுதம் தரித்த ராணுவத்தினரும் பொலிஸ்காரரும்தான். சிங்களவர்கள் எப்பொழுதும் கோபத்தை உமிழும் கண்களோடு ஆயுத முனையில் எங்களை அடக்கி வைத்திருப்பவர்களாகவே எங்களது கிராமங்களில் இருந்தார்கள்.

இவர்களோடு சிங்களப் பொதுமக்களில் பேக்கரி (பிறட் கடை) வைத்திருந்த சிங்களவர்களும் சைக்கிளில் பெட்டி கட்டி மீன் விற்க வந்த சிங்களவர்களும் மட்டும் எங்கள் ஊரில் (ஒட்டுசுட்டான்) இருந்தார்கள். மற்றது இரிகேசன் டிப்பார்ட்மென்ட் அதிகாரிகளாகவும் சிங்களவர்கள் இருந்தார்கள். அவர்களுக்கும் தமிழ்ப் பொதுமக்களுக்கும் தொடர்பு இருக்கவில்லை. எனவே சிங்களவர் பற்றிய முதலாவது மன எண்ணம் பயமாகவே இருந்தது.

யாழ்தேவி ரயிலில் யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குப் பயணம் செய்யும்போது மாஹோ சந்திக்குப் பிறகு தமிழர்கள் யாரும் தமிழில் பேச மாட்டார்கள். ஏனெனில் அது சிங்களவரின் ஊர். அவர்கள் வீண் பிரச்சினையை ஏற்படுத்துவார்கள் என்கின்ற பயம். சில தமிழ்ப் பெண்கள் தங்கள் குங்குமப் பொட்டை ரயில் பயணத்தில் அழித்து விடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குத் தெரிந்த நாட்களில் இருந்து இன்றுவரை சிங்களவர்களோடு தமிழருக்கான ஒட்டுதல் இல்லாமல்தான் இருக்கிறது. அது புத்தி ஜீவிகள், பத்திரிகையாளர்கள் என்று எல்லோரிடமும் நீக்கமற நிறைந்திருக்கிறது.

சரி, அப்படித்தான் தமிழர்களுக்கான ஆதரவான அரசியல் நிலைப்பாட்டை சிங்களவர்கள் மத்தியில் யாராவது எடுக்க முற்பட்டால் அவர்களைச் சிங்கள கொட்டியா (சிங்களபுலி) என்று வாயடைக்க செய்வதில் சிங்கள அரசாங்கம் விரைந்து செயல்பட்டு விடுகிறது. பிறகு அவர்களால் எங்கும் எப் பொழுதும் பேச முடியாது.

விதி விலக்காக கலாநிதி விக்கிரமபாகு கருணாரத்தின மட்டும் சிங்களவர்களின் எல்லா வசைகளையும் மீறி தொடர்ந்தும் தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாகக் குரல் கொடுத்து வருகிறார். கடந்த வருடம் புலிகளின் புலம்பெயர் ஆதரவாளர்கள் நடத்திய லண்டன் மாவீரர் தின நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு பேசினார். திரும்பி இலங்கை போனபோது விமான நிலையத்தில் இருந்து வெளியில் வர சிங்களவர்கள் அவரது வாகனத்தைத் துரத்தித் துரத்தி அடித்தார்கள்.

ஹிரு சிங்கள பத்திரிகை குழுவினர் 2003ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 29ஆம் திகதி சமாதான காலத்தில் சிங்களத் தமிழ்க் கலைக்கூடல் என்று வடக்கு கிழக்கிலுள்ள தமிழ் எழுத்தாளர்கள் புத்தி ஜீவிகளை ஒன்று கூட்டி விழா வொன்றை கொழும்பு புதிய நகரசபை மண்டபத்தில் நடத்தினார்கள்.

சிங்களக் காடையர்கள் திரண்டு வந்து அங்கு கூடிய சிங்களவர்களையும் தமிழர்களையும் தாக்கிக் காயப்படுத்தினர். அந்த ஒன்றுகூடலில் புலிகளின் கவிஞர் புதுவை இரத்தின துரையும் கலந்துகொண்டிருந்தார்.

ஹிரு வானொலியைச் சேர்ந்த அதுல, லங்கா பத்திரிகை யைச் சேர்ந்த யமுனா ரஸ்மிகா உட்பட பலர் இந்தத் தாக்குத லில் காயமடைந்தார்கள்.

தமிழருக்காக ரத்தம் சிந்தியதில் நாம் பெருமையடை கிறோம் என்று சிங்கள எழுத்தாளர் ரோகித பஸ்கன அன்று சொன்னார்.

சிங்களத் திரைப்பட இயக்குனர் தர்மசிறீ பண்டார நாயக்கா தமிழர்மீதான இந்தத் தாக்குதல் சிங்கள மக்களுக்கு பெரும் ஆறாத வடு என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராசிரியர் சுசரித்த கமலத் தமிழ் மக்களுக்கெதிராக தொடுக்கப்படும் வன்முறைகளுக்கெதிராகப் போராடியவர்.

யுத்த காலத்தில் தமிழர்கள் ஆயிரக்கணக்கில் கொல்லப் பட்டபோதும் யுத்தம் முடிந்து இப்பொழுது முகாம்களில் அடைபட்டு வதங்குகின்ற காலத்திலும் சிங்கள ஊடகங்களும் ஊடகவியலாளர்களும் முழுக்க முழுக்க மறைத்த செய்தி களையே வெளியிடுகின்றனர். யாருமே உண்மையைப் பேசவில்லை.

மகேஸ்வரன் எம்பி, ரவிராஜ் எம்பி போன்ற தமிழர்கள் சிங்களமொழியில் பேசி சிங்களவர்களுக்கு உண்மையைச் சொல்லி விடுவார்களோ என்ற அச்சத்தில் அவர்களைச் சுட்டுக் கொன்று விட்டார்கள்.

தமிழ்ப் பெருந்தேசியவாதம் சிங்களவர்களோடு தமிழர்கள் ஒற்றுமையாவதைத் தடுத்ததுபோலத்தான் சிங்களப் பெருந்தேசியவாதமும் தமிழர்கள் சிங்களவர்களோடு ஒற்றுமையாவதை இன்று வரை தடுத்து வருகிறது.

சிங்கள ஊடகவியலாளர்களும் ஊடகங்களும் புத்தி ஜீவிகளும் எழுத்தாளர்களும் நினைத்தால் அடுத்த கணமே சிங்களவர்களையும் தமிழர்களையும் ஒற்றுமை படுத்த முடியும். ஆனால் அவர்கள் அப்படி நினைக்கத் தயாராயில்லை.

நவம்பர் மாதம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சாதாரணமான அமெரிக்கப் பயணத்தை மேற்கொண்டபோது அமெரிக்கா தமிழ் ஈழத்தை சிங்களவர்களிடமிருந்து பறித்துக் கொடுக்க போகிறது என்று கொழும்பிலுள்ள சிங்களப் பத்திரிகைகள் தலையங்கம் தீட்டுகின்றன. அந்த எதிரொலி யால் திருகோணமலையில் உள்ள தந்தை செல்வா சிலையின் தலை உடைக்கப்படுகிறது.

தமிழர்களைக் கொழும்பில் இருந்து சிங்களக் காடை யர்கள் விரட்டியடித்து இனக்கலவரங்களைத் தூண்டிவிட்டது பெரும்பாலான சிங்கள ஊடகங்களும் ஊடகவியலாளர் களும்தாம்.

நான் இலங்கையில் இருந்தபோது 2004–2006 காலப் பகுதியில் என்னோடு வேலை செய்த சிங்கள வீடியோ எடிட்டர்கள் ஈழத் தமிழர்கள் தொடர்பான ஆவணப்படங் களை நான் சார்ந்த தொலைக்காட்சிக்குச் செய்யும் பொழுது ஒரு கட்டத்தில் செய்ய முடியாது என்று மறுத்துவிட்டார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பில் பத்திரிகையாளர் சந்திப்புக்கு வரும் தமிழ்ப் பத்திரிகையாளர்களை சிங்களப் பத்திரிகையாளர்கள் கண்ணைக்காட்டி கொட்டியா (புலி) என்று சொல்வதை நேரில் கண்டிருக்கிறேன்.

புலிகளோடு சேர்த்து தமிழர்களைச் சிறீலங்காவிலிருந்து விரட்டவேண்டும் என்றுதான் யுத்த காலத்தில் சிங்கள பத்திரிகைகள் தலையங்கம் தீட்டின.

இலங்கையில் இருந்து வரும் சிங்கள, தமிழ்ப் பத்திரிகை களைப் பார்த்தால் அவை இரண்டும் இரண்டு எதிரிகளின் தேசத்திலிருந்து வரும் பத்திரிகைகள் போல்தான் இருக்கின்றன, இன்றும்.

**உயிர்மை 100ஆவது இதழ்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் ஆதிவாசிகள்

கொழும்பிலிருந்து பார்த்தால் ஏதோ அரசாங்கம் ஆதிவாசிகளுக்குப் பேருதவி செய்கிறது என்றுதான் எண்ணத்தோன்றும். ஆனால் விசயம் அவ்வறில்லை.

நான் முதன்முதலில் இந்த ஆதிவாசிகளின் காட்டுக்குள் போகிறேன். ஆதிவாசித் தலைவர் வன்னியலத்தோவை முதன் முதலில் வெளி உலகத்துக்கு தோளில் கோடரியுடன் தொலைக்காட்சியில் தனக்குப் பக்கத்தில் இருத்தி காட்டியவர் எனக்குத் தெரிய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாச தான்.

மகாவலி அபிவிருத்தி அமைச்சராக இருந்தபோது காணி திட்டத்தின் கீழ் அரை ஏக்கர் காணி மட்டும் கொடுத்துவிட்டு அமைச்சர் காமினி திஸநாயக்கா செத்துப்போய் விட்டார். காடுகளுக்குப் போகலாம், வேட்டையாடலாம், யாரும் உங்களுக்குத் தொந்தரவு கொடுக்கமாட்டார்கள் என்று அவர் உயிருடன் இருந்த போது வாக்குறுதி வழங்கினாராம். இது நடந்தது 1992இல்.

1994 ஒக்டோபர் 24ஆம் திகதி காமினி திஸநாயக்கா புலிகளின் தற்கொலை குண்டுத்தாக்குதலில் கொழும்பில் வைத்துக் கொல்லப்பட்டுவிட்டார்.

அந்தக் காணிகளில் வந்து அமர்ந்த பிறகு தங்களை வேட்டையாட இலங்கை அரசு அனுமதிக்கவில்லை என்று கவலையோடு தெரிவிக்கிறார், ஹினானிகலை பகுதியில் வசிக்கும் ஆதிவாசிகளின் தலைவரின் மகனான களுபண்டா. தாங்கள் அரசால் ஏமாற்றப்பட்டதாகவே அவர்கள் நினைக்கின்றனர். தாங்கள் வேட்டையாட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காட்டுக்குள் போனால் வன பாதுகாப்பு அதிகாரிகள் பெரும் கெடுபிடிகளை விதிக்கிறாரர்கள் என்கிறார் அவர்.

தாங்கள் ஆதிவாசிகள். தங்கள் வாழ்க்கை வேட்டையாடுவது. அதை விடுத்துத் தங்களால் வேறு ஒன்றும் செய்ய முடியாது. நாங்கள் காடுகளை விட்டு வேறு எங்கும் போக முடியாது என்கிறார் அவர்.

வேட்டையாடிய மிருகத்தோடு பிடிபட்டால் பதினைந் தாயிரம் ரூபாய் தொடக்கம் இருபதாயிரம் ரூபாய் வரை தண்டம் அறவிடுகிறார்கள் நீதி மன்றத்தில். இது பெரும் அனியாயம்.

இதனால் தங்கள் வீடுகளை அல்லது காணிகளை விற்றே தண்டப்பணத்தைக் கட்ட வேண்டிய நிலைக்குத் தள்ளப்படு கிறார்கள் அவர்கள். காமினி திஸநாயக்காவை அவர்கள் இன்னும் சபித்துக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கு இருக்க இடப்பிரச்சினை, நீர்ப்பிரச்சினை பெரும் பிரச்சினையாகவே இருக்கிறது. ஆற்றோரங்களில் சுதந்திரமாக இருந்தவர்களை அங்கிருந்து அரசு முற்றாக அகற்றிவிட்டதாகக் குறை கூறுகின்றனர். தங்களின் சுதந்திரம் பறிபோய் விட்டதை அவர்கள் எண்ணாத நாட்களில்லை.

“அரசியல்வாதிகள் எவரையுமே நம்ப முடியாமல் இருக் கிறது” என்று ஆதிவாசிகளின் தலைவரின் மகன் ஊருவர்க்கே பொஞ்ஜோ குணபண்டா லஞ்ஜோ சொல்கிறார்.

சிங்களவர்கள் ஆதிவாசிகளோடு பல இடங்களில் முரண்டு பிடிக்கின்றனர். சில வேளைகளில் அவர்களின் குடிசைகளுக்குத் தீ வைக்கிறார்கள்.

“சிங்களவர்கள் ஆதிவாசிகளை ‘வெத்தா’ என்றே அழைக் கிறார்கள். அவர்களை மதிப்பதில்லை. அவர்களுக்கு இடைஞ்சல் கொடுக்கிறார்கள்” என்கிறார் பிங்கொட வர்கே தலைவர்.

இப்போது தமது சந்ததியில் ஆறு பேர் மட்டுமே இருப்ப தாக அவர் தெரிவிக்கிறார். அவருக்குத் தனது பரம்பரை முடிவுறும் பயம் மேலோங்கி இருக்கிறது. சிங்களவர்கள் ஆதிவாசிகளோடு கலப்பதை விரும்பாவிட்டாலும் பல காதல் கலப்பு திருமணங்கள் ஊடாக இந்நிலமை மாறி வருவதாக சிங்களவர் ஒருவரைக் காதலித்து மணம் முடித்த ஆதிவாசிப் பெண் லீலாவதி தெரிவித்தார்.

இவர் ஆரம்ப பாடசாலையொன்றின் ஆசிரியராக இருக்கிறார். தனக்கு சிங்கள மக்கள் மத்தியில் மதிப்பு இருப்பதாகவும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் ஆதிவாசிகளில் படித்த பெண்ணாக இருக்கிறார். அவர் படித்தபோது பாடசாலையில் வைத்துதான் சிங்கள பையன் ஒருவரைக் காதலித்திருக்கிறார். அவரைப் பின்னர் மணம் முடித்தும் விட்டார்.

"பொதுவாக இப்பொழுது ஆதிவாசிப்பிள்ளைகள் பாட சாலைக்குப் போகிறார்கள். இங்கு அனேகமாக பெண் பிள்ளைகள்தான் படிக்கிறார்கள். ஆண் பிள்ளைகள் இரண்டு மாதம் பாடசாலை போவார்கள். பின்னர் மூன்றுமாதம் போக மாட்டார்கள். காரணம் வறுமை என்று சொல்லப்பட்டாலும் ஆண் பிள்ளைகள் அனேகமாக படிப்பதில் ஆர்வம் காட்டாமல் காடுகளிலேயே சுற்றித் திரிவதை விரும்புகிறார்கள். அதுதான் அவர்களுக்குப் பிடித்தமானதும்கூட.

அப்படிப் படித்தும் அரசாங்க உத்தியோகம் பார்க்க யாரும் போனதாகத் தெரியவில்லை. கடைகளில் வேலைக்கும் வேறு கூலி தொழில்களுக்கும்தாம் போகிறார்கள்.

ஆதிவாசிப்பிள்ளைகளில் பெண் பிள்ளைகள் கெட்டிக்கார ராக இருக்கிறார்கள். அவர்கள் நன்றாகவே படிக்கின்றனர். முதல் பத்து நிலைக்குள்ளால் வரக்கூடிய திறமையுள்ளவர் களும் இருக்கிறார்கள். அத்தோடு சிங்களப் பிள்ளைகளில் இருந்து பெரிதாக அவர்களிடம் வித்தியாசம் காண முடியாது. ஆனால் அவர்கள் இருக்கும் இடங்களுக்கு அருகில் அனேகமாக கிராமங்கள்தானே இருக்கின்றன. எனவே காட்டை அண்டிய கிராமங்களில் இருந்து வருகின்ற பிள்ளைகளையும் இவர்களை யும் பெரிதாகப் பிரித்துப் பார்க்க முடிவதில்லை.

வீட்டில்தான் அவர்களுக்கான ஊக்கம் கொடுக்க ஆட்க ளில்லை. பிள்ளைகள் தானாகவே படிக்க வேண்டும். பெற்றோர் கல்வியறிவு இல்லாதவர்களாக இருக்கும்போது பிள்ளைகளின் கல்வியூட்டலில் அவர்கள் அக்கறைப்பட முடியாது. அவர்க ளுடைய வீட்டில் பேசும் மொழி வடிவம் வேறு. பாடசாலை யில் சிங்களம் படிக்கிறார்கள். இது ஒரு பிரச்சினை. அவர்கள் சுய முயற்சிலேயே படிக்கிறார்கள்.

அத்தோடு பாடசாலையில் ஏனைய சிங்கள பிள்ளை களோடு கலக்கும்போது மிக அவதானமாகவே இருக்கிறோம். இவர்கள் ஆதிவாசிகள் என்ற தாழ்வு நிலையை ஏற்படுத்தாமல் இருக்க மிகவும் கவனமாகவே வகுப்புகளில் கையாள்கிறோம்.

ஆசிரியர்களும் அவர்களைக் கரிசனையோடு நடத்து கின்றார்கள். ஆனால் ஆண் பிள்ளைகள் படிப்பை இடை நடுவில் விட்டுவிடுவார்கள். பெண் பிள்ளைகள் படிக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கம் ஏனைய பிள்ளைகளுக்குக் கொடுப்பது மாதிரி வெள்ளைச் சீருடைகளைத் தருகிறது. ஆனால் ஒரு வெள்ளைச் சீருடை எத்தனை நாட்களுக்குப் போதும்?

இடையில் துணி வாங்கக்கூட அவர்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. அடுத்த வருடம்வரை அவர்கள் காத்திருக்க வேண்டும். கூலி வேலைக்குப் போய்தான் ஆதிவாசிப் பெற்றோர் வாழ்க்கை நடத்துகின்றனர். அனேகமாகப் பிள்ளைகள் காலை நான்கு மணியில் இருந்தே தயாராகிறார்களாம். காலையில் பெற்றோருக்கு வீட்டு வேலை செய்துவிட்டுப் பாடசாலைக்கு வரவேண்டும். காலையில் நெடுந்தூரம் போய் வாய்க்காலில் அல்லது ஆற்றில் குளித்துவிட்டு வருவது அவர்களுக்குப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. அத்தோடு பல மைல்தூரம் காடு களுக்குள்ளால் நடந்து பாடசாலைக்கு வரவேண்டும். அதுவும் அவர்களுக்குச் சிரமமான விடயமாக இருக்கிறது. இங்கு எல்லா இடங்களிலும் பஸ் போக்குவரத்து கிடையாது. அதனால் கல்வியில் அவர்கள் சோர்ந்து போகின்றனர்.

ஆனால், பத்தாம் வகுப்புவரை படித்தவர்களும் இருக் கின்றனர். அவர்களில் ஒரு பட்டதாரியும் இருக்கின்றார். என்றார் தம்பானை பாடசாலையில் கல்வி கற்பிக்கின்ற ஆசிரியர் குணசேன.

பாடசாலைக்குச் சென்று தமது பிள்ளைகள் படிப்பதை பல ஆதிவாசிகள் விரும்பினாலும் இதனால் தமது கலாச்சாரம் பறிபோகிறது என்று அவர்கள் பயப்படத்தான் செய்கின்றனர். பெரிய படிப்பும் படித்துவிட்டு தமது பெற்றோரை ஆதிவாசிகள் என்று சொல்ல பிள்ளைகள் தயக்கம் காட்டி விடுவார்களோ என்ற அச்சமும் அவர்கள் மத்தியில் இருக்கிறது. பெரிய படிப்பு என்று அவர்கள் நினைப்பது பத்தாம் வகுப்பைத்தான்.

ஏற்கனவே சிதறிப் போய்விட்டது எமது இனம். மேலும் துண்டாடப்பட்டு விடுமோ என்ற அச்சமாக இருக்கிறது என்கிறார் அடுத்த ஆதிவாசித் தலைவராக வர இருக்கும் ஊருவருகே பொஜ்ஜே குணபண்டே லஜ்ஜோ.

புதிய சமூக மாற்றத்துக்கு ஆதிவாசிகள் இனம் முகம் கொடுக்கத் தலைப்பட்டு விட்டதை அங்கு உணரக்கூடியதாக இருந்தது. மின்சாரம் இல்லாமல் இருந்த இடத்தில் ஒன்றிரண்டு ஊர்களுக்கு மின்சாரம் கொடுத்திருக்கிறார்கள். இது இருட்டில் காடுகளில் வாழ்ந்த அவர்களது சமூக வாழ்வைக் குலைக்கிறது.

ஆதிவாசிகளின் தலைவருக்கு சி டி எம் ஏ தொலைபேசி ஒன்று இலவசமாகக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர் கட்டணம் இல்லாமல் பேசலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்போது ஆதிவாசிப் பெண் பிள்ளைகள் மத்தியில் தமது சமூகம் தொடர்பான ஆர்வம் வருகிறது. பாடசாலைக்கு போகும் சிறியலதா என்ற சிறுமி, தான் ஒரு நேர்ஸ் ஆக வர விரும்புகிறார். கஷ்டப்படும் மக்களுக்கு உதவ வேண்டும் என்று விரும்புகிறார் சந்தமாலி என்ற பாடசாலை சிறுமி. தான் ஒரு ரீச்சராக வந்து கல்வியூட்டவேண்டுமென்று விரும்பு கிறார் குசுமாவதி என்ற ஆதிவாசி சிறுமி.

இப்படி அந்தப் பிஞ்சு உள்ளங்கள் மத்தியில் எதிர்காலத் தின் பிடிப்பும் ஆசையும் அவாவி நிற்கின்றது.

வளர்ந்த பெண்கள் அனேகமான நேரங்களில் பேசாமலே இருக்கிறார்கள். ஆதிவாசிகளும் ஆண்நிலைவாத சமூகமாகவே இருக்கின்றது. ஆண்கள்தாம் எல்லா முடிவுகளையும் எடுக் கிறார்கள்.

கூலி வேலைக்கு ஆண்களும் பெண்களும் போகிறார்கள். சின்னச் சின்ன வியாபாரமும் செய்கிறார்கள். யானை முடி, யானைத்தந்த மோதிரம், புலிப்பல்லு, கருங்காலி மரத்தில் செய்த களு தெய்யோ (கறுப்பு தெய்வச் சிலை உருவம்), சுரக்குடுவை, மரக்கோப்பை, மரத்தில் செய்த மாலைகள், ஆற்றுக்கல் என்று விற்கிறார்கள்.

ஒவ்வொன்றுக்கும் அதிக விலை சொல்கிறார்கள். அவர் களுக்கு வியாபார விடயம் தெரியவில்லை. நிறைய காசை ஒரே நேரத்தில் பெற்றுவிடலாம் என்று நினைக்கிறார்கள். அவர்களின் பொருட்களை ஆட்கள் வாங்குவது குறைவு.

அவர்களின் வீடுகள் களி மண்ணால் தடி வைத்து கட்டப் பட்டிருக்கிறது. மேல் பகுதிக்கு கூரைக்குக் காய்ந்த புற்களையே பாவிக்கிறார்கள். மரத்தில் வீடு கட்டி அங்கும் வாழ்கிறார்கள்.

உல்லாசப் பிரயாணிகளை அழைத்து வரும் ஹோட்டல் காரர்கள் ஆதிவாசிகளை வைத்து மரங்களில் பொறி வைப்பது, தேன் எடுப்பது, கல்லில் நெருப்பு எடுப்பது, வில் அம்பு விடுவது போன்ற விடயங்களைச் செய்துகாட்டச் சொல்லி பணம் கொடுக்கிறார்கள்.

ஒரு மனிதக் கூட்டத்தைக் காட்சிப் பொருளாக்கி இன்னொரு மனிதக் கூட்டம் பார்த்துச் சிரிக்கிறது, மகிழ்கிறது. மனத்துக்குள் நெருடியது எனக்கு. அவர்கள் சோறு சாப்பிடு கிறார்கள். இறைச்சியை வேகவைத்தும் சமைத்தும் சாப்பிடு கிறார்கள். நாங்கள் லண்டனில் பர்பகியூ என்று நெருப்பில் சுட்டு கடையில் பெரு விலை கொடுத்து சாப்பிடுகிறோம். அதைதான் இவர்கள் தினமும் சாப்பிடுகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தின் உதவிகள் எல்லாம் வேடுவ தலைவரின் இடமான தம்பானைக்குதான் போகிறது. மற்ற இடங்களுக்கு வருவதில்லை என்று மற்ற காடுகளில் இருக்கும் வேடுவர்கள் சொல்கிறார்கள்.

"ஆனால் அரசாங்கத்திடம் எந்தக் கோரிக்கையும் வைக்காமல் அவர்கள் கொடுப்பதை மட்டும் நாங்கள் வாங்குகிறோம். அவர்களாகப் பார்த்து கொடுத்தால் மட்டும்தான் ஏதாவது உதவி வரும்" என்கிறார் வேடுவ தலைவர் வன்னியலத்தோ.

பெலிமல்லும் (பச்சைத் தேனீர்போல) கித்துள் கருப்பட்டியும் சேர்த்த ஒரு பானத்தைச் சிரட்டையில் ஊத்திக் குடிக்கத் தந்தார்கள். அது ஓர் ஆரோக்கிய பானம். மிகவும் சுவையாக இருந்தது.

ஆதிவாசிகள் அழிந்துபோகும் இனமாகவே இருக்கிறார்கள் இலங்கையில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெண்டயினர் பயணம்

*1998ஆம் ஆண்டு.*

*எதிலிருந்து ஆரம்பிப்பது? எங்கே தொடங்குவது? யாரிடம் சொல்ல முடியுமிதை? யார் ஆற்றுவார்? குமுறிக் கொண்டிருக்கும் நெஞ்சங்கள் வெளியே சொல்ல முடியாத கதை. அல்லது வெளியே சொல்லத் தெரியாத கதை. அல்லது எழுதத் தெரியாத கதை. இது நான் லண்டன் வந்த கதை.*

*உங்களில் ஒருவர் அகதியாக இருக்கலாம். அது அரசியல் அகதியா அல்லது பொருளாதார அகதியா என்று நான் கேட்கப்போவதில்லை.*

*அது எனக்குத் தேவையுமில்லை. ஆனால் "கெண்டயினர் பயணம்" அல்லது ஆட்கடத்தல் கேள்விப் பட்டிருப்பீர்கள் தானே? ஒவ்வொரு தமிழனும் எப்படி யெல்லாம் பணம் கொடுத்து ஏஜன்டுகளிடம் அள்ளிக் கொடுத்து இங்கு லண்டனுக்குள் வருகிறான்?*

*ஐரோப்பாவுக்கும் மற்ற நாடுகளுக்கும் போகிறார்கள் என்ற விடயத்தின் ஒரு பகுதியை உங்களுக்கு நான் சொல்லப் போகிறேன். உயிரைக்கொடுத்து வாழ்க்கையைக் கொடுத்து செத்துப்போய் வருகிறான். உண்மையில் அரை உயிராகத்தான் தமிழன் இங்கு லண்டனுக்குள் வருகிறான். கண்ணால் கண்டேன். தமிழரைக் கண்டேன். நான் இதை எழுதுவது கட்டாயமானது. எனக்கும் இந்த அனுபவம் வாய்த்தது. ஒல்லாந்து, பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகளில் வைத்துச் சொன்னார்கள். இந்த நாடுகளில் என்றால் அந்தந்த நாட்டு மொழி படிக்க வேண்டும். இங்கிலாந்து போங்கள். மொழி லேசு. அகதிகளை ஏற்கிறார்கள். வேலையும் செய்யலாம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஏஜன்டைப் பிடித்து 3500 மார்க் கொடுத்து போக வேண்டும். இலங்கையில் இருந்து காசை வரவழைத்தாயிற்று. அனுப்புகிறோம், வாருங்கள், அழைப்பு வந்தது எதுவுமே தெரியாது. வரச்சொன்னார்கள். போனோம் நானும் எனது நண்பனும்.

எப்படிக் கொண்டு போகிறார்கள்? யார் கொண்டு போகிறார்கள். ஹொலன்டில் என் நண்பன் ஹாமீம். முன்பின் அறிமுகமாகாமல் இப்படி அன்பாய் இருப்பதற்கும் பழகுவதற் கும் அவனைத்தான் முதன் முதலில் பார்த்தேன். நெக்குருகிப் போகிறது. என்னை யாரென்று தெரியாமல் தனது ரூமில் வைத்து ஒரு மாதம் சோறு போட்டான். அவனைக் காணும் போதெல்லாம் அவனின் அந்த நல்ல மனம் என்னை உருகப் பண்ணிவிடும். இப்போது லண்டனில் இருக்கிறான்.

ஏஜன்ட் தொடர்பான விடயங்களில் நண்பன் வலு சூரன். அவர்கள் தொடர்பான விடயங்களை வலு திறமாக அறிந்து வைத்திருக்கிறான். அவர்கள் தொடர்பான எல்லா விடயங்களும் அத்துப்படி அவனுக்கு.

எதுவுமே எனக்குத் தெரியாது. வரச் சொன்னார்கள் போனோம். காரில் ஹாமீம் கொண்டு போனான். ஹொலன் டில் இருந்து பெல்ஜியம் கார்ப்பயணம் நன்றாக இருந்தது. இடையில் போடர் தாண்டும்போது யாரும் எதுவுமே கேட்கவில்லை. என்னிடமும் விசா இல்லை. பிரான்ஸுக்கு வந்த செங்கன் நாடுகளுக்கான விசா 15 நாட்களில் முடிந்துவிட்டது.

பெல்ஜியத்தில் ஒரு வீட்டில் விட்டுவிட்டு நண்பன் பயணம் சொல்லிவிட்டு போய்விட்டான். அந்த வீட்டில் இருக்கச் சொன்னார்கள். இருந்தேன். என்னோடு சேர்த்து நான்கு பேர் ஏற்கனவே இருந்தார்கள். தமிழர்கள்தானே, பாஷை புரிகிறதே. அது போதும். சமைத்தார்கள், சாப்பிட்டோம். ஒரு சோறு ஒரு கறி.

அன்றிரவு பதினொரு மணிபோல ஒருவன் வந்து சொன்னான்: “வெளிக்கிடுங்கோ.” காரில் ஏற்றினான். கார் போகிறது புகை போல. ஒன்றரை மணித்தியாலம் மட்டில் கார்ப்பயணம். ஓரிடத்தில் நிப்பாட்டி இறங்கச் சொன்னார்கள். இறங்கியாயிற்று. “இறங்கி ஓடுங்கோ.” ஓடினோம், “பற்றைக்குள் படுங்கோ.” படுத்தோம்.

ஒருவன் போய் கென்டயினர் நிற்கும் இடங்களை அவதானித்தான். ஏதோ ஆமி காம்பை தகர்க்கும் பாணியில் –




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எல்லாம் சுழண்டு படுத்து அனுகூலம் பார்த்து ஒருவாறாக ஒரு றெக்ஸீன் கெண்டயினரை அவிழ்த்து "ஒவ்வொருத்தராய் வந்து ஏறுங்கோ." உத்தரவுப்பிரகாரம் வந்து ஏறினோம். "இங்கிலாந்து போவியள். இனி உங்கடை பாடுதான். சத்தம் போடாமல் இருக்க வேணும். இருங்கோ." பக்குவமாய் வெளியில் காட்டி னான். போய்விட்டான். உண்மையில் கள்ளமாய் இப்படிக் கெண்டயினரில் ஏற்றுவதற்கும் எவ்வளவு திறமை வேண்டும்.

நடுச்சாமம். படுக்கவேண்டும். நித்திரை வருகிறது. என் மனைவியே! நான் ஐரோப்பா வரும்போது ஏன் அப்படி யெல்லாம் அழுதாய்? இரண்டு கிழமைகளாக என்னைக் கட்டிக்கொண்டு அழுதாயே? உனக்கெல்லாம் சகுனம் தெரிந்ததா என்ன? இப்படியெல்லாம் அகதிகள் அலைக் கழிக்கப்படுகிறார்கள் என்று. நான் இப்படி கஷ்டப்படுவேன் என்று நினைத்தாயோ?

பலகைத் தட்டு ஊத்தைக் கெண்டயினர். படுக்க முடிய வில்லை. முதுகெலும்பு வலியெடுத்தது. போக வேண்டும். ஆம், போகத்தான் வேண்டும். இங்கிலாந்துக்காவது.

காலையில் கெண்டயிரை எடுக்கிறான் சாரதி. ஓடுகிறது அது. ஓடிக்கொண்டே இருக்கிறது. மூன்று மணித்தியால ஓட்டம். திடீரென்று நிற்கிறது. றெக்ஸீன் சீற்றுக்குள்ளால் ஓட்டை போட்டு வெளியே பார்த்தான் வந்தவனில் ஒருத்தன்.

அதற்கிடையில் திடீரென்று நிற்பாட்டிவிட்டு வந்து பின் கதவைத் திறந்தான் கெண்டயினர் சாரதி. அதிர்ச்சி அடைந் தான். "இறங்கி ஓடுங்கோ." ஆங்கிலத்தில் திட்டினான். ஓடினோம். எங்கே என்று தெரியாமல் ஓடினோம். ஹைவேயால் ஓடினோம். பொலிஸ் பிடிப்பார்கள். ஒன்றாக ஆட்கள் சேர்ந்து ஓடினாலும் பிரச்சினை. பிரிந்து பிரிந்து இவ்விரண்டு பேராக ஓடி, ஒரு மாதிரி ஒரு சிறிய வங்கியைக் கண்டு பிடித்து காசு மாற்றினோம். அந்த வங்கியில் இருந்தவருக்கு ஆங்கிலம் மருந்துக்கும் தெரியாது. எங்களுக்கு பெல்ஜியம் மொழி தெரியாது. கையிலிருந்தது பவுண்ட். கை நிறையத் தந்தார்கள். பெல்ஜியம் பணத்தைச் சுத்தி சுத்தி சுப்பற்ற கொல்லைக்குள்ளைதான். ஆம், பெல்ஜியத் துக்குள்ளேதான் மனது சலித்தது.

பொலிஸுக்கு பயந்தோம். பிடித்தானென்றால் அந்த நாட்டுக்குள்ளேயே அகதியாய் அலைக்கழிப்பானே. பயம்தான். ரயில் பிடித்து மீண்டும் முதல் நான் நின்ற அதே வீட்டுக்கு ஏஜன்டிடம் வந்து சேர்ந்தோம். இது ஒன்றும் புதினமில்லை ஏஜன்டுக்கு. இப்படி போகமுடியாமல் கெண்டயினர்காரனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துரத்தப்பட்டுத் தினமும் ஆட்கள் திரும்பி வருவது அவருக்குச் சாதாரணமாக இருந்தது. எனக்கு ஏதோ பெரிய பாடாக இருந்தது.

சமைக்கச் சொன்னார். சமைத்தோம். சாப்பிடச் சொன்னார். சாப்பிட்டோம். அசதி மிகுதியால் படுத்துக் கிடந்தோம். நித்திரை வந்தது.

முதல் நாள் செவ்வாய்கிழமை. அன்றைக்கு புதன். நித்திரையில் வந்து எழுப்பினார்கள். "அவசரமாய் கழிசானைப் போடுங்கோ!" என்ன இழவு இது? கழிசானுக்கு மேலால் கழிசான். ஷேட்டுக்கு மேலால் இன்னும் மூன்று ஷேட்டுகள் போட வேண்டாமா? அதுதான் பை ஒன்றும் கொண்டு போக விடமாட்டார்களே, வேறென்ன செய்கிறது? அங்கை போய் வேறென்னத்தை போடுறது? நான் இதனை எல்லாம் போட முதல் நாலு பேரைக்கூட்டிக்கொண்டு போய்விட்டார் கள். அவர்கள் இங்கிலாந்து போய்ச்சேர்ந்து அகதி முகாமில் அல்லல்படும் கதை தனி. பயணம் என்பது நரகத்தின் ஒரு துண்டு என்று முஹமது நபிகளார் சொல்லியிருக்கிறார். அதை அனுபவத்தால் உணர்ந்துகொண்டிருக்கிறேன்.

எங்களைக் கூட்டிக்கொண்டு போனார்கள். என்னோடு காரில் இன்னும் மூன்று தமிழர்கள். தமிழர்களைத் தமிழர்கள் ஏமாற்றும் தமிழர் கதை இது. அவசரமாய் வரச்சொன்னார்கள். போனோம். கொண்டு போனார்கள். காரில் இரண்டு மணித் தியாலங்கள்வரை. காரின் பின் ஆசனத்தில் நான்கு பேரை அடைத்து ஏற்றி இறக்கினார்கள். கற்கள், முட்கள், செடிகள் ஊடாக சுமார் ஒரு மைல் தூரமளவிற்கு நடத்திக் கூட்டிக் கொண்டு போனார்கள்.

ஒரு துறைமுகம் வந்தது. கென்டயினர்கள் நிறைய நின்றன. எந்தக் காவலும் இல்லை. ஆட்களும் இல்லை. ஆசுவாசமாய்ப் போய் ஒரு கென்டயினர் நாடாவை அவிழ்த்துவிட்டு உள்ளே ஏறும்படி சொன்னான் ஒருவன். ஏறினோம். அப்பாடா, இதுவாவது லண்டன் போகுமா? அல்லது இங்கிலாந்தின் ஏதாவது ஒரு கரையையாவது தொட்டுப் பார்க்குமா?

மனவலி, முதுகுவலி. அப்பாடா! ஏறினால் உள்ளே எல்லாம் எழுதும் காகிதங்கள். அல்லது அச்சடிக்கும் வெள்ளைக் காகிதங்களின் பெரிய பெரிய கட்டுக்கள். எங்களில் வந்த ஒரு புத்திசாலி சொன்னானாக்கும்: இது லண்டன் தான் போகிறது, சந்தேகமில்லை. எழுதும் காகிதம். அச்சடிக்கும் காகிதம் என்றால் லண்டனுக்குத் தானே போக வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடப்பாவி, உனக்கு எங்கே இருந்து இந்த மூளை வந்ததடா? எனக்கு ஒன்றுமே சொல்லத் தோன்றவில்லை. படுத்தேன். சுகமாக இருந்தது. இலக்கியக்காரனுக்கு காகிதம் என்றால் அதன் மேல் படுத்தாலும் சுகம் வருமாக்கும். எனக்கு நித்திரை வரப்பார்க்கிறது. விடுகிறான்களில்லை. மற்றவன்கள் எழும்பு, உன்ரை குறட்டை எங்களையும் சேர்த்து காட்டிக்கொடுத்து விடுமே என்று பயப்பட்டார்கள்.

இங்கு லண்டன் வந்ததன் பிறகு குறட்டைக்கு மருந்து தேடி மூக்குக்கு ஒட்டும் சாமான் ஒன்று, வாய்க்கு அடிக்கும் ஸ்பிறே ஒன்று, பல்லை கட்டி போடும் சாதனம் ஒன்று எல்லாம் போட்டும் இன்னும் குறட்டை என்னை விட்டு போகுதில்லை.

குந்திக்கொண்டு கோழித்தூக்கம் போடக்கூட விடுகிறார் களில்லை. அடேய், நான் ஒரு எழுத்தாளனடா! என்ரை கவிதைகளை, கதைகளைப் போட்டு அல்லது படித்து மற்றவர்கள் என்னை மதிக்கிறார்களடா! நான் ஒரு அறிவிப்பாளரும்கூட எடா! என்னை எப்படியெல்லாம் எல்லா இடங்களிலும் கவனித்தார்களடா!

"எழுத்தாளரும் மயிரும்! இப்ப நீ குறட்டை விடக் கூடாது. சத்தம் போட்டுப்பேசக் கூடாது. என்னண்டாலும் நீ எங்களின்ரை கென்ரயினர் கூட்டாளி. நாங்கள் சொல்லுறதை மட்டும் நீ இப்ப கேட்க வேண்டும். கென்டயினரில் போறதுக் கெண்டு சில வழிமுறைகள் இருக்கு. சத்தம் போடக் கூடாது, மூத்திரம் பெய்யக் கூடாது. கக்கூசுக்கு போகக் கூடாது. குறட்டை விடக் கூடாது... இப்படி... இப்படி..."

அப்படியா! கட்டுண்டேன். வழிப்படத்தானே வேண்டும். வழிப்பட்டேன். காலையில் கென்டயினரை பூட்டிக்கொண்டு துறைமுகத்தை விட்டு வெளியில் எடுக்கிறான் சாரதி. இதாவது போகட்டுமே இங்கிலாந்துக்கு! ஒருவன் நெஞ்சை இடம்புறம் வலப்புறமாகத் தொட்டு சிலுவை யேசுவை பிரார்த்தித்துக் கொண்டான். மற்றைய இருவரும் கைகளைத் தலைக்குமேல் தூக்கி கும்பிட்டுக்கொண்டார்கள். என்னாகுமோ, எத்தனை நாளாகுமோ? கென்டயினர் துறைமுக செக்கிங் எல்லாம் முடிந்து வெளியே ஓடுவது தெரிகிறது. ஆனால் அந்த செக்கிங்கில் நாங்கள் கண்டு பிடிக்கபடவில்லை. எண்ணி அரை மணித் தியாலத்துக்குள் கென்டயினரை நிப்பாட்டி விட்டு சாரதி வந்து பின் கதவைத் திறக்கிறான். திறப்பது தெரிந்தது, ஏறி எட்டிப் பார்த்தான். நாங்கள் நால்வரும் படுத்துக்கொண்டிருந் தோம். சாரதி எங்களைக் கண்டுவிட்டான். எங்களில் ஒருவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழும்பி சாரதியை கையெடுத்து கும்பிட்டான். அவனுக்கெங்கே கும்பிடு விளங்கப்போகிறது? எழும்பி மெதுவாக நடந்து வந்தோம். கெண்டயினர் அவ்வளவு நீளம்.

சாரதி சிரித்தான். அவனை இப்பூவுலகில் நல்லவனாகப் படைத்தவன். எனவே அவனுக்கு நயம்மிகு நன்றிகள். "எங்கே போகிறீர்கள்?" கேட்டான் சாரதி. "லண்டனுக்கு." ஓ மை கோட்!

"எல்லோரும் அப்படியே இருங்கள்" என்று விட்டு பின்பக்கம் காகிதக்கட்டில் வைக்கப்பட்டிருந்த அவனுக்கான கடிதத்தை எடுத்து தான் போகவேண்டிய விலாசத்தை பார்த்தான். "நான் பிரான்ஸ் போகிறேன். தேவையென்றால் அங்கு கொண்டுபோய் விடட்டுமா?" ஆங்கிலத்தில் கேட்டான் அவன். "எங்களை இந்த இடத்தில் இறக்கி விடு ராசா." நான் சொன்னேன்.

"இந்த இடம் ஆபத்து, உங்களை பொலிஸ் பிடிக்கும். அப்படியே இருங்கள். பாதுகாப்பான இடத்தில் விடுகிறேன். யார் கண்ணிலும் படாமல் போய்த் தப்புங்கள்."

என்ன ராசி இது? இவனும் மகா நல்லவன். உலகத்திலே உள்ள நல்ல கெண்டயினர் சாரதிகளில் இவனும் ஒருவனே! நல்ல சாரதிகளே நீவிர் வாழ்க. நீங்கள் இருக்குமட்டும் தமிழர் கெண்டயினரில் நாடு கடந்து போகலாம்.

ஒரு நிலக்கரிச் சுரங்கம். அல்லது நிலக்கரி உலை. அதனண்மையில் எங்களை இறக்கிவிட்டு கைலாகு கொடுத்து போகச் சொன்னான். தேடிப்போய் நடையாய் நடந்து. ஒரு கடையைக் கண்டுபிடித்து கடைக்காரனிடம் அடிமாட்டு விலைக்கு ஸ்ரேலிங் பவுண் மாத்தி, பசிக்கும் தாகத்திற்குமாய் கோலா குடித்துவிட்டு, ரயில் நிலையம் தேடி பணம் மாற்றி, பயணச்சீட்டு எடுத்துக்கொண்டு, அந்த ஏஜன்டின் வீட்டுக்கு வந்தடைந்தோம். இரண்டாவது பயணமும் பாழ். மீண்டும் பெல்ஜியத்துக்குள்ளேதான்.

எல்லாக் கனவுகளும் மண். பேசாமல் ஊரில் இருந்திருக்கலாம். ஏனிந்த இங்கிலாந்து? அகதிகளுக்கு அங்கு என்ன சொர்க்கமா தரப்போகிறார்கள்? முதுகு வலிக்கிறது. ஒவ்வொரு எலும்பு மூட்டுகளுக்குள்ளாலும் வேதனை பீறிடுகிறது. பசியாலும் தாகத்தாலும் வலுவிழந்து போனேன். கெண்டயினர் பயணம் என்றால் என்ன லேசானதா? இருபத்தொருபேர் ஒரு முறை மாதக்கணக்காக பயணம் செய்யும் கப்பல் கெண்டயினர் ஒன்றிலிருந்து ஒன்றாகவே செத்துப்போனார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விப்பட்டோம். எனக்குத் தெரிந்த ஒரு பெண்ணின் கணவர் கென்டயினரில் போய் இன்னும் வரவேயில்லை. செத்துப்போனாரா, இருக்கிறாரா? இன்னும் தெரியாமல் பன்னிரண்டு ஆண்டுகள் என் கண் முன்னாலேயே காத்திருக் கிறாள். அவளுக்கு யார் ஆறுதல் சொல்லித் தேற்றுவார். பாவம் அவள். இரண்டு பிள்ளைகளோடு. இது எல்லாம் கதைகளில்லை. தினம் நடைபெறும் உண்மையான கண்ணீர் அவலங்கள்.

கவிஞர்களே! சர்வதேசப் பிரபலங்களே,! ஒரு முறையாவது அனுபவித்துப்பாருங்கள். பிச்சை வேண்டாம். நாயைப் பிடி என்பீர்கள். ஒவ்வொரு தமிழனும் வேதனைப்படுகிறான். சமாதானத்தின் காவலர்களே, சொல்லுங்கள்! இன்னும் சில காலங்களுக்குள் இலங்கையைக் குட்டி சோமாலியாவாக்க பிரயத்தனப்படும் ஆட்சியாளர்களே, உங்களுக்கெங்கே தெரியும் இந்த வேதனைகள்?

பெல்ஜியம் ஏஜென்ட் வீட்டில் வைத்து வழமையான சாப்பாடு. பின் அசதி மிகுந்த தூக்கம். 24 மணித்திலாத்துக் கொரு தடவையாவது சோறு தின்ன கிடைத்த பாக்கியத்தை எண்ணினேன்.

வியாழன் மூன்றாவது நாளிது. வழமைமாதிரி இரவு 11 மணிபோல் வந்து எழுப்பினார்கள். நாங்கள் நான்கு பேரும் உடுப்புகள் போட்டு தயாராக இருந்தோம். வாரிச் சுருட்டிக் கொண்டு எழும்பி ஓடினோம். வழமையாக அல்லாமல் கார் ஓடிக்கொண்டே இருக்கிறது. எங்கே போகிறதோ? அட எனக்கு பரிச்சமான இடம் வருகிறதே! அம்ஸ்ரடம். பின்னர் றொட்டடம்.... ஆ... இது ஒல்லாந்து. ஓடிய காரிலிருந்து வேறொரு காருக்கு மாற்றப்படுகிறோம். ஓடி... ஓடி... உலகப் பிரசித்தி பெற்ற துறைமுகத்துக்கு அருகில் கொண்டு வந்துவிட்டார்கள். ஏதோ ஒரு பெரிய அதிரடிப்பாணியில் எங்களுக்கு பயிற்சி தரப்பட்டது. தமிழ் ஏஜன்ட் ஒரு துருக்கி காரனுக்குப் பொறுப்பு கொடுத்திருந்தான். ஒரு சங்கிலி தொடர்போல இந்த கென்டயினரில் ஆள் கடத்தும் வேலை தொடருகிறது. துருக்கிகாரன், சோமாலியாகாரன், பாகிஸ்தானியன், பங்காளிகாரன், தமிழன் எல்லோரும் கலந்து கட்டி இந்த வேலையை செய்கிறார்கள் ஒற்றுமையாக.

கீழே மாகடல். கப்பல்கள் நிற்கின்றன. மேலே கம்பிவேலி. அப்பால் கென்டயினர்கள் அடுக்கி நிற்கின்றன.

சரிவாய்க் கட்டிய சீமெந்துப்பாதையில் குனிந்து கொண்டு அரை மைல் தூரம் நடக்க வேண்டும். பின்னர் மேலேயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு கம்பி கீழேயும் ஒரு கம்பி, சுமார் 20 மீட்டர் வரையில் கம்பியில் நடக்க வேண்டும். தவறி விழுந்தால் கீழே ஆழ்கடல். அவ்வளவுதான், யாரும் காப்பாற்றமாட்டார்கள். கடலில் மூழ்கி செத்துப்போக வேண்டும். இப்படி ஆபத்துக்கள் தாண்டி வந்தால். ஒரு புறம் எங்களுக்கு நல்ல காலம். மறுபுறம் ஏஜண்டுக்கு இலங்கை பணப் பெறுமதிப்படி தலைக்கு ஒரு லட்சத்து பதினோயிரத்து ஐநூறு ரூபாய் தேறுகிறது. இது 1998ஆம் ஆண்டுக் கணக்கு.

எட்டிப் பார்த்தான், எங்களை அழைத்து வந்தவன். துறைமுக செக்கியூரிட்டி எங்கே போனான்? அவனின் அறை மட்டும் திறந்திருக்கிறது. ஆளில்லை.

ஒண்டுக்கு இரண்டுக்கு போயிருப்பானாக்கும். வெள்ளைக் காரனே! உன் கண்ணில்கூட விரலைவிட்டு ஆட்ட எப்படிப் பழகிக்கொண்டான் என்னவன்!

வேலி ஏறிக் குதித்து ஒரு கென்டயினர் அருகில் உயிரைக் கொடுத்து வந்து சேர்ந்தாயிற்று. கூட்டி வந்தவன் எல்லோரையும் அதன் கீழே படுக்கச் சொன்னான். பின்னர் கென்டயினரைச் சுற்றிக் கட்டியிருந்த பெரிய நாடாவைக் கழட்டி ஏறச் சொன்னான். ஏறினோம். அப்படி ஏறுவது மற்றும் ஏற்றுவது சட்டப்படி கிரிமினல் குற்றம். நாங்கள் தமிழர்கள் நால்வரோடு சேர்த்து ஒரு அல்பானியன். இன்னுமொரு பாகிஸ்தானியன். மொத்தமாக ஆறு பேர். உள்ளே ஏறினால் கென்டயினரில் கொக்கோ கோலாவைப் பெட்டி பெட்டியாக நிரப்பி அடுக்கி இந்தார்கள். ஒரு மணித்தியாலமளவில் லண்டன் போவீர்கள் என்று சொல்லிவிட்டு கென்டயினரை முதலில் இருந்தது போல கட்டிவிட்டு அவன் போய்விட்டான். இருக்க இடமில்லை. கிடைத்த சில இடைவெளிகளைப் பகிர்ந்துகொண்டு இடுப்பெலும்பு நோக நோக இருந்தோம். பசித்தது. உணவில்லை. தாகித்தது, கொக்கோ கோலாவை ஏற்றியனுப்பிய முதலாளியே! அல்லது நிறுவனமே! எங்களை மன்னித்து விடுங்கள். குடித்து குடித்தே தாகமும் பசியும் தீர்த்தோம், இரவும் பின்னரொரு பகலும்.

அடுத்த நாள் பகல் 12 மணியளவில் கென்டயினரை எடுத்து கப்பலில் ஏற்றுவது தெரிந்தது. அதென்ன அப்படிச் சத்தம். இடி இடியென்று ... கப்பல் எப்படி இருக்கும்? எங்களுக் கெல்லாம் இருட்டு மட்டும் தான் துணை. என்னது ஒரு மணித்தியாலமா? கப்பலே எங்கு போகிறாய்? எண்ணிக்கை தவறாமல் 13 மணித்தியாலங்கள் போகிறது கப்பல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதென்ன இங்கிலாந்தைச் சுற்றி கடல் ஊர்வலமா? அதில் ஒருவன் சொன்னான், கொக்கோகோலாவை ஏற்றிக் கொண்டு கப்பல் என்ன சவூதிக்கா போகிறது? ஆருக்கு தெரியும் மாலுமிகளே! உங்களுக்கு தெரியுமா! இங்கு ஆறு உயிர்கள் ஆலாய்ப் பறப்பது?

ஒருவாறாகக் கப்பல் ஒரு துறைமுகத்தை அருகணைப்பது விளங்குகிறது. நங்கூரம் இறக்கப்படுகிறதோ என்னவோ! சத்தம் கர்ணகடூரமாக... எங்கே நிற்கிறோம்? தெரியவேயில்லை. கென்டயினரை ஒருவாறாகக் கொண்டுவந்து துறைமுகக் கரையில் நிப்பாட்டினார்கள். எனது மணிக்கூட்டில் பார்த்தேன். நேரம் அதிகாலை 3:15.

காத்திருந்தோம் வெளியில் எடுக்கும்வரை. பகலாச்சு. மற்றக் கென்டயினர்களை வாகனம் வந்து கொண்டு போகிறது தெரிகிறது. நாங்கள் இருக்கிறோம், இருக்கிறோம், இருந்து கொண்டே இருக்கிறோம். எடுக்கிறார்களில்லை. மனம் சலித்துவிட்டது. பசியைப் போக்க எந்தக் கோலாவால் முடியும்? பொறுமையிழந்து அந்தப் புத்தி அல்பானியனுக்கு வந்தது. றெக்ஸீன் சீலையை வெட்டி இறங்குவோம் என்றான். சரி யென்றோம்.

அல்பானியனும் பாகிஸ்தானியனும் முதலில் இறங்கிப் போய்விட்டார்கள். தமிழர்கள் நாம் நால்வரும் இறங்குகிறோம். முதலில் போனவர்கள் இரண்டு பேர் பொலிஸில் மாட்டுப் பட்டுவிட்டார்கள். துறைமுக கமரா எங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டது. அல்பானியன் பிடிபட்டது பின்னர் தெரியவந்தது. பாகிஸ்தானியன் எங்கேயோ வெளியில் ஓடித் தப்பிவிட்டான். பிடிபடவேயில்லை. சரி, கமராக் கண்ணில் மண்ணைத் தூவி விட்ட பாகிஸ்தானியனே! நீயாவது எங்காவது போ! போய் நல்லாய் இரு!

அட... இங்கிலாந்தின் ஒரு மூலைக்கு வந்து விட்டோமையா! இன்று திகதி 07.08.1998.

வெள்ளைக்காரனுக்கு வணக்கம்!

இன்முகத்துடன் வரவேற்க உனக்குத் தெரிகிறது. அதென்ன துறைமுகத்தை சுற்றி ஜீப்பில் எங்களை வைத்து ஊர்வலமா போகிறாய்!

"வாருங்கள். ஆஹா என்ன வரவேற்பு?"

"என்ன வேண்டும் உங்களுக்கு?"

"அகதி அந்தஸ்து தா!"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அதைத் தீர்மானிக்க வேண்டியது அதிகாரிகள்."

"உங்களுக்குப் பசிக்கிறதா?"

"ஆமாம் கடும் பசி, கொண்டு வா வெள்ளைக்காரனே!"

மணக்க மணக்க கோழித்தொடை, உருளைக்கிழங்கு துண்டுகள், இன்னும் சிப்ஸ். அட சனியனே, மீண்டும் கோலா... சரி தா!

மிளகுப்பொடி, உப்புப்பொடி. யார் பெத்த மகனோ? யார் வீட்டுப் பணமோ? நன்றியடா நன்றி! எங்கள் தாய் பூமியை வைத்து 150 வருடங்களாக வளங்களை சுரண்டி எடுத்து நாசமாக்கினாயே, அதற்கான நன்றிக்கடனா? அல்லது வேறென்ன? அட எங்கள் அயல்தேசத்து விலைமதிக்க முடியா கோகினூர் வைரத்தை வைத்திருக்கின்றாயே, அதற்காகவா?

புகைப்படம், கைவிரலடையாளம், கேள்விகள் முடிந் தாயிற்று. போங்கள், எங்காவது இங்கிலாந்தில் வாழுங்கள், பின்னரழைப்போம் அகதிகளே!

அனுபவ வேதனைகளைப் பகிர்ந்தாயிற்று. போக்கிடம் தேடி இப்படித்தானே எம்மக்கள் அலைகின்றனர். வாழ்வின் அந்திமங்களிலாவது தாயகமே அமைதி பெறமாட்டாயா? எங்கே அந்த ஆயுத வியாபாரிகள்? தீர்வுப்பொதிக்காரர்கள்? யுத்தப்பிரியர்கள்? இவர்களைத் தாண்டிக்கொண்டு எந்த ஆண்டில் எம்தாயகம் நோக்கிய பயணப்பாடு அமையப் போகிறது?

இது பல இலங்கையர்கள் லண்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளுக்கு வரும் சிரமமான பாதையைச் சொல்லும் உண்மைக் கதை. நான் வந்த கதை. இதில் வந்ததால் என் வாழ்வில் காணாத ஒரு அனுபவத்தைக் கண்டேன்.

**2012 இல்...**

போனவாரம் நண்பர் ரிஸ்மி போனெடுத்து "லண்டனில் இருந்து ஈரோப்புக்கோ அல்லது ஈரோப்பிலிருந்து லண்டனுக்கோ யாரையாவது விசா இல்லாமல் கடத்தி கொண்டு வந்து விட வேண்டுமென்றால் சொல்லு" என்றார். "அட பாவமே, இதென்ன ஆள் கடத்தும் தொழிலா நான் பார்க்கிறேன்" என்று கேட்டேன். "இல்லை யாராவது கேட்டால் சொல்லு" என்றார்.

'பிக்' தொலைக்காட்சி என்றொரு தொலைக்காட்சி. இங்கே பிரிட்டனில் ஃபிறீ வியூவில் இலவசமாகப் பார்க்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதில் முழுக்க முழுக்க பொலிஸ், இமிக்கிறேசன் விசயங்கள்தாம் காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். அதில் நான் வந்து இறங்கி அகதி அந்தஸ்து கேட்ட 'டோவர்' துறைமுகத்தை காட்டினார்கள். பிரான்ஸில் இருந்து கென்டயினரில் வரும் அகதிகள் எப்படியெல்லாம் வருகிறார்கள், எப்படி ஆட்கள் இங்கு லண்டனுக்குள் கடத்திகொண்டுவரப்படுகிறார்கள் என்றெல்லாம் காட்டினார்கள். இப்போது எல்லாவற்றையும் கட்டுப்படுத்திப் பாதைகளை இறுக்கினாலும் எப்படியாவது எல்லாவற்றையும் சுழித்து விட்டு வெள்ளைக்காரன் கண்ணில் மண்ணைத் தூவி விட்டு களவாக வருகிறவர்கள் எப்படியும் வந்தே விடுகிறார்கள்.

கென்டயினர் சாரதிகள் தெரிந்தே அகதிகளிடம் பணம் வாங்கி விட்டு லண்டனுக்கு கொண்டுவந்து விடுகிறார்கள். பிடிபட்டால் பெரும் தண்டனை, கிறிமினல் குற்றம் என்று தெரிந்தே ஆட்களைக் கடத்துகிறார்கள். இமிக்கிறேசனில் எக்ஸ்றே கருவிகள், மோப்பநாய்கள், காபனீரொக்சைட்டை மணக்கும் கருவிகள் (ஆட்கள் இருந்தால் அவர்களின் சுவாசம் காட்டி கொடுத்து விடும்) சகிதம் யு கே போடர் ஏஜன்சிகாரர் இருபத்திநாலு மணி நேரமும் பிரிட்டனின் எல்லையில் காவலில் இருக்கிறார்கள். அவர்களின் காவலையும் கடந்து இன்னும் ஆட்கள் வருகிறார்கள்.

சாமான்கள் கொண்டு வரும் கென்டயினரைப் பரிசோதிக்கும்போது அதனுள்ளே மறைத்து பெட்டி போல செய்து ஆட்களை உட்கார வைத்து கொண்டு வருகிறார்கள். போடர் ஏஜன்சி கேட்டால் எனக்கு தெரியாது என்று மொட்டையான பதிலை கென்டயினர் சாரதி சொல்லுவார். ஆனால் யு கே பி ஏ காரருக்கு தெரியும் அவர் பொய் சொல்கிறார் என்று. அவருக்குத் தண்டனை நிச்சயமாக இருக்கும்.

'பிக்' டிவியை பார்த்தால் எல்லையில் நடக்கும் எல்லா கூத்துகளும் விலா வாரியாகத் தெரியவரும். இங்கு உள்துறை அமைச்சர் சொன்னார் "பிரிட்டன் சட்ட விரோத குடியேறிகளுக்கு வலு சுழுவான இடம் என்று யாரும் பயமில்லாமல் இருக்கக் கூடாது என்பதைக் கண்டிப்பாக உணர வேண்டும். அதற்கு மிகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்படும்."

அவர் சொல்லி ஒன்றரை வருடத்தில் நாங்கள் பார்த்திருக்க சட்டவிரோதமாகத் தங்கி இருந்த ஆட்களைப் பிடித்து கொத்துக் கொத்தாக நாடு கடத்தி கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மூன்றாம் முள்ளிவாய்க்கால்

மே மாதத்தில் அனேகமான வன்னித்தமிழர் வீடுகளில் செத்தவர்களுக்குத் திதி கொடுப்பது இப்போது வழமையாகிவிட்டது. இம்முறை மூன்றாவது வருடமாக இந்தத் துக்க நிகழ்வு தொடர்கிறது.

பிரபாகரனின் முப்பது வருட ஆயுத போராட்டத்தை மகிந்த ராஜபக்ச மிகவும் மூர்க்கத்தனமாக அழித்துவிட்டார். இவ்வளவு வேகமாக அவர் அழிப்பார் என்று பிரபாகரனே நினைத்திருக்க மாட்டார்.

அதனோடு தமிழர் வாழ்வும் கிட்டத்தட்ட அழிந்த வாழ்வாகவே தெரிகிறது. பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்தத் தமிழ் மக்கள் எல்லோரையும் இன்னும் மகிந்த ராஜபக்ச வெறுப்பான பார்வையே பார்க்கிறார். அத்தோடு தனது அரசியல் வெற்றிக்கு தமிழர்கள் தேவை யில்லை என்றே அவர் நினைக்கிறார்.

ஆயுத குழுவுக்கு போராட்டத்தின் நடுவில் இருக்கும் போது அந்த மக்கள் என்ன எதிர்ப்பைக் காட்டியிருக்க முடியும்? என்ற அடிப்படையைக்கூட அவர் விளங்க முடியாதவராக இருக்கிறார். அல்லது அவர் விளங்க மாட்டாதவராக இருக்கிறார்.

ஆமியின் கட்டுப்பாட்டுக்குள் எப்படி மக்கள் இருந்தார்களோ அதே மாதிரித்தான் முன்பும் ஆயுதக் குழுவின் கட்டுப்பாட்டில் இருந்தார்கள். அங்கிங்கு அசைய முடியாதபடிக்கு அவர்கள் வைக்கப்பட் டிருந்தார்கள்.

இப்போது யுத்தம் முடிவடைந்து மூன்று வருடங் களாகிவிட்ட பின்னும் மக்களை அபிவிருத்தி அடைய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்ய முடியாத இக்கட்டான நிலமைக்குள் மக்கள் தள்ளப் பட்டுள்ளார்கள். அரசு இன்னும் மனம் வைக்குதில்லை. அரச சார்பற்ற நிறுவனங்களை விட்டாலே மக்களுக்கு ஓரளவு விமோசனம் கிடைக்கும்.

வன்னிக்குள் மக்கள் வாழுகிறார்கள். ஆனால் ஒவ்வொரு ராணுவக் கண்களும் அவர்களைத் தொடர்ந்துகொண்டே இருக்கின்ற அபாயம் தெரிகிறது.

மூன்று வருடங்களாகியும் கண்ணிவெடிகள் இன்னும் அகற்றப்படவில்லை. நிவாரணப் பணம் முழுமையாக கிடைக்கு தில்லை. அவர்களின் காணிகள் அவர்களிடம் கொடுக்கப்பட வில்லை. இன்னும் முகாம் வாழ்க்கை முடிந்தபாடாக இல்லை.

துவக்குகளின் கீழே வாழ்ந்த மக்கள் இன்னும் துவக்குகளின் கீழேதான் வாழ வைக்கப்பட்டிருக்கிறார்கள். இப்போதும் அவர்களுக்கு அகதி வாழ்க்கையும் அந்தரபாச்சலும்தான்.

பிரேதங்களுக்கு நடுவே வாழ்ந்த வாழ்க்கையை மறக்க முடியாமல் இன்னும் எத்தனையோ தமிழர்கள் நித்திரை இல்லாமல் இருக்கிறார்கள். "இனிமேலும் எங்கடை ஊரிலை போய் வாழ முடியுமோ" என்று ஒரு முதியவர் என்னிடம் கேட்டார். அவர் கேட்டது லண்டனில் வைத்து. தமது பூமியில் வாழவேண்டும் என்ற அவாவில் கேட்கின்ற குரலாகவே அவரின் குரல் இருந்தது.

செல்வச்செழிப்போடு வாழ்ந்த வன்னி நிலம் அதன் மக்கள் அரைவாசிக்கும் மேற்பட்டவர்களை பிணமாக்கி ஓய்ந்துபோன யுத்தத்திற்குப் பிறகும் நிம்மதி இழந்த வாழ்வு தான் பெருங்கவலை. மனம் திறந்த பேச்சுவார்த்தைக்கோ மக்களின் தீர்வுக்கோ அசையாமல் இருக்கிறார் மகிந்த ராஜபக்ச. தமிழ் மக்களை இப்போது சிறுபான்மை இனமாக்கி அதற்குப் பிறகு பூமி புத்திரர்களை வாழவைத்து அழகு பார்த்துக்கொண் டிருப்பது ஒரு தேசிய இனத்துக்குச் செய்யும் பெரும் துன்பமாக அரசு கருதுகிறது இல்லை. இன்னும் என்ன பாவம் செய்தனர் தமிழ் மக்கள்.

புலிகளோடு பேசமுடியாது. அவர்கள் ஆயுதம் வைத்திருக் கிறார்கள் என்றார்கள். புலிகள் இல்லை. மூன்று வருடமாகியும் அசைகிறார்களில்லை. பேரம் பேசும் சக்தி இல்லாவிட்டால் கொடுக்க வேண்டிய தேவை இல்லையென்றுதான் நினைக் கிறார்கள் சிங்கள அரசுகள்.

உயிர், உடமை, வாழ்வு இளமை எல்லாவற்றையும் தமிழர் போராட்டத்துக்கு விரும்பியோ விரும்பாமலோ கொடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் இன்று போக்கிடம் இல்லாமல் இருக்கின்றனர். பெரும் அழிவு இது.

"தமிழ் மக்களுக்கு எல்லாம் கிடைக்குது. அரசியல் உரிமை தேவையில்லை" என்று சம்பிக்க ரணவக்க போன்றவர்கள் பத்திரிகையாளர்களைக் கூப்பிட்டு கூட்டம் போட்டு சொல் கிறார்கள். அந்த மக்களுக்கான உரிமைகள் என்ன? தமிழ் மக்கள் இலங்கை தேசத்தின் மக்கள்தானா என்ற கேள்வி எழுகிறது.

முன்னைய புலிகளுக்கு புனர்வாழ்வளித்து விட்டோம் என்று சொல்கிறார்கள். ஆனால் புலிகளில் இருந்துவிட்ட ஒரே காரணத்துக்காக அவர்களை ஏனைய தமிழ் மக்கள் ஒதுக்கி வைக்கிறார்கள். அவர்களுக்கு வேலை வாய்ப்பு, வாழ்வு, திருமணம் எல்லாம் மறுக்கப்படுகின்றன. பயப்படுகின்றனர். இன்னும் கண்ணுக்கு முன்னால் கண்ட மரணங்களை மறக்க முடியாமல் மனம் பேதலித்து போய் இருக்கின்றனர் மக்கள்.

கொழும்பில் இருந்து வருகின்றனர். புலனாய்வு பிரிவு என்கின்றனர். கைதுசெய்து அழைத்து போகின்றனர். போகிற தமிழர்கள் பின்னர் காணாமல் போய் விடுகின்றனர். யாழ்ப்பாணத்தின் நிலமை இதுதான்.

"பேசினால் எழுதினால் மூச்சுவிட்டால் கையைக் காட்டி னால் மரணம் என்ற நிலையில் என்ன செய்வது? வாழ்வை இவ்வளவு கஸ்டப்பட்டு வாழ வேண்டுமா" என்ற கேள்வியை யாழ்ப்பாணத்திலிருந்து ஒரு எழுத்தாள நண்பர் என்னைக் கேட்டார்.

இன்னும் கண்ணுக்கு முன்னால் செத்துப்போன அழிந்து போன நான் பிறந்த வன்னி நிலம் நிழலாடிக்கொண்டே இருக்கிறது. எங்கே போய் யாரிடம் இதற்கெல்லாம் வந்தி கேட்பது. சிதைத்து அழிக்கப்பட்ட வீடுகள், வயல் நிலங்கள், எங்கள் தோட்டம் துரவுகள், வாழ்விடங்கள், கருகிப்போன உடல்கள் முண்டங்கள், பங்கருக்குள் எரிந்து போன பிஞ்சுகள், அழிந்து சிதைந்துபோன நல்ல குடியிருப்புகள் எல்லாவற்றுக் கும் யாரிடம் போய் நஷ்டத்தை ஈடு செய்யுங்கள் என்று கையேந்துவது.

கண்ணீர் கொண்ட முகம்களும் ஏந்திய கைகளுமாகத் தான் இந்த மூன்று வருடங்களாக தமிழர்கள் அலைந்து கொண்டிருக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கையில் இருந்தால் ஆமியால் யுத்தத்தால் கொல்லப் படுவோம் என்று வெளிநாடுகளுக்கு ஓடிய தமிழர்களை, 'இனிமேல் நாட்டுக்கு வராதீர்கள்' என்பதுதான் இரட்டை குடியுரிமை சட்டம் இல்லாமலாக்கப்பட்டதற்கும் வெளிநாட்டுத் தூதரகங்களில் இலங்கை பாஸ்போட்டை இனிமேல் அகதிகள் எடுக்க முடியாது என்ற சட்டத்திற்கும் பிரதான காரணம்.

இங்கு இங்கிலாந்தில் இருந்து திருப்பி அனுப்பும் அகதி களுக்கான தற்காலிக பாஸ்போட்டை எடுக்க இங்கு தூதராலயத் தில் பெரும் கெடுபிடி கொடுக்கிறார்கள் என்று பலர் என்னிடம் சொல்லியிருக்கிறார்கள். ஏனெனில் தூதராலயங்களில் வேலை யில் இருப்பவர்களில் அநேகமானவர்கள் ஆமிக்காரர்கள்.

இனிமேல் நீங்கள் வேறு நாங்கள் வேறு என்று ஆட்சி யாளர்கள் சொல்கிறார்களா?

தமிழர் பகுதிகளில் புத்தர் சிலைகளும் அரசமரம் நடும் வேலைகளும் நடைபெறுவது சைவர்களை குறைத்து விட்டு பௌத்தர்களை பெருக்கும் வேலைத்திட்டம்தானே! அப்போ புலிகள் தான் ஆயுதம் வைத்திருந்தார்கள். அதனால் தான் பிரச்சனை என்ற மகிந்த அரசு மீண்டும் புலிகளை வைத்து அரசியல் செய்கிறது. அதுதான் சிக்கல்.

சம்பூரை விட்டு புலிகள் போன பிறகு நான் அங்கு பத்திரிகையாளர்களுடன் போனேன். அங்கே நாய்களையும் மாடுகளையும் தவிர வேறு ஒன்றையும் நான் காணவில்லை.

மாவிலாறு யுத்தம் ஆரம்பித்த கையோடு அடுத்து ராணுவத் திடம் விழுந்தது சம்பூர். புலிகள் திருகோணமலை துறை முகத்தை இலக்கு வைத்து தாக்கியது சம்பூரில் இருந்துதான்.

புலிகள் இல்லாமல் போன பிறகும் சம்பூர் மக்களுக்கு அவர்களிடம் இருந்து பறிக்கப்பட்ட நிலம் கொடுக்கப்பட வில்லை.

மூட்டை முடிச்சுகளுடன் போனவர்கள் இன்னும் அகதி முகாம்களில்தான் இருக்கின்றனர். கல்வீடு, வாகனங்கள், காணி, பூமி எல்லா சொத்துக்களையும் இராணுவம், அரசாங்கம் எடுத்துக்கொண்டுவிட்டது.

சம்பூரில் பத்தாயிரம் ஏக்கர் தமிழர்களின் நிலங்கள் பறிக்கப் பட்டுவிட்டன. முள்ளிக்குளம், கேப்பாபிலவு, திருமுறிகண்டி, முள்ளிவாய்க்கால், அம்பலவன்பொக்கணை என்று மக்கள் வாழ்ந்த இடங்களை எல்லாம் ராணுவம் எடுத்துவிட்டது. மக்களை விரட்டிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முள்ளிவாய்க்கால் கிழக்கு, முள்ளிவாய்க்கால் மேற்கு, அம்பலவன் பொக்கணை பிரதேசம் இருபது சதுர கிலோ மீட்டர் பரப்பு கொண்டது. இங்கு ஐயாயிரத்து முன்னூறு குடும்பங்கள் வாழ்ந்து வந்தன. இந்தக் குடும்பங்கள் இப்போது அகதி முகாம்களில் இருக்கின்றனர். அல்லது நடுத்தெருவில் கைவிடப்பட்டிருக்கின்றனர்.

இந்த நிலமைகள் தொடர்பாக இலங்கை அரசு அல்லது ஜனாதிபதி எந்தக் கரிசனையும் கொள்ளாத நிலையில் வெளிநாடுகளில் உள்ள தமிழர்கள் இலங்கை தமிழர்களுக் கான உரிமை வேண்டிய போராட்டங்களைத் தொடர்ச்சியாக நடத்தி வருகின்றனர்.

இலங்கையில் தமிழர்களுக்கான வாழ்வுரிமை என்பது எதிர்காலத்தில் இல்லாமல் போய் விடுமோ என்ற அச்சம் வெளிநாடுகளில் வாழுகின்ற தமிழர்களுக்கு இப்போது வந்து விட்டது. சிலர் அரசாங்கத்தோடு சேர்த்து இயங்கினால் மாத்திரமே தமிழர்களுக்கு ஏதாவது கிடைக்கும் என்று பகிரங்க மாகவே சொல்வதை நான் கேட்கிறேன்.

கொழும்பு விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப் படுவோம் என்ற அச்சம் காரணமாகப் பல தமிழர்கள் எனக்குத் தெரிய தங்களது இலங்கைப் பயணத்தைத் தவிர்த்து வருகிறார் கள். அரசாங்கத்துக்கு இணக்கமான தமிழர்கள் மட்டும் இலங்கைக்குப் போக முடியுமான நிலமை காணப்படுவதாக இங்கே லண்டனில் காணுகின்ற தமிழர்கள் சொல்கிறார்கள். அரசியல் செயல்பாட்டாளர்களான சிங்களவர்களைக் கண்டே மகிந்த பேரச்சம் கொள்கிறார்.

30 வருட அகிம்சை, பிறகு 30 வருட ஆயுத போராட்டத் தின் பின்பு தமிழர்கள் இழந்தவைதாம் அதிகம். உலகம் முழுவதி லும் வாழ்கின்ற தமிழர்கள் தமது பூர்வீக நிலங்களை காவு கொடுத்துவிட்டு கையறு நிலையில் இருக்கின்றனர். அரசாங்கம், இப்பொழுது 150 பயிற்சிபெற்ற புலிகள் வந்துவிட்டனர். மீண்டும் அவர்கள் திருகோணமலையில் புலிகளின் பயிற்சிகளை சிடியில் போட்டு பார்க்கின்றனர் என்று கதை கட்டி பயங்கரவாத தடைச்சட்டத்தை பாதுகாத்து வைத்திருக்கின்றனர். இனிமேல் புலிகளால் அங்கு எதையும் செய்ய முடியாது என்று சிங்களக் குழந்தைக்கும் தெரியும்.

2009ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 25ஆம் திகதி மகிந்த ராஜபக்ச தமிழர்களுக்கு ஒரு கடிதம் எழுதினார். அதில் இவ்வாறு குறிப்பிடப்பட்டிருந்தது:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓர் அமைப்பு (புலிகள்) குறுகிய நோக்கங்களை அடைய உங்கள் (தமிழர்கள்) மீது அதிகமான கஷ்டங்கள் (யுத்தம்) திணிக்கப்பட்டன.

(புலிகளின்) உபாயங்கள் தோல்வியுற ஆரம்பித்ததும் நீங்கள் இடத்துக்கிடம் (அகதிகளாக) அலைந்து திரிய வேண்டியதாயிற்று. உணவு மருந்து மறுக்கப்பட்டது. இருள் சூழ்ந்த காலம் மறைந்து நீங்கள் எதிர் நோக்கிய தற்காலிக கஷ்டங்களும் முடிவுக்கு வந்துள்ளன. உங்கள் குடும்பம், நண்பர்கள் புதியதோர் வாழ்க்கைக்கு மீண்டும் வந்துள்ளீர்கள். உங்களின் புதிய வாழ்க்கைக்கு இலங்கை அரசாங்கமே (மகிந்த) அதிகமாக செய்திருக்கிறது.

இனியும் போலி தூதுவர்களாலும் ரட்சகர்களாலும் (புலிகள் என்று சொல்லும் போலியானவர்கள்) பிழையாக நீங்கள் வழி நடத்தப்படுவதை அனுமதிக்க கூடாது. உங்கள் குடும்பத்தினர் நல்லாசியுடன் வளமான எதிர் காலம் கிடைக்கவும் வெற்றிக்கனவுகள் நனவாகவம் நான் பிரார்த்திக்கிறேன்.

இப்படிக்கு
மகிந்த ராஜபக்ச

ஜனாதிபதி அவர்களே, உங்கள் பிரார்த்தனை மூன்று வருடங்களாகியும் இன்னும் பலிக்கவில்லையே – இனியும் இழப்பதற்கு எதுவுமே இல்லை தமிழர்களுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் போகின்ற வெளிநாட்டுத் தமிழர்

ஒரு வாரம் யாழ்ப்பாணம், அச்சுவேலி, மந்திகை, சாவகச்சேரி, மருதனார்மடம், வேலணை, நெடுந்தீவு போன்ற இடங்களுக்கு நான் சார்ந்த தொலைக்காட்சிக் காக விவரண நிகழ்ச்சிகளைப் படம் பிடிக்க சென் றிருந்தேன். பல முக்கியமான அனுபவங்கள் முந்தைய யாழப்பாணப் பயணங்களைவிட இம்முறை எனக்குக் கிடைத்தன.

இங்கிருந்து யுத்தம், பயம், பொருளாதார காரணங் களுக்காக புலம்பெயர்ந்து போனவர்கள் திரும்பவும் சொந்த ஊருக்கு, இப்போது வருசா வருசம் வெளிநாடு களின் பாடசாலை ஹொலிடேக்கு பிள்ளைகளையும் கூட்டிக்கொண்டு வருகிறார்கள். சுவிற்சர்லாந்தில் இருந்து இலங்கைக்கான எல்லா விமான பயணச்சீட்டுக்களும் விற்றுத் தீர்ந்துவிட்டதாக கடந்தவாரம் எனது நண்பன் ஒருவன் சொன்னான்.

வெளிநாடுகளில் ஜீன்ஸூம் ரீசேட்டும் இறுக்கமான உடைகளையும் உடுத்திப் பழக்கக்கபட்ட பெண் பிள்ளைகள் யாழ்ப்பாணத்தில் கோவில் திருவிழாக்களுக்கு வரும்பொழுது தாவணியை போட்டுக்கொண்டு வருமாறு உறவினர்களால் சொல்லப்படும் பொழுது பெரும் கஷ்டப்படுகிறார்கள். வெளிநாடுகளில் சுடிதார் போட்டு பழக்கமில்லாதவர்கள்கூட யாழ்ப்பாணத்தில் கடமைக் காகச் சுடிதார் போடவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட் டிருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இல்லை, நான் வெளிநாட்டில் உடுத்தமாதிரித்தான் உடுப்பு போடுவேன்" என்று அடம் பிடித்தால் அந்த பிள்ளையை ஏதோ வேறு கிரகத்தில் இருந்து வந்ததுமாதிரி பார்க்கிறார்கள் அங்குள்ளவர்கள். 'உவ பெரிய எடுப்பு சாய்ப்பு' என்று ஏசுவதை எனது காதால் கேட்கிறேன்.

"22 வருசத்துக்கு பிறகு வருகிறேன். எனது பிள்ளைகள் நன்றாக என்ஜொய் பண்ணுகிறார்கள். வந்து பார்க்கும்பொழுது நெஞ்சு பதறிப்போகிறது. யுத்தம் இவ்வளவு அழிவை ஏற்படுத்தி இருக்கிறது." என்று நோர்வேயில் இருந்து வந்த சுப்ரா என்ற சுப்பிரமணியம் என்னிடம் சொன்னார். பெயர் மாறி விட்டதையும் பாருங்கள்.

மந்திகை ஆஸ்பத்திரிக்கு முன்னால் உள்ள தேத்தண்ணி கடையில் நானும் எனது கமெராமென் சந்திமாலும் காலை யுணவு சாப்பிட்டுக்கொண்டிருக்கும்பொழுது (நான் தோசை யும், பாலப்பமும்சாப்பிட்டேன். அதன் சுவை ஆஹா ஆஹா அற்புதம்) ஒரு கணவன் மனைவி ஜோடி வந்தார்கள். அவர்கள் வெளிநாடொன்றில் இருந்து வந்திருப்பது நன்றாகத் தெரிந்தது. (வெளிநாடுகளில் இருந்து யாழ்ப்பாணம் போகிறவர்களின் முகத்தைப் பார்த்தால் தெரியும்.) ஆனால் அங்குபோய் கறுத்து போய்விடுவார்கள். பிறகு, ஒரு முகச்சுழிப்போடு வந்து தேத் தண்ணிக்கடை வாங்கில் மனைவி இருந்தா. கணவர் பெரிதாக அலட்டிக்கொள்ளவில்லை. மனைவி அடிக்கடி அரியண்டப் பட்டா. எப்பொழுதும் கணவன்மார் எதற்கும் அலட்டிக் கொள்ளமாட்டார்கள்தானே.

"என்ன வேணுமுங்கோ" என்று கடைக்காரப் பெடியன் கேட்டார்.

"தோசை தாங்கோ" என்று கணவன் சொன்னார். ஊத்தை யான பிளாஸ்டிக் பிளேட்டில் ஒரு துண்டு கடதாசியை கிழித்து பிளேட்டின்மேல் போட்டு இரண்டு தோசைகளை தனது கைகளால் எடுத்து அந்த பிளேட்டில் வைத்து அவருக்கு முன்னால் 'டக்'கென்று வைத்தார்.

"உதென்ன ஊத்தை பிளேட்டிலை பேப்பர் போட்டிருக்கிறி யள். லஞ்சீற் போடுங்கோ" என்று முகத்தை சுழித்தபடி மனைவி அந்தக் கடைக்காரப் பெடியனிடம் சொன்னா. பெடியனுக்குக் கோபம் வந்துவிட்டது. "இஞ்சை லஞ்சீற் இல்லை. நீங்கள் முந்தி இருந்த நிலவரத்தைக் கொஞ்சம் யோசிச்சுப் பாருங்கோ." மனுசியின் முகத்தில் ஈ ஆடவில்லை. இது சிக்கலான பிரச்சினை தான். வெளிநாடுகளுக்கு வந்து விட்டு ஊருக்கு போகும்போது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊத்தை ஒரு பிரச்சினையாக இருக்கிறது. வெளிநாடுகளில் உள்ள துப்புரவை அங்கு எதிர்பார்க்க முடியாதுதான்.

லண்டனில் ஹவுன்ஸ்லோ சென்டரில் உள்ள பொரித்த கோழிக்கடை ஒன்றில் வெள்ளைக்காரர் ஒருவர் வந்து பேகர் கேட்டார். அங்கு நின்ற தமிழ்ப் பெடியன் பேகரை வெறும் கைகளால் செய்து கொடுத்தார்.

பையை வாங்கிய வெள்ளைக்காரர் பேகரை வாங்கி தூக்கியெறிந்து விட்டு "உன் கையில் எத்தனையாயிரம் கிருமிகள் இருக்கும் தெரியுமா? ஒரு கையுறை போட்டு பேகரை செய்ய உனக்கு சொல்லித்தரவில்லையா" என்று கோபப்பட்டார். "உன்னைப் பற்றி உனது தலைமையிடத்துக்குச் சொல்வேன்" என்று அவருடைய பெயர், அந்தக் கடையின் விபரங்கள் எல்லாவற்றையும் எழுதிக்கொண்டு போனார்.

சவுத்ஹோலில கைகளால் செய்யும் கெபாப்பை எவ்வளவு விரும்பி சாப்பிடுவோம். கெபாப் செய்யுறதுக்கு கையுறை போடமுடியாது. போட்டால் கெபாப் கெபாபாக வராது.

ஆனால் ஊர்த் தேத்தண்ணி கடைகளில் போய் கையுறை போடுங்கள் என்றால் எங்களை வேற்றுக்கிரகத்து மனிதராகத் தான் பார்ப்பார்கள்.

சுத்தமேயில்லாத எங்குப் பார்க்கிலும் ஊத்தையாக கிடக்கும் எங்களூர் தேத்தண்ணி கடைகள் எங்கே? வெளி நாட்டுக் கடைகள் எங்கே? றோட்டோரச் சுத்தமில்லாத தண்ணீரில் செய்த பஜ்ஜிதானே ருசிக்கிறது. எல்லாமே கைகளால் அளைந்து கொடுக்கிறார்கள். அப்பம், தோசை, இடியப்பம், சம்பல் எல்லாம் வெறும் கைகளால். யாரிடம் போய்க் கேட்பது "கைகளை கழுவினீர்களா"? என்று.

வெளிநாட்டிலிருந்து வந்த கணவன் சாப்பிட்டார். மனைவி சாப்பிடவில்லை. இருவரும் போனதன் பின்பு "உவையளுக்கு பெரிய நடப்பு. இங்கை எங்கடை ஊரிலை பிறந்து வளர்ந்து, படிச்சு, வாழ்ந்து, ஊத்தையாய் திரிஞ்சுபோட்டு இப்ப நடப்பு காட்டுகினம். உந்த பெருமையளை எல்லாம் அவையள் போய் அகதியாய் இருக்கிற ஊர்களிலை காட்டட்டும். அங்கை கோப்பை கழுவி வாழுறவைக்கு பெரிய நடப்பு. இஞ்சை உது சரிப்பட்டு வராது" என்று கடைக்கு வருகிறவர்கள் போகிறவர்களிடம் அந்த கடைக்கார பெடியன் அவர்களை திட்டிக்கொண்டே இருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மையில் இதுதான் பிரச்சினை: எங்களோடு இருந்தவர்கள் வெளிநாடுகளுக்குப் போய் விட்டு ஏன் இப்படி செய்கிறார்கள் என்பதுதான் ஊரிலுள்ளவர்களின் கேள்வி.

ஆனால் ஒரு ஒழுங்குக்குள் புலம்பெயர்ந்தநாடுகளில் வாழ்ந்து பழகி விட்டு வரும் தமிழர்கள் இந்த அசௌகரியங்களைத் தவிர்க்கமுடியாமல் பதறிப் போகிறார்கள். அத்தோடு புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து வரும் பிள்ளைகள் ஊரோடு ஒத்துப்போக முடியாமல் போகின்றன.

மொழிப் பிரச்சனை ஒன்று. மற்றது அம்மம்மா, ஆச்சி, பேரன் இவர்களை வெளிநாடுகளில் இருந்து போகும் பிள்ளைகள் கொஞ்சுவதில்லை. அம்மம்மாமார், ஆச்சிமார் தூசி படிந்த சேலைகளோடும் பேரன்மார் வியர்வை மணத்தோடும் ஊத்தையாகவும் அந்த செம்பாட்டு மண்ணின் மணத்தோடும் இருப்பதாகக் குறை சொல்கின்றனர். எங்களுக்கு அந்த மண்ணின் மணம் வாசம். பிள்ளைகளுக்கு அது மணம். இது பாரிய பிரச்சினையாக இருக்கிறது.

ஒழுங்காகக் குளிக்காமல் நல்லெண்ணெய் சிக்கோடு இருக்கும் இரத்த உறவுகளுக்குகிட்ட எமது வெளிநாடுகளில் இருந்து போகும் பிள்ளைகள் போகிறார்களில்லை.

அடுத்தது "உவையள் பாவிக்கிற சென்டின் மணம் எனக்கு புடியாது மோனை. அதை எப்படி அவையளுக்கு சொல்லுறது. நோர்வேயிலை இருந்து வந்த என்ரை பேத்தி அவளுக்கு இப்ப பதினெட்டு வயதுதான் ஆகுது. சின்ன பிள்ளை அவள். எனக்கு கிட்ட வரேக்குள்ளை எனக்கு அவளின்ரை வாசம் ஏதோ கத்தாழை சோத்தின்ரை வாசம்மாதிரி மணக்குது. அவளின்ரை சென்ட் மணம் எனக்கு வயித்தை பிரட்டுது. எப்பிடி மோனை அவளிட்டை சொல்லுறது. அதுகள் ஒரு மாதம் இருந்திட்டு போயிடுங்கள் தானே" என்றார் 60 வயதுடைய நாகம்மா.

நாகம்மா ஆச்சிக்கு 18 வயது பேத்தி என்பது சின்னப் பிள்ளை. ஆனால் வெள்ளைக்கார நாடுகளில் 18 வயதுக்கு பிறகு எங்கள் பிள்ளைகளில் எங்களுக்கு எந்த அதிகாரமும் கிடையாது. எனது மூத்த மகளை இங்குள்ள வங்கிக்கு எக்கவுண்ட் ஒன்று திறக்க கூட்டிப்போனேன். அவளுக்கு 20 வயது என்றாலும் எல்லாமே என்னையும் தாயையும் கேட்டு செய்கிற பிள்ளை. அவள் வங்கியில் என்னை கேட்டுத்தான் எல்லாம் சொன்னாள். அதை வங்கி பெண் விரும்பவில்லை. "நீ பெரியாள், நீதான் எல்லாவற்றையும் சொல்ல வேண்டும்" என்று சொல்லிவிட்டா. பின் நம்பர், இன்டர்நெட் பாஸ்வேட்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விவகாரம் எல்லாம் தனிய அவள்தான் முடிவெடுக்க வேண்டும் என்று சொல்லிவிட்டா வங்கி பெண். விசயம் இதுதான்: நாங்கள் 18 வயது பிள்ளைகள் மீது எந்த அதிகாரத்தையும் பயன்படுத்த முடியாது. ஆனால் எங்கள் உறவுகள் அப்படி இல்லையே! ஊரின் பழைய வாழ்வோடு ஒத்து பார்த்துக் கொண்டே இருக்கிறார்கள். அது சரிப்பட்டு வராது.

அடுத்த சிக்கல் ஊரில் இருக்கின்ற உறவினர்கள் வெளி நாடுகளில் இருந்து போகிறவர்களை ஏதோ பண மெசின் என்று யோசிக்கிறார்கள். பணம் கேட்டு கேட்டே சாகடிக் கிறார்கள். அடுத்தது இங்கிருந்து அங்கு போகிறவர்களும் அவர்களை ஏதோ ஒன்றும் தெரியாதவர்களாகப் பார்க்கிறார்கள். இது அவர்களுக்கு பெரும் பிரச்சனையாகவே இருக்கிறது.

"எங்கள் பக்கத்து வீட்டு ஆச்சியை நான் இங்கு ஊருக்கு வரும் நேரமெல்லாம் போய் பார்ப்பேன். அவ என்னை எடேய் எப்பிடி இருக்கிறாய் என்று கேட்கும் போதெல்லாம் நான் புத்துணர்ச்சி பெறுகிறேன். அவ என்னட்டை இருந்து காசு பணம் எதனையும் எதிர்பார்க்கமாட்டா. அவவுக்கு பெரிய கஸ்ட்டம். ஆனால் நான் ஏதாவது கொடுப்பேன் அது என் மனத்திருப்திக்கு. அவ சொல்லுவா "உன்னை பாக்குறதுதாண்டா எனக்கு சந்தோசம். வேறை ஒண்டும் இல்லையடா!" என்று இப்படி ஒரு பாசம் பிணைப்பு ஒவ்வொரு ஊரிலும் கிராமத்திலும் இருந்துகொண்டே இருக்கிறது.

வெளிநாடுகளில் மனம் திறந்து பேசுவதற்குச் சொந்தமு மில்லாமல் பந்தமுமில்லாமல் வாழுகின்ற மனிதர்கள் அங்கு இருக்கின்ற கவுன்சிலரோடுதான் மனம் திறந்து பேச வேண்டும். என்கிறார் எக்கவுண்டன் கருணைலிங்கம்.

உடுப்பிட்டி பகுதியில் நான் அவதானித்தது வேறொரு வகையான பிரச்சனை. சொக்சும் சூவும் போட்டுப்பழகிய பிள்ளைகள் வீட்டுக்குள் காலில் நெரிபடும் மண்ணைக்கூட அவர்களால் தாங்க முடியவில்லை. அம்மா அது ஊத்தை, வீட்டில் இருக்கும் நாய் ஊத்தை, ஆட்கள் ஊத்தை, குடிக்கும் தேத்தண்ணி கோப்பை ஊத்தை, கக்கூசு ஊத்தை என்று வெளிநாட்டில் இருந்து போன ஒன்பது வயதுப்பிள்ளை அரூசைப்பட்டுக்கொண்டே இருக்கிறது.

டென்மார்க்கிலிருந்து நீண்ட நாட்களுக்குப் பிறகு யாழ்ப்பாணம் வந்து தாய் தந்தை உறவினர்களைப் பார்ப் பதற்கு வந்திருக்கிறார்கள் ஒரு குடும்பம். அவர்களின் சின்ன மகன் கட்டிலை விட்டு இறங்குகிறானில்லை. எல்லாமே 'டேட்டி' என்று சொல்லிக்கொண்டிருக்கிறான். "அங்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கக்கூசுக்குகூட போகிறானில்லை. எங்களாலை எங்களின் பூமியிலை இருக்க முடியாமல் இருக்கு. நாங்கள் திரும்பி டென்மார்க் போகப்போகிறோம்" என்கிறார் நான் சந்தித்த கனகசபை நாகநாதன்.

எமது தமிழர்களின் புலம்பெயர்ந்த நாடுகளில் பிறந்த பிள்ளைகளின் இந்த நிலமையைக் குறை சொல்ல முடிய வில்லை.

வெளிநாடுகளில் உள்ள ஒரு ரெஸ்டோறன்ட் போனால் என்ன மாதிரியான அன்பான வரவேற்பு, கஸ்டமர் சேர்விஸ் எப்பிடி இருக்கும், பணிவு காட்டுவார்கள், நுகர்வோரோடு என்ன பண்பு. ஆனால் ஊரில் உள்ள கடைகளில் தேத்தண்ணீர்க் கடைகளில் ஒரு சிரிப்பு இல்லை. கடைக்கு வருவோரிடம் எப்பிடி நடந்துகொள்ள வேண்டும் என்ற பண்பு தெரியாது. இதனால் வெளிநாடுகளில் இருந்து வருவோருக்கும் அவர்களுக் கும் இடையில் முறுகல் வருகிறது. சாப்பாட்டுப் பண்டங்களைக் கைகளால் எடுப்பது, ஈக்கள் மொய்த்திருக்கும், இப்படியான அசௌகரியங்களால் நீண்ட நாட்களுக்கு பிறகு வருபவர்கள் பெரும் சிரமத்துக்கு உள்ளாகிறார்கள்.

வெளிநாடுகளில் கஸ்டமர்தான் கடைக்காரரின் தெய்வம். அவர்களைக் கவனமாக பார்ப்பார்கள். ஆனால் இங்குள்ள பல சாப்பாட்டு கடைகளில் 'ஊத்தை கூடை' கூட கிடையாது.

ஊரில் உள்ள உறவினர்களுக்கும் புதிய தலைமுறையினருக் கும் இடையில் ஓர் உறவை ஏற்படுத்த என்னைப் போல நாற்பதிலுள்ளவர்கள் பெரும் சிரமப்படுகிறார்கள்.

பேரன் பேத்தி உறவினர்களைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையுள்ளவர்கள் எல்லா உறவினர்களையும் வெளிநாடு களுக்கு அழைக்க முடியாது. அதற்கு பொருளாதாரம் இடம் கொடுக்காது. அவர்களை ஊரில் போய்த்தான் பார்க்க வேண்டும்.

ஆனால் பிறந்து வளர்ந்த ஊர் எங்களுக்குதான் பெரிசு. ஆனால் எங்களின் பிள்ளைகளுக்கு அது அன்னியமாகத்தான் இருக்கிறது. அத்தோடு ஊரில் இருந்து வெளிநாடுகளுக்கு வந்த பெரியவர்களின் வாழ்க்கை பெரும் கஷ்டமாகவே கழிகிறது.

"பொதுவாகவே ஊரில் உள்ள சொந்தக்காரர்கள் வீடுகளுக் குப் போக எனக்கு விருப்பமில்லை. அவர்கள் என்னிடம் நிறையவே எதிர்பார்க்கிறார்கள். ஒரு சித்தப்பா குடும்பம், நான் வீட்டுக்கு போகும்போது கதைக்கவில்லை. அவர் என்னிடம் இரண்டு லட்சம் ரூபா கடன் கேட்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அங்குள்ளவர்கள் கடனாகத்தான் கேட்பார்கள். ஆனால் அவர்களுக்குத் திருப்பிதர வேண்டும் என்ற எண்ணம் இருக்காது. வெளிநாடுகளில் இருக்கிறார்கள்தானே, அவர்களுக்குப் பணம் பெரிய விடயமில்லை. என்றுதான் அவர்கள் நினைக்கிறார் கள். நான் சித்தப்பாவுக்குப் பணம் கொடுக்கமுடியாமல் இருந்தேன். என்னிடம் பணம் இல்லை. எனக்குச் சம்பளம் 1500 பவுண்ஸ்தான். அதுவும் கஷ்டப்பட்டு ஓவர்டைம் செய்து தான் நான் கடும் குளிரில் நிண்டு உழைக்கிறனான். எனக்கு இரண்டு பிள்ளைகள். அவர்களுடைய செலவு, வீட்டு வாடகை, தண்ணிபில், கரண்ட் பில் என்று கட்டி முடிய மாசம் வங்கி கிறடிட் காட்டிலை கடனாத்தான் மிச்சம் இருக்கும். அதைச் சொன்னால் இவர்களுக்கு விளங்குதில்லை. இவர்கள் கோபிக் கிறார்கள் ஏன் இங்கை வந்தன் என்றிருக்கிறது" என்கிறார் லண்டனில் அல்பேட்டனில் வசிக்கும் 45 வயதுடைய நோபேட் சாவகச்சேரியில் வைத்து.

அமெரிக்காவில் இருக்கும் பஞ்சாபிகள் தங்களது பிள்ளை களின் மனத்தை பிறந்த ஊர் கவருவதற்காக அந்த கோதுமை வயல்களுக்குள்ளே அழகான வசதிகளுடைய வீடுகளை அமைக் கிறார்கள்.

மண் தூசி நிறைந்த பஞ்சாபின் கிராம வீதிகளில் நான் எருமை மாட்டு வண்டியில் பயணம் செய்திருக்கிறேன். அதை விட எமது கிராமங்கள் அருமையானவை, அழகானவை. எமது இளந்தலைமுறையைக் கவர பல விடயங்களை வெளி நாட்டுவாழ் தமிழர்கள் செய்துதான் ஆகவேண்டும். இல்லை யேல் எமது கிராமத்தோடு ஒட்டாமலே அவர்கள் போய் விடுவார்கள்.

நான் பல வருடங்கள் கழித்து லண்டனில் இருந்து வந்தபோது திருகோணமலையில் உள்ள ஒரு சிறிய சாப்பாட்டுக் கடைக்கு போனேன். அங்கு நின்ற வயதான பரிசாகர் எனக்கு முன்னால் டக்கென்ற சத்தத்தோடு தண்ணீர் கிளாசை வைத்தார். அது எனது முகத்தில் அறைந்தது போல் இருந்தது. நான் அவரைக் கோபமாக பார்த்தேன். மனைவி சொன்னா, "இது லண்டனில்லை. திருகோணமலை."

உண்மையில் இது பெரும் சிக்கல்தான். வாழவும் வேண்டும் உறவுகளும் வேண்டும். எங்கள் பிள்ளைகள் அங்குப் போய் எங்கள் வேரோடு இணையவும் வேண்டும் என்றால் பெரும் போராட்டம்தான். என்ன செய்வது? எமது இளந்தலைமுறை யோடு எமது கிராமத்து உறவுகள் எப்படி ஒட்டப்போகிறார்கள்? எனக்குள்ளே கேட்கும் கேள்வி பதில் இல்லாக் கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வயதாளிகளும் லண்டனும்

நாங்கள் எப்பொழுதும் முதியவர்களைக் கரிசனை யுடன் பார்த்துக் கொள்கிறோம். கலியாணம் முடித்த புது தம்பதிகளுக்கு, தலைப்பிள்ளை பொம்பிளை பிள்ளை பிறந்தால் சந்தோஷமாக இருக்கும். வயதான காலத்தில் தண்ணி வென்னி வைச்சுதர ஒரு பெண் பிள்ளை வந்துவிட்டதே என்ற மகிழ்ச்சிதான் அது.

வயதான பெற்றோர் பிள்ளைகளையே எப்பொழு தும் நம்பி வாழ்வார்கள். இலங்கையில் இது சர்வ சாதாரணம். ஏன் எமது தமிழர் வாழ்வில் முதியவர் களைக் கனம் பண்ணுதல், மதித்தல், வாழ்தல் என்று ஒரு கலாச்சாரமே இருக்கிறது. இது சாதாரணமான ஒரு விடயமல்ல. ஏனெனில் வெளிநாடுகளில் முதியவர் களை ஒரு சுமையாகவே பிள்ளைகள் நினைக்கிறார்கள்.

முதியவர்களை வீட்டில்வைத்துப் பராமரிப்பது என்பது வெள்ளைக்காரர் மத்தியில் அரிதாகவே இருக் கிறது. கிராமப்புறங்களில் பெரிய வீடுகளில் இருக்கும் வெள்ளைக்காரர் தங்கள் முதிய பெற்றோர்களை வீட்டில் வைத்து நன்றாகக் கவனித்து அவர்களைச் சந்தோஷ மாக வைத்திருப்பதையும் கண்டிருக்கிறேன்.

ஆனால், லண்டனில் நகர்ப்புறங்களில் முதியவர் களை அரசாங்கம் முதியோர் இல்லங்களில் வைத்துத் தான் பராமரித்து வருகிறது. எனது வீட்டுக்கருகில்கூட மூன்று பெரிய முதியோர் இல்லங்கள் இருக்கின்றன. அந்த முதியவர்களும் பிள்ளைகள் தொடர்பான அக்கறை இல்லாதவர்களாக தனிமையில் அரசாங்கம் கவனிப்பதை ஏற்றுக்கொண்டு வாழ்கிறார்கள். ஏனெனில் இப்பொழுது முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியோர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்கனவே நல்ல திடகாத்திரத்துடன் இருந்தபோது அவர் களுடைய பெற்றோர்களை முதியோர் இல்லங்களுக்கு அனுப்பியவர்கள்தாமே. அதனால் இப்பொழுது அவர்கள் அனுபவிப்பது செய்தவினை.

அரசாங்கமும் எங்களிடம் இருந்து என்.ஐ. நம்பருக்கான பணம், வரி பணம் என்று மாதாந்தம் 450 பவுணுக்கு மேல் சம்பளத்தில் இருந்து வெட்டி எடுக்கிறது. அது நாங்கள் முதியவ ராக ஆன பிறகு எங்களுக்குத் தரும் பென்சன் மற்றும் ஏழு வயதான காலப் பராமரிப்புக்கான செலவு. இதை இப்பவே வெட்டி எடுத்து விடுகிறது அரசாங்கம்.

எங்களது வீட்டில் அம்மய்யாவும் அம்மம்மாவும் முதியவர் களாக எனது கண்காண இருந்தார்கள். இது நான் சொல்வது 43 வருஷங்களுக்கு முந்திய ஊர்க்கதை. அதில் இருவரும் நல்ல திடகாத்திரமானவர்களாக சாகும்வரை இருந்தார்கள். அம்மய்யாவுக்குத் தான் சாகுறதுக்கு ஒரு வருஷத்துக்கு முந்தி வருத்தம் வந்தது. அவருக்குச் சீனி வியாதி இருந்தது. ஆனால் அது அவருக்குத் தெரியாமலேயே போய்விட்டது. இப்போது போல சீனி வியாதி பரிசோதனை பண்ண என்று யாரும் ஆஸ்பத்திரிக்கு போனதை நான் அந்தக் காலத்தில் பார்க்க வில்லை.

நான் நினைக்கிறேன், அவருக்குச் சீனி கூடித்தான் வருத்தங்கள் வந்திருக்கின்றன. கடைசி காலத்தில் அம்மய்யாவை எங்களது அம்மா கண்கலங்காமல் பார்த்து வழி அனுப்பி வைத்தார். ஆனால் அவர் சாகும்போது அவருக்கு இருந்த கடைசி ஆசை என்னை ஒரு தரம் கண்ணால் பார்த்துவிட வேண்டுமென்பது. அது அவருக்கு நிறைவேறாத ஆசையாகவே செத்துப்போனார்.

நான் ஊர் ஊராக அலைந்து திரிந்தபோது அவர் கவலைப்பட்டிருக்கிறார். மூத்த ஆம்பிளைப் பிள்ளை நான். எனது வாழ்க்கை முழுவதும் திக்விஜயத்தில்தான் கழிந்தது. அம்மாதான் தூங்காமல் அம்மய்யாவைப் பார்த்து ஒப்பேற்றி னார். அம்மம்மா திடகாத்திரமாக சாகும்வரை இருந்திருக் கிறர். அவவின் செத்த வீட்டுக்கும் நான் ஏதாவது ஒரு வெளிநாடொன்றில் இருந்திருப்பேன்.

இப்பொழுதுதான் லண்டனில் முதியோர்மீதான அக்கறை வந்திருக்கிறது. அதுவும் கிறடிட் கிறஞ்சுக்குப் பிறகு. இளையவர் களுக்கு துடிப்பாக இருப்பவர்களுக்கு ஒரு அறிவித்தலை டேவிட் கமரூன் அரசு விட்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இங்கு லண்டனில் முதியோர் இல்லங்களில் இருக்கும் முதியவர்களைக் கவனித்துக்கொள்ள நேர்ஸ்மார் இருக்கிறார்கள். ஆனால் முதியவர்களோடு இருந்து ஆறுதலாகப் பேசி அவர்களின் சுக துக்கங்களில் பங்குகொண்டு அவர்களை ஆறுதல்படுத்த யாருமேயில்லை. நேர்ஸ்மாருக்குச் சம்பளம் வேறு.

நேரத்துக்குச் சாப்பாடு, நேரத்துக்குச் சிற்றுண்டி, நேரத்துக்கு மருந்து, நேரத்துக்கு மருத்துவப் பரிசோதனை என்று எல்லாம் நடக்கிறதே தவிர அவர்களின் மனதறிந்து கதைக்க, மதிக்க முதியோர் இல்லங்களில் யாருமில்லை. பிள்ளைகள் யேசு பாலன் பிறந்தநாள், புதுவருடம், பெற்றாரின் பிறந்ததினம் என்று மட்டும் வந்துவிட்டுப் போவார்கள். மற்ற நேரங்களில் முதியவர்கள் தனிமையில் வாடுகிறார்கள்.

எனவே தான் முதியவர்களை, உடல் ஊனமுற்றவர்களை அவர்களோடு இருந்து கவனித்துக்கொள்ள முன்வரும் இளைஞர்கள் தன்னார்வத் தொண்டாக இந்தப் பணியைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் முதியவர்களைப் பார்க்கும் நேரத்தைக் கணக்கில் எடுத்து அவர்கள் வயதாளிகளாக ஆகும்பொழுது பிறர் கவனித்துக்கொள்ளும்படியான ஒரு ஏற்பாட்டை நடைமுறைப்படுத்த பிரிட்டன் அரசு யோசிக்கிறது.

அமெரிக்காவில் ஒரு சில இடங்களிலும் ஜப்பானிலும் இந்த நடைமுறை இருக்கிறது. வயதாளிகளை ஒருவர் பார்த்துப் பராமரித்தால் அவர் வயதாகும்போது அவரை ஒருவர் பார்ப்பார்.

முதியோர்களைக் கவனிப்பது எங்கள் எல்லோரினதும் கடமை. அதை வெகுமதியை எதிர்பார்த்து செய்யக் கூடாது என்று ஒரு சாரார் சொல்கின்றனர். ஆனால் முதியோர் இல்லங்களில் பெற்றோர்களைக் கொண்டு போய்விடாமல் பிள்ளைகள் வைத்துப் பார்க்கும்படியான பயிற்சிகளைப் பெற்றோரின் பெறுமதியைப் பிள்ளைகளுக்குக் கொடுக்க வேண்டும் என்று ஒருசாராரும் கருத்து தெரிவிக்கின்றனர்.

சிக்கல் என்னவென்றால், இங்கு வெள்ளைக்கார நாடுகளில் சுதந்திரம் என்று விட்டுவிட்டு பிள்ளைகளை 18 வயதுக்கு மேல் அவர்கள் இஷ்டப்படி வாழலாம் என்று சொல்லி அதே மாதிரி வளர விட்டுவிட்டு பிறகு பெற்றோர்களைக் கவனியுங்கள் என்றால் எங்கிருந்து வரப்போகிறது பாசமும் அன்பும்? ஆனால் ஸ்கொட்லாந்து, அயர்லாந்து போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இடங்களில் இயல்பாகவே பெற்றோர்கள் வயதான பிறகு கவனிக்கும் பண்பு இருக்கிறது.

அது தானாக வரவேண்டும் யாரும் சொல்லி வர முடியாது. இரக்கமும் ஏனையோரை மதித்தலும். அதே போலத்தான் வயதான பெற்றோரைக் கவனித்தலும். தமிழர் கலாச்சாரத்தில் வந்து பார்த்துப் பழக வேண்டிய விசயங் களில் ஒன்று முதியோரைக் கனம் பண்ணுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலியல் துஷ்பிரயோகம்

உண்மையில் இது ஒரு சிக்கலான பிரச்சனை தான். மனிதர்களுக்கான பாலியல் தேவை என்பது உடலில் ஆரோக்கியம் இருக்கும்வரை நிராகரிக்க முடியாதது. ஆனால் மனித பாலியல் உணர்வுகளுக்கு என்று ஒரு வரையறையை ஏற்படுத்தி வைத்திருக்கிறோம். அல்லது பாலியல் தொடர்பான ஒரு கொந்தளிப்பு சமூகத்தில் ஏற்பட்டுவிடும். அது பாரிய பின் விளைவு களை ஏற்படுத்திவிடும்.

இதே நேரம் நாம் பெரியவர்கள், மதகுருமார்கள் என்று மதிக்கப்படுகிறவர்கள் செய்யும் பாலியல் தொடர் பான செயல்கள் நாட்டில், ஏன் உலகளாவிய ரீதியில் பெரும் சலசலப்பை ஏற்படுத்தி விடுகின்றன.

பாப்பரசர் ஆசீர்வாதப்பர் செக்ஸ் குற்றம் செய்த பாதிரிமாருக்கு எதிராக குற்றப்பத்திரிகை அனுப்பி வைத்திருக்கிறார். 2010 நொவம்பர் மாதம் 19ஆம் திகதி கூடிய வத்திக்கான் திருச்சபையின் முக்கியஸ்தர்களுக்கு மத்தியில் பாப்பரசர் இந்த விடயத்தைப் பகிரங்கப் படுத்தினார்.

கண்டிப்புடன் செக்ஸ் குற்றங்கள் தொடர்பாக வத்திக்கான் கவனமெடுக்க வேண்டிய தேவை வந்திருப்ப தாகப் பாப்பரசர் உணருகிறார். நூற்றுக்குமதிகமான சிறுவர்மீதான பாலியல் குற்றச்சாட்டு தொடர்பாகக் கத்தோலிக்கப் பாதிரிமாரை விசாரிக்க வேண்டியிருக் கிறது என்ற விடயத்தையும் வத்திக்கான் ஒப்புக் கொண் டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய பாலியல் குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட பாதிரியார்கள் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளிலேயே இருப்பதுதான் வத்திகானுக்கு பெரும் கவலை. ஆசிய நாடுகளில் உள்ள கத்தோலிக்க பாதிரிமார் மதிப்பு மிக்கவர்களாக இருக்கிறார்கள். ஆனால் அண்மையில் தமிழ்நாட்டில் கன்னியாஸ்திரி ஒருவரைப் பாலியல் ரீதியாகப் பயன்படுத்தினார் என்று பாதிரியார் ஒருவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

ஆனாலும் சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் ஐரோப்பிய அமெரிக்க பாதிரிமாரிடம்தான் அதிகரித்து காணப்படுகிறது. இது றோமன் கத்தோலிக்கத்தைப் பின்பற்றுகிறவர்கள் மத்தியில் பெரும் தலைவலியாக மாறிவிட்டது.

மற்றைய புரட்டஸ்தாந்து, அங்கிலிக்கன் திருச்சபைகளை பின்பற்றுகின்ற பாதிரிமார் கலியாணம் முடிக்கலாம். அங்கு அவர்களுக்கான செக்ஸ் தேவை பிரச்சினையாகத் தலைதூக்குவது திருமணத்தின் மூலம் தடுக்கப்படுகிறது.

அதனால் றோமன் கத்தோலிக்கப் பாதிரிமார் செக்ஸ் சகிப்புத் தன்மை இல்லாதவர்களாக இங்கு மீடியாக்கள் சுட்டிக்காட்டுகின்றன. முக்கிய உலக ஊடகங்களில் றோமன் கத்தோலிக்கப் பாதிரிமாரின் செக்ஸ் குற்றங்கள் தொடர்ந்தும் காண்பிக்கப்படுகின்றன. ஆனால் பிரித்தானியாவில் உள்ள அங்கிலிக்கன் திருச்சபை ஒருபால் திருமணத்துக்கான அங்கீகாரம் அளித்தமை மற்றும் பெண்கள் பாதிரியாகலாம் என்று ஒப்புதல் கொடுத்தமை என்பன சமூகரீதியில் அங்கிலிக்கன் பரந்த அங்கிகாரத்தைப் பெறுவதற்கான கவர்ச்சிகரமான முன்மாதிரியாகக் கொள்ளப்படுகிறது.

ஆனால் இன்னும் பழமை பேணும் றோமன் கத்தோலிக்கத்தை ஆட்டிப்படைக்கும் செக்ஸ் குற்றங்கள் ஒரு பாரிய தலைவலியாக வத்திக்கானுக்கு இருக்கிறது. பாதிரியார்களைத் தண்டிக்கலாம். ஆனால் இன்னும் மூடிய அறைக்குள் நடக்கும் செக்ஸ் குற்றங்களை என்ன செய்வது? ஆசிர்வாதப்பர் இந்தக் கவலையோடுதான் தனது காலத்தைக் கடத்த வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டிருக்கிறார்.

சமூகரீதியான பாலியல் குற்றங்கள் தொடர்பாக இப்பொழுது இலங்கையில் பேசப்பட்டு வருகிறது. பாலியல் தொடர்பான குற்றங்களோடு சம்பந்தப்பட்ட பெண்களின் புகைப்படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிக்குமாறு மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸார் ஊடகங்களிடம் சொல்லி இருந்தனர். அதை ஒரு சில பத்திரிகைகள் உடனடியாகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரசுரித்திருந்தன. பல பத்திரிகைகள் மறுத்துவிட்டன. பாராட்டுகள்.

ஆனால் அவர்களில் 80 பேர் பெண்கள். ஏன் இவர்கள் இந்தத் தொழிலுக்கு சென்றார்கள்? அவர்களின் தேவை என்ன? அவர்களின் குடும்பப் பின்னணி என்ன? அவர்கள் விரும்பிப் போனார்களா? அல்லது கடத்தப்பட்டுப் பாலியல் தொழிலுக்குக் கொண்டு செல்லப்பட்டார்களா? என்று ஆராய்ந்து அவர்களுக்குப் புனர்வாழ்வளிக்க வேண்டிய மகளிர் மற்றும் சிறுவர் பிரிவு பொலிஸார் ஏன் இப்படி நடந்து கொண்டார்கள்? இங்கு வெளிநாடுகளில் செக்ஸ் ஒரு தொழிலாகவே செய்யப்படுகிறது. ஆனால் இலங்கை இந்தியா போன்ற இடங்களில் பெண்கள் கடத்தல்காரர்கள், பாதாள உலக கோஷ்டிகளின் கைகளில் அகப்பட்டுச் சின்னாபின்னமாகிப் போகின்றனர். மீள முடியாத துன்பத் துக்குள் தள்ளப்படும் அவர்கள் பாலியல் வியாபார முகவர் களிடம் கொண்டுவந்து விற்கப்படுகிறார்கள்.

வடக்கில் இராணுவத்தினர் பாலியல் பலாத்காரம் செய்யும் செய்திகள் தினமும் பத்திரிகைகளில் வந்த வண்ணமிருக்கின்றன அதை யாரும் கவனிக்கிறார்களில்லை. பாலியல் குற்றம் என்பது நோடியாகப் பெண்களின் மீது சுட்டு விரலைக் காட்டிவிட்டு சமூகம், சட்டம் எல்லாம் விலகிக் கொண்டு விடும் காலத்தில்தான் இன்னும் வாழ்கிறோம்.

இலங்கையில் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட பெண் களோடு பாலியல் படங்களில் தோன்றி நடித்த ஆண்கள் மூன்று பேரைத் தவிர மற்றவர்கள் எங்கே விடுபட்டுப் போனார்கள்? ஏன் அவர்களையும் கொண்டு வர ஆணாதிக்க சமூகத்துக்கு விருப்பமில்லை?

பாலியலை எந்த அளவுக்கு குற்றமாகக் கருத முடியும் அதற்கு எந்தச் சட்டத்திலும் முழுமையான அறிவுறுத்தல் இல்லை. இங்கே ஐரோப்பிய நாடுகளில் வீதியில் நின்று கொண்டு ஆழ்ந்த முத்தங்களைப் பரிமாறும் காதலர்களைப் பார்க்கிறோம். ஆனால் இலங்கையில் காதலனும் காதலியும் ஒன்றாக இருந்து பேசிக்கொண்டிருந்தால் பொலிஸ் பிடித்துக் கொண்டு போய்விடுகிறது. அது மட்டுமல்ல காதலர்களுக்குத் தனிப் பூங்கா வேறு கட்டப் போகிறார்களாம். இது மனித உணர்வுகளுக்கு மனிதன் கொடுக்கும் அதீத விலை. ஆனால் எங்கே தப்பு நடக்கிறது, யார் யார் எல்லாம் இந்தப் பாலியல் கணப்பு இடங்களை வைத்து நடத்துகிறார்கள் என்று ஒரு தொடர் கயிற்றைப் பிடித்துக்கொண்டு போனால் ஒரு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல்வாதியில் அல்லது செல்வாக்கான அமைச்சரிடம் தான் அந்தக் கயிற்றின் தொங்கல் வந்து நிற்கும்.

பாலியல் குற்றங்களைத் தடுப்பது என்பது பெண்களின் படங்களைப் பத்திரிகைகளில் பிரசுரிப்பதோடு மட்டும் முடிந்து விடும் ஒரு விடயமல்ல. மிகவும் பொறுப்புடன் சமூகரீதியாக நோக்கப்பட வேண்டிய விடயம்.

இலங்கை போகும் போக்குக்குப் பாலியல் மூலம் பணம் சம்பாதிக்க முயலும் பெண்களை ஆச்சரியமாகப் பார்க்க முடியாது. ஒரு றாத்தல் பாணின் (பிரட்) விலை, தேங்காயின் விலை, மிளகாய் தூளின் விலை என்ன? எப்படி ஏழை ஒருவன் வீட்டில் அடுப்பு எரியும். நான்குபேர் கொண்ட ஒரு குடும்பத்துக்கு 1000 ரூபா ஒரு நாளைக்குப் போதுமா, கொழும்பில் வாழ முடியுமா? எவ்வாறு அவர்கள் சீவிப்பது?

தாய்லாந்து, பிலிப்பைன்ஸ் போன்ற இடங்களில் இப் பொழுதும் ஒரு சோற்றுப் பார்சலுக்காக செக்ஸ் செய்ய பெண்கள் வருவார்கள். ஏன் ரஸ்யாவிலும் அப்படித்தான். பொருளாதாரரீதியாக வாழ முடியாமல் தவிக்கும் மனிதனின் வயிற்றுப்பசியை போக்க முதலில் ஆட்சியாளர்கள் முன்வர வேண்டும். வேலை வாய்ப்பு இல்லை, பிள்ளைகள் பட்டினி, வாழ வழியில்லை, ஒரு பெண் என்ன செய்வாள். அதற்கான விடையை அரசு சொல்ல வேண்டும். அதைவிடுத்துப் பெண் களைத் துன்புறுத்தும் நடவடிக்கையில் ஈடுபடுவது பாலியல் பிரச்சினைகளுக்குத் தீர்வாகாது. அரசியல் செல்வாக்குள்ளவர் கள் இன்னும் பாலியல் தொழிலை பொலிஸாரின் அனுமதி யுடன் கொழும்பில் செய்துகொண்டிருக்கிறார்கள். ரஷ்ய, தாய்லாந்து, சீன பெண்கள் கொழும்பில் பாலியல் தொழிலுக் காக அழைத்து வந்து செய்கிறார்கள். அதை பொலிஸார் காணமாட்டார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஒரு தொகை பணம் போகிறது.

அப்பாவி சிங்களப் பெண்களின் புகைப்படங்களைப் பத்திரிகையில் போட்டால் மட்டும் பாலியல் தொடர்பான விழிப்புணர்ச்சி இலங்கைக்கு வரவே வராது. அதற்கப்பால் தான் பல விடயங்கள் செய்யவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பற்றி எரியும் லண்டன்

இந்தத் தலைப்பை வைக்கும் பொழுது ஒன்றுக்கு மூன்று தரம் யோசித்தேன். சரிதான், எதிர்கால அச்சம் இன்னும் விலகுவதாய் இல்லை. ஒரு புரட்சி ஆரம்பிப் பதற்கு இதுதான் காரணம் என்றில்லை. அது வண்டி யில்வைத்து சிறு சாமான்களை விற்கும் ஒருவரிடமிருந் தும் ஆரம்பிக்கலாம், அல்லது ஒரு பதினாறு வயது சிறுமியிடமிருந்தும் ஆரம்பிக்கலாம்.

தொடர்ச்சியாக (2011 ஆகஸ்ட் 6,7,8,9,10) நான்கு இரவுகளாக லண்டனில் வாழும் மக்களுக்கு தூக்க மில்லை. எந்த நேரத்தில் எந்த இடம் பற்றி எரியும் என்ற பயம் மட்டுமே மனத்தில் இருந்தது. ஏன் தீ மூட்டுகிறார்கள், எதற்காக இதை செய்கிறார்கள், யார் செய்கிறார்கள்? பலருக்கு எதுவும் தெரியாது.

ஆனால் லண்டன் கொழுந்துவிட்டு எரிந்தது. பெரும் தீப்பிழம்பாகக் காட்சி தந்தது. இப்பொழுது நினைத்தாலும் பயமாக இருக்கிறது என்று எனது தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றுக்குத் தொலைபேசியில் கலந்துகொண்ட தமிழர் ஒருவர் சொன்னார். காரணம், இந்த வசதியான லண்டன் நாட்டில் அவர் அன்று ஆறு மைல் தூரம் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு நடந்து வந்து வீடு சேர்ந்திருக்கிறார். இத்தனைக்கும் அவர் ஒரு சாதாரண மனிதர்; வம்புதும்புக்குப் போகாதவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகம் முழுக்க லண்டனின் தீ பற்றித்தான் தொலைக்காட்சி கள் நேரடியாகக் காட்டிக்கொண்டிருந்தன

2012 ஜூலை மாதம் பிரமாண்டமான ஒலிம்பிக் போட்டி களை நடத்த இருக்கும் நிலையில் பேரிடியாக இந்த வன் முறைச் சம்பவங்களைப் பார்க்கிறார்கள் அதிகாரிகள்.

ஒலிம்பிக் போட்டிகளுக்கு இன்னும் ஒரு வருடமே மீதி இருக்கும் நிலையில் கவுன் டவுண் எண்ணிக் கொண் டிருக்கும்பொழுது பிபிஸி தொலைக்காட்சியும் அல்ஜஸீரா தொலைக்காட்சியும் லண்டனில் எரிகின்ற பெருந்தீயை நேரடியாக உலகம் முழுதும் காட்டிக் கொண்டிருந்தன.

போட்டிகளைப் பார்க்க மக்கள் லண்டனுக்கு வருவார் களா என்கின்ற பயம் லண்டன் மேயரைத் தொற்றிக் கொண் டிருப்பதை உணரக்கூடியதாக இருக்கிறது.

ஆகஸ்ட் 4ஆம் திகதி தான் இந்தப் பெரும் கலவரத்துக் கான ஆரம்பம் கனன்றது. அன்று மார்க் டக்கன் என்ற நான்கு பிள்ளைகளின் தந்தையான 29 வயதுடைய கலப்பின இளைஞர் ஒருவரை பொலிஸார் சுட்டுக் கொன்றனர். அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் ஓகஸ்ட் ஆறாம் திகதி ரொற்னம் பகுதியில் அமைதி ஊர்வலம் ஒன்றை மக்கள் நடத்தினர். இந்த ஊர்வலத்தில் 120 பேர் வரையில் கலந்து கொண்டனர். இந்த ஊர்வலத்தில் கறுப்பின வெள்ளையின மக்களும் கலந்து கொண்டிருந்தனர்.

இந்த அமைதி ஊர்வலம் போய்க்கொண்டிருந்த பொழுது ஊர்வலத்தில் போன பதினாறு வயது சிறுமியொருத்தி பொலிஸ்காரர் ஒருவரை சிறு கல்லால் தாக்கிவிட்டாள். பொலிஸார் கோபப்பட்டு ஊர்வலத்தைத் தடுக்க முற்பட்ட போது ஏற்பட்ட வன்முறை பெரிதாகி லண்டன் உட்பட வெளி நகரங்களுக்கும் பரவி பெரும் வன்முறையாக வெடித்தது.

மார்க் டக்கன் ஓர் அறியப்பட்ட குற்றவாளி. போதைப் பொருள் விற்பனை தவிர ஒரு கொலையோடு சம்பந்தப் பட்டவர் என்று பொலிஸார் சொல்கின்றனர். ஆனால் அவரைக் கைதுசெய்யப் போனபோது அவர் ஓடப்பார்த்த தால் சுட்டுக் கொன்றுவிட்டதாகப் பொலிஸார் சொல்கின்றனர்.

இப்பொழுது கலகத்தில் ஈடுபட்ட கறுப்பின இளைஞர்கள் பொலிஸார் இனவாதத்துடன் நடந்து கொண்டதாக சொல்லியே லண்டனில் சூறையாடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்படிச் சொல்லவே முடியாது. பொலிஸிலும் கணிச மான அளவு கறுப்பின அதிகாரிகள் இருக்கின்றனர். இனவாதம் இல்லை பிரச்சினை இங்கே குற்றவாளிதான் முக்கிய விடயம் என்று பொலிஸார் வாதிடுகின்றனர்.

லண்டனிலும் பிற நகரங்களிலும் கடைகளை வைத்திருக் கின்றவர்களின் இரவுகள் தூக்கமற்றதாகவே கழிகின்றன. எனது நண்பர் ஒருவரின் என்பீல்ட் எனும் இடத்தில் இருக்கும் மளிகைக் கடைக்கு வந்த பதினைந்துக்கும் மேற்பட்ட இளைஞர் கள் காசாளரை அடித்து விட்டு இருந்த 400 பவுன் பணத்தை யும் பொருள்களையும் களவெடுத்துக் கொண்டு போய் விட்டனர். அவர் இன்னும் பயத்துடனேயே இருக்கிறார். வந்தவர்கள் 15 –18 வயதுவரை உள்ள சிறிய பையன்கள் என்று நண்பர் சொன்னார்.

இந்தப் பெரும் கலகம் தமிழர்கள் செறிந்து வாழும் வோல்த்தம்ஸ்ரோ, ஈஸ்டஹம், வூல்விச், குறைடன் போன்ற பகுதிகளுக்கும் பரவியது. பேர்மிங்ஹம், லிவர்பூல் போன்ற பெரு நகரங்களுக்கும் பரவியது. லண்டனில் பாடசாலை விடுமுறை தினம் என்ற காரணத்தால் மாணவர்கள், இளைஞர்கள் வீதிகளில் இறங்கி இந்த வன்முறையை ஒரு சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி பெரும் கடைகளை உடைத்து விலையுயர்ந்த ஆடைகள், கொம்பியூட்டர்களைச் சூறை யாடினார்கள். பொலிஸாரைத் திசைதிருப்ப பெறுமதியான கடைகளுக்குத் தீ வைத்தார்கள். இந்தப் பாரிய வன்முறையைக் கனவிலும் எதிர்பார்த்திருக்கவில்லை மக்கள்.

விடுமுறையில் இருந்த பிரதமர் டேவிட் கமரூன் செவ்வாய்க்கிழமை (ஆகஸ்ட் 9) நாடு திரும்பி அவசரமாக இங்குள்ள பாதுகாப்புத் துறை “கோப்றா” மீற்றிங்கை கூட்டி ஆராய்ந்தார். பாராளுமன்றத்தையும் வியாழக்கிழமை (2011 ஆகஸ்ட் 11) கூட்டினார்.

முகத்தை மறைத்துக்கொண்டு ஆயிரக்கணக்கான இளைஞர்கள் கடைகளை உடைத்துச் சூறையாடுவதைத் தொலைக்காட்சிக் கமெராக்களுக்கு முன்னிலையிலேயே தைரியமாகச் செய்தார்கள்.

இதுவரையில் மூவாயிரத்திற்கும் மேற்பட்டவர்களைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். இவர்களில் ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் தண்டிக்கப்பட்டிருக்கின்றனர். இந்த வழக் கிற்காக நீதிமன்றத்திற்கு மேலதிக நேரம் ஒதுக்கப்பட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உடனடியாக தீர்ப்பு சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வன்முறைகளில் ஐந்து பேர் இறந்து போனார்கள். பதினாறு பேர் பெருங்காயங்களுக்கு உள்ளானார்கள். இருநூறு மில்லியன் பவுண் சேதம் ஏற்பட்டிருக்கிறது.

இந்தியர்களும் பாகிஸ்தானியர்களும் அதிகமாக உள்ள பேர்மீங்ஹம் பகுதியில் கடைகளின் கண்ணாடிகளை உடைத்து விலையுயர்ந்த பொருட்களைக் குறிவைத்துச் சூறையாடுவதில் இளைஞர்கள் ஈடுபட்டனர்.

அவர்களில் நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்களைப் பொலிஸார் கைதுசெய்தனர். ஹான்ஸ்வேர்த் பகுதியிலும் நாட்டிங்ஹம்ஷைர் பகுதியிலும் பொலிஸ் நிலையங்களை இளைஞர்கள் தாக்கிச் சேதமாக்கிருக்கின்றனர்.இந்த வன்முறைகளுக்குச் சமூக வலைத்தளங்களும் பாவிக்கப்பட்டிருப்பதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உள்துறை அமைச்சின் செயலாளர் தெரேசா மே குறிப்பிடும்போது குற்றவாளிகள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள் என்று தெரிவித்தார். பிரிட்டனின் மெட்டோ போலிட்டன் பொலிஸ் கொமாண்டர் டிம் கோட்வின் தொலைக்காட்சியில் தோன்றி சொன்னார், (குற்றவாளிகளே !) உங்களை நாங்கள் வந்து கைது செய்வோம்.

சிசிடிவி கமெராக்கள் பதிந்து வைத்திருக்கின்ற குற்றவாளிகளைக் கைதுசெய்து கொண்டிருக்கின்றனர் பொலிஸார். நூற்றுக்கணக்கான மக்கள் அகதிகளாக அல்லல்படுகின்றனர்.

144 வருடம் பழமை வாய்ந்த குறைடனில் உள்ள வீட்டுத் தளபாட கடை எரித்து சாம்பலாகி கிடக்கிறது.

இந்தக் கலவரம் வன்முறைக் கலாச்சாரத்தின் விளைவே என்று பிரித்தானியர்களில் பெரும்பாலானவர்கள் சொல்கிறார்கள். அதோடு இங்கிருக்கும் வன்முறைக் குழுக்களின் ஒருங்கிணைப்பே என்றும் அஞ்சுகிறார்கள். வன்முறைக் குழுக்களை அடக்க எந்த அளவுக்கும் போக இருப்பதாக பிரதமர் கமருன் சொல்கிறார்.

வன்முறைகளில் கணிசமான தமிழ் வியாபாரிகளும் நஷ்டமடைந்திருக்கின்றனர். எல்லாம் முடிந்து கடைகள் திறந்து வியாபாரம் நடக்கிறது. ஆனால் கடைக்கு வரும் இளைய பெடியன்களின் பார்வையில் இன்னும் வன்மம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருப்பதாகக் குறைடனில் கடை வைத்திருக்கும் நண்பர் சிவா என்னிடம் சொன்னார்.

பிரித்தானிய மக்கள் மிகவும் நெருக்கடியான பொருளாதாரச் சிக்கலில் இருக்கும்போது இந்தச் சுமையையும் தாங்க முடியாமல் திணறிக்கொண்டிருக்கின்றனர். இந்த வன்முறைகளுக்கு வெறுமனே மார்க் டக்கன் சுட்டுக் கொல்லப்பட்டதையோ அல்லது இனவெறியையோ காரணம் சொல்ல முடியாது.

இது பிரித்தானியாவில் கனன்று கொண்டிருக்கும் வேலையில்லாத் திண்டாட்டம், வேலை இழப்பு, பொருளாதார நெருக்கடி, அரசின் மீதான மக்களின் வெறுப்பு, மாணவர்களின் கல்விக் கட்டண அதிகரிப்பு, பணக்காரர்மீதான ஏழைகளின் கோபம் எல்லாவற்றையும் சேர்த்து வைத்து மூட்டப்பட்ட தீ என்றுதான் சொல்ல வேண்டும். நீறு பூத்து இருந்தது. இப்பொழுது பற்றி எரிகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லெஸ்பியன்கள் தொடர்ந்த வழக்கு

இங்கு லண்டனில் எங்களது வீட்டில் இருந்து பிறைட்டன் கடற்கரைக்குப் போக காரில் ஒன்றரை மணிநேரம் பிடிக்கும். சொன்னால் நம்ப மாட்டீர்கள், கடந்த வாரம் முழுக்க 26 டிகிரிக்கும் மேல்தான் வெயில் கொளுத்துகிறது. இலங்கையில், சென்னையில் இருப்பதுபோல இருக்கிறது காலநிலை.

ஒரு பக்கம் சந்தோஷமாகவும் மறுபக்கம் கவலையாகவும் இருக்கிறது. சந்தோஷத்திற்குக் காரணம் வெயிலை அனுபவிப்பது. கவலை, வேலைப் பளுவுக்கு முன்னால் எங்கும் தூரப்பயணம் போக முடியாமல் இருப்பது. பக்கிங்ஹம் அரண்மனைக்கு முன்னால் உள்ள துலிப் மலர்கள் எல்லாம் பூத்துக் குலுங்குவதைப் பத்தரை மைல்கள் தூரத்தில் இருந்தும் தொலைக்காட்சியில்தான் பார்க்கிறோம். போய்ப் பார்க்க வேண்டும், நேரம் கிடைப்பது இல்லை. வெயில் வந்தாலே இங்கு லண்டனில் உள்ள அரைவாசிப் பேருக்கு ஹேய் பீவர் என்கின்ற மகரந்தக் காச்சல் வந்து விடுகிறது.

எதிர் வருகின்ற 20 வருடத்துக்குள் 30 மில்லியன் பிரித்தானியருக்கு மகரந்தக் காச்சல் பிடித்து ஆட்டப் போகிறது என்று வைத்தியசாலை சொல்கிறது. லண்டன் காரருக்குப் பெரும் சாபம்தான் இது. குளிருக்காக ஆறுமாதம் வீட்டுக்குள் முடங்கிப் போய் இருக்கின்ற ஆட்கள் இனிமேல் வெயில் அடித்தாலும் வெளியில் போக முடியாது. மூக்கு ஒழுகிக்கொண்டே இருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நோய் இது. எந்த விதமான சுகத்தையும் அனுபவிக்க முடியாத வர்களாக 30 மில்லியன் மக்கள் இருக்கப் போகிறார்கள். குறிப்பாக செக்ஸ்.

இந்த மகரந்தக் காய்ச்சல் வந்தால் மூக்கு அரிப்பு, தும்மல், நாசியில் பிராண்டல் எல்லாம் இருக்கும். வெளியில் போக முடியாது. இளவேனில் கால பூக்களின் மகரந்தத் துகள்கள் காற்றில் கலந்து மகரந்தச் சேர்க்கை நடத்தும் காலத்தில் மனிதர்கள் அதைச் சுவாசிக்கும்போது வருகின்ற ஒவ்வாமைதான் இது.

இந்த ஒவ்வாமைக்கு மருந்து கிடையாது. ஆனால் மூலிகை மருந்து இருக்கிறது என்று அஞ்சலா ஜெகநாதன் போன்ற மூலிகை மருந்துவர்கள் சொல்கிறார்கள். உடனடி மருந்துகளைப் பெரிய பெரிய விளம்பரங்களைப் போட்டு விற்கிறார்கள். ஆனாலும் மூக்கு ஒழுகியபடித் திரிகிற வெள்ளைக்காரரையும் எங்கடை சனங்களையும் பார்க்க பரிதாபமாக இருக்கும். மூக்கு பிடிக்கிற பேப்பருக்கே ரிவியில் விளம்பரம் போடுகிறார்கள். லண்டனிலும் பேர்மிங்ஹாமி லும் 45 வீதமானவர்களுக்கு மகரந்தக் காய்ச்சல் பிரச்சினை இருக்கிறதாம். அது இல்லாத மனிதர்களுள் நானும் ஒருவன்.

கடற்கரையில் இந்த மகரந்தத் தொல்லை குறைவாக காணப்படுகிறது. ஏனெனில் கடல் காற்று அதை அள்ளிக் கொண்டு போய் எங்காவது தள்ளிவிடுகிறது. பூவின் மகரந்த மணிகளை மக்களின் கண்ணுக்குத் தெரியாத எதிரி என்று *டெலிகிராஃப்* எழுதுகிறது. மகரந்தம் தொடர்பான ஒரு படத்தைப் போட்டு இப்படி எழுதியிருக்கிறார்கள்:

தொடர்ச்சியான நோய் இது. கண்ணெரிதல், மூக்கு அரிப்பு, மூக்கில் இருந்து நீர் வடிதல் என்று இருப்பதால் அதிகமான மக்களுக்கு மன அழுத்தம் வருகிறது. மற்றவர் களை நெருங்கிக் கதைக்க முடியாது. ஒரே தும்மல். இவ்வாறான பிரச்சினைகள் மூலமாக மன அழுத்தத்தால் அதிகமானவர் கள் பாதிக்கப்படுகிறார்கள். அது மன நோய்வரை இழுத்துச் செல்வதாகச் சொல்கிறார்கள்: வைத்திய நிபுணர்கள்.

இப்பொழுது 83 மில்லியன் பவுண்ட்டுக்கு வருடா வருடம் குளிசை, மூக்கு ஸ்பிறே, கண் சொட்டுமருந்து என்று விற்பனை யாகின்றன. இந்த மகரந்தக் காய்ச்சல் வந்தால் போகாது. தொடர்ந்து வருடா வருடம் தொந்தரவு பண்ணிக் கொண்டே இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெயில் காலத்தில் கடற்கரைக்குத்தான் மக்கள் அள்ளுப் படுவார்கள். பாடசாலை விடுமுறை நாட்களில் கார் காராக கடற்கரைப்பக்கம் ஒதுங்குவார்கள் வெள்ளைக்காரரும் மற்றவர்களும். பிரிட்டனைச் சுற்றி கடற்கரைதான். லண்டனில் உள்ள எங்களைப் போன்றவர்கள் குறைந்தது ஒன்றரை மணி நேரம் கார் ஓட்டிப்போக வேண்டும். இங்கே பிரிட்டனில் உள்ள முக்கியமான கடற்கரை நகரமான பிறைட்டன் இப்பொழுது பத்திரிகைகளின் தலைப்பு செய்தியாக இருக்கிறது.

விசயம் இதுதான். ஒரு லெஸ்பியன் ஜோடி பிறைட்ட னில் உள்ள கடற்கரை ஹோட்டல் ஒன்றில் டபிள் ரூம் ஒன்று புக் பண்ணியபோது அதை ஹோட்டல் நிர்வாகம் நிராகரித்திருக்கிறது. இது ஒரு பெரும் பிரச்சினையாக உருவெடுத்துள்ளது.

இங்கு பிரிட்டனில் ஆண் ஓரினச் சேர்க்கையாளர்களுக் கும் பெண் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கும் சம உரிமை வழங்கப்பட வேண்டும் என்று சட்டமே இருக்கிறது. எப்படி ஆண் பெண் ஜோடிகளுக்கு உள்ள உரிமையோ அப்படித் தான் பெண் பெண், ஆண் ஆண் ஜோடிகளுக்கும் உள்ள உரிமை. அதே போலத்தான் திருநங்கை போன்றவர்களுக்கு மான உரிமை. தனி மனித உரிமையில் தலையிடவோ குறுக்கிடவோ நிராகரிக்கவோ இங்கு யாருக்கும் உரிமை இல்லை.

அப்படி இருக்க, பிறைட்டன் பேன்ஸ்விக் ஸ்கொயார் ஹோட்டல் றெபேக்கா, நாஸ் என்ற லெஸ்பியன் ஜோடியை தங்கள் ஹோட்டலுக்கு வரவேண்டாம் என்று சொன்னது அல்லது அறை கொடுக்காமல் விட்ட விடயம் இப்பொழுது நீதிமன்றத்தின் படியேறி இருக்கிறது.

ஹோட்டல்கள் இப்படிச் சொல்வதோ செய்வதோ இங்குப் பிரிட்டனில் சட்டப்படி குற்றம். ஹோட்டல், தங்கும் விடுதிகள் குடும்பத்தை மட்டும் அல்லது ஆண் பெண் ஜோடியை மட்டும் உள்ளே விடுவோம் என்று சட்டம் போட முடியாது. அது தண்டனைக்குரிய குற்றம்.

பிரிட்டனில் 20ஆம் நூற்றாண்டில் தன்னினச் சேர்க்கை யாளர்களுக்கான அங்கீகாரம் படிப்படியாக வளர்ந்து கொண்டே போனது. இப்பொழுது அவர்களுக்கான உரிமைகள் அதிகம். பிரிட்டனில் மட்டும் 36 லட்சம் ஓரினச் சேர்க்கை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாளர்கள் இருக்கிறார்கள். கே, லெஸ்பியன் இரு பகுதியினரும் இதற்குள் அடக்கம். பிரிட்டனின் சனத்தொகையில் ஆறு வீதமானவர்கள் தன்னின புணர்ச்சியாளர்கள். ஆரம்ப காலத்தில் தன்னின புணர்ச்சியாளர் என்றாலே ஒரு வித முகச்சுளிப்பு இருந்தது இங்கே. இங்கேயுள்ள கத்தோலிக்க தேவாலயங்களும் தன்னின புணர்ச்சியாளர்களை ஆரம்பத்தில் கண்டித்தன. இது கிறிஸ்தவ மதத்திற்குப் புறம்பானது என்று பேசின. ஆனால் அவர்களின் தொகை அதிகரிக்க அதிகரிக்க தேவாலயங்களின் வாய்களும் மௌனமாகிவிட்டன.

தன்னினப் புணர்ச்சியாளர்கள் இங்கு ஜோடி சேர்ந்து குடும்பமாக வாழ்கிறார்கள். தனி வீடெடுத்து ஜோடியாக இருவரும் வேலைக்குப் போய் வந்து வாழ்வதற்கான சகல சட்ட அங்கீகாரமும் அவர்களுக்கு இருக்கிறது. அவர்கள் பிள்ளைகளைத் தத்து எடுத்து வளர்க்கிறார்கள். ஆண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும் வாழ்க்கையில் தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இரண்டு பேரையும் அப்பா என்று தான் கூப்பிடுகிறார்கள். அதே போல பெண்கள் இரண்டு பேர் சேர்ந்து வாழும்போது தத்து எடுத்து வளர்க்கின்ற பிள்ளைகள் இருவரையும் அம்மா என்றுதான் அழைக்கிறார்கள்.

இங்கு தான் பெரும் பிரச்சினையை கே, லெஸ்பியன் மாரின் பிள்ளைகள் எதிர்நோக்குகின்றனர். பாடசாலைகளில் அந்தப் பிள்ளைகளுக்கு அம்மா அல்லது அப்பா இல்லாத குறையால் அவர்கள் மற்ற பிள்ளைகளால் கேலி பண்ணப் படுகிறார்கள். கே, லெஸ்பியனின் வளர்ப்பு பிள்ளைகள் வளரும்போது மன உளைச்சலுக்கு உள்ளாகி சமூகத்தால் ஒதுக்கப்படும்போது அவர்கள் கிறிமினல்களாக வளருவதாக உளவியல் ஆய்வாளர்கள் சொல்கிறார்கள்.

இங்குப் பாடசாலைகளிலும் செக்ஸ் கல்வியின்போது கே, லெஸ்பியன் தொடர்பான செக்ஸும் படிப்பிக்கிறார்கள். எட்டாம் வகுப்பில் இருந்தே செக்ஸ் கல்வி கற்பிக்கப்படுகிறது. ஓரினப் புணர்ச்சியாளர்கள் பிரிட்டனில் கலியாணம் முடித்து வாழ்ந்தால் அவர்களுக்கு வரி, பென்சன் போன்ற வசதிகள் எங்களைப் போன்ற குடும்பத்தவர்களுக்கு கொடுப்பதுபோல வழங்கப்படுகின்றன.

ஆனால் பிரச்சினை என்ன என்றால் பொதுஇடங்களில் பாதைகளில், பஸ், ரயில்களில், பூங்காக்களில் ஆணும் ஆணும், பெண்ணும் பெண்ணும் காதல் செய்யும் பொழுது அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முத்தமிடும் பொழுது பகிரங்க இடங்களில் இருக்கின்ற ஏனையவர்களுக்கு அந்தரமாக இருக்கிறது. இப்பொழுது லண்டனில் இதைப் பார்த்து பார்த்து பழகிவிட்டது. செக்ஸ் தொடர்பான எல்லா உரிமைகளையும் அவர்கள் கோருகிறார்கள். ஆணும் பெண்ணும் எப்படி செக்ஸ் வைத்துக் கொள்வதற்கு உரிமையோ அதே போல பெண்ணும் பெண்ணும், ஆணும் ஆணும் செக்ஸ் வைத்துக்கொள்வதற்கு உரிமை இருக்கிறது என்பது அவர்களின் வாதம்.

பிரிட்டனிலும் அதற்கான முழு உரிமையும் இருக்கிறது. அவர்கள் செக்ஸ் வைத்துக்கொள்வதற்கான சாதனங்களும் இங்கு கடையில் விற்பனைக்குக் கிடைக்கின்றன. வாங்கி உபயோகப்படுத்தலாம். இங்கு *ஜி.ரி. மகஸின்* போன்ற 'கே' களுக்கான தனி மாதாந்த சஞ்சிகைகள் வருகின்றன. அவர்களுக்கான தொலைக்காட்சிகளும் இருக்கின்றன.

ஒவ்வொரு வசந்த காலத்திலும் பெரும் எடுப்பிலான ஊர்வலங்களும் களியாட்ட நிகழ்வுகளும் இங்கு நடைபெறும். கே, லெஸ்பியனினருக்கான உரிமைகளை வேண்டிய ஊர்வலங்களும் நடைபெறும். பல்லாயிரக்கணக்கான தன்னினப் புணர்ச்சியாளர்கள் ஒன்று சேர்ந்து இந்த ஊர்வலங்களில் கலந்துகொள்வார்கள்.

குடும்ப வாழ்வில் ஆண், பெண் கூட்டு சேர்ந்து வாழ்வதில் திருப்தி இல்லை என்று தன்னினப் புணர்ச்சியாளர்கள் சொல்கிறார்கள்.

முன்னாள் லண்டன் மேயர் கென் லிவிங்ஸ்டன், நடிகர் ஸ்டீபன் ஃபிறை, மிக பிரபல்யமான ஒளிபரப்பாளர் கிரஹம் நோட்டன், டேல் வின்டன், பேல் ஓ கிரேடி, என்று மிகவும் பிரபலமான 12 'கே' ஒளிபரப்பாளர்கள் பிரிட்டனின் தொலைக்காட்சிகளில் பணியாற்றுகின்றனர். இவர்கள் குடும்பமாக வாழ்கின்றனர்.

ஜூன் மாதம் பிரித்தானிய பிரதமர் டேவிட் கமரூன் இங்கு உள்ள கே, லெஸ்பியன் பிரபலங்களைக் கூப்பிட்டு மதுபான விருந்து வைத்தார். அதில் பி.பி.சி. செய்தி வாசிப்பாளர் ஜேன்ஹில், பாடகர் மத்தியூ ஜேம்ஸ், நடிகை அமன்தா பாரி ஆகியோருடன் தன்னினச் சேர்க்கையாளர்கள் 200 பிரபலங்கள் கலந்துகொண்டனர்.

அந்தக் கூட்டத்தில் "மை ஓன் சிவில் பாட்னர்" என்று பக்கத்தில் உள்ள உதவி பிரதமர் நிக் கிளெக்கை பார்த்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஜோக் ஒன்றையும் அடித்தார் கமரூன். ஓரின சேர்க்கையாளர்களிடையேயும் திருமணம் பிறகு விவாகரத்து என்ற விடயங்களும் இருக்கின்றன.

இங்கு இள வயது பிள்ளைகளிடத்தும் இந்த ஓரினச் சேர்க்கை தொடர்பான சிந்தனை வளர்ந்து வருகிறது. அதனால் இங்குள்ள தமிழ்ப் பெற்றோர்கள் பெரிதும் கவலை கொள்ள ஆரம்பித்திருக்கின்றனர். தனது பிள்ளைக்கு பெண் பிள்ளை என்றால் ஒரு பாய் பிரன்டோ அல்லது ஆண் பிள்ளை என்றால் ஒரு கேள் பிரண்டோ இருக்க வேண்டுமென்று ஆசைப்படுகின்றனர். இல்லாவிடில் பிள்ளை லெஸ்பியனாகவோ கே, ஆகவோ ஆகிவிடும் என்ற பெரும் பயம் கொள்கின்றனர். ஏனெனில் அதற்காக வாய்ப்புகள் இங்குப் பாடசாலைகளில் அதிகமாகக் காணப்படுகிறது. டேவிட் கமரூன், ஒபாமா போன்றவர்கள் ஓரினச் சேர்க்கையாளர்களுக்கான தங்களது ஆதரவை பகிரங்கமாகச் சொல்லிவிட்டனர். இல்லாமல் முடியாது. ஏனெனில் அவர்கள் பெரும் வாக்கு வங்கியாக வருடா வருடம் வளருகிறார்கள்.

உலக மாற்றத்தில் அமைதியான புரட்சியை ஏற்படுத்தும் ஒரு விடயம் என்றால் அது இப்போது ஓரினப் புணர்ச்சிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்ப்பால் ஐஸ்கிறீம்

லண்டனில் 'புதிய விடயங்களைச் செய்கிறோம், புதிய விடயங்களைச் செய்கிறோம்!' என்று இப்போது அண்மையில் செய்த புதிய விடயம் என்ன தெரியுமா? முலைப்பால் ஐஸ்கிறீம்.

இதை முஸ்லிம்கள் சாப்பிடலாமா? ஹலாலா ஹராமா என்று நான் மண்டையைப் போட்டு உடைத்துக் கொண்டிருக்கிறேன். ஒரு மௌலவியை பிடித்துக் கேட்க வேண்டும்.

லண்டன் வந்தவர்கள் அனேகமாக கொவன் காடனுக்கு போயிருப்பீர்கள். அங்கு இப்போது பேசப் படுகிற விடயம் இந்தத் தாய்ப்பால் ஐஸ்கிறீம் சம்பந்தமாகத் தான். கொவன்ட் காடினில் ஒரு ஐஸ்கிறீம் கடையில் மனித பாலில் ஐஸ்கிறீம் தயாரித்து விற்பனை செய் கிறார்கள். புதிய மாற்றம் என்று எங்கு வரைக்கும் எங்களை கொண்டு வந்து விட்டார்கள் என்று பார்த்தீர் களா? அந்த ஐஸ்கிறீமுக்கு பேபி காகா என்று பெயர் வைத்திருக்கிறார்கள்.

ஒரு ஸ்கூப் 14 பவுணுக்கு விற்கிறார்கள். குழந்தைக்கு கொடுத்தது போக மிகுதி பாலை ஐஸ்கிறீம் செய்வதற்கு கொடுக்கலாம் என்று ஒரு தாய் தெரிவித்தார். இன்டர் நெட்டில் விளம்பரம் போட்டு தாய்மாரிடம் இருந்து முலைப்பாலைச் சிறுகச் சிறுக வாங்குகிறார்கள்.

றோட்டில் போனவர்களிடம் இந்தப் புதிய ஐஸ்கிறீமைச் சுவைக்கக் கொடுத்து கருத்து கேட்டார்கள் பிபிஸி தொலைக்காட்சிகாரர்கள். "நல்லாயிருக்கு, சுவை புதுவிதமாக இருக்கிறது, வித்தியாசமான முயற்சி"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றெல்லாம் பாராட்டினார்கள். சிலர் 'ஆய்க்...' என்று ஓங்காளித்தார்கள். இந்தத் தாய்ப்பால் ஐஸ்கிறீம் இயற்கை யானது, சுவையானது, சுத்தமானது, சுகாதாரமானது எல்லோரும் சுவைத்து மகிழ வேண்டும் என்று இந்த ஐஸ்கிறீம் கடை முதலாளி வாயில் சுவை ஒழுகச் சொல்கிறார். இப்போது ஒரு கடையில்தான் இருக்கிறது. போகப் போக பல கடைகளில் கிடைக்கலாம். தாய்ப்பால் அதிகம் கிடைக்க கிடைக்க ஐஸ்கிறீம் அதிகம் கிடைக்கலாம்.

இந்தக் கட்டுரையை எழுதிக்கொண்டிருந்தபோது எனது நண்பர் தயா தொலைபேசி எடுத்து சொன்னான்: "நீ பேசிக் கொண்டிருந்த அம்மாப்பால் ஐஸ்கிறீமை கடையில் இருந்து தூக்கிவிட்டார்களாமே." என்ன சேதி ஏது என்று விசாரித்தால், பொதுமக்கள் கொடுத்தமுறைப்பாட்டின் கீழ் முலைப்பால் ஐஸ்கிறீமை அது விற்ற ஐஸ்கிறீம் கடையில் இருந்து அகற்றச் சொல்லி இருக்கிறார்கள் கவுன்ஸில் சுகாதார அதிகாரிகள். இது மனிதர்களின் நுகர்வுக்குப் பொருத்தமற்றது என்று பொதுமக்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஐஸ்கிறீம் செய்கின்ற மற் ஓ கோணர் சொல்கிறார், "இது எல்லாவகை மெடிக்கல் பரிசோதனைக்கு பிறகுதான் நான் சந்தைக்கு அதைக் கொண்டு வந்தேன்" என்று. ஆனாலும் வெஸ்ட்மினிஸ்டர் கவுன்ஸில் சுகாதார அதிகாரிகள் இது தொடர்பாக இன்னும் பிசோதனை மேற்கொள்ள வேண்டும் என்று சொல்கிறார்கள்.

ஆனால் சொன்னால் நம்ப மாட்டீர்கள், அவ்வளவு ஆர்வமாக மக்கள் முலைப்பால் ஐஸ்கிறீமை இங்கே லண்ட னில் விரும்பிச் சுவைத்தார்கள்.

வெஸ்மினிஸ்டர் கவுன்ஸிலர் பிறைன் கோனல் சொல் கிறார், "ஒரு மனித உடலில் இருந்து எடுக்கப்படும் பொருள் அல்லது திரவம் அதில் இருக்கும் வைரஸ் கிருமி மற்ற மனிதர் அதைச் சாப்பிடும்போது அவர் உடலுக்கு நேரடியாகப் போகிறது. அதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. உள்ளூர் வித்தியாசமான தயாரிப்புகளுக்கு நாங்கள் எப்பொழுதும் ஆதரவு கொடுப்போம். ஆனால் சுகாதாரத்துக்குக் கேடு விளைவிக்கிற விசயங்களை அனுமதிக்க முடியாது" என்கிறார் அவர். ஐஸ்கிறீம் தயாரிக்கும் மிஸ்டர் ஓ கோனர் சொல்கிறார், "நாங்கள் எதிர்பார்க்கவில்லை இவ்வளவு தாய்மார் தங்கள் பாலை எங்களுக்குக் கொண்டு வந்து தருவார்கள் என்று. அவ்வளவுக்குத் தாய்மாரின் ஆதரவு எங்களுக்கு இருந்தது" என்கிறார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்கள் வெஸ்ட் மினிஸ்டரில் சாராயம் வாங்கலாம், சிகரட் வாங்கலாம்; முலைப்பால் ஐஸ்கிறீமுக்கு மட்டும் ஏன் தடை?" என்கிறார் அவர். இப்படிச் சொல்லும்போது அவர் ஆத்திரப்பட்டார். அப்படி முலைப்பால் ஐஸ்கிறீமை தடைசெய்தால் ஏற்கனவே இந்த ஐஸ்கிறீமுக்காகப் பால் கொடுத்த தாய்மாரையும் இணைத்துக்கொண்டு பெரிய ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தப்போவதாகத் தெரிவித்திருக் கிறார். முலைப்பாலை தாய்மாரிடம் இருந்து பெறுவதற்கு இணையத் தளத்தில் இன்னும் ஆர்வமூட்டிக்கொண்டுதான் இருக்கிறார்.

ஆனால் இப்போது முலைப்பால் ஐஸ்கிறீமை வெஸ்ட் மினிஸ்டர் கவுன்ஸில் விற்பதற்குத் தடை விதித்து விட்டது. இரத்த வங்கிக்கு இரத்தம் கொடுக்கும்போது என்ன சுகாதார விதி முறைகளைக் கையாளுகிறோமோ அதைத்தான் முலைப் பால் வங்கிக்கும் கையாள வேண்டும், அதை இப்படி ஐஸ்கிறீமாக குடிக்க முடியாது என்று தடைக்கான காரணத்தை வெஸ்ட் மினிஸ்டர் கவுன்ஸில் சுகாதாரப் பிரிவு சொல்கிறது. ஆனால் தொடர்ந்தும் வழக்காடப் போவதாக ஐஸ்கிறீம் தயாரிப்பாளர் ஓ கோனர் சொல்கிறார்.

இன்னொரு விசயமும் இங்கே லண்டனில் நடக்கிறது. அனேகமான தாய்மார் தங்கள் பிள்ளைக்கு ஊட்டிய பிறகு மிஞ்சும் தாய்ப்பாலை இன்டர்நெட்டில் கூவி விற்கிறார்கள். அதற்கு இங்கு வியாபார இணையத்தளமான கம்றீயைப் பயன்படுத்துகிறார்கள்.

ரோனி ஏபன் என்கின்ற பெண்மணி மூன்று மாதத்தில் 30 அவுன்ஸ் தனது குழந்தை குடித்த மீதி பாலை விற்று பணம் சம்பாதித்தாக மகிழ்வுடன் சொல்கிறா. 4 அவுன்ஸ் தாய்ப்பாலுக்கு பதினைந்து பவுண் பணம் கிடைத்திருக்கிறது. தனது மகன் டேவிட் குடித்துவிட்டு மிகுதி இருக்கும் பாலை என்ன செய்வது என்று தொரியாமல் இருந்த ஏபனுக்கு அவரது நண்பி மூலமாக இந்தப் பால் விற்கும் தகவல் கிடைத்தாகச் சொல்கிறார்.

மகன் பால் குடித்த பிறகு தேங்கி நிற்கும் பால் தனது மார்பில் பெரும் வலியை ஏற்படுத்தியதாகச் சொல்லும் ஏபன் இப்பொழுது வலியும் இல்லை. முலைப்பாரமும் இல்லை. காசும் வருகிறது என்று சிரிக்கிறார்.

மிகுதி பாலை பால் கறக்கும் பம்ப் மூலமாக கறந்து அதைக் குளிர்சாதன பெட்டியில் வைத்துவிட்டு அதைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகைப்படம் எடுத்து இணையத்தளத்தில் போட்டு இது வேண்டுமா விற்பனைக்கு இருக்கிறது என்று சொல்லியிருக் கிறார். யாராவது பால் கொடுக்க முடியாத தாய்மார் தன்னிட மிருந்து இதனை வாங்குவார்கள் என்று ஏபன் நினைக்க தனக்கு வந்த முதலாவது ஈ மெயில் ஒரு ஆணுடையது என்கிறார் அவர். ஆச்சரியப்பட்டுப்போனாராம்.

ஆனால் அந்த ஆணுக்கு தனது முலைப்பாலை விற்று தனது முதலாவது வியாபாரத்தை ஆரம்பித்திருக்கிறார். அதற்கு பிறகும் பல ஆண்கள் முலைப்பாலை வாங்கினார் களாம். ஏன் இதை வாங்குகிறார்கள் என்று தான் யோசித்து அத தொடர்பாகத் தேடப்போக முலைப்பால் நல்ல ஆரோக்கிய வாழ்வுக்கு உடற்கட்டுக்கு அத்தியாவசியமானது. அதுமட்டு மல்ல கான்சர், சீனி வியாதியை போக்க நல்ல மருந்தாக இருக்கிறது. அத்தோடு நோய் எதிர்ப்புச் சக்தியைக் கூட்டக் கூடியது, கான்சரை எதிர்க்கக்கூடியது, அல்பாலக்டல்பேமின் என்னும் பதார்த்தம் அதில் இருக்கிறது. ஐலயரிக் அசிட் அதில் இருக்கிறது. அது நோய்க்கருமிகளை எதிர்த்து அழிக்கிறது. தொடர் வயிற்றோட்டத்தை இல்லாமலாக்குகிறது. என்று ஏகப்பட்ட விடயங்கள் இந்தத் தாய்ப்பாலில் இருப்பதைக் கண்டுபிடித்ததாக ஏபன் சொல்கிறார். அதனால்தான் ஆண் களும் இதை ஆர்வத்துடன் வாங்கிக் குடிக்கிறார்கள். என்று அறிக்கை விடுகிறார் ஏபன்.

தனக்கு இப்போது பெரிய பெரிய ஓடர் எல்லாம் வருகிறது என்று ஏபன் சொல்கிறார். அதில் மிகப் பெரிய ஓடர் 12 அவுன்ஸ் ஒரே நேரத்தில் வந்தது என்று சொல்கிறார். தனக்கு 15 நிமிடத்தில் ஒரு அவுன்ஸ் முலைப்பால் சுரக்கிறதாம். என்னதான் ஆனாலும் தனது மகன் குடித்தது போக மிச்சமாக இருப்பதைதான் தான் விற்பதாக சொல்கிறார். தொடர்ந்தும் இந்த விற்பனையைத் தொடரலாம் என்று சொல்கின்ற ஏபன் தான் வெகு விரைவில் அடுத்த பிள்ளையையும் பெற உத்தேசித் துள்ளாராம். ஆனால் அடுத்த முறை கையால் இயக்கி பால் எடுக்கும் பம்பை விட்டுவிட்டு எலக்றிக்(மின்சாரத்தில் இயங்கும்) பால் கறக்கும் பம்பை வாங்க போகிறாராம். ஏனெனில் 'அது மிக விரைவாக கறந்து தந்துவிடும்' என்று சிரிக்கிறார்.

இப்பொழுது இன்டர்நெட்டில் பரபரப்பான ஒரு விற்பனைப் பொருளாக முலைப்பாலும் இருக்கிறது என்று சொன்னால் நீங்கள் நம்பத்தான் வேண்டும். ஏனெனில் அதுதான் உண்மை. முலைப்பாலைச் சேகரித்து வைக்ககூடிய சிறிய கொள்கலன்களை பல கொம்பனிகள் தயாரித்து விற்பனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்கின்றன. எல்லா வியாபார இணையத்தளங்களிலும் அதுவும் ஒரு வியாபாரப் பொருளாகவே இருக்கின்றது. உலகம் முழுவதும் பிள்ளைக்கு தாய்ப்பாலை கொடுக்க சொல்லித்தான் எல்லா வைத்தியர்களும் சொல்கிறார்கள். அத்தோடு தாய்ப்பாலை கொடுக்க ஊக்குவிக்கும் பல விளம்பரங்களையும் இங்கு வெளிநாடுகளில் அதிகமாகப் பிரசுரிக்கின்றன தன்னார்வ அமைப்புகள்.

இன்னும் கர்ப்ப காலத்தில் தாய்க்கும், வயிற்றில் இருக்கும் குழந்தைக்கும் ஏராளமான சக்தி தேவைப்படுவதால், சத்துள்ள உணவுகளைப் பெண்கள் சாப்பிடுவார்கள். அடிக்கடிக் கர்ப்பிணிப் பெண்கள் சாப்பிட்டுக்கொண்டிருப்பதைக் காணலாம். கர்ப்பகால உணவு முறையால், தாயின் உடல் எடை அதிகரித்து விடுகிறது. இதனால் குழந்தை பெற்றவுடன் பெரும்பாலான பெண்கள், உடல் எடை குறைப்பிற்காக ஓடித்திரிகிறார்கள். வெள்ளைக்காரப் பெண்கள் தாங்கள் உடற்பயிற்சி ஏதாவது செய்து உடலைச் சின்னதாக வைத்திருக்க முயற்சி செய்வார்கள். ஆனால் எங்கள் ஊர் பெண்கள் அப்பிடியே குண்டுக்கட்டாக இருப்பார்கள். எங்கள் கணவன் மார்தான் பாவம். பெரும் உடலாகிவிட்ட மனைவியைப் பார்த்து பெருமூச்சு விட்டபடி இருப்பார்கள். உடல் ஊது கிறது என்ன செய்வது என்று சொல்லிவிட்டு இருந்து விடு வார்கள். குழந்தைக்குத் தொடர்ந்து தாய்ப்பால் கொடுத்தாலே போதும் பெண்கள் எடை குறைந்து மெலிதாகி விடுவார்கள் என ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கிறார்கள். தாய்ப்பால் மூலம் தாயின் உடலிலுள்ள பெரும்பாலான சக்தி வெளியேறுவதே இதற்குக் காரணம். முதல் 14 வாரங்களுக்குக் குழந்தைக்கு அதிக அளவு தாய்ப்பால் அளிக்கும் பெண்கள் கணிசமான அளவு எடையைக் குறைக்க முடியும். இது எங்களூர் பெண் களுக்கு நல்ல ஆலோசனை போல் தெரிகிறது.

இலங்கையில் ஒரு கதை உலாவுகிறது. தாய்பாலை பிள்ளைக்குக் கொடுத்தால் பெண்கள் தங்களின் உடல் அழகு போய்விடுமாம். அப்படி எங்கும் இல்லை. சாப்பட்டு ஒழுங்கைக் கடைப்பிடித்தாலே எல்லாம் சரியாகி விடும். அழகு பாதுகாப் பாக இருக்கும். தினமும் தண்ணீர் நிறைய குடிக்க வேண்டும். அழகாக இருப்பதற்கு. நான் அதிகமாகத் தண்ணீர் குடிக்கிறேன்.

தாய்ப்பாலை பற்றி தேடத் தேட வந்து கொட்டுகின்றன விடயங்கள். கோரைச் செடியின் கிழங்கைப் பச்சையாக எடுத்து நன்றாக அரைத்து சிறிது எடுத்து மார்பில் தடவி பற்று போட்டு வந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். பேரீச்சம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழத்தை குழந்தை பிறப்பதற்கு முன்னும், பிறந்த பின்னும் சாப்பிட்டு வந்தால் தாய்பால் பெருகும். குழந்தையும் நன்கு வளரும். பாகற்காயின் இலையை அரைத்து மார்பகங்களில் பற்றுப் போட்டு வந்தால் தாய்பால் அதிகம் சுரக்கும். காட்டாமணக்கு இலையை வதக்கி மார்பில் வைத்துக் கட்டி வந்தால் தாய்பால் சுரக்கும். சாதம் வடித்த கஞ்சியில் வெந்தயத்தைச் சேர்த்து காய்ச்சிக் கொடுக்க தாய்ப்பால் அதிகம் சுரக்கும். தாய்ப்பால் இல்லாமல் கவலைப்படுகிற தாய்மார்களுக் காக இவை. ஆனால் இந்த இலைகுழைகளை இலங்கையில் இருந்துதான் இங்கு லண்டனுக்கு வரவழைக்க வேண்டும்.

கோரை, காட்டாமணக்கு, இவை இரண்டும் எங்கள் ஊரில் (ஒட்டுசுட்டான் – புளியங்குளம்) வயலில் தானாக வளர்ந்து கிடக்கின்றன. மற்ற சாமான்கள் இங்கு லண்டனில் வாங்கலாம். வேப்பமிலை இலங்கையில் இருந்தும் இந்தியாவில் இருந்தும் இங்கு லண்டனுக்கு வருகிறது. அதே போல இவற்றை யும் அழைப்பிக்கலாம். இங்குள்ள தமிழ் கடைக்காரர்களிடம் சொன்னால் அவர்கள் எடுத்து தருவார்கள். பிலாக்கொட்டை யும் கொடிகாமம் முருங்கைகாயையும் எடுத்து தருகிறவர் களுக்கு இது பெரிய வேலை இல்லை.

இங்கே ஐரோப்பிய நாடுகளில் உள்ள வைத்தியசாலைகள் தாய்ப்பாலைச் சேகரித்து வைப்பதற்கான வழிமுறைகளைத் தெரிவிக்கும்போது சொல்கின்ற விடயங்களைப் பாருங்கள்:

சாதாரண குளிர்சாதனப்பெட்டியில் 2 நாட்களுக்கு வைக்கலாம். தாய்ப்பாலை மருத்துவமனையில் கொடுக்கப் பட்ட, கிருமிகளை அழித்துச் சுத்தம் செய்த போத்தலில் சேகரித்து வையுங்கள். தாய்ப்பால் பிளாஸ்ரிக் பைகள் அல்லது திறந்த கண்ணாடி கிளாஸ்களில் வைத்துச் சேர்த்து வைக்கலாகாது.

உங்கள் தாய்ப்பாலை பம்ப் செய்தவுடனே உபயோகிக்க மாட்டீர்கள் என்றால் அதைக் குளிர்சாதனப்பெட்டி அல்லது ஆழ் உறைவுக்கலத்தில் (பிறீஸரில்) உடனேயே வைக்கவும். உங்கள் தாய்ப்பாலை வெளியேற்றி குளிர்சாதனப்பெட்டியில் வைக்கப்பட்ட 48 மணி நேரத்துக்குள் உபயோகிக்கவும். 48 மணி நேரம் கடந்துவிட்டால், அதை வீசி விடவும். உருகத் தொடங்கும், குளிரால் கட்டியாக்கப்பட்ட தாய்ப்பாலை 24 மணி நேரத்துக்குள் உபயோகிக்கவும். 24 மணி நேரம் கடந்துவிட்டால் அதை வீசிவிடவும். உங்கள் தாய்ப்பாலை குளிரால் கட்டியாக்க விரும்பினால், அதைப் பம்ப் செய்த 24 மணி நேரத்துக்குள் குளிரால் கட்டியாக்கவும். தாய்ப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சூடாக்கப்பட்டு 1 மணி நேரம் வரை படுக்கைக்குப் பக்கத்தில் வைக்கப்படலாம். ஏற்கனவே குளிரால் கட்டியாக்கப்பட்டு, உருகத் தொடங்கும் தாய்ப்பாலை திரும்பவும் குளிரால் கட்டியாக்க வேண்டாம். தாய்ப்பாலை ஒருபோதும் மைக்ரோவே வில் வைக்கவேண்டாம்.

அப்பாடா இப்படி எல்லாம் இருக்கின்றன. நாங்கள் அம்மாவின் முலையில் பால்குடித்துவிட்டு சிரித்து எழும் குழந்தையை மட்டும்தான் மனம் மகிழ்ந்து பார்த்திருக்கிறோம். ஆனால் குளிர்சாதன பெட்டியில் தாய்ப்பாலை வைத்து கொடுக்கலாம், குடிக்கலாம் என்று இந்த கட்டுரை எழுதி முடியத்தான் எனக்கே தெரிகிறது இந்த 44 வயதில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறீலங்காவின் கொலைக்களம்

சானல் 4 தொலைக்காட்சியில் 'சிறிங்காவின் கொலைக்களங்கள்' விவரணத்தைப் பார்த்தவர்களின் எண்ணிக்கை எட்டு லட்சம் பேர் என்று ஒரு தரவு சொல்கிறது. அந்த எட்டு லட்சம் பேரில் நானும் ஒருவன். இரவு விழித்திருந்து பார்க்கும்படி சானல் 4 பிரித்தானியாவில் பேப்பர் விளம்பரங்களைப் போட்டுத் தூண்டியிருந்தது.

எட்டு லட்சம் என்பது உண்மையில் பெரிய தொகைதான். கட்டாயம் இது சர்வதேச அரங்கில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தப் போகிறது. சிறீலங்கா அரசுக்குக் கழுத்தில் சுருக்கு இறுகத் தொடங்கியிருக்கிறது.

போர்க் காட்சிகளைக் காண்பிக்க வேண்டுமென நாம் ஏன் தீர்மானித்தோம் என்று சானல் 4 குறிப்பிட்ட விடயம் முக்கியமானது.

செவ்வாய் இரவன்று (14.06.2011) நாங்கள் பார்க்கப் போகும் 'சிறிங்காவின் கொலைக்களங்கள்' என்ற விவரணத்தில் காண்பிக்கப்படவுள்ள இவ்வாறான கொலைக் காட்சிகள் காயப்பட்டோர் தொடர்பான காட்சிகள் பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டு கொல்லப்பட்ட பெண்கள் தொடர்பான காட்சிகளைப் பிரிட்டன் நாட்டின் தொலைக்காட்சியில் தொடர்ச்சியாகப் பார்க்க முடியும் என நான் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை. என்று சானல் 4 தொலைக்காட்சியின் செய்தி மற்றும் இன்றைய நிகழ்வுகள் தயாரிப்பு பிரிவின் பொறுப்பாளர் டோரதி பயன் பிரித்தானியாவை தளமாகக் கொண்ட இன்டிபன்டன் பேப்பரில் திங்கட்கிழமை (13) எழுதியுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாணமாக்கப்பட்ட பெண்களின் உடலங்கள் வீசப்பட்டிருந்ததுடன் ஒரு வாகனத்தின் பின்னால் அவை இழுத்துச் செல்லப்பட்டிருந்தன. இந்தப் பெண்களின் சடலங்களைப் பார்த்த ராணுவச் சிப்பாய்கள் நிர்வாணமாக்கப்பட்ட அந்த சடலங்கள் தொடர்பாக மிகவும் கீழ்த்தரமான வார்த்தைப் பிரயோகங்களை மேற்கொண்டதுடன் அவற்றைப் பார்த்து வக்கிரமாகச் சிரித்திருக்கிறார்கள்.

இந்தப் பெண்கள் கொலைசெய்யப்படுவதற்கு முன்னர் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டிருந்தது போன்று வீடியோ காட்சியில் தெரிகிறது. முழங்காலில் இருத்தப்பட்ட ஒரு பெண் எவ்வாறு கொல்லப்படுகின்றாள் என்பதை பிறிதொரு கைத்தொலைபேசியில் எடுக்கப்பட்ட காட்சியானது ஆதாரப் படுத்துகின்றது. இவ்வாறு கொடூரமாக நடாத்தப்பட்ட அந்தப் பெண்ணின் மூளைப் பகுதி சிதறடிக்கப்பட்டுள்ளது. இரத்தம் ஓடுகிறது.

'சிறிலங்காவின் கொலைக் களங்கள்' என்ற விவரணத்தில் காண்பிக்கப்பட்ட காட்சிகளில் சிலவே இவை. இவ்வாறான கொலைக் காட்சிகள் காயப்பட்டோர் தொடர்பான காட்சிகள், பாலியல் ரீதியான கொடுமைகளுக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்பட்ட பெண்கள் தொடர்பான காட்சிகளை பிரிட்டன் நாட்டின் தொலைக்காட்சியில் தொடர்ச்சியாகப் பார்க்க முடியும் என நான் ஒருபோதும் நினைத்திருக்கவில்லை.

இது மிகவும் பயங்கரமானது. இதை நீங்கள் பார்க்கும் போது அதில் காண்பிக்கப்படும் காட்சிகளை உங்களால் பல ஆண்டுகளுக்கு மறக்க முடியாதிருக்கலாம். இவற்றை எனது ஞாபகத்திலிருந்து நீக்குவதற்கு என்னால் முடியாதுள்ளது. இந்தக் காட்சிகளானது இரவு 11 மணிக்கே காண்பிக்கப்படுகின்றது. இதன் கடைசிப் பகுதியானது மிகவும் பயங்கரமானது. கண்ணால் பார்த்துச் சகிக்க முடியாத பல காட்சிகளைக் கொண்டுள்ளது. இவ்வாறான பயங்கரக் காட்சிகளைச் செய்திகளில்கூட மக்களால் பார்க்க முடியாதிருந்தது.

சிறிலங்காவில் இடம்பெற்ற உள்நாட்டுப் போரின்போதும் அதன் பின்னரும் சிறிலங்காப் படையினர் யுத்தக் குற்றங்களில் ஈடுபட்டனர் என்பதை ஆதாரப்படுத்தும் சாட்சியங்கள் உள்ளதாக ஐநாவின் வல்லுனர் குழுவானது ஏற்கனவே தெரிவித்திருந்தது. நாற்பதாயிரத்திற்கும் மேற்பட்ட அப்பாவித் தமிழ் மக்கள் இந்தப் போரின்போது கொல்லப் பட்டுள்ளனர் என அவர்கள் நம்புகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரிய போர்க்குற்றங்கள் தொடர்பான விசாரணையை மேற்கொள்ள வருமாறு ஐநா வல்லுனர் குழு சிறிலங்கா அரசாங்கத்திடம் கோரியிருந்தது. ஆனால் இதைச் சிறிலங்கா அரசாங்கம் செவிமடுக்கவில்லை. யுத்தம் இடம்பெற்றபோது யுத்த வலயப் பகுதியில் என்ன நடந்தது என்பதைப் பார்வை யிடுவதற்கு ஊடகவியலாளர்களையோ ஐநா அதிகாரிகளையோ சிறிலங்கா அரசாங்கம் அனுமதித்திருக்கவில்லை. ஆனால் யுத்தக் காட்சிகளை சிறிலங்கா இராணுவமும் தமிழர் தரப்பும் கைத்தொலைபேசிகள் மூலம் ஆவணப்படுத்தியுள்ளன. அதையே நாம் இப்போது பார்வையிடுகிறோம்.

இராணுவச் சிப்பாய்கள் தமது கைத்தொலைபேசிகளில் எடுத்த வீடியோ காட்சிகள் மிகவும் பயங்கரமானதாகவும் அதிர்ச்சியை ஏற்படுத்துகின்ற காட்சிகளாகவும் உள்ளன.

யுத்தத்தின் இறுதிப் பகுதியில் படையினரிடம் சரணடைந்த கைதிகளை அவர்கள் எவ்வாறு கொடுமைப்படுத்துகிறார்கள் என்பதை அவர்களே காட்சிப்படுத்தியுள்ளனர். நீண்ட வரிசை களில் அடுக்கிவிடப்பட்டிருந்த பல இறந்த உடல்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட பல ஒளிப்படங்களும் இத்திரைப்படத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் பலரது முகங்கள் சிதைக்கப்பட்டுள்ளதுடன் பலர் அவர்களது தலையில் சுடப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இந்த உடலங்கள் எறிகணைகளால் கொல்லப்பட்டதற்கான எந்தவொரு தடயங்களும் காணப்படவில்லை. மாறாக இவர்கள் 'போர் விதிமுறைகளுக்கு' ஏற்ப நடத்தப்படவுமில்லை.

சிறு பிள்ளைகளைக் கொண்ட குழுவொன்று குழி யொன்றிற்குள் இடப்பட்டுள்ளனர். இதில் சில கைதிகள் முதலில் உயிருடன் இருக்கும் காட்சிகளும் இதன் பின்னர் அவர்கள் துன்புறுத்தப்பட்டு கொலை செய்யப்படும் காட்சிகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன.

தமிழர் தரப்பால் எடுக்கப்பட்ட காட்சிகள் மிகவும் வேதனையை ஏற்படுத்துவதாக அமைந்துள்ளன. வைத்திய சாலைகள், இடம்பெயர்ந்தோர் இருப்பிடங்கள் இலக்கு வைத்துத் தாக்கப்படும் காட்சிகள் பலமான சாட்சியங்களாக உள்ளன.

சரணடைந்தவர்களைத் துன்புறுத்திச் சித்திரவதைப்படுத்திக் கொலை செய்யும் காட்சிகள் போலியானவை என சிறிலங்கா அரசாங்கம் அறிவித்துள்ளது. இவை போலியானவை அல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவை உண்மையான காட்சிகள் என ஒளிப்படத் துறை வல்லுனர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

புலிகளே தமிழ் மக்களைக் கொன்றதாக சிறிலங்கா அரசாங்கம் உறுதியாகக் கூறுகின்றது. அவர்கள் அவ்வாறு செய்தார்கள்தாம். ஆனால் அவர்கள் நாற்பதாயிரம் பொது மக்களையும் கொலை செய்யவில்லை. ஆனால் இத்திரைப் படத்தில் பதிவாக்கப்பட்டுள்ள காட்சிகள் தொடர்பாக நாம் என்ன நினைக்கின்றோம் என்பதை உங்களுக்குச் சொல்ல முடியாது.

இதைப் போன்ற அராஜகங்களுக்கு பொறுப்பானவர் களைக் கைதுசெய்வதற்கு அனைத்துலக ரீதியில் ஏதாவது ஓர் அமைப்பு இருத்தல் வேண்டும் என்று டோரதி பயன் குறிப்பிட்டுள்ளார். அவ்வளவும் உண்மை.

கைவிடப்பட்ட தமிழர்களுக்குப் பெரும் ஆதரவை சானல் 4 தொலைக்காட்சியின் இந்த விவரணம் தந்திருக்கிறது. ஆனால் போர்க்குற்றச்சாட்டை உடனடியாக இலங்கை அரசின் மீது சுமத்த முடியுமா? என்ற கேள்விகளும் எழுகின்றன

வழமைபோல இலங்கை அரசாங்கம் இந்த வீடியோவுக் கும் எதிர்ப்பை வெளியிட்டிருக்கிறது.

இலங்கை அரசின் ஊடகப் பேச்சாளர் கெகலிய ரம்புக்வெல, சானல் 4 தொலைக்காட்சியில் 14ஆம் திகதி காண்பித்த ஆவணப்படத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த காணொளியொன்று 2009ஆம் ஆண்டு ஒளிபரப்பப்பட்ட போது அது பொய்யானது என்றும் சோடிக்கப்பட்டது என்றும் நிரூபித்துள்ளதாக தெரிவித்துள்ளார்.

இதற்கமைய பாரதூரமான குற்றச்சாட்டுக்களைச் சுமத்திய சானல் 4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய ஆவணப் படத்தில் உள்ளடக்கப்பட்டிருந்த காணொளி மற்றும் புகைப் படங்களை கவனமாக ஆராய்ந்துவருவதுடன் உள்ளூர் மற்றும் சர்வதேச தொழில்நுட்ப மற்றும் தடையவியல் நிபுணர்களைக் கொண்டு ஆய்வுக்கு உட்படுத்தி அவற்றுக்கு உரிய பதில் அளிக்கவும் நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

“சர்வதேச ஊடகத் துறையில் உள்ள மிகச் சொற்பமானவர் களும் இணைந்து மேற்கொள்ளும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இந்தக் குற்றச்சாட்டு என்றும் குறிப்பிட்டுள்ள அவர் எவ்வாறாயினும் இந்த குற்றச்சாட்டுகள் தொடர்பில் அரசாங்கம் ஆராய்ந்து தகுந்த பதிலை விரைவில் தெரிவிக்கும்” என்றும் சொன்னார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எனினும் சர்வதேசச் சமூகத்தினர் மத்தியில் இலங்கை தொடர்பான நற்பெயருக்கு களங்கம் ஏற்படும் என்பதை ஏற்றுக்கொண்டுள்ளார். எவ்வாறாயினும் இலங்கை ராணுவத் தினர் சர்வதேச அரங்கில் மிகவும் மதிக்கப்படும் ராணுவம் என்ற நிலைப்பாட்டை உறுதிப்படுத்த அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகயையும் மேற்கொள்ளும்" என்றும் அமைச்சர் ரம்புக்வெல தெரிவித்தார்.

ஆனால் பிரித்தானியா இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் தொடர்பில் விசாரணை நடத்தப்பட வேண்டு மென்று இலங்கையை மீண்டும் வலியுறுத்தியுள்ளது. இலங்கை யின் இறுதிக் கட்ட யுத்தத்தில் இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க் குற்றங்களை உறுதிப்படுத்தும் ஆதாரங்கள் அடங்கிய ஆவணப்படமொன்றைப் பிரித்தானிய சானல்4 தொலைக்காட்சி ஒளிபரப்பிய நிலையிலேயே பிரித்தானிய வெளிவிவகார அமைச்சு இந்தக் கருத்தை வலியுறுத்தியுள்ளது.

மிகவும் கொடூரமான கோரக் காட்சிகளும் அடங்கியிருந்த இந்த ஆவணப்படத்தில் இறுதிக்கட்ட யுத்தம் இடம்பெற்ற காலப்பகுதியில் அங்குக் கடமையாற்றிய ஐக்கிய நாடுகள் சபை அதிகாரிகள் மற்றும் சட்டவல்லுநர்களின் செவ்விகளும் உள்ளடங்கியிருந்த அதேவேளை இறுதிக்கட்ட யுத்தம் இடம் பெற்றபோது வன்னியில் தங்கியிருந்து அந்தக் கொடூரத்தை நேரடியாக அனுபவித்த மக்களின் சாட்சிகளும் உள்ளடக்கப் பட்டிருந்து.

இந்த நிலையில் சானல் 4 தொலைக்காட்சியின் ஆவணப் படத்தைப் பார்த்து அதிர்ச்சியடைந்ததாகப் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சர் அலிஸ்டர் பிரட் தெரிவித்துள்ளார். யுத்தத்தின்போது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப் பட்டமைக்கு இந்த வீடியோ காட்சிகள் ஆதாரமாக அமைந் துள்ளதென்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். இந்தக் குற்றங்கள் தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டுமென இலங்கை அரசாங்கத்திற்கு அழுத்தம் கொடுக்கும் சர்வதேச சமூகத்துடன் இணைந்துகொள்ள பிரித்தானியா தயார் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

இது தமிழர்களுக்கு ஆதரவான ஒரு விடயமாக பார்க்கலாம்.

அத்தோடு 2011 ஆம் ஆண்டிற்கான சர்வதேச மன்னிப்புச் சபையின் விருது சானல் 4 தொலைக் காட்சிக்கு வழங்கப் பட்டுள்ளது. இந்த விருதை சானல் 4 தொலைக்காட்சி 3ஆவது தடவையும் வென்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கை குறித்த விவரணத்தை வெளியிட்டமையின் காரணமாகவே சர்வதேச மன்னிப்புச்சபையானது இந்த விருதை சானல் 4க்கு வழங்கியுள்ளதாக தெவிக்கப்படுகிறது. இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற கொடுமைகளை வெளிப் படுத்தியமை பின்னர் வெளியிட்ட காணொளிகள் உண்மை யானவை என நிரூபித்துள்ளமை என்பன இந்த விருது கிடைக்க மேலும் காரணிகளாக அமைந்துள்ளது எனச் சர்வதேச மன்னிப்புச் சபை தெவித்துள்ளது.

சானல் 4 தொலைக்காட்சிக்குக் கண்ணீர் மல்க தமிழர்கள் பலர் நன்றி தெரிவித்தது எனக்குத் தெரியும். அது நன்றிக் கண்ணீர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிலிக்கன் மார்பகம்

தாய்க்கும் எங்களுக்குமான அற்புதமான இரத்த உறவைத் தாங்குவது மார்பகம். தாயின் மார்புக்கும் எங்களுக்குமான நுண்ணிய உறவை எந்த வார்த்தைகளால் சொல்ல இயலும்.

இன்று ஐரோப்பாவில் நாற்பதாயிரம் பெண்கள் மார்பைப் பிடித்துக்கொண்டு கதறுகிறார்கள். எல்லாம் சிலிக்கன் வைத்த செயற்கை மார்புகள்.

இப்போது ஐரோப்பாவில் உள்ள பெண்களுக்குத் தங்களது மார்புகள் தொடர்பான கவலை வந்துவிட்டது. சின்ன மார்புகளை ஆண்கள் பார்க்கிறார்கள் இல்லை; ரசிக்கிறார்கள் இல்லை. இதற்காக அவற்றை ஒப்பிறேசன் செய்து வெட்டி அதனுள்ளே சிலிக்கன் கட்டிகளை வைத்துப் பெரிதாக்கி செயற்கை கவர்ச்சி காட்டிக் கொண்டு திரிகிறார்கள்.

மார்புகள் பெரிதாக இருந்தால்தான் ஆண்கள் விரும்புகிறார்கள் என்று பெண்கள் தாங்களாகவே நினைக்கிறார்கள். பெரிய மார்புகள் கவர்ச்சியைக் கூட்டுகின்றன என்பதற்காக நோயை விலை கொடுத்து வாங்குவது என்பது அபத்தமானது.

இங்கு லண்டனில் இரண்டு மார்பகங்களையும் வெட்டி சிலிக்கன் வைத்து அழகுபடுத்தும் சிகிச்சைக்கு மூவாயிரத்து 500 பவுண்டுகளில் இருந்து நாலாயிரம் பவுண்டுகள்வரை செலவாகிறது. இந்திய ரூபாயில் மூன்றுலட்சத்து 20 ஆயிரம் ரூபாய், இலங்கை ரூபாயில் கிட்டத்தட்ட எட்டு லட்சம் ரூபாய். என்ன மலைப்பாக இருக்கிறதா? பெண்கள் தங்கள் மார்பு சின்னதாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறதே என்ற கவலைக்கு எவ்வளவையும் செலவழிக்க தயாராக இருக்கிறார்கள்.

வேலைக்குப் போகும் பெண்கள் சின்ன மார்புக்கு மார்புக்கச்சை அணியும்போது வெட்கப்படுவதாக சொல்கிறார் கள். அது மாத்திரமல்ல ஆண்களுக்கு மத்தியில் வேலை செய்யும் பொழுது தன்னம்பிக்கை இல்லாமல் இருக்கிறதாம்.

அதனால் தங்கள் சம்பளத்தில் ஒரு தொகையைச் சேமித்து எப்படியாவது தங்களது சிறிய மார்பைப் பெரிதாக்கி விடத் துடிக்கிறார்கள். அது இப்போது பெருவினையாக மாறிவிட்டது. ஒப்பிறேசன் செய்த நாற்பதாயிரம் பெண்களுக்கு மார்பில் வெட்டிய இடத்தில் ஒவ்வொரு விதமான பிரச்சனை கள் வந்து கொண்டிருக்கின்றன.

இங்கு ஐரோப்பாவில் உள்ள ஒவ்வொரு நாட்டுத் தேசிய வைத்திய சாலைகளும் மண்டையைப் போட்டுக் குழப்பிக் கொண்டிருக்கின்றன. பெரும் செலவில் மார்பை வெட்டி சிலிக்கனை உள்ளே திணித்துவிட்டார்கள், சரி. ஆனால் அதனால் வரும் பக்க விளைவுகள் உயிருக்கே உலை வைத்து விடும் அளவுக்குப் போய்விட்டன.

ஐரோப்பிய யூனியன் நாடுகள், மார்பு சிலிக்கன் சிகிச்சை நிலையங்களின் ஆபத்தை உணர்ந்துகொண்டு வருகின்றன. பிரான்ஸில் உள்ள பி.ஐ.பி என்ற கொம்பனி செய்த சிலிக்கன் மார்பகங்கள் ஆயிரக்கணக்கான பெண்களுக்குப் பெரும் அழிவாக ஆனதால் மார்பு அழுகிப் போகும் ஆபத்து வந்த தால் ஐரோப்பிய ஒன்றியம் உடனடியாக இந்த கொம்பனியின் தயாரிப்புகளைத் தடைசெய்து விட்டது. அத்தோடு பெருந் தொகை நஷ்ட ஈடும் வழங்க வேண்டும் என்று உத்தரவிட் டிருக்கிறது.

ஏற்கனவே இங்கு வைத்திய சாலைகள் செலவுக்கு முக்கி முனகிக் கொண்டிருக்கும்போது இது பாரிய பிரச்சினையாக வந்திருக்கிறது. இது எவ்வளவு பிரச்சினை என்றால் பரவுகின்ற கொள்ளை நோய்களுக்காகப் பதற்றப்படுவதைப் போல ஐரோப்பிய ஒன்றியத்தின் 27 சுகாதார அமைச்சர்களும் ஒன்று கூடிப் பெரும் கூட்டம் போட்டு ஆராய்கின்ற அளவுக் குப் பிரச்சினை தீவிரமாகி விட்டது.

சுகாதார விடயத்தில் ஐரோப்பிய ஒன்றியத்தில் சட்டத்தைச் சிலிக்கன் மார்பக விடயத்தில் இன்னும் இறுக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேண்டும் என்ற பரிந்துரை வந்திருக்கிறது. ஏனெனில் இது நாற்பதாயிரம் உயிர்கள் சம்பந்தப்பட்ட பிரச்சினை.

இதை வெறுமனே நாற்பதாயிரம் பெண்கள் சம்பந்தப்பட்ட விடயம் என்று விட்டு ஒதுக்க முடியாது. இது ஐரோப்பிய ஒன்றியத்தின் நாற்பதாயிரம் குடும்பம், அந்தப் பெண்களின் பிள்ளைகள், அந்தப் பெண்களின் கணவன்மார், தந்தைமார், அவர்களது வாழ்வு, செலவு சம்பந்தப்பட்ட பெரும் பிரச்சினை.

பிறைவேற் கொம்பனிகள் செயற்கை மார்பகத்தைச் செய்து விற்றுவிட்டால் அவர்கள் பணத்தை வாங்கிவிட்டுப் போய் விடுவார்கள். ஆனால் பின் விளைவுகள் வரும்போது ஒவ்வொரு அரசாங்க ஆஸ்பத்திரிகளுக்குத்தானே மேலதிக செலவு.

சும்மா கிடந்த மார்பை வெட்டி அவர்கள் அதற்குள் சிலிக்கனை வைக்க அதனால் வரும் பிரச்சினையை எங்களுக் குத் தெரியது என்று ஒதுக்கி வைத்துவிட முடியாது இங்குள்ள வைத்தியசாலைகளால்.

ஏனெனில் ஒவ்வொருவருக்கும் சுகாதாரத்தை வழங்க வேண்டிய தார்மீகக் கடமை வைத்தியசாலைகளுக்கு உள்ளது. எனவே வைத்தியசாலைகள் பதறுகின்றன.

பிரச்சினை என்னவென்றால் உலகப் பிரபல பெண்கள் என்ன செய்கிறார்களோ அதேபோல தாங்களும் செய்ய வேண்டும் என்று நினைப்பதும் அவர்களைப் போல வர வேண்டும் என்று நினைப்பதும் இங்கு ஐரோப்பிய வாழ் பெண்கள் மத்தியில் இருக்கும் பேராசை. இது வெறும் வெள்ளைக்கார பெண்களை மட்டும் நான் சொல்லவில்லை. இங்கு வாழும் தமிழ்ப் பெண்களையும் சொல்கிறேன்.

மார்பகங்களைப் பெரிதாக்கிய பிரபலங்கள் இப்போது வெறுத்துப்போய், மனமுடைந்து போய், அதனால் வரும் ஆபத்துகளை மனம்விட்டு எழுதிய சோகக்கதைகள் ஆயிரம் ஆயிரமாக இணையத்தளங்களில் கொட்டிக் கிடக்கின்றன.

உடனடியாக முப்பதாயிரம் செயற்கை சிலிக்கன் மார்பகங் களை அகற்ற வேண்டும். அவை உயிருக்கே ஆபத்து என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. குறிப்பிட்ட ஒரு பிரான்ஸ் கொம்பனி தயாரித்த செயற்கை மார்பங்கள் பழுதடைந்துவிட்டன. ஆனால் அவை யாருக்கு பொருத்தப்பட்டிருக்கிறது என்பது தொடர்பாக சரியான பதிவு இல்லையாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் அந்தக் கொம்பனி தயாரித்த மார்பகத்தை யார் பொருத்தி வைத்திருக்கிறார்கள் என்று கண்டுபிடிக்க முடியவில்லை. அதுதான் வைத்திய சாலைகளுக்குப் பெரும் தலைவலி.

ஜெனி பொன்டா, ஹெய்டி குல்ம், மேரியல் ஹெமிங்வே, டெனிஸ் நிச்சாட், லாகா காகா, சேலி கூல், லிஸரினா உலகப் பிரபலங்கள், பாடகிகள், நடிகைகள் இந்தப் பெயர் களை கூகுள் பண்ணினால் தெரியும் அவர்களின் பிரபலம். எல்லாரும் மார்பகங்களைப் பெரிதாக்கியவர்கள், பின்புறத்தைப் பெரிதாக்கியவர்கள். இவர்களே. அலறுகிறார்கள். இயற்கை உடல் அப்படியே இருக்கட்டும் உடலில் கத்தியை வைக்க விடாதீர்கள். கத்தி உங்கள் உடலை அழகுபடுத்தவதற்காக வைக்கப்பட்டால் நீங்கள் பைத்தியம் பிடித்தவராகி விடுவீர்கள் என்கிறார்கள்.

ஏனெனில் அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு வரும் வலியைப் போக்க மருந்து, அதனால் வரும் மனஉளைச்சல், உடல் பிரச்சினை என்று நிம்மதி போய்விடும் என்று அனுபவித்த பின்பு சொல்கிறார்கள். அத்தோடு அவர்களது ரசிகர்களுக்குச் சொல்கிறார்கள், “பிளாஸ்டிக் சேஜறி செய்யாதீர்கள்.”

ஏனெனில் ஆண்கள் இதில் அவ்வளவு மெனக்கெடமாட் டார்கள். இயற்கை அழகைப் பாதுகாத்தாலே போதும், எல்லாம் சரியாகிவிடும்.

19ஆம் நூற்றாண்டில் டொக்டர் வின்சஸ் சேனி என்பவர் மார்பகப் புற்று நோயால் மார்பகத்தை அறுத்து நீக்கி விடுகின்ற பெண்களுக்கு மார்பகம் இல்லாத இடம் அழகில்லாமல் இருக்கும் என்பதற்காக கொண்டு வந்த ஒரு மாற்றுத்திட்டம் இந்த ‘பிறஸ்ட் இம்பிளான்ட்’ முறை. அது மார்பு இல்லாமல் மனஉளைச்சலில் இருக்கும் பெண்களுக்குப் பெரும் ஆறுதலாக இருந்தது.

இந்தச் செயற்கை மார்பு வடிவமைப்பு இங்கு ஐரோப்பா வில் கிட்டத்தட்ட ஐம்பதாயிரம் பெண்களுக்கு அதுவும் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு 20ம் நூற்றாண்டில் பிரயோசனப்பட்டது. இதை அழகு சிகிச்சைக்குள் 1961ஆம் ஆண்டு அமெரிக்காவின் பிளாஸ்டிக் சேர்ஜன்கள் தோமஸ் குரோனின், பிராங்ஜிரோ ஆகிய இருவரும் கொண்டு வந் தார்கள். அதற்குப் பிறகு சிறிய மார்பகம் உள்ள பிரபலங்கள் பெரிதாக்க இந்த சிகிச்சைக்குப் படையெடுத்தனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறகு பொதுமக்கள். இப்பொழுது அது பெரும் பிரச்சினை யாகிவிட்டது. இரசாயணப் பொருட்கள் உள்ள சிலிக்கன் மார்பகம் உடலில் பொருத்திய பின் வெடித்திருக்கிறது. அதில் உள்ள இரசாயணம் உடலில் கலந்து உயிரை எடுத்த சம்பவங்கள் அதிகம்.

சும்மா போய் 'பிறஸ்ட் இம்பிளான்ட்' என்று கூகிளில் தட்டிப் பாருங்கள்; தலை சுற்றிக் கொண்டு வரும். அதன் பிரச்சினைகள் அவ்வளவு. அதனால்தான் சொல்கிறேன் "இங்கு ஐரோப்பாவில் பெண்கள் செயற்கை மார்பிலடித்து அழுகிறார்கள்; எனவே இயற்கை போதும்" என்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அப்பா ஒரு பெண்

உண்மையில் மனித மனம் என்ன விடயத்தை சிந்திக்கிறது? எதை அவாவி நிற்கிறது? என்பதெல்லாம் கண்டுபிடிக்க முடியாத மர்மமாகவே இருக்கிறது. ஏன் என்ற கேள்விக்கு மேற்குலக நாடுகளில் இருந்து பார்த்தால்தான் தெரியும். அவ்வளவு சிக்கல்.

நான் ஐடிவி தொலைக்காட்சியின் விவரண நிகழ்ச்சி ஒன்றை திடீரென்று பார்த்தேன். 'அதில் எனது தந்தை பெண்ணாகிறார்' என்ற தலைப்பில் ஒரு நிகழ்ச்சி போட்டார்கள்.

நான் இலங்கையில் பிறந்ததாலோ என்னவோ அது என்னைப் பெரிதும் தாக்கிவிட்டது. ஆனால் இங்கு எல்லா வெள்ளைக்காரரும் அதை இலகுவாக எடுப்பார்களோ? என்று யோசிக்கிறேன்.

அந்த ஆணுக்கு ஐம்பத்து மூன்று வயது. அவர் தன்னுடலிலுள்ள ஆண் உறுப்பை பெரியதொரு அறுவை சிகிச்சை மூலமாக மாற்றி பெண்ணுடலில் உள்ள உறுப்பு களை அறுவைச் சிகிச்சை மூலமாக கொண்டு வருகிறார்.

அவருக்கு மனைவியும் ஒரு பெண் பிள்ளையும் இருக்கிறார்கள். அந்த மனைவியும் பெண் பிள்ளையும் அப்பா பெண்ணாவதை வெறுக்கவில்லை, விரும்பு கிறார்கள். அந்தத் தந்தையின் தலைமாட்டில் நின்ற வண்ணம் தனது தந்தை பெண்ணாவதை எந்த மன சஞ்சலமும் இல்லாமல் ஏற்றுக்கொள்கிறாள் அந்த மகள். அப்படி இலங்கையில் பிறந்த ஒரு ஆண் யோசிக்க முடியுமா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் தன்னில் கொஞ்சம் கொஞ்சமாகப் பெண் தன்மை மேலோங்கி வந்ததாகவும், அதனால் ஆணாக இருக்க விரும்பவில்லை என்றும் அவர் சொல்கிறார். அந்த அறுவைச் சிகிச்சை சாதாரணமானது அல்ல. அது பெரும் செலவில், பல நிபுணர்கள் செய்கின்ற அறுவைச் சிகிச்சை. அதற்கு குடும்பம் முழு ஒத்துழைப்பை வழங்குகிறது.

ஆண் உடலில் பெண் மாற்றங்கள் நிகழும்போது ஒரு ஆண் தன்னை பெண்ணாகவே நினைத்துக்கொண்டிருக்கிறான். அதற்குப் பிறகு அவனால் ஆணாக வாழ முடியாத பெரும் மனச்சிக்கலுக்கு உள்ளாகிறான்.

இங்கு பிரிட்டனில் மாத்திரம் ஆறாயிரம் பேர் ஆண்களாக இருந்து தங்களை அறுவைச் சிகிச்சைக்குப் பிறகு பெண்களாக மாறிக்கொண்டவர்கள் இருக்கிறார்கள் என்று ஐடிவி தொலைக்காட்சி சொல்கிறது. இந்த வருடம் மாத்திரம் 150 பேர் அறுவைச் சிகிச்சை செய்ய காத்திருக்கின்றனர். இதில் ஆண்கள்தான் தங்களை அறுவைச் சிகிச்சை செய்து பெண்களாக மாற்றிக்கொண்டு வாழ்கிறார்கள்.

இயுறோ லொஜிகல் சேர்ஜன் பில் தோம்ஸ் சொல்கிறார் "ஒரு ஆண், தான் தவறான உடம்போடு வாழுகிறார் என்று நினைத்தால் அதில் இருந்து விடுபட வேண்டியதுதான். அதற்குள் கிடந்து ஏன் உழல வேண்டும்? இந்த பால் மாற்று அறுவைச் சிகிச்சை அதற்கு வழி வகுக்கும்" என்று சொல்கிறார்.

தொடர்ந்து பெண் நினைவுகளோடு ஆண் உடம்பில் வாழுவது மன உளைச்சலை, மன வேதனையை ஏற்படுத்தும், அது மன நோயைக் கொண்டுவந்து விட்டுவிடும் என்று உளவியல் மருத்துவர்கள் சொல்கிறார்கள்.

"ஆண் உடலோடு ஒரு பெண்ணாக வாழ்வது கொடுமையானது. ஏனெனில் இது உணர்வு சம்பந்தப்பட்ட விடயம். நுண்ணிய மன உணர்வுகளை யாரோடு பகிர்ந்து கொள்வது? ஒரு பெண் மனநிலையில் இருந்து நான் பட்ட அவஸ்தைகளுக்குத் தீர்வு கிடைத்துவிட்டது" என்கிறார் ஜேன். ஒரு வருடத்துக்கு முதல் பால் மாற்றுச் சிகிச்சை செய்தவர் அவர். அவருக்கு மனைவி இரண்டு பிள்ளைகள் இருக்கிறார்கள். தாங்கள் மகிழ்சியாக வாழ்வதாக மனைவி சொல்கிறார்.

ஆனால் கலியாணம் முடித்து இரண்டு பிள்ளைகள் பெற்ற பிறகு தான் ஆணல்ல பெண் என்று ஒரு தந்தை நினைக்கும்போது அல்லது உடல் மாற்றம் வரும் போதுதான் பல சமூக பிரச்சினைகள் வருவதாக ஜேன் சொல்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பல நண்பர்கள் தன்னை விட்டுப் போய்விட்ட தாகச் சொல்கிறார் அவர்.

அவரின் டூன் ஏஜ் மகள் அவருக்குத் தலையை வாரி விட்டாலும் பிறந்த நாள் கார்ட் கொடுக்கும்பொழுது அவரைத் தந்தை என்றுதான் காட்டில் எழுதுகிறாள். ஜேன் ஒரு பெண்ணாக இருந்தாலும் அவர் தனது தந்தைதான் என்று சொல்கிறாள் மகள்.

இங்குப் பிரபல சட்டத்தரணியாக இருந்தவர் டேவிட் பேர்ஜஸ். ஆனால் அவர் சோனியா என்ற பெயரில்தான் இங்குப் பிரபலமானார். அவர் ஒரு ஆண். மூன்று பிள்ளைகள் அவருக்கு இருக்கின்றன. ஆனால் அவர் தன்னை ஒரு ஆணாக அல்லாமல் பெண்ணாகவே நினைத்துக்கொண்டிருப்பார்.

அவர் அனேகமாக பெண்கள் அணியும் ஆடைகளையே அணிவார். அவரது மனைவியும் ஏன் அவரிடம் வழக்கு விசயமாகப் போன தமிழர்கள் எல்லோரும் அவரை மிகவும் சிறந்த ஒரு மனிதர் என்றே சொல்வார்கள்.

அவர் எத்தனையோ தமிழர்களுக்காக வாதாடி அகதி அந்தஸ்தை எடுத்து கொடுத்திருக்கிறார். மனித உரிமைகள் தொடர்பான சிறந்த சட்டத்தரணி அவர். பின்னாளில் அவர் முழுமையாகத் தன்னை பெண்ணாகவே மாற்றிக்கொண்டவர். அவருக்கு தன்னுடைய பால் மாற்றம் ஒரு பிரச்சினையாகவே இருக்கவில்லை. தொடர்ந்தும் தன் வேலைகளை அவர் மிகவும் மும்முரமாகவே செய்து கொண்டிருந்தார்.

ஆனால் அவர் தன்னை ஒரு பெண்ணாக நினைத்திருக் கிறார். அவரது நடை உடை பாவனை ஒரு பெண்ணைப் போலத்தான் இருக்கும். அவரை அவரது பிள்ளைகள் ஏற்றுக் கொண்டுதான் வாழ்ந்தார்கள்.

2010 ஒக்டோபர் 25 ஆம் திகதி அவரை நீனா கனகசிங்கம் என்ற தமிழ்ப் பெண்ணொருவர் சுரங்க ரயில் நிலையத்தில் வைத்து ரயில் பாதையினுள் தள்ளி விட அவர் இறந்துவிட்டார். பின்னர் நீதிமன்றம் நீனாவுக்கு தண்டனை வழங்கியிருக்கிறது. ஆனால் அவரை நீனா ஏன் தள்ளிவிட்டார்? விழுத்தி கொன்றிருக்கிறார் என்று இன்னும் வெளி உலகத்துக்குத் தெரியவில்லை. ஆனால் நீனாவுக்கு மன நோய் இருந்ததாக வும் அதனால் சோனியாவை அவர் வேண்டுமென்றே கொல்ல வில்லை என்றும் நீனாவின் உறவினர்கள் சொல்கிறார்கள்.

இவ்வாறான உடல் மாற்றத்தின் மூலம் பாலின மாறுதல் திடீரென்றும் சிலருக்கு வருகிறது அவர்கள் என்ன செய்வது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற பிரச்சினை வருகிறது. மேற்குலக நாடுகளில் இவ்வாறான பால் மாற்றம் ஏற்பட்டுவிட்டால் தங்கள் ஆணுறுப்புகளை வெட்டி அகற்றி விட்டுப் பெண்ணுறுப்புகளை உருவாக்கி விடுவார்கள்.

இந்தியா போன்ற நாடுகளில் வறுமையில் இருக்கும் இவ்வாறான பால் மாறுகின்றவர்கள் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். இந்தியாவில் பால் மாற்று அறுவைச் சிகிச்சைகள் பாதுகாப்பில்லாமல் செய்யப்படுகின்றன. அதனால் பல மரணங்களும் சம்பவிக்கின்றன.

பால் மாற்று அறுவைச் சிகிச்சை என்பது சமூகத்தில் குறிப்பாக இந்திய சமூகத்தில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகிறது. காரணம் அதற்கான அறிவு போதாமைதான்.

சீனாவில் பால் மாற்று தொடர்பான விடயம் கிறிஸ்துவுக்கு முன் எட்டாம் நூற்றாண்டுக்கும் முன்புகூட இருந்ததாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. ஆனால் இது கட்டாய மாற்று நடவடிக்கை என்றே வரலாற்றாசிரியர்கள் சொல்கிறார்கள்.

இவர்கள் 'நபுஞ்சகர்கள்' என்றழைக்கப்படுகிறார்கள். ஆண்பால் அழித்தல் அறுவைச் சிகிச்சை மூலம் ஆண்பால் உறுப்புகளை அகற்றியவர்களை தான் 'நபுஞ்சகர்கள்' என்று சொல்கிறார்கள்.

தாய்மையடையக்கூடிய பெண்கள் இருக்கும் அரசனின் அரண்மனையில் வேறு எந்த ஆணுடைய விந்தும் விழுந்து எந்தப் பெண்ணின் கருமுட்டையிலும் கலந்து துளிர்த்துவிடக் கூடாது என்ற ஒரே காரணத்திற்காகவே 'நபுஞ்சகர்கள்' உருவாக்கப்பட்டார்கள். இங்கு அரசனின் வாரிசு தூய்மை பேணப்பட்டது எனலாம்.

சீனாவில் மிங்க் முடியாட்சியில் மட்டும் 70,000 ஆண் குழந்தைகளுக்குப் பால் அழிப்பை அறுவைச் சிகிச்சை மூலம் செய்திருக்கிறார்கள். இந்த அறுவை நிபுணர்கள் அறுவைச் சிகிச்சையைப் பரம்பரை பரம்பரையாகக் குடும்பத்தொழிலாகவே செய்துவந்திருக்கிறார்கள்.

நரம்புகளை விறைக்க வைக்கும் மூலிகைக் கஷாயங்கள் கொடுத்து உறுப்புகளை மிளகுக்கலந்த சுடுநீரால் கழுவுவார்களாம். ஆணுறுப்பை முழுக்க அறுத்தெறிவது ஒரு வகை, விதையை மட்டும் அகற்றுவது இன்னொரு வகை என்று இரண்டு வகையான அறுவைச் சிகிச்சை முறைகள் நடைமுறையில் இருந்திருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த அறுவையின்போது அனேகமானவர்கள் மரணித்தும் போயிருக்கிறார்கள். இதெல்லாமே ஆண் தன் சொத்துடைமைக்கு வாரிசாக தன் இரத்த சொந்த வழி வாரிசு மட்டுமே இருந்தாக வேண்டும் என்ற எண்ணத்தின் உச்சக்கட்டம். அரண்மனையில் மற்ற வேலைகள் செய்ய ஆண்களும் வேண்டும். அதே நேரத்தில் எங்காவது அந்த இருட்டில் ஏதாவது நடந்துவிடுமோ என்ற அச்சத்தின் விளைவு தான் ஆண்பால் அழித்த நபுஞ்சர்களின் வரலாறு.

19ஆம் நூற்றாண்டில் சீனத்தில் போய் வசித்த ஆங்கிலேயர் மூலம்தான் வெளியுலகுக்கு சீனாவின் இந்த வழக்கம் தெரிய வந்தது.

ஆனால், ஐரோப்பிய நாடுகளில் தனி மனித சுதந்திரம் ஒவ்வொருவரையும் தனித்தனியாக மதிக்கிறது.

எங்கள் மகன் படிக்கும் பாடசாலையில் மூன்றாம் பாலின ரீச்சர் ஒருவர் இருக்கிறா. அவருக்கான முழு அங்கீகாரத்தையும் லண்டன் வழங்கியிருக்கிறது.

இந்தியா போன்ற நமது நாடுகளில் அவர்கள் எப்பொழுதும் ஒதுக்கபட்டவர்களாகவே இருக்கிறார்கள். கேலிப் பொருளாகவும் பாலியல் பண்டமாகவும் மட்டுமே பார்க்கப்படுகிறார்கள். அது மாற்றப்பட வேண்டும். அவர்களுக்கான அங்கீகாரம் முழுமையாக கிடைக்க வேண்டும். அதற்கான போராட்டங்கள் சரியான திசையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஐடிவி டொக்கியுமன்றி சொல்லுகின்ற விடயங்கள் ஆயிரம். இந்த உலகத்தில் சும்மா வாழ்ந்தோம் இறந்தோம் என்பதற்கு அப்பால் எத்தனையோ விடயங்கள் இருக்கின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலியாணம் என்கின்ற பயங்கரம்

பிரச்சினைகளின் தோற்றுவாய் என்ன? அது எங்கிருந்து வருகிறது என்று நாம் சில நேரம் தலையை போட்டு உடைத்துக்கொள்வோம். ஆனால் அது எங்களிடம் இருந்தே வருகிறது என்று தெரியாமல் இருக்கும். அதற்கு முக்கிய காரணம் பொறுப்பின்மை என்று சொல்ல முடியாது. சிலநேரம் பிரச்சினைகளை நாங்களே இழுத்து கொண்டு வருகிறோம். எமது காரியங்கள் எங்களைச் சிக்கலில் தள்ளி விடுகின்றன.

இங்கு லண்டனில் இருக்கின்ற எனது நண்பர் ஒருவரின் மகனும் அவன் காதலித்த பெண்ணும் கலியாணம் செய்துகொள்ள யோசித்தார்கள். அவர்கள் இருவரும் இரண்டு வெவ்வேறு மதங்களைச் சேர்ந் தவர்கள். பெண்மணி குஜராத். பெடியன் யாழ்ப்பாணம் அச்சுவேலி.

முதலில் இந்தக் காதல் விவகாரத்தைப் பெடியன் தகப்பனிடம்தான் சொன்னான். தகப்பன் முதலில் கொஞ்சம் அதிர்ந்துதான் போனார். பிறகு அவர் ஒரு தீர்மானத்திற்கு வந்தார். எப்படியோ வாழப்போகிறவர் கள் அவர்கள்தானே, அவர்கள் தீர்மானிக்கட்டும் என்று யோசித்தார். பெடியனின் தாயிடமும் முதலில் தமிழ்த் தாய்மாருக்கு வருகிற தயக்கம் இருந்தது. பிறகு தயக்கம் மாறிவிட்டது.

கலியாணம் முடிக்கலாம் என்று தீர்மானித்து குஜராத் பெண்ணின் வீட்டுக்கு போய் முறைப்படி தமிழ் தாய் தகப்பன் பெண் கேட்டார்கள். அவர்களும் விசயத்தை பெரிதாக்காமல் முடித்து விடுவோம் என்று யோசித்தார்கள். விசயம் இப்படி போய் கொண்டிருக்கும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது ஒருநாள் பெடியன் தகப்பனிடம் வந்து நிற்கிறான்; அப்பா கலியாணம் தொடர்பாக எனக்கு பயமாய் கிடக்கு. ஏனென்றால் எதிர்காலத்தில் நாங்கள் பிரச்சினையில்லாமல் வாழ வேண்டும். உங்களையும் அம்மாவையும் போல நீண்ட காலம் வாழ வேண்டும். அதற்குக் கொஞ்சம் பதற்றமாக இருக்கிறது.

இது என்னடா புதுப்பிரச்சினை. ஏற்கனவே காதல் அதுவும் வேறு தேசப் பெண், அத்தோடு மதம் வேறு, கலாச்சாரம் வேறு, மொழி வேறு என்று ஒரு மாதிரி போய் பேசி முடி வெடுத்துவிட்டால் இப்பொழுது இந்த புது விடயத்தைக் கொண்டு வந்து போடுகிறானே என்று தகப்பனுக்குப் பிரச்சினை.

இங்கு புகலிட நாடுகளில் வாழும் பலர் சிறிய விசயங் களையும் பெரிய விசயங்களாக யோசித்து யோசித்தே தங்கள் காரியங்களைக் கொண்டு நடத்த முடியாதவர்களாக இருக் கின்றனர்.

கலியாணம் என்பது இரண்டு பேர் மனமொத்து வாழ வேண்டும் என்றால் அது எவ்வளவு பெரும் சிக்கலை உடையது என்று அவர்கள் அச்சப்படுகிறார்கள்.

எங்களின் கிராமத்தில் வாழ்ந்தபோது நாங்கள் இப்பிடி யோசிக்கவேயில்லை. காதல் திருமணம், இல்லாவிடில் பெரியவர் கள் பார்த்துச் செய்கிற திருமணம். அதில் உருவம், அழகு, நன்றாக வீட்டு வேலை செய்து மனிசனையும் பிள்ளைகளை யும் பார்த்துப் பராமரிக்க கூடிய பெண்தான் பார்த்தார்கள்.

நல்ல உசாரான பெண்ணைக் கலியாணம் முடித்து பல வருட காலம் சந்தோசமாகக் குடும்பம் நடத்தினார்கள். பிரச்சினைகள் வந்தன. அது பிறகு காணாமல் போயின பிறகும் பிரச்சினைகள் வரும். பிறகு அதுவும் காணாமல் போகும். இப்படித்தான் எங்கள் பெரியவர்களின் வாழ்வு கழிந்தது. எங்களின் வாழ்வு இப்படித்தானே தொடர்கிறது.

இப்போது பிரச்சினைகள் வந்தால் எப்பிடிச் சமாளிப்பது என்று தெரியாமல் திணறுகிறார்கள் இளையவர்கள்.

அதனால் மாப்பிளையும் பொம்பிளையும் கலியாணத் துக்கு முதலில் கவுன்சிலிங் போய் ஆலோசனை பெறப் போகிறார்களாம். எங்களுடைய அம்மம்மா இப்போது இல்லை, செத்து போய்விட்டார். அவ உயிரோடு இருந்து இதைக் கேள்விபட்டால் எப்பிடி சிரித்திருப்பா. வெளிநாடு என்ன வெல்லாம் செய்ய சொல்கிறது. இங்கு புத்திசாலித் தனமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்திசாலிகளும் கூடியதால் வந்த பிரச்சினை இது என்றுதான் யோசிக்க தோன்றுகிறது.

இங்கு லண்டனில் புதிசாக கலியாணம் முடிக்கிறவர்கள் கவுன்ஸிலிங் போகிற, புதிய முறை ஒன்று இப்போது தோன்றியிருக்கிறது. அங்குப் போய் கவுன்ஸிலிங் செய்கிற மனோவியல் நிபுணரோடு உட்கார்ந்து தங்களது எதிர்கால வாழ்வு தங்களது குணாதிசயங்கள், இருவருக்கும் என்ன விடயத்தில் விருப்பம், என்ன கலர் ஒவ்வொருவருக்கும் பிடிக்கும் என்ன இசை யாருக்கு பிடிக்காது, என்ன புத்தகம் யாருக்கு பிடிக்கும், என்ன ஆடை பிடிக்கும் அல்லது பிடிக்காது, என்ன விசயத்தில் விட்டு கொடுக்க வேண்டி வரும், என்ன விடயத்தில் ஒத்து போக வேண்டியிருக்கும், என்ன விடயத்தில் ஒத்து போகாத பிரச்சனை இருக்கிறது, செக்ஸ் தொடர்பான ஆசைகள் ஒவ்வொருவருக்கும் எப்பிடி இருக்கிறது, குழந்தைகளை எப்பொழுது பெற வேண்டும், அல்லது குழந்தைகள் இல்லாது வாழ முடியுமா? அதை அவர்கள் சில நேரங்களில் எப்படிச் சமாளிக்க வேண்டும், எப்படி வங்கி கணக்கு வைத்திருக்க வேண்டும், யார் வீட்டு மோர்கேஜை கட்டுவது, மற்ற பில்களை யார் கட்டுவது என்று கூடி ஆலோசித்த பிறகே கலியாணம் முடிக்க யோசிக்கிறார்கள்.

இதுவெல்லாம் ஒரு பிரச்சனையா? என்று சிலோனில் இருந்தும் தமிழ்நாட்டிலிருந்தும் கேட்க தோன்றும். ஆனால் விசயம் இப்படித்தான் இருக்கிறது. இரண்டு மனம் மட்டும் இணைந்தால் போதாது. வாழ்வதற்கு வேறும் சில தகுதிகள் வேண்டும் என்று யோசிக்கத் தொடங்கி விட்டார்கள் தமிழ் இளைஞர்கள்.

வெளிநாடுகளில் இன்னும் பழைய பஞ்சாங்கத்தைக் கட்டிக்கொண்டு அழத் தேவையில்லை என்று இளையவர்கள் சொல்கிறார்கள்.

ஏனெனில் பெண்களும் வேலைக்குப் போகிறார்கள். அது மட்டுமல்ல. அதிக சம்பளம் பெறும் வேலைகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கும் வாழ்வதற்கான வாழ்வை அனுபவிப்பதற்கான எல்லா உரிமையும் இருக்கிறது. ஊரைப் போல ஒரு ஆணுக்கு கட்டுப்பட்டோ அல்லது ஒரு ஆணின் சுகத்தை மட்டும் அனுபவித்து கொண்டோ அவனுக்கு சுகம் கொடுக்கும் வெறும் ஒரு போகப் பொருளாகவோ பெண் இருக்க வேண்டியதில்லை என்ற சிந்தனை இங்கு வெளிநாடுகளில் இருக்கின்ற இளம் தமிழ் பெண்களுக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்துவிட்டது. ஆகவே சுதந்திரமான யாரும் தலையிடாத வாழ்வு தொடர்பாக சிந்திக்கிறார்கள். இந்தச் சுதந்திரத்திற்கு கலியாணம் ஒரு தடையாக இருக்கக் கூடாது என்று நினைக் கிறார்கள்.

கலியாணத்தை அவசரப்பட்டு முடித்தபிறகு தான் பிரச்சினைகள் வருகின்றன. சுற்றி இருக்கும் தமிழ் ஆட்கள் ஒவ்வொருவரும் இந்தக் குடும்பம் எப்படிப் போகிறது. மற்றவர்கள்போல அவர்கள் வாழுகிறார்களா. நல்ல வசதியா? அண்ணன் தம்பி பிரச்சினைகள், சிலநேரங்களில் லண்டன் போன்ற இடங்களில் ஒரே வீட்டுக்குள் வாழும் போதும் கூட்டுக் குடும்பப் பிரச்சினைகள் தலை தூக்குகின்றன. மாமன் மாமி பிரச்சினைகள்; எமது தமிழ்க் கலாச்சாரத்துக்கே உரித்தான பல சிக்கல்கள் கலியாணம் முடித்தால் பிறகு தலை தூக்கு கின்றன. இவையெல்லாம் இந்த அவசர உலகில் தேவையில் லாத சிக்கல் என்றே தமிழ் இளைஞர்களும் யுவதிகளும் பார்க்கிறார்கள்.

ஊரில் இருக்கும்போது கணவன் மனைவிக்கிடையில் பிரச்சனை வந்தால் மனைவி கோபித்துக்கொண்டு தாய் வீட்டில் போய் இருந்து விடுவா. அதற்கு பிறகு கோபம் ஆறிய பிறகு கணவன் போய் மனைவியை கூட்டிக்கொண்டு வருவார். அல்லது மனைவி கணவரை தேடி வருவார். அடுத்த பிரச்சனை வரும் வரை இருவரும் தேனும் பாலும் போல ஒட்டிக்கொள்வார்கள். இங்குத் தன்னையே பார்க்க முடியாத அவசர வாழ்வில் இந்த ஊடலுக்கெல்லாம் நேரமில்லை.

ஈகோ வந்து விட்டால் அதைப் போக்க ஒரேயடியாக விவாகரத்தில் வந்துதான் விசயம் நிற்கும். கவுன்ஸிலிங் என்பது எவ்வளவு தூரம் ஒவ்வொரு மனிதருக்கும் பிரயோசனமாக இருக்கும். எதிர்காலத்தில் எமது பரம்பரை கலியாணம் மீது நம்பிக்கையே இல்லாமல் போய் விடுமா? இது பெரும் ஆபத்தான ஒரு போக்காக வெளிநாடுகளில் இருக்கிறது. அதனை இல்லாமலாக்குவது என்பது இனி முடியாத காரியம் வாழ்வு எப்படி இருக்கிறதோ அப்பிடியே இந்த வெளி நாடுகளில் வாழ்ந்து தொலைத்துவிட வேண்டியதுதான் என்றார் எனது நண்பர் ஒருவர். அதுவும் சரிதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் காதல்

எனது நண்பன் ஒருவனின் முதல் காதல் ஒரு ஆஸ்பத்திரியில் முளைத்தது. அந்த நேரம் எங்கள் ஊர் கிராம ஆஸ்பத்திரியில்தான் அந்தக் காதல் வளர்ந்தது. ஆஸ்பத்திரிக்கு அவன் காய்ச்சலுக்கு மருந்து எடுக்கப் போயிருக்கிறான். இது 25 வருஷத்துக்கு முந்தைய கதை.

மருந்தெடுக்க வரிசையில் நிற்கும்போதுதான் அவள் வந்து தனக்கு முன்னால் நிற்பதை கண்டிருக்கிறான். இத்தனைக்கும் இருவரும் ஒரே பள்ளிக்கூடம். ஒரே வகுப்பு. ஆனால் அன்றுதான் அவளின் பார்வையால் அவனுக்குள் பல்ப் எரிந்திருந்தது.

இவ்வளவு நாளும் அந்தப் பல்ப் எரியாமலேயே கிடந்திருக்கிறது. காதலாகக் கசிந்து இப்பொழுது ஊருக்கெல்லாம் தெரிந்துவிட்டது. அவளின் பெயர் பாடசாலையில் அவனுக்குப் பட்டப்பெயர் ஆனது.

அவளின் பெயரைப் பட்டப்பெயராக சொன்னாலே அவன் மகிழ்ந்து போகின்ற வயது. வயல்வெளிகள், பத்தைகள், மூடிய ஆஸ்பத்திரி என்று அவர்கள் சுற்றித் திரிந்தார்கள்.

ஒருநாள் மாரி காலத்தில் மழை பெரு மழையாய் பெய்துகொண்டிருந்தது. அவனும் அவளும் மாலை நேரம் யாருமில்லாத ஆஸ்பத்திரியில் ஒன்றாக இருந்து காதல் செய்தபொழுது ஆனந்தன் கண்டுவிட்டுப் போய் பிரின்ஸிப்பலிடம் சொல்லிவிட்டான். பிரின்ஸிப்பல் எனது நண்பனைக் கூப்பிட்டு அடிக்கவெல்லாம் இல்லை. புத்திமதி சொன்னார். "நீங்கள் காதலியுங்கள் படித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முடித்து விட்டு." இதுதான் அந்த நேரத்தில் எல்லா அதிபர்களின் புத்திமதியாக இருக்கும். சில அதிபர்மார் அடித்து நொறுக்கி விடுவார்கள். அடித்து நொறுக்கும் அதிபர்மாருக்கு. காதல் காமத்தை போன்றது. அதற்கு பிறகும் அவர்கள் காதலித்தார்கள். கல்யாணம் செய்வோம் என்று ஒற்றைக் காலில் நின்றார்கள். விதி அவர்களைப் பிரித்துவிட்டது. இப்பொழுது அவன் லண்டனில் இருக்கிறான். அவன் காதலி ஊரில் பிள்ளை குட்டிகளோடு இருப்பாள் என்று நினைக்கிறேன்.

பாடசாலை காதலை ஒரு இன்பக்சுவேசன் என்று விட்டு ஒவ்வொரு பெரியவர்களும் ஒதுக்கி வைத்து விடுவார்கள். ஆனால் அதற்கும் மீறி என்னவொன்றோ இருந்து கொண்டு தான் இருக்கிறது.

என் மனைவிக்குத் தெரிந்த ஒரு பெண்மணியின் பிள்ளை இப்பொழுது 13 வயது பெண்பிள்ளை. வடிவான பிள்ளை. ஊரில் யாரோ ஒரு பெடியனுக்குக் காதல் கடிதம் கொடுத்து விட்டது என்று இங்கு லண்டனில் இருந்து கொண்டு மனுசி பதறிக் கொண்டிருக்கிறது. யாரோ ஒருவரின் பிள்ளைக்குக் காதல் என் மனைவி பதறுகிறது. அது ஊரில் நடந்தது. இதுக்குப் பல ஆயிரம் மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு ஏன் பதறிக்கொண்டிருக்கிறாய். என்றால், "சும்மா இருங்கோ. அது உங்களுக்கு தெரியாது" என்று என்னை அதட்டுகிறது. காதல் என்றவுடன் பல்லாயிரம் மைல்களைக் கடந்தும் ஒரு பதற்றம் ஏற்படத்தான் செய்கிறது.

இரண்டு மாதங்களுக்கு முன்பு எனது முதல் காதலிக்குத் தெரிந்த ஒருவர் – அவர் எனக்கு மேல் வகுப்பு படித்த பொடியன், இப்ப பொடியன் இல்லை. மனுசன். 50 வயது இருக்கும் – ஊரில் உள்ள எனது முதல் காதலியின் போன் நம்பரை வீட்டு ரெலிபோனின் வொய்ஸ் மெயில் பொக்ஸில் பதிந்து வைத்திருந்தார். அதைக் கேட்டு என்ரை மனுசி சன்னதம் ஆடத் தொடங்கி விட்டது. இப்ப எனக்கும் வயசாகி விட்டது. மனுசிக்கும் வயசாகிவிட்டது. எனக்கு வாசிப்பு எழுத்து என் வேலைப்பளு. காதல் பற்றி யோசிக்க எனக்கு நேரமில்லை.

உண்மையில் கலியாணம் முடித்த பிறகு மனைவிமாருக்குப் பிடிக்காத வார்த்தை என்றால் கணவன்மாரின் காதலிகளின் பெயர்தான். அதில் ஒன்றுமே இருக்காது. உண்மையில் அதை நானே மறந்துவிட்டேன். "என்னத்துக்கு இப்ப அவவின்ரை போன் நம்பர்? என்ன தொடர்பை ஏற்படுத்தவோ?" என்று மனுசி வேப்பிலையை கையிலெடுக்காத குறை. நான் அமைதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாக இருந்தேன். நானும் பேசினால் விசயம் பெரிசாகிவிடும். அமைதிதானே கணவன்மாரின் ஆயுதம்.

நான் எட்டாம் வகுப்பு படிக்கும்போது ஒருநாள் என்னத்துக்கோ போட்டோகிராபர் பள்ளிக்கூடத்துக்கு வந்தார். ஏதாவது ஒன்றுக்கு இடைக்கிடை புகைப்படம் எடுக்கிறவர் வருவார்தானே, அப்படி வந்தார். அப்போ அவரின் வேலைகள் முடிந்தப் பிறகு யாராவது போட்டோ எடுக்கப் போகிறீர்களா என்று வழமைபோல அவர் கேட்க, நாங்கள் வகுப்பில் உள்ள நண்பர்கள் கூட்டமாக நின்று போட்டோ எடுத்தோம். அதேபோல எங்கள் வகுப்பு பெண் பிள்ளைகளும் போட்டோ எடுத்தார்கள்.

இரண்டு கிழமைக்கு பிறகு போட்டோவை எடுத்தவர் வந்து பள்ளிக்கூடத்தில் தந்தார். போட்டோக்களைப் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதுதான் எனக்கு போட்டோவில் இருக்கிற ஒரு பிள்ளைமீது காதல் வந்தது. ஒரு 'கிளிக்.' பார்த்த வுடன் அது காதல்தான்.

அந்தக் காதலுக்காகப் பிறகு பட்டபாடு கொஞ்ச நஞ்ச மல்ல. அப்ப இருந்தது. ஒரு போட்டோதான். கூட்டமாய் நின்ற ஐந்தாறு பெண் பிள்ளைகளில் இவள் ஒருத்தியை எனக்குப் பிடித்தும் போக, அவளிடம் இருந்த போட்டோவை 'தா' என்று நான் ஒற்றைக் காலில் நிற்கிறேன். ஏன் என்று சொன்னால்தான் தனது போட்டோவை தருவேன் என்று அவள் அடம்பிடிக்கிறாள். "உன்னைக் காதலிக்கிறேன். அது தான் தா" என்று ஒரு வார்த்தை சொல்லி இருந்தால் அவள் வெட்கப்பட்டுத் தந்திருப்பாள்.

அப்படிச் சொல்ல தெரியவில்லை. "போட்டோவைத் தா" என்று வாங்கிக் கொண்டு போய் மற்ற பெட்டைகளை விட்டுவிட்டு அவளை மட்டும் தனியாக அதில் இருந்து வேறு ஒரு போட்டோ எடுக்க நான் பட்ட பாடு கொஞ்ச நஞ்சமல்ல.

"வீட்டிலை உள்ள நீ தனியா இருக்கும் போட்டோ ஒன்றைத் தா" என்று கேட்டிருந்தால் கொண்டுவந்து தந்திருப் பாள். இப்ப என்றால் "தா" என்று ஸ்கான் பண்ணிப்போட்டு கொடுத்திருக்கலாம். அந்தப் போட்டோவை முல்லைத் தீவுக்கு கொண்டு போய் ஸ்டுடியோ ஒன்றில் கொடுத்து அவளை மட்டும் தனியாக வேறு ஒரு போட்டோவாக எடுத்து யாருக்கும் தெரியாமல் புத்தகத்துக்குள் வைத்துக்கொண்டேன். இது பெரும்பாடு அந்தக் காலத்தில். நான் சொல்வது 88இல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குப் பிறகு கடிதங்கள் போக்கு வரத்துகள் என்று இரண்டு வருடக் காதல். இடையில் அவள் அழகாக இருந்த தால் இன்னும் பலர் காதலித்திருக்கிறார்கள். என்னிடம் ஒருவன் வில்லத்தனத்துடன் வந்தான். நான் அடிபாட்டுக்குப் போகாத ஒரு மனிசன்.

பிறகு அவள் வேறு பாடசாலை. நாங்கள் ஊரைவிட்டே போக வேண்டிய நிலமை. நாங்கள் என்றால் எனது வகுப்பு நண்பர்கள். இயக்கத்துக்கு ஆட்கள் சேர்க்க அதில் விருப்ப மில்லாமல் திக்கொன்றாய் திரிந்து அலையும்போது காதலும் கரைந்துவிட்டது.

சின்ன வயதில் ஒவ்வொருவருக்கும் வருகின்ற முதல் காதல் மனத்தில் பதிந்து போய்த்தானே இருக்கும். அண்மையில் எனது தொலைக்காட்சி நிகழ்ச்சிக்காக ஒரு முதியவர் வந் திருந்தார். எழுபது வயது. முந்தைய காலங்களில் ஒறேற்றர் சுப்ரமணியம் போன்றவர்களுடன் கட்சி வேலை செய்தவர். அந்தக் காலத்தில் கலப்பு காதல் கொண்டவர். யாழ்ப்பாணச் சாதி தடிப்புக்கு மத்தியில் கலப்பு திருமணம் என்பது எவ்வளவு கடுமையான விசயம் என்று அவர் சொல்லும் பொழுது தெரிந்தது.

சாதி குறைந்தவர்கள் எனப்படுகின்ற சமூகத்தில் இருந்து பெண்ணெடுத்த குற்றத்திற்காக ஊரை விட்டு விலக்கி வைத் திருந்ததைச் சொன்னார். ஆனால் எல்லாவற்றையும் எதிர்த்துப் போரிட்ட அவரது தைரியத்தையும் முதல் காதலையும் சொன்னார். அந்தப் பெண்மணியோடு இப்பொழுது லண்ட னில் இருக்கிறார்.

எல்லா முதல் காதலும் கலியாணம் வரை போகவில்லை ஒன்று இரண்டைத் தவிர. எனக்குத் தெரிந்த ஆமிக்காரர் ஒருவர் நேகமவில் இருக்கிறார். பௌசர் அவரின் பெயர். அப்ப வலு சிமாட்டான ஆள். ஆறாம் வகுப்பில் இருந்து காதலித்தவர் அந்தப் பெட்டையையே கலியாணம் முடித்து இப்ப பிள்ளை குட்டிகளோடு வாழுகிறார்.

இப்பொழுது எல்லாம் இங்குப் புலம்பெயர் நாடுகளில் காதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. மனம் ஒத்து என்பது வெறும் பேசாப் பொருளாக மாறிவிட்டது. இளம் பிள்ளைகள் காதலை ஒரு வேடிக்கையாகவே நினைக்கிறார்கள். இது சும்மா சொல்லவில்லை. நடைமுறையைப் பார்த்துதான் சொல்கிறேன்.

இறுக்கமான காதலர்கள் என்று நினைத்தவர்கள்கூட அடுத்த நாளே பிரிந்து போய் தனியாக நிற்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகர்ப்புறங்களில் காதலிப்பது என்பது செலவுக்கான பணம் கையிலிருக்கும் வரைதான். இங்குப் பாடசாலைகள், கொலேஜுகளில் காதல் அவரவர் பொக்கட் மணியிலேயே தங்கி இருக்கிறது.

காதல் என்பதும் பிரிவு என்பதும் எங்கள் கிராமங்களில் எவ்வளவு உணர்ச்சிபூர்வமானது. ஆனால் இங்குப் புலம்பெயர்நாடுகளில் ஒரு பொருட்டே இல்லை. காதலுக்கு எந்த முக்கியத்துவமும் இல்லாமல் போய்விட்டது.

ஒரு விசயம் தெரியுமா? அரபு நாடுகளில் ஆம்பிளைகளைப் பொம்பிளைகள் நம்புவதே இல்லை. அங்குத் திருமணம் முடித்த ஆண்கள்மீது அவரவர் மனைவிமார் தொடர்ந்து கண்ணோட்டம் விட்டபடியே இருப்பார்கள். ஏனெனில் அரபிகள் விளையாட்டில் விண்ணர்கள். எப்படியாவது வேறு பெண்களுடன் தொடர்புகளை வைத்திருப்பார்கள் என்ற சமுசியம் எப்பொழுதும் அரபி பெண்களுக்கு இருந்து கொண்டே இருக்கும்.

பேரீச்சம்பழம், பாதாம்பருப்பு, சீஸ், பால், பிஸ்தா, றொட்டி இவைதானே அவர்களின் உணவு. இவை சும்மா வைத்திருக்காது. கொண்டெழும்பியபடியே இருக்கும். எனவே அங்கு மனைவிமார் ஆண்களை நம்புவதே இல்லை.

அதற்கு என்ன செய்கிறார்கள் என்றால், கணவனுக்கு பேனா, உயர்ரக மூக்கு கண்ணாடி போன்றவற்றைப் பரிசாக கொடுப்பார்களாம். அவற்றில்தான் இருக்கிறது வில்லங்கம். அவற்றில் சிறிய ரக மைக்ரோ கமரா பொருத்தியிருக்குமாம். அவற்றில் இருந்து வருகிற படங்களை றைக்கோட் செய்யும் கருவிகளையும் சேர்த்தே கடையில் விற்கிறார்கள். புருஷன் எங்கே போகிறார் வருகிறார் என்பதைத் துல்லியமாகக் கண்டுபிடித்து விடுகிறார்கள் அரபு பெண்மணிகள்.

அரபு நாடுகளில் கலியாணம் முடிப்பதும் அவ்வளவு இலகுவான காரியமல்ல. அங்கு இஸ்லாமிய முறைப்படி பெண்ணுக்கு மஹர் கொடுக்கவேண்டும். மஹர் 10 ஒட்டகம், பெரியவீடு, பேரிச்சம் பழத்தோட்டம் என்று கேட்பார்கள் பெண்கள். அதனால் ஆண்கள் அரபு நாடுகளில் திருமணம் முடிக்கவும் யோசிக்கிறார்கள்.

உலகம் முழுவதும் காதலோ கலியாணமோ சிக்கலானது. ஏன் உங்கள் மனைவிமாரின் எக்ஸ்றா ஒரு கண் உங்கள்மீது எப்பொழுதும் விழுந்துகொண்டுதான் இருக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புருஷன்மார் என்ன செய்தாலும் அவர்களின் தடுமாற்றத்தில் அச்சொட்டாகக் கண்டுபிடிக்கும் கலை, உலகில் உள்ள எல்லா மனைவிகளிடத்திலும் இருக்கிறது. அது எல்லா புருஷன்மாருக்கும் தெரியும்.

வாழ்வுமீதான சுவை காதலின்தானே இருக்கிறது. உண்மைக் காதல் இன்னும் உலகத்தின் கிராமங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் இல்லையா?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முதல் ஒப்பிரேசன்

2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 15ஆம் திகதி எனக்கு இடது பக்க மூக்கை அறுத்து சுவாசக்குழாயைச் சீர் செய்ய வேண்டும் என்று காது மூக்குத் தொண்டை நிபுணர் முடிவெடுத்து விட்டார்.

ஒப்பிரேசனுக்கு திகதி குறித்தாகி விட்டது. ஒரு வாரத்துக்கு முன்னமே எனது வீட்டில் ஒப்பிரேசனுக்குத் தயாராகிவிட்டார்கள். வீட்டில் என்றால் நான் மனுசி, மகள், மகன் இந்த நான்கு பேரும்தான். அதில் மகனுக்கு என்ன நடந்தாலும் பிரச்சினையில்லை. அவன் தானுண்டு தன் பாடுண்டு என்று இருந்து விடுவான்.

இங்கு லண்டனில் எல்லோரும் தனித்தனியே எல்லாவற்றையும் அனுபவிக்க வேண்டியதுதான்.

எனக்கு ஒப்பிரேசன் என்றதும் மனைவி யோசித்துக் கொண்டே இருந்தது. முழுக்க மயக்க மருந்து கொடுத்து செய்கிற ஒப்பிரேசன் என்றவுடன் யோசனை கூடி விட்டது.

ஒப்பிரேசன் என்ற சொல் ஊரில் பெரிய சொல். தந்தி, அம்புலன்ஸ் வண்டி, ஆமி, பொலிஸ் போன்ற சொற்கள் இன்னும் பயத்தைத் தருவன.

அதனால் ஊரில் இருக்கும் அம்மாவுக்கு எனக்கு ஒப்பிரேசன் என்பதைச் சொல்லாமல் விட்டிருந்தேன்.

இடதுபக்க மூக்கடைப்பு குறட்டை போன்ற அவதிகளுக்கு இந்த ஒப்பிரேசன் நல்ல பலனைக் கொடுக்குமென்று எனது ஜி.பி (குடும்ப வைத்தியர்) சொல்லி ஆறுமாதங்களுக்கு முன்னர் சேர்ஜனுக்கு பரிந்துரைத்தது நேற்றுப்போலுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதே அவசரமாகத்தான் நடந்திருக்கிறது. அல்லது ஒரு வருடம்கூடக் காத்திருக்கும் நோயாளிகள் பட்டியல் நீண்டுகொண்டிருக்கிறது. எல்லாவற்றிலும் வெட்டு செய்திருக் கிற கமரூன் அரசு வைத்தியசாலைகளிலும் வேலை வெட்டை செய்திருக்கிறது. எனது அலுவலகத்தில் வேலை செய்யும் நண்பர் ஒருவர் நோய்வாய்ப்பட்ட தனது மகனை வைத்திய சாலைக்குக் கொண்டுபோய் ஏழு மணி நேரமாகக் காத் திருந்தார். பிறகு சண்டை பிடிக்க பரிசோதனைக்கு உள்ளே எடுத்தார்கள். இங்கு அவசர அம்புலன்ஸில் போகிறவர் களுக்குதான் முன்னுரிமை. அதனாலேயே பலர் குத்துது முறியுது என்று அம்புலன்ஸை வரவழைத்து போவார்கள்.

முதலில் மூக்கில் கமராவை நுழைத்துப்பார்த்த சேர்ஜன் எடுத்த முடிவுதான் இந்த ஒப்பிரேசன்.

அறுக்கிறதுக்கு முதல் மூன்று கிழமைக்கு முன்பு எனது உடல் நிலை முழு மயக்க நிலைக்கு போய் மீண்டுவர சரியாக இருக்குமா, எனப் பரிசோதித்தார்கள். எல்லாம் சரியாக இருந்தது.

ஆனால் இங்கு லண்டனில் எந்தக் கவனமும் இல்லாமல் உடல் உறுப்புகளை வெட்டி விட்டு நஷ்ட ஈடு கொடுத்துக் கொண்டே இருக்கின்றன வைத்தியசாலைகள்.

என்னுடைய நண்பர் ஒருவரின் மனைவியின் பிரசவத்தை பிழையாச்செய்து பிள்ளை செத்துப்போய்விட்டது. அண்மையில் தான் அவர் பெருந்தொகைப் பணத்தை நஷ்ட ஈடாக பெற்றுக் கொண்டார்.

மங்கையற்கரசி அமிர்தலிங்கத்துக்கு வயதான காலத்தில் கன்னத்தில் ஒரு கட்டியை அகற்றப்போய் நரம்பொன்று தறிபட்டு கன்னம் இழுத்து கோணலாகிவிட்டது. வெகு விரைவில் சரி வரும் என்று வைத்தியசாலை சொல்லியிருக் கிறது. மகனும் வைத்தியர்; மருமகளும் வைத்தியர். அவர்களும் ஒப்பிரேசனில் இப்பிடி நடக்க வாய்ப்பு இருக்கிறது என்று சொன்னார்கள்.

எனது அலுவலகத்தில் வேலை செய்யும் ஒரு பெண் மணியின் மாமனாரின் கொடுப்பு பல்லைப் பிழையாகப் பிடுங்கி வயதான காலத்தில் அவருக்கு வாயில் புற்று நோய் வந்துவிட்டது.

இந்த எல்லாத் தகவல்களையும் சுமந்து கொண்டுதான் எனது மூக்கை லண்டன் சேர்ஜனிடம் ஒப்படைக்க நான் தயாராகிவிட்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலை 7:30 மணிக்கு ஆஸ்பத்திரிக்கு வரச்சொன்னார்கள். நான் எதற்கும் நேரத்துக்கு நிற்பவன். "ஆட்கள் வரமுந்தி போய் அங்கை நில்லுங்கோ எல்லாத்துக்கும்" என்று மனைவி எனது நேரம் தவறாமையை திட்டியபடியே இருந்தாலும் நான் கடைப்பிடித்துக்கொண்டேதான் இருக்கிறேன்.

காலை 6:30 இற்கெல்லாம் மிடில் செக்ஸ் யுனிவர்சிட்டி ஹொஸ்பிட்டலுக்கு போய் விட்டேன். எல்லாம் பதிவுசெய்து உள்ளே எடுக்க 8:30 ஆகிவிட்டது. ஒப்பிறேசன், மரணத்துக்கும் வாழ்வுக்குமிடையில் இருக்கும் ஓர் அங்குல இடைவெளிதானே.

மரணமானால் எனது பிரேதத்தை அடையாளம் காண் பதற்காகக் கையிலும் காலிலும் எனது பெயரையும் பிறந்த திகதியையும் ஒரு பட்டியில் அச்சடித்து கழராமல் மணிக்கட்டில் ஒட்டிவைத்துவிட்டார்கள்.

ஒப்பிறேசனின் முதல் அனுபவம் வித்தியாசமாகத்தான் இருந்தது. எல்லா முதல் அனுபவங்களும் வித்தியாசமானதாக இருப்பதைப் போல முதல் காதல், முதல் மது, முதல் காமம், முதல் முத்தம். இது எனக்கு முதல் ஒப்பிறேசன்.

வைத்தியசாலை கவுண் வித்தியாசமாகப் பின்னால் திறந்தபடி இருந்தது. ஏ.சி அறையில் குளிர்ந்தது. அடிக்கடி ஒண்டுக்கு வந்தது.

முதல் வந்தவர் அனெஸ்தற்றிக் போடுபவர். அவர் மயக்க மருந்து பற்றி என்னோடு விலாவாரியாகப் பேசினார். நாங்கள் டாக்டரை நம்புகின்ற சாதி. எனக்குப் பக்கத்தில் கட்டிலில் இருந்த வெள்ளைக்காரர் எல்லாப் படிவத்திலும் ஜல்லோ பேப்பர் கொப்பி வேண்டும் என்று கேட்டது என் காதில் விழுந்தது. அவர் அடம் பிடித்துகொண்டிருந்தார்.

டாக்டர் என்ன சொன்னாலும் அதைத் திருப்பி கேள்வி கேட்கமாட்டோம். உண்மையில் அது ஒருவகையில் லேசுதான். அவர் தனது உத்தியோகச் சேவையில் எத்தனை பேரை மயக்கமாக்கி இருப்பார்?

'சிகரட் குடிப்பீங்களா?' என்று என்னை கேட்டார். நான் இல்லை என்றேன். அவரின் கையில் சிகரட்டின் மணம் குப்பென்று அடித்தது. இவர் சிகரட் குடித்துவிட்டு வந்திருக் கிறாரே என்று எனது மனம் எண்ணியது.

மயக்க மருந்தால் வரும் பக்க விளைவுகளை கட கட வென்று பள்ளிக்கூடப் பிள்ளைகள் பாடம் ஒப்புவிப்பதுபோல சொன்னார். அதில் லட்சத்தில் ஒருவருக்கு மரணம் சம்பவிக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாம் என்றார். அந்த லட்சத்தில் ஒருவராக நானும் இருக்கலாம் என்று நினைத்துக்கொண்டேன். அந்த லட்சத்தில் ஒருவருக்கு நரம்பு தளர்ச்சி வரலாம். கண் போகலாம் அல்லது மின்சாரம் தடைப்பட்டோ அல்லது வேறு விதத்திலோ இயந்திரங்கள் நிற்கலாம் இவ்வாறெல்லாம் சொல்லும்போது மரணத்தை நினைத்துக்கொண்டேன். ஒட்சிசன் மூடியை முகத்தில் வைத்துக்கொண்டு எத்தனைபேர் இழுத்துக்கொண்டு இருப்பதை எத்தனை தரம் பார்த்திருக்கிறேன். இப்பொழுது எனக்கான முறை.

மயக்க மருந்தை மூக்கில் வைத்து ஒட்சிசனைப் போல சுவாசிக்கச் சொன்னபோது கேட்டார் மருத்துவர் 'உங்களுக்கு பதற்றமாக இருக்கிறதா?' 'இல்லை முதன் முதலில் ஒப்பிறேசன் தியேட்டருக்கு வந்தது புதினமாக இருக்கிறது எனக்கு. நான் இதை அனுபவமாகக் காண்கிறேன்.' என்று சொன்னபோது அவர் கண்ணடித்ததுதான் நான் கண்ட கடைசி கண்ணடி காட்சி.

அதற்குப் பிறகு மூக்கை அறுத்து ஒட்டியதன் பின்பு கட்டிலில் போட்டபோதுதான் கண்விழித்து அருகில் நின்ற தாதியிடம் கேட்டேன், 'எத்தனை மணி நேர ஒப்பிறேசன்?' அவர் சொன்னா 'இரண்டே கால் மணி நேர ஒப்பிறேசன்.'

இங்கு லண்டனில் ஒப்பிறேசன் என்றாலே ஏதோ மரண வாசலுக்கு ஆஸ்பத்திரி கூப்பிடுகிறது என்றே எல்லோரும் பயந்து போய் இருக்கின்றனர். ஒப்பிறேசனைத் தவறுதலாகச் செய்து போடுவார்கள் என்ற பயத்தோடுதான் எல்லோரும் வைத்தியசாலைக்கு போகிறார்கள். எனக்கு மூக்கில் ஒப்பிறேசன் என்றவுடன் உனக்குத் தனியார் காப்புறுதி இருக்கிறதா என்று கேட்டார்கள். நீ தொலைக்காட்சியில் குரலை வைத்துப் பிழைப்பு நடத்துகிறவன். குரல் போனால் வாழ்வு போய்விடும் என்றெல்லாம் நண்பர்கள் பயப்படுத்தினார்கள்.

அறுவை சிகிச்சையில் வைத்தியர்கள் தவறுதலாக ஏதாவது செய்தால் வைத்தியசாலையிடமிருந்து இழப்பீட்டு தொகையை எப்படி பெறுவது என்பது தொடர்பாகவும் நோயாளிகள் யோசிப்பார்கள்.

நோ வின் நோ ஃபீ (வெற்றியின்றேல் கட்டணம் இல்லை) நிறுவனங்கள் சட்டத்தரணியை வைத்துக்கொண்டு இழப்பீடு களை பெற்றுக்கொடுக்கிறோம் என்று கடை விரித்திருப்பதும் இந்த லண்டனில்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை பிறக்கும்போது கவனக்குறைவான மரணம் சம்பவிக்கும் நாடுகளில் இங்கிலாந்தும் ஒன்று. இங்கு அதிக மான நஷ்ட ஈடுகள் கொடுக்கபடுகின்றன.

இடுப்பு அறுவை, காதுஅறுவை, இதயஅறுவை என்று பல சந்தர்ப்பங்களில் பிழைகள் நடந்துவிடுவதுமுண்டு.

எனது உயிர் சம்பந்தமாக ஒரு பிழையும் நடந்துவிடக் கூடாது என்று மனுசி பல நேர்த்திக்கடன்களை வைத்து விட்டது.

திருகோணமலையில் ஒரு ஆடு அறுத்து அதன் இறைச்சியை ஏழைகளுக்கு பங்கிட்டு கொடுக்க எற்பாடு, தொழுகை, குர்ஆன் ஓதுதல் என்று பலவகையான நேர்த்திக் கடன்களை மனைவி நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது.

மரணம் தொடர்பாக நான் எல்லாம் கடந்து விட்டேன். இப்பொழுதும் மரணத்துக்கு அண்மித்தே இருக்கிறேன் என்றே என்னை நினைத்துக்கொண்டு இருக்கிறேன். அந்த நினைப்பில் கொஞ்சம்கூடத் தடுமாற்றம் இல்லை. ஏதோ நடந்து திரிகிறோம். மரணமடைந்து விடுவோம். ஏதோ பேசிக்கொண்டிருக்கிறோம். மரணமடைந்து விடுவோம். எழுபது வயதிலும் வருகின்ற மரணம் நாற்பத்தைந்து வயதிலும் வரும்தானே. அதற்கு ஏன் என்னை நான் போட்டு அலட்டிக் கொள்ளவேண்டும் என்ற மனநிலைதான் இப்பொழுதும் எனது மனத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது.

மரணமடைந்தால் இங்கு லண்டனிலுள்ள ஏதாவது முஸ்லிம் குடும்பத்தினருக்கு மனுசி சொல்லும். அவர்கள் வந்து கண்ணைக் கசக்கி மூடி கைகளைக் கட்டி எனது மையத்தைப் பள்ளி வாசலக்குக் கொண்டுபோய் ஒஸ்ரலியி லுள்ள மைய வாடியில் அடக்கி விடுவார்கள் அவ்வளவுதான்.

ஆனால், எனது இறுதிச்சடங்கிற்கு இரண்டாயிரம் பவுண்கள் வேண்டும் இங்கு லண்டனில். கூடு விட்டு ஆவி கலைதல் அவ்வளவுதான். அதற்குப் பிறகு என்ன நடந்தால் என்ன, எனக்கு தெரியவா போகிறது? நான் தெரிந்தவர்கள் சொந்தம் என்று யாருக்குமே ஒப்பிறேசன் பற்றி சொல்லவே யில்லை.

அம்மா ஒப்பிறெசன் செய்த அன்று இலங்கையில் இருந்து தற்செயலாகப் போன் எடுத்திருக்கிறார். அப்போது மனுசி அம்மாவுக்கு விசயத்தைச் சொல்ல, அம்மா அங்கிருந்து ஒப்பாரி. தங்கச்சி என்னோடு பேசினால் அழுது விடுவாளாம் என்று என்னோடு பேசவேயில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருநாள் ஒப்பிறேசன்தானே. பகல் அறுத்து விட்டு மாலையில் வீட்டுக்கு அனுப்பி விடுவார்கள். இலங்கை போல நாள் கணக்கில் வைத்தியசாலையில் வைத்து மெனக் கெட மாட்டார்கள். ஊரில் தனியார் வைத்தியசாலைகளில் ஒரு வாரம் வைத்து இரண்டு லட்சம் கறந்து விட்டுத்தான் அனுப்புவார்கள்.

பகல் *12:15*இலிருந்து *2:15*வரை ஒப்பிறேசன். மாலை *2:30*இற்கு கிட்ட மயக்கம் தெளிவு. மாலை 7 மணிக்கு கத்தி வைத்த மூக்கை கட்டி இருந்த கட்டை அவிழ்ப்பது என்பது டாக்டரின் திட்டம். ஒரு நேர்ஸ். பார்த்தால் எங்களைப் போல் இருந்தார். அடிக்கடி வந்து வந்து பார்த்தார். கனிவாகப் பேசினார்.

ஊரில் உள்ள தாதிகள் எப்பொழுதும் 'வள், வள்' என்று நோயாளிகள்மீது விழுந்து கொண்டிருப்பார்கள். அவர்கள் நேர்ஸ் என்றால் குரைத்துக்கொண்டிருக்க வேண்டும் என்று நினைப்பார்கள்போல. பெயரென்ன என்று கேட்டேன். பாரதி என்றார். தமிழ்நாடு நேர்ஸ். இங்கு வந்த பத்து வருடமாம்.

அதற்கிடையில் எனது மூக்கு வெட்டிய தோற்றத்தைப் பக்கத்தில், கால் ஒப்பிறேசன் செய்து கிடந்த ஒருவரைக் கொண்டு அவரது ஐபோனில் படம் பிடிக்க வைத்து எனக்கு ஈமெயில் பண்ண வைத்தேன். விட்டால் அந்த படம் கிடைக்காது.

மாலையில் என்னை வீட்டுக்கு கூட்டிக்கொண்டு போக சாம், ரஜிதா வர 'ஐபோனில் படம் எடு, எடு" என்று எடுக்க வைத்தேன். ஏனெனில் இந்தப் புகைப்படங்கள் கிடைக்க நான் மீண்டும் மூக்கு ஒப்பிறேசனுக்கு வந்தால்தானே வரும்.

எவ்வளவு அருமையான தமிழ் நேர்ஸ் என்று அவளை பற்றி நானும் ரஜிதாவும் பேசிக்கொண்டிருக்க "வேலை வெறுத்துப் போச்சுது. கால்கடுக்க நிற்க வேண்டும், ஒவ்வொரு நோயாளியையும் பார்க்க வேண்டும் என்று அவ அலுத்துக் கொண்டபோது எனக்கு அவ பற்றிய மன எண்ணங்கள் உதிர்ந்துவிட்டன. நோயாளியைக் கனிவாகப் பார்க்கிற பாரதி நேர்ஸ் அந்த வேலையை மன விருப்பத்தோடு செய்யவில்லை என்பதுதான் எனக்குப் பெரும் அந்தரமாக இருந்தது.

சாம் சொன்னார், "ஆயிரம் தான் இருந்தாலும் ஜொப் சற்றிஸ்பக்ஸன் என்பது மிக முக்கியமானதொன்று. அது எங்களுக்கு இருக்கிறது. நாங்கள் எங்கள் வேலையை வெறுக்க வில்லை. வேலையை நான் எப்பொழுதும் நேசிக்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அது மீன் பிடிக்கும்போதும் இருந்தது, தெருத்தெருவாக தொலைபேசி அட்டை விற்கும்போதும் இருந்தது, மேசனுக்கு சீமெந்து குழைத்துகொடுக்கும்போதும் இருந்தது. பெற்றோல் ஸ்டேசனில் வேலை பார்க்கும்போதும் இருந்தது, தொலைக் காட்சியில் இருக்கும்போதும் இருக்கிறது.

இரண்டு மூக்கில் இருந்தும் கிடையாக ஆறு அங்குலம் நீளமான பெரிய துணியொன்றை மெது மெதுவாகப் பாரதி நேர்ஸ் வெளியில் எடுத்தார். ஒப்பிறேசன் போது ரத்தத்தை உறுஞ்சுவதற்காக உள்ளே வைத்ததாம். புண்ணை உரசிக் கொண்டு வந்தது. வலித்தது. வீட்டுக்கு வந்தால் மகள் கட்டிப் பிடித்து அழுதாள். நான் செத்துப்போனால், தான் என்ன செய்வது என்று நினைத்திருப்பாள்.

ஒப்பிறேசனுக்கு போகிறவர்கள் தொலைபேசி கொண்டு போகலாம் என்ற வீடயம் பிறகுதான் அவரவர் கையில் இருந்தபோது பார்த்தேன். தொலைபேசி கொண்டு போங்கள். அப்பொழுதுதான் கண் விழித்தபிறகு மனுசியோடு பேசலாம். மனுசிக்கு அப்பொழுதுதான் நிம்மதியாக இருக்கும்.

நான் கொண்டு போகவில்லை. அதனால் மனைவியும் மகளும் பயந்து விட்டார்கள். எனக்கு முதல் ஒப்பிறேசன் போல அவர்களுக்கும் லண்டனில் இது முதல் ஒப்பிறேசன். மயக்கம் தெளியவில்லையோ என்று மனைவியும் மகளும் பதறிவிட்டார்கள். மயக்கம் தெளியாவிட்டால் மரணமாமே. மனுசிதான் சொன்னது.

இப்பொழுது ஓய்வு. காலை எழுந்தவுடன் குளிப்பு பின்னர் சாப்பாடு, பின்னர் எழுதுவது, பின்னர் பகல் சாப்பாடு, பிறகு ஒரு மணிநேரம் தூக்கம், பிறகு வாசிப்பு, பிறகு எழுத்து. இரவு சாப்பாடு, பிறகு வாசிப்பு, பிறகு இரவு தூக்கம். இரண்டு கிழமையில் வேலை ஆரம்பம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது பள்ளிப்பராயம்

எப்பொழுதும் எங்கள் நினைவுகளுக்குள்ளே சுற்றிச் சுழன்றுகொண்டிருப்பது எங்களது பள்ளிக்கூட நாட்கள்தாம். அதற்குப் பிறகு அவ்வளவு மனம் நிறைந்த நாட்களை நாங்கள் காண்பது அரிது. ஐந்து வயதில் இருந்து பதினாறு வயதுவரை புத்தி தெரிந்த பருவவயது நடக்கின்ற பருவம் உலகத்தை மகிழ்வான ஒன்றாகவே பார்க்க மட்டும் தெரிந்த காலம் அது.

துன்பம் என்பது என்ன? அந்தக் காலத்தில் சந்தோஷம், சந்தோஷம் மட்டும்தான். ஐந்து வயதில் எனது முதல் அரிவரி பாடசாலை கருவேலன் கண்டல் அ.த.க பாடசாலை. பெரியவர்களானபோது அ.த.க என்பதை நினைக்கும்போது சிரிப்பு வருகிறது.

ஆனால் எனது தமிழுக்கு கருவேலன்கண்டல் பள்ளிக்கூடம்தான் துணையாக இருந்திருக்கிறது. பிரமிப்புடன் நினைக்கிறேன். குமாரசாமி வாத்தியார் எனக்கு அரிசியில் "ஆனா" எழுத வைத்தார். இன்று வரை தொடர்ந்து நான் எழுதிக்கொண்டே இருக்கிறேன். அந்த "ஆனா" தானே முதல் எழுத்து. குமாரசாமி வாத்தியார் நல்ல சிவலை நிறமுடையவர். வேட்டியும் ஷேட்டும் போட்டிருப்பார். முள்ளியவளையில் இருந்து காலையில் பஸ்ஸில் வந்து இறங்குவார். அவரோடு வாத்தி அக்கா ஒருவரும் இருந்தார் அந்த ஆரம்ப பாடசாலையில். முதலாம் வகுப்பில் இருந்து ஐந்தாம் வகுப்புவரை அதுதான் எனது பாடசாலை.

பிறகு கருவேலன்கண்டல் பாடசாலைக்கு தில்லையம்பலம் வாத்தியார், சந்திரசேகரி வாத்தியார் இருவரும் ஒட்டு சுட்டானில் இருந்து சைக்கிளில் வருவார்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருவேலன் கண்டலுக்கு தில்லையம்பலம் வாத்தியார் வருகிறார் என்றதும் எங்கள் ஊர் கிராம பள்ளிக்கூட மாணவர்களுக்கு எந்தக் கேட்டுக் கேள்வியும் இல்லாமல் அவரது அடிதான் ஞாபகத்துக்கு வரும். அவரைப் பற்றி யாரைக் கேட்டாலும் சொல்லுகின்ற முதல் விடயம் இதுதான். அவரை இங்கு லண்டனில் வைத்துச் சந்தித்த பொழுதுகூட அவரைப் பார்க்கும் போது எனது முதல் நினைவில் வந்தது அவரது கன்னத்தைப் பொத்தின அறை.

எங்கள் கிராமங்களில் ஆசிரியர்கள் எப்போதும் கண்டிப் பானவர்களாகவே தங்களை வடிவமைத்துக் கொண்டிருப் பார்கள். ஏனெனில் இங்கு லண்டனில் பார்க்கிறோம் ஆசிரியர் களால் மாணவர்களைக் கண்டிக்க முடியது. மாணவர்களும் விட்டேத்தியாகத் திரிகிறார்கள்.

சந்திரசேகரி மாஸ்டரின் எழுத்துகள் எப்பொழுதும் அழகாக இருக்கும். தில்லையம்பலம் வாத்தியாரும் சந்திர சேகரி மாஸ்டரும் குமாரசாமி வாத்தியாரும் வாத்தி அக்காவும் எனக்குக் கற்பித்த தமிழ்தான் இன்று வரை என்னுடன் தொடர்ந்துகொண்டிருக்கிறது என்று மீண்டும் நம்புகிறேன்.

எனது வீட்டுக்கு முன்னால் தில்லையம்பலம் வாத்தியார் சைக்கிளில் ஒட்டு சுட்டானில் இருந்து வருவார். அப்பொழுது அவரை எதிர்பார்த்திருந்து அம்மா ஓடிவந்து றோட்டில் வைத்து மறித்து அவரின் சைக்கிள் பின் கரியரில் என்னை இருத்திவிடுவா. அவரின் சைக்கிள் சீற்றை பிடித்துக்கொண்டு அவரோடு பள்ளிக்கூடம் போனது இன்னும் மனத்துக்குள் கிடக்கிறது.

சுற்றிவர உள்ள எங்கள் (முந்தையன்கட்டு, சம்மளங்குளம், கற்சிலைமடு, கருவேலன் கண்டல், கூளாமுறிப்பு, சின்னத்தம்பி (வித்தியாலயம்) பாடசாலைகளில் இருந்து ஐந்தாம் வகுப்பு பாஸ் பண்ணியவர்கள் எல்லாம் வந்து சேர்ந்த இடம்தான் ஒட்டுசுட்டான் மகா வித்தியாலயம். எங்கள் பெரிய பாட சாலை. லண்டனில் வைத்து தயா எனக்கு எங்கள் பாடசாலை யின் புகைப்படத்தை அனுப்பி வைத்தபோது அந்த முற்றத்தில் நானும் நண்பர்களும் ஐந்து வருடங்கள் ஓடி விளையாடிய மகிழ்ந்து பேசிய, கோபப்பட்டு ஒதுங்கிய எல்லா நினைவுகளும் வந்துவந்து போயின.

மனதுக்குள் எத்தனை நினைவுகள்! ஆறாம் வகுப்பிற்கு புதிய பள்ளிக்கூடம் என்று வந்து நின்றுபோது புதிய உணர்வுகள் கிளர்ச்சி மனத்தில் வருமே அது வந்தது. எல்லாம் புதிய முகம்கள். கண்காணாதவர்களை எல்லாம் கலந்து பிரித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டிருந்தார்கள். '6பி' வகுப்பில் நான் போய்ச் சேர்ந்தேன். முப்பது வருடங்களுக்கு முந்தைய கதை இது.

சுந்தரலிங்கம், மதியழகன், ரமேஸ், மகேந்திரன் கேதீஸ்வரி, மோகனவதனி, சிங்கன், வேகாவனம், கரீந்திரன் பத்மநாதன், மங்களேஸ்வரி, சிவநாயகம், உருத்திரகுமாரன், முகுந்தன், தங்கராணி, சொர்ணம். எங்கள் வகுப்பு தோழர் தோழியரில் 30 வருட நினைவில் தப்பிப் போனவர்களும் இருந்திருப்பார்கள். ஐயாத்துரை மாஸ்டர் ஓவிய ஆசிரியர். அவர்தான் எங்கள் பாடசாலை பெருங்கதவில் "கதவை சார்த்தி விடவும்" என்று வெள்ளை எழுத்தால் எழுதி வைத்தவர். ஓவியத்தில் அவரிடம் நிறைய படித்திருக்கலாம். ஓவியம் அந்த நேரம் எனக்குப் பிடிபடவே இல்லை. அது விடுபட்டுப் போய்விட்டது. இப்போது ஆசையாக இருக்கிறது.

அன்றில் இருந்து இன்றுவரை மனத்தில் எனக்கு ஓடிக்கொண்டே இருந்த விடயம் ஒலிவாங்கியில் அறிவித்தல். உண்மையில் இந்த ஆர்வம் எப்படி எனக்கு வந்தது? என்று இன்னும் நினைத்துப் பார்க்கிறேன். பிடிபடவே இல்லை.

ஆறாம் வகுப்பில் புதிய பள்ளிக்கூடம் பழகிய பிறகு இலக்கிய மன்றத்தில் ஏதாவது ஒன்றை வாசித்துக் கொண்டிருப்பேன். எனது நண்பர்கள் எல்லோருக்கும் தெரியும். பாடசாலை விளையாட்டு விழாக்கள், சைக்கிள் ஓட்டப் போட்டி என்று ஒரு சில சந்தர்ப்பங்கள்தாம் கிடைக்கும் ஒலிவாங்கியை பிடிப்பதற்கு.

ஒட்டுசுட்டானில் அற்புதராசா என்ற அறிவிப்பாளர்தான் எல்லாவற்றிற்கும் வருவார். அவர் ஒலிவாங்கியை ஆசைப் படுகிற எங்களைப் போல் சிறுவர்களுக்கு எல்லாம் கொடுக்க மாட்டார். தானே வைத்திருப்பார். பாடசாலை பேச்சு போட்டிகளில் பெரும் போட்டியாளர்கள் எங்களுடைய வயதில் என்றால் நானும் உருத்திரகுமாரனும்தான் எனது நினைவுக்கு வருகிறது.

கடைசியாய் மிக முக்கியமான ஒரு போட்டி. எங்கள் பிரார்த்தனைக் கூடத்தில் ஆசிரியர்கள் மாணவர்கள் அதிபரும் எல்லோரும் கூடி இருக்க நானும் உருத்திர குமாரனும் பேசுகிறோம். மகாலிங்கம் சேர் எழுதித்தந்த 'கூட்டுறவுக் கொள்கைகளும் நடைமுறைகளும்' எனும் தலைப்பில் முல்லைத் தீவுக்கு போய் பேச வேண்டும். மாவட்ட மட்டத்தில் போவதற்கு எங்கள் பிரார்த்தனை மண்டபத்தில் வைத்து அதிபரும் ஆசிரியர்களும் என்னைத் தெரிவு செய்தார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருத்திரகுமாரன்தான் தெரிவு செய்யப்படுவான் என்று நான் நினைத்திருந்தேன். முல்லைத்தீவு மாவட்டத்தில் போய் முதலாமிடம் பெற்றேன். கை நிறைய மகாபாரதம் பத்து பாகங்களைத் தூக்கித் தந்தார்கள் பரிசாக. மகாலிங்கம் மாஸ்டர் தமிழ் படிப்பித்த நேரம் நன்றாகத்தான் இருந்தது. இன்னும் சுந்தரகாண்டப் பாடல்கள் மனப்பாடமாக இருப்பதற்கு அவர்தான் காரணம்.

மு.க. முருக சூரியன் மாஸ்டர் பெரிய அறிவாளி அந்த நேரம் வெள்ளை வேட்டி நஷனல் வெள்ளை சால்வையில் பட்டுக் கரை இருக்கும். சால்வையைத் தோளில் அணிந்து கொண்டு வருவார். அவர் ஒரு தமிழ்க் கவிஞர் என்பதே நான் எழுத தொடங்கிய பிறகுதான் எனக்குத் தெரிந்தது. வெண்பாமணி மு.க. முருகசூரியன் மாஸ்டரின் மருமகன் பிற்காலத்தில் நான் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் நிகழ்ச்சி செய்யப் போனபோது எனது தயாரிப்பாளர் உருத்திர பூபதி என்பது எனக்கு மிக்க மகிழ்ச்சியாக இருந்த தருணமது. சுவேந்திரா ரீச்சரின் கணிதம் எங்களுக்கு விளங்காமல் விட்டா லும் அவ ஒரு நல்ல மனுசி.

பாமா ரீச்சரை சொல்ல வேண்டாம். அவமாதிரி ஒரு அமைதியான பெண்மணியை உலகத்தில் நான் காணவே யில்லை. அவரது கணவன் எங்கள் ஊர் விதானையார் ராமநாதன். உண்மையில் விதானைக்கு மிகவும் பொருத்தமான படித்த மனிதர். அவரது மீசைக்கு நான் மிகவும் அஞ்சியிருக் கிறேன். ராமநாதன் விதானையார் எங்கள் ஊருக்கு வருகிறார் என்றால் நான் சுண்டங்காட்டுக்குள் ஓடி ஒழிந்திருக்கிறேன். எங்கள் கிராமத்தின் பாடசாலைக்கு கல்வியூட்ட வந்த ஆசிரியர் களில் சபாரத்தினம் ரீச்சர், குலநாயகம் ரீச்சர், ரஞ்சினி ரீச்சர், நிலா ரீச்சர், மரதன் ஓட்ட மாஸ்டர், அதிபர் என்று இன்னும் நினைவில் நிற்கிறார்கள்.

சபாரத்தினம் ரீச்சரின் புருஷன் திருமணம் முடித்து கொஞ்சக் காலத்தில் காணாமல் போய் விட்டார். கொழும்புக் குப் போனவர் காணாமலே போய்விட்டார். பெரும் கவலை யோடு அவர் இருந்தார். ஆசிரியர் விடுதிகளோடு ஓர் அருமை யான பாடசாலை சூழல் அது. பக்கத்தில் தபால் நிலையம், வைத்திய சாலை, முல்லைத்தீவு மாங்குளம் றோட் என்று என்ன கலகலப்பு. எப்பொழுதும் இல்ல விளையாட்டுப் போட்டியில் எங்கள் 'நீலாம்பரம்' இல்லம் தான் தோற்றுப் போகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒருமுறை அணிவகுப்பில் எங்கள் இல்லம் வந்தது முதலாவதாக. ஏனெனில் மகாலிங்கம் மாஸ்டர் எங்கள் அணிவகுப்புக்குச் சொல்லித் தந்தார் ஓர் உத்தி. பெறுமான புள்ளி போடுகின்றவர்கள் எங்கள் அணிவகுப்பை பார்த்துக் கொண்டிருக்கும்போது அவர்களைக் கடந்து போகும் நேரத்தில் கொடியைத் தாழ்த்தி வலப்பக்கம் திரும்பி விறைப்பாக நடந்து போகவேண்டும். நாங்களும் அப்படிச் செய்தோம் அந்த வருடம் எங்களுக்கு அணிவகுப்பில் முதலிடம். மற்றபடி வழமைபோல 'செவ்வந்தி' இல்லம் தான் முதலாம் இடம்.

இல்ல விளையாட்டுப் போட்டிகளில் நான் ஒருமுறை நூறு மீட்டர் ஓடி நான்காவது. உயரம் பாய்தல், நீளம் பாய்தல் வரவே வராது எனக்கு. வெறுமனே ஒலிவாங்கி, படிப்பு பற்றிய சிந்தனை மட்டும் என்னுள் இருந்தது. எங்கள் கிராமத்தை அடியோடு பெயர்க்க வைத்த, எங்கள் வீடுகளை இடித்தழித்த, எங்கள் சந்தோஷங்களை கொன்றொழித்த கொடூர யுத்தத்தை இன்னும் நான் சபித்துக் கொண்டே இருக்கிறேன்.

யுத்தம் ஒரு காட்டேறியைப் போல எனது பாடசாலை, எனது கிராமம், எனது மக்கள் எல்லோரையும் அள்ளிக் கொண்டு போய்விட்டது. 1980களில் எல்லாம் எமது வன்னிக் கிராமங்கள் எவ்வளவு சந்தோஷமாகக் கிடந்தன. எமது பாடசாலையைச் சுற்றிய கிராமங்கள் எல்லாம் என்ன குதூகல மாக கிடந்தன. முத்தையன் கட்டுக் குளம், புளியங்குளம், ஒட்டுசுட்டான் சந்தி, கற்சிலைமடு, சம்மளங்குளம் என்று எங்கள் கிராமங்களில் மகிழ்ச்சி மட்டும்தானே இருந்தது.

எமது மக்கள், எமது பாடசாலை, எமது பள்ளித் தோழர் களை எல்லாம் தொலைத்தோம். காவு கொடுத்தோம். ஒன்றில் யுத்தத்திற்கு அல்லது அகதியாய். எனது பள்ளித் தோழர்கள் எல்லாம் திக்கொன்றாகப் போனோம். சிலர் இயக்கங்களுக்குப் போய் ஆமி சுட்டு செத்துப் போனார்கள். சிலர் வெளிநாடு களில் இருக்கிறார்கள். என்ன ஆனார்களோ என்று தெரியாமல் தொலைந்து போனவர்கள் என்று எத்தனைபேர். இந்த முப்பது வருடம் எமது கிராமங்களில் இருந்து எம்மை பெயர்த்துப் போட்டுவிட்டது. இன்றைக்கு சுந்தரலிங்கம், மகேந்திரனை தவிர எனது வகுப்புத் தோழர்களோடு எந்தத் தொடர்பு இல்லாமல் இருக்கிறது. இடைக்கிடை சிவா கதைப்பான்.

எங்களுடைய அதிபரை எங்களுடைய தில்லையம்பலம், வாத்தியாரை அவர்களது மனைவியரை, லண்டனில் எங்க ளுடைய பாடசாலை மாணவர்கள் ஒன்று சேர்ந்து சந்தித்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போது தொலைந்துபோன பெற்றோரைக் கண்ட பூரிப்பு தெரிந்தது. என்னில் எங்களைப் பத்து வருடம் என்று வளர்த்தெடுத்தவர் தில்லையம்பலம் வாத்தியார். ஐந்து வருடம் வளர்த்தவர் ஆறுமுகம் அதிபர். எங்களது பிள்ளைகளுக்கு இதுதான் எங்கள் ஆரம்ப பாடசாலை என்று கொண்டு போய் காட்ட வேண்டும். அவர்கள் பூரிக்கிறார்களோ இல்லையோ வயதான எங்களுக்கு பூரிப்பாக இருக்கும் எங்கள் பிள்ளைகள் பார்த்துவிட்டார்களே என்று.

அந்தக் காலத்தில் எங்கள் ஆசிரியர்களுக்கு எப்படிப்பட்ட மரியாதை கொடுத்தோம்? அவர்கள் நடந்து வரும்போது எங்கள் சைக்கிள்களில் இருந்து இறங்கி விடுவோம். இங்கு லண்டனில் எங்கள் பிள்ளைகள் அவர்களின் ஆசிரியர்களைப் பெயரைச் சொல்லி கூப்பிடும் பொழுது உண்மையில் நான் கூசிப்போகிறேன். எங்கள் பாடசாலை மேடையில் எல்லா நெருக்கடியில் இருந்தும் தப்பி இருக்கின்ற எங்கள் வயதான ஆசிரியர்களை எல்லோரையும் கூப்பிட்டு இன்னும் மிஞ்சி இருக்கிற முப்பது வருடத்துக்கு முந்தைய எங்கள் பள்ளித் தோழர்களை எல்லாம் அழைத்து வாரி அணைத்து அன்பாய் மகிழ்ந்து கண்ணீர் சொரிய வேண்டும்போல் இருக்கிறது. பேராசையாய் இருக்கிறது மனத்தில்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் கலியாணம்

கடந்த வாரம் இங்கு ஹரோவில் உள்ள நண்பர் ஒருவரின் வீட்டுக்குப் போயிருந்தேன். அங்கு இலங்கை யில் இருந்து வந்த மௌலவி ஒருவர் இருந்தார். இவர் இரண்டு திருமணம் முடித்தவர் என்று அறிமுகப்படுத்தி னார் நண்பர்.

உண்மையில் இரண்டாம் கலியாணம் என்பது சொல்வதற்கு இலகு. ஆனால் கட்டிப்பாத்தாத்தான் தெரியும் அதன் விசயம். நான்கு கலியாணம் முடிக்கலாம் உங்களுக்கென்ன என்று பல நண்பர்கள் என்னிடமே சொல்யிருக்கிறார்கள். பொதுவான சட்டத்தில் இட மில்லையே என்பது பல தமிழ் நண்பர்களின் ஆதங்கம், கவலை.

அழகான பெண்களைக் கண்டால் அவளை கல்யாணம் முடிப்பமோ என்று திருமணம் முடித்த ஆண்களுக்கும் மனத்தில் ஆசை வரும்தான். ஆனால் அது அவ்வளவு இலகுவான காரியம் அல்ல.

மலேசியாவில் பல பெண்களைத் திருமணம் முடித்த ஆண்கள் (முஸ்லிம்கள்) இருக்கிறார்கள். அவர்களில் பலரை நேரே கண்டிருக்கிறேன். அவர்கள் சுமூகமாகத் திருமணம் செய்திருக்கிறார்கள். முதலாவது மனைவியின் குடைச்சல் இல்லாமல் வாழ்கிறார்கள். அரபு நாடு களிலும் அந்த வழக்கம் இருக்கிறது. ஆபிரிக்க நாடுகளி லும் அந்த வழக்கத்தை கேள்விப்படுகிறோம். நாட்டு வழக்கம் அப்படி என்றால் நல்லதுதான். ஆனால் தமிழ்ப் பண்பாடு நிறைந்த நமது நாடுகளில் ஒருவன் ஒருத்தி என்ற விடயதானம் மேலோங்கி இருப்பதால் இன்னொரு கலியாணம் என்பது அவ்வளவு லேசுப்பட்ட விசயமல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்களை மனைவிமார் விட்டுகொடுக்கத் தயாராக இல்லை. அதனால் கணவன்மாருக்கான வாய்ப்பு தவறிப்போகிறது.

இலங்கையில் தப்லீக் ஜமாத்தில் போகிறவர்கள் நபிகளாரின் வழிமுறையை பின்பற்ற போகிறேன் என்று விட்டு வேறு பல நபிகளாரின் வழிமுறைகள் இருக்கும்போதும் முதலாவதாக இன்னொரு கலியாணம் முடிக்க போகிறேன் என்றுதான் ஒற்றைக்காலில் நிற்பார்கள், நிற்கிறார்கள். கண்டிருக்கிறேன்.

நபிகளாரின் வழிமுறைகளில் கொடுத்த வாக்கை நிறைவேற்றுவது, பொய் சொல்லாமை, பொறாமை கொள்ளாமை, ஹராமான உணவை உண்ணாமை, வட்டி வாங்காமை (வங்கியிலும்), கொடுக்காமை, மற்றவர்களை ஏமாற்றாமை, வியாபாரத்தில் திருட்டுத்தனம் செய்யாமை, நோயாளிகளை சென்று நலம் விசாரித்தல், பக்கத்து வீட்டாருக்கு உதவுதல், மையத்து தொழுகைக்கு செல்லல் என்று ஆயிரம் சொல்லிக் கொண்டு போகலாம். ஆனால் இவற்றையெல்லாவற்றையும் விட்டுவிட்டு இரண்டு கலியாணம் முடிப்பதில் தான் குறியாக இருப்பார்கள்.

கண்டியில் எனது நண்பர் ஒருவர் தனது மனைவிக்கு தெரியாமல் இரண்டாம் கலியாணத்தைத் தூர இடமொன்றில் செய்து விட்டார். அது மூத்த மனைவிக்கு தெரியவர வீட்டில் ஆரம்பித்தது பிரளயம். இருந்த நிம்மதியும் கெட்டுப்போய் பள்ளிவாசல்தான் அவரின் தங்குமிடமாயிற்று. நிம்மதியாக இருந்தவர் உள்ளதையும் கெடுத்துபோட்டு நிற்கிறார் என்று ஊரில் உள்ளவர்கள் பேசிக்கொண்டனர்.

இன்னுமொரு மௌலவி இருந்தார். அவர் ஒரு சிங்களப் பெண்ணை அதுவும் அவரது கடைக்கு சாமான் வாங்க வந்த பெண்ணை காதலித்து இரண்டாம் கலியாணம் செய்து கொண்டார். அவர் ஏற்கனவே கலியாணம் முடித்து பிள்ளைகளும் இருப்பது சிங்களப் பெண்ணுக்குத் தெரியும்.

இரண்டாம் திருமணம் செய்வது என்பது இஸ்லாம் மதத்தில் ஆகுமாக்கப்பட்டிருக்கிறது. ஆனால் ஒரு பெண்ணின் அழகைப் பார்ப்பது ஹராம். பார்த்து லவ் பண்ணுவது இன்னொரு ஹராம். இதுவெல்லாம் மௌலவிமாருக்கு தெரியாததல்ல. ஆனால் அவர் லவ் பண்ணி கலியாணம் முடித்தார். பிறகு இரண்டு மனைவிமாருக்கும் பிள்ளைகள் இருக்கின்றன. அவர் இரண்டாம் மனைவியை முதல் மனைவிக்குத் தெரியாமல்தான் வைத்து இருந்தார். இப்ப



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர் என்ன பாடுபடுகிறாரோ தெரியாது. நான் லண்டன் வந்ததன் பின்பு அவரைச் சந்திக்கவில்லை.

இரண்டாம் திருமணத்துக்கு முதல் மனைவியின் அனுமதி தேவையில்லை என்ற ஒரே ஒரு பகுதியை மட்டும் இஸ்லாத்தில் எடுத்துக்கொண்டு ஏனைய எல்லாவற்றையும் மறந்து விடுகின்றனர். இஸ்லாம் மதத்தில் பல தார மணத்துக்கு வரையறை விதிக்கப்பட்டிருக்கிறது. இஸ்லாம் மதத்தில் நான்கு கலியாணம் செய்து கொள்ள ஒரு ஆணுக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்தச் சட்டம் உலகம் முழுக்க இஸ்லாத்தில் பொதுச் சட்டமாக இருக்கிறது.

ஆனால் திருமணம் முடிக்கும் எல்லா பெண்களையும் சமமாக நடத்த வேண்டும் என்பது விதி. இரண்டு பெண்களை முடித்திருந்தால் இருவருக்கும் ஒரே விதமான பொருட்களை ஒரே அளவில், ஒரே தரத்தில் வாங்கி கொடுக்க வேண்டும். தரத்தில், அளவில் மாறுதல் ஏற்பட்டாலும் இறைவனின் கேள்விக்கு உள்ளாவார் என்று இஸ்லாம் கூறுகிறது.

அத்தோடு உடலுறவில் ஈடுபடுவது தொடர்பாகவும் நாட்களை பிரிக்கவேண்டும் என்று இருக்கிறது. பெரிய வேலை அது. சும்மா சாதாரணமாகச் சொல்லிவிட்டு போகிற விடயமல்ல இது.

"உங்களுக்கு பிடித்தமான பெண்களை இரண்டிரண்டாகவோ மும்மூன்றாகவோ நன்னான்காகவோ மணந்து கொள்ளுங்கள். ஆனால் நீங்கள் இவர்களிடையே நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே மணந்து கொள்ளுங்கள்" என்று குர்ஆன் மிகத் தெளிவாகவே சொல்கிறது.

நியாயமாக நடக்க வேண்டும் என்பது குர் ஆன் வலுக் கட்டாயமாகச் சொல்லும் கட்டளை. குர் ஆன் அருளப்படுவதற்கு முன்பு இஸ்லாம் மார்க்கத்தில் பல பெண்களுடன் உடலுறவு கொள்ளுதல் தடையில்லாமல் இருந்தது. பலதார மணம் என்பது ஒரு பிரச்சினையே இல்லை. யாரை வேண்டுமானாலும் யாரும் மணந்து கொள்ளலாம்.

தென்னாபிரிக்க அதிபர் சுமோ, ஆறாவது கலியாணத்தை அண்மையில் முடித்திருந்தார். அவர் முஸ்லிம் அல்லாதவர் ஆனால் அவரின் கோத்திரத்தில் பல பெண்களை மணம் முடித்திருந்தால்தான் கௌரவம்.

குர்ஆன் வந்த பிறகு இஸ்லாம் நான்கு பெண்களை மணம் முடிக்கலாம் என்று வரையறை வந்தது. ஆனால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த மனைவிகளிடத்தில் சமமான உரிமை பேணப்பட வேண்டும் என்ற விடயமும் கட்டாயமாக்கப்பட்டது.

"விசுவாசிகளே நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும் மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்த சாத்தியமாகாது" என்று குர் ஆன் எச்சரிக்கையும் விடுகிறது. இஸ்லாத்தில் பலதார மணம் ஒரு சாத்தியமே தவிர கட்டாயமானதல்ல. இதை ஆசைப்படுகின்ற ஆண்கள் தெரிந்து கொள்ளவேண்டும்.

பாலுறவு தொடர்பாக எந்தக் கட்டுப்பாட்டையும் இஸ்லாம் சொல்லவில்லை. மனைவி றொட்டி சுட்டுக்கொண் டிருந்தாலும் கணவன் பாலுறவுக்கு அழைத்தால் மனைவி அதை மறுக்கக் கூடாது என்று இஸ்லாம் சொல்கிறது.

மனைவியுடனான உற்சாக உறவுக்கு இஸ்லாம் மார்க்கத் தில் எந்தத் தடையுமில்லை. திருமணப் பந்தத்தை தாண்டிய பாலுறவு 'ஹராம்' அதாவது பெரும் பாவம்.

நபிகளார்கூட கணவன் மனைவியையோ அல்லது மனைவி கணவனையோ செக்ஸுக்காக நாடும்போது பாலுணர்வைக் கிளர்ந்து எழச்செய்யும் காம விளையாட்டுக் களில் நன்கு ஈடுபட்டு புணர்ச்சிக்கு ஒருவரை ஒருவர் தயார் செய்து கொள்ளவேண்டும் என்று ஊக்குவிக்கிறார் என்று நபித்தோழர்களும் தெரிவிக்கின்றனர்.

உடலுறவு விடயத்தில் மனைவியை கணவன் முழுமையாக சுகமடையச் செய்யவேண்டும். அதிலே குறைபாடு ஏற்படுவது வாழ்வைக் கசப்படைய செய்து விடும். ஏத்தனையோ குடும்பப் பிரச்சினைகள் கணவன் மனைவி தகராறு விவாகரத்து என்பவற்றுக்கு சரியான உடலுறவு இன்மை காரணம். மனைவியைக் கணவன் திருப்தி படுத்த வேண்டும். பாலியல் ரீதியான நல்ல சுகம் மனதுக்கும் உடலுக்கும் உற்சாகத்ததை வழங்குகிறது. இதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

"மனைவியை முத்தமிட்டு அவளைக் காம விளையாட்டுக் களில் ஈடுபடுத்தித் திருப்திப்படுத்தாதவன் நீசன் என்று ஒரு நபி மொழி சொல்கிறது." 'நீசன்' என்ற சொல் மிகவும் கேடு கெட்டவன் என்று பொருள்.

இந்தளவிற்குத் திருமண பந்தத்திற்கும் மனைவிக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது இஸ்லாம். தலாக் என்னும் விவாகரத்து எங்கு இலகுவாக நடைமுறைப்படுத்தப் படுகிறதோ அங்கு பலதார மணங்களும் இலகுவாக்கப்பட்டிருக்கும். ஆனால் தலாக் தொடர்பாக இஸ்லாமியரின் விளக்கம் குறைவாகவே இருக்கிறது. தங்களை அறிவாளிகள் என்று நினைப்பவர்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மார்க்கவாதிகள் என்று நினைத்து கொள்பவர்கள் 'தலாக்' என்ற ஒன்றைச் சொல்லி மனைவியைத் துன்புறுத்துகின்றனர்.

"அல்லாஹ் அனுமதித்தவற்றில் அல்லாஹ்வுக்கு மிகவும் வெறுப்பானது தலாக் (விவாகரத்து)"என்று நபிகளார் தெரிவிக் கிறார்கள். ஆகவே கருத்து ஒற்றுமையுடன் சேர்ந்து வாழ்தலையே இஸ்லாம் ஆதரிக்கிறது.

வாழ்க்கையில் பெரும் சிக்கல்கள் வரும்போதும் மார்க்க விடயங்களுக்காகவும் ஒரு ஆணை ஒரு பெண் விவாகரத்து செய்யலாம் என்று வழிமுறை இருக்கிறது.

கணவர் தொழாமல் இருப்பது, போதைப் பொருளைப் பயன்படுத்துவது, பாவமான காரியங்களைச் செய்ய நிர்பந்திப்பது, கடுமையாகத் துன்புறுத்துதல், அநீதம் செய்ய நிர்ப்பந்திப்பது, மார்க்க உரிமைகளைத் தர மறுப்பது, உடலுறவு செய்ய முடியாத கணவனின் நிலை, இயற்கைக்கு மாற்றமாக உடலுற வுக்கு மனைவியை நிர்ப்பந்திப்பது இவற்றில் இணைந்து வாழும் முயற்சிகள் பயனில்லை எனில் தன்னையும் தனது மார்க்கத்தை யும் காப்பாற்றிகொள்ள மனைவி கணவனிடம் தலாக் கோரலாம்.

இவ்வளவு விடயம் இருக்கிறது. எனவே பல பெண்களை மணப்பது என்பது அவரவர் வல்லமையை பொறுத்தது. கலியாணம் முடிக்கலாம், ஆனால் மிகவும் சிரமமானது.

முதல் மனைவியின் அனுமதியோடு அவளின் விருப்பத் தோடு இரண்டாம் கலியாணம் முடித்த ஒருவரை எனக்கு தெரியும். அவர் மட்டும்தான் எனக்கு தெரிந்து சிக்கல்படாமல் இருக்கிறார்.

முதல் மனைவிக்குத் தெரியாமல் ஆசைப்பட்டு முடித் தவர்கள் பலர் தலையைப் பிய்த்துக்கொண்டிருக்கின்றனர். அதில் பலர் பிரபல்யமான பணக்காரர்கள். பெரும் கஷ்டப் படுகின்றனர். புலிவாலைப் பிடித்த மாதிரி விட்டால் கடிக்கும். எத்தனை காலத்துக்குப் பிடித்துகொண்டிருப்பது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயந்த கராட்டி மாஸ்டர்

கடந்த மாதம் ஒரு கராட்டி மாஸ்டருடன் பேசிக் கொண்டிருந்தேன். கராட்டியின் பலன்கள். அது வெறும் கலையல்ல; மனத்தை ஒருங்கமைப்பது, ஆத்ம பலத்தைக் கொடுப்பது, மனத்தைத் திடமாக்குவது, உடலை உறுதி யாக்குவது, கவனத்தை ஒருங்கமைப்பது, படிக்க முடியாத பிள்ளைகளும் கராட்டி வகுப்புக்குப் போனால் அவர்கள் மன ஒருமையடைந்து கெட்டிக்காரராக வருவார்கள் என்றெல்லாம் பெருமையாகக் கராட்டியைப் பற்றி சொன்னார்.

“சரி, நல்ல விடயம். அப்போ வாருங்கள், நமது தொலைக்காட்சியில் நேரடி சந்திப்பு செய்வோம்” என்றேன். சரி என்று ஒப்புக்கொண்டார். இரண்டு கிழமைகளுக்கு பிறகு நேரடி சந்திப்பு நாளை மறுதினம் இருக்கிறது என்று நினைவூட்டுவதற்காக அவருக்கு ரெலிபோன் எடுத்தேன்.

“சந்திப்பை கான்சல் பண்ணுங்கோ” என்றார். “ஏன்” என்று கேட்டேன். “நேரடியாக தொலைக்காட்சி யில் தோன்ற பயமாக இருக்கிறது” என்றார் கராட்டி மாஸ்டர். எனக்குச் சிரிப்பு வந்தது. முதன் முதலில் கராட்டி மாஸ்டர் ‘பயம்’ என்று சொன்னது எனக்கு ஆச்சரியத்தை கொடுத்தது. கராட்டி, ஜுடோ, குங்பூவை பார்த்து நாங்கள்தாம் பயப்படுகிறோம். மாஸ்டர் பயப்பட்டது தொடர்பாக எனக்கு ஜீரணிக்க முடிய வில்லை.

இப்படித்தான் திருகோணமலையில் பல ஆண்டு களுக்கு முன்பு கராட்டி போட்டி ஒன்று நடந்தது. அதில் மனைவியின் கிராமத்துப் பெடியன்களும் போய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போட்டியிட வேண்டும் என்று ஆர்வமாயிருந்தார்கள். அதற்கு என்று தேடி ஒரு கராட்டி மாஸ்டரைப் பிடித்துவிட்டார்கள். அவர் சில கராட்டி நுணுக்கங்களைச் சொல்லி கொடுத்தார். அதற்குப் பிறகு அந்த இளைஞர்கள் மேல் சட்டை போடாமல் தான் திரிந்தார்கள். கிராமத்தில் அவர்களுக்கு மதிப்பு சில அங்குலம் கூடி இருந்தது.

இளம் பெண்கள் அவர்களைக் கராட்டி சம்பியன்களாகவே பார்த்தார்கள். அவர்களின் வீட்டு முற்றத்தில் ஒவ்வொரு நாளும் பத்து பதினைந்து ஓடுகள் உடைபட்டு கிடந்தன. ஓடுகளை அடுக்கி வைத்து அதன் கீழே நெருப்பு கொழுத்தி கிராம மக்களுக்கு அந்த ஓடுகளை உடைத்து காட்டி விளையாட்டு காட்டினார்கள். உடம்பில் நல்லெண்ணை தேய்த்து உடலை வெயிலில் காட்டினார்கள்.

போட்டி நடந்தது திருகோணமலையில். கொழும்பு, கண்டி, காலி என்று பல நகரங்களிலும் இருந்து கராட்டி போட்டி களில் முதலிடம் பிடித்த வலு நுணுக்கமான போட்டியாளர்கள் எல்லாம் வந்திருந்தார்கள். போட்டி நடந்த நாளைக்கு அடுத்த நாள் கிராமத்து இளைஞர்களைக் காணவில்லை. போய்ப் பார்த்தால் எல்லோரும் படுத்த படுக்கையாகக் கிடந்தார்கள். மூக்கு, முகம் எல்லாத்தையும் வந்தவர்கள் உடைத்து நொறுக்கி விட்டார்கள். எங்கடை பெடியன்கள் முனகிக் கொண்டு உடம்மைத் திருப்ப முடியாமல் படுத்த பாயில் இருந்து எழும்ப முடியாமல் கிடந்தார்கள். போட்டிக்கு வந்தவர்கள் பெரும் பயிற்சி பெற்றவர்கள். எங்களது பெடியன்கள் ஓட்டை உடைத் தால் சரி என்று நினைத்த மாதிரி இல்லை கராட்டி.

கராட்டி மாஸ்டரிடம் சொன்னேன், “எனது சந்திப்பில் பயப்பிட ஒன்றுமில்லை. நான் உங்களிடம் கேள்வி கேட்பேன் நீங்கள் மெதுவாக உங்கள் வீட்டில் உங்கள் மனுசியோடு பேசுவது மாதிரி பேசினால் போதும்” என்றேன். “ம்ஹூம்... அசைய மாட்டேன்” என்கிறார். இப்பிடி நேரடி நிகழ்ச்சிக்கு பயந்த ஒரு மனிதனை எனது 12 வருடத் தொலைக்காட்சி வாழ்க்கையில் பார்கவேயில்லை. சரி என்று விட்டுவிட்டேன்.

எனது மகனும் எங்கேயோ கராட்டி நிகழ்ச்சியைப் பார்த்து விட்டு வந்து தாய்க்கு முன்னாலும் எனக்கு முன்னாலும் “ஊ... ஆ...” என்று கையை நீட்டி கத்துகிறான். “முதலில் ஓ லெவலை எடு, பிறகு ஏ லெவலை பாஸ் பண்ணு. அதுக்கு பிறகு பார்க்கலாம்” என்று சொல்லி வைத்திருக்கிறேன். கராட்டி என்றால் எடுத்த உடனேயே அடிக்கிறது என்றுதான் மகன் நினைத்துக்கொண்டிருக்கிறான். சொன்னாலும் விளங்குதில்லை பிள்ளைகளுக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயம் எல்லோரையும் ஆட்டிப்படைக்கும் ஒன்றுதான். முந்தி நான் ஒட்டுசுட்டான் மகாவித்தியாலயத்தில் படிக்க போகும்போது புளியங்குளத்தில் இருந்து நடந்து போவோம். இப்போது கொஞ்ச தூரம் என்றாலும் பிள்ளைகள் நடக்க மாட்டேன் என்கிறார்கள். காலையில் நடந்து போய் மாலையில் நடந்து வந்தால் வேறு எந்த தேகாப்பியாசமும் தேவையில்லை உடம்புக்கு. பிள்ளைகள் இந்த விடயத்தைச் சொன்னால கேட்கமாட்டார்கள்.

இங்கே, லண்டனில் பெரிய ஆட்களுக்கு வைத்தியர்கள் சொல்லும் ஆலோசனை கொஞ்சமேனும் ஒரு நாளைக்கு நடந்து திரியுங்கள். அது பெரிய பலனை கொடுக்கும். குறைந்தது மூன்று பஸ் நிறுத்தம் உடைய தூரமாவது நடவுங்கள் என்கிறார்கள்.

முன்பு நாங்கள் பாடசாலைக்கு நடந்து போகும்போது இடையில் குருவிச்சை ஆற்றுப் பாலத்துக்கு பக்கத்தில் ஒரு பாலமரம் நிற்கிறது. அதில் யாரோ கோடாரியால் சூலம் ஒன்றை வெட்டியிருந்தார்கள். அந்த இடத்தைக் கடக்கும் பொழுதெல்லாம் நெஞ்சு பதறும். அந்த இடத்தில் வைரவர் இருக்கிறார் என்று ஒருவர் கதையை கட்டிவிட்ட பிறகுதான் எங்களை பயம் பிடித்துக்கொண்டது. பள்ளிக்கூட பிள்ளைகள் அந்த இடத்தை கடக்கும் போதெல்லாம் ஏதோ வைரவர் எங்களை துரத்தி வருவதாகவே எண்ணிக் கொண்டு ஓட்டம் பிடிப்போம்.

இங்கு லண்டனில் கார் ஓடிக் கொண்டிருக்கும்போது பின்னால் பொலிஸ் கார் வந்தால் சும்மாவே பயம் பிடித்துக் கொள்ளும். எங்களிடம் எல்லா டொகியுமன்டுகளும் இருக்கும். அதை நாங்கள் கையில் வைத்திருக்க வேண்டியதில்லை. எம்.ஓ.ரி, இன்சூரன்ஸ், றோட் ரக்ஸ் என்று எல்லாம் எங்கள் நம்பர் பிளேட்டை ஸ்கான் பண்ணினாலே பொலிஸார் கண்டுபிடித்து விடுவார்கள். ஆனாலும் இலங்கையில் பிறந்த எல்லோருக்கும் பொலிஸ், ஆர்மி என்றால் பயம் தானாகவே பிடித்து விடுகிறது. அவ்வளவுக்கு பொலிஸாரும் ஆமிக்காரரும் எங்களுக்கு அனியாயம் பண்ணி இருக்கின்றனர். மனித உரிமைகளை மதிக்கும் நாடுகளில் இருந்து கொண்டும் பழைய பயம் எங்களை விட்டுப் போக மாட்டேன் என்கிறது. அண்மையில் தமிழர் மாணவர் பேரவை ஆரம்ப கர்த்தா சத்தியசீலன் ஒரு மேடையில் வைத்துச் சொன்னார், இங்குள்ள பொலிஸை கண்டாலே பழைய பயம் வந்து விடுகிறது என்று.

பாடசாலையில் படிக்கும்போது மேடை எனக்கு விருப்பமானதாக இருந்தாலும் மேடைப் பயம் என்பது சாதாரண



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மான விடயமல்ல. மேடையில் ஏறி நின்றாலே கை கால்கள் எல்லாம் உதறும். ஆனால் ஏறினால், தெளிவான மொழியில் எல்லாவற்றையும் சொல்லிவிட்டுதான் இறங்குவேன். எனவே எனக்கு மேடைப் பயம் இல்லை என்று என் வயதை ஒத்த மாணவர்கள் என்னிடமே சொல்லி இருக்கின்றனர். பாடசாலை மேடைகள் நான் போகப் போக பழகி விட்டன. கடைசியாக மேடைப்பயம் இல்லாமல் போனது 'கூட்டுறவுக் கொள்கை களும் நடைமுறைகளும்' என்ற பேச்சை முல்லைத் தீவு திறந்தவெளி அரங்கில் நிறைந்த மனிதர்கள் மத்தியில் பேசிய போதுதான். இப்போது நூற்றுக்கணக்கான மேடைகளில் ஏறியிருப்பதாலோ என்னவோ மேடைப்பயம் போயே விட்டது. கூடியிருந்து நன்றாக பேசுவார்கள். ஆனால் மேடை என்றவுடன் கை கால்கள் உதறல் எடுத்துவிடும். பலருக்குத் தொடையில் இருந்து வியர்வை வழியும்.

தான் காதலித்தவனைத் திருமணம் முடித்தபோதும் முதலிரவு அன்று கை கால்கள் எல்லாம் வியர்த்து விறுவிறுத்து பெரும் பயம் வந்துவிட்டதாக நண்பி ஒருத்தி சொன்னாள். பயம் எந்தச் சந்தர்ப்பத்தில் எப்பொழுது வரும் என்று சொல்ல முடியாத ஒன்றுதான். சுடரொளிக்குக் கட்டுரை கொடுக்கச் சென்றபோது எனது காலுக்கு கீழ் வெடித்த குண்டை நினைக்கும்போது இப்போது பயமாக இருக்கிறது. அதற்கு பிறகு வீட்டுக் கேற் சாத்துப்பட்டாலும் பயம் பிடித்துக்கொள் ளும். நித்திரை இல்லாத இரவுகளாக வத்தளையில் இருந்த காலம் இருந்தது. இங்கு லண்டன் வந்த பிறகுதான் நிம்மதி யாகத் தூங்கினேன். கொழும்பில் இருக்கும்போது றோட்டில் ஆட்டோவில் போகும்போது எப்பொழுதும் ஏதாவது ஒரு குண்டு வெடித்துவிடுமோ என்ற பயம் தொடர்ந்து இருந்து கொண்டே இருக்கும். ஷெல் அடிக்குள் இருந்து வந்த மக்க ளிடம் கேட்டுப்பாருங்கள் பயம் என்றால் என்ன வென்று கண்ணீரோடு சொல்வார்கள்.

வறுமைக்குப் பயந்து, உயிருக்குப் பயந்து இங்கு புலம்பெயர் நாடுகளில் இருக்கும் அகதிகளைக் கேட்டால் விசா தருவார்களா மாட்டார்களா? எப்பொழுது திரும்பி அனுப்புவார்கள் என்று பயம் தொற்றிக்கொண்டே திரியும் பல இளைஞர்களை யுவதிகளை தினம் கண்டுகொண்டு தான் இருக்கிறேன். பயம் ஒவ்வொருவரையும் தொடர்ந்து கொண்டு இருக்கிறது. அதற்கு கராட்டி காரரும் விதிவிலக்கல்ல.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'வைரமாளிகை'
# யாழ்ப்பாணத்தின் விகடகவி

விளம்பரங்கள் ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் உலகத்தில் நாங்கள் வாழுகிறோம். 'விளம்பரம் இல்லா விட்டால் வியாபாரமே இல்லை' என்கின்ற சூழலைப் பெரிய பெரிய விளம்பரக் கம்பனிகள் ஏற்படுத்திக் கொடுத்திருக்கின்றன.

தமிழகத்தில் நகைக்கடை விளம்பரத்துக்கு சினேகா வந்தது போய் இப்பொழுது இளையராஜா வந்திருக்கிறார்.

காலம் எப்படி மாறுகிறது. விளம்பரங்கள் எப் பொழுதும் எல்லோரையும் ஆட்டிப்படைத்துக் கொண் டிருக்கின்றன. இப்போதெல்லாம் திரையரங்கத்துக்குப் போனால் அரை மணித்தியாலம் விளம்பரத்தைப் போட்டுத் தொலைக்கிறார்கள்.

எங்கும் நீக்கமற நிறைந்திருக்கிறது விளம்பரம். தொலைக்காட்சியில் ஒரு நிகழ்ச்சியை உருப்படியாக பார்க்க முடிவதில்லை. விளம்பரம். நண்பர் ஒருவருக்கு வழுக்கை தலை. அதை அப்படியே விட்டால் என்ன, கல்சியம் குறைவோ என்ன இழவோ முடி கொட்டி விட்டது. முடி இல்லாமல் உலகத்தில் ஆட்கள் வாழவே இல்லையா? இவர் ஒரு விளம்பரத்தைப் பார்த்து முடிநடுவோம் என்று ஓர் இடத்துக்குப் போனார். அவர்களும் காசைக் கறந்து முடி நட்டார்கள்.

இப்போது புதிய தலைவலி ஒன்று வந்து அவதிப் படுகிறார். மொட்டையாக இருந்த நேரம் சுக தேகியாக இருந்தவர் இப்பொழுது தலைவலியால் கிடந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழலுகிறார். இயற்கைக்கு மாறாகப் போனால் இப்படித்தான் நடக்கும். கறுப்பான முகத்தை வெள்ளையாக்குகிறோம், ஆண்குறியை நீளமாக்குகிறோம் என்றெல்லாம் விளம்பரங்கள் கொட்டிக்கிடக்கின்றன.

விளம்பரங்கள் முழுவதும் பெண்ணுடல்கள் நிர்வாண மாகக் கிடக்கின்றன. எங்கு பார்த்தாலும் விளம்பரத் தட்டிகளில் கடை விரிய வைத்திருப்பது பெண்ணுடலங் களைத்தாம். பெண்ணுரிமை பேசும் அமைப்புகளுக்கு இந்த அடாவடித்தனத்தைத் தட்டிக் கேட்க நாதியில்லை. உலகம் விளம்பரத்தின் பின்னால் அலைந்து கொண்டிருக்கிறது. எமக்குப் பொருட்கள் தேவை என்றால் நாம் வாங்கி விட்டுப் போகிறோம். அதற்கு எதற்கு நீங்கள் சொல்ல வேண்டும் என்று கடைக்காரர்களையோ விளம்பரக்காரர்களையோ நாங்கள் கேட்பதில்லை.

என்ன பொருள் என்று தீர்மானிப்பவர்கள் நாங்களாகத் தாம் இருக்க வேண்டும். எங்கள் தேவையை மற்றொருவன் தீர்மானிக்கிறான். அதுதான் கொடுமை.

என்ன சோப் போட வேண்டும், என்ன உள்ளாடை போட வேண்டும், என்ன சைக்கிள் வாங்க வேண்டும், என்ன பால் குடிக்க வேண்டும், என்ன சாரி உடுத்த வேண்டும். இவற்றையெல்லாம் பற்றி வியாபாரி நினைக்கிறானே, இதுதான் கொடுமை என்று சொல்கிறேன்.

நான் சிறுவனாக இருந்தபோது முல்லைத்தீவில் இருந்து 85ஆம் நம்பர் பஸ்ஸில் யாழ்ப்பாணம் போன நினைவு வருகிறது.

அம்மாவிடம் உடுப்பிட்டிக்குப் போவதற்கு பெமிசன் வாங்கினதற்குப் பிறகு சில நேரம் திருப்பிக் கூப்பிட்டு விடுவாளோ என்று பயந்து இரண்டு மூன்று பஸ் ஸ்டொப் தள்ளிப் போய் நின்று கொண்டுதான் பஸ் ஏறுவேன். ஒட்டுசுட்டானில் இருந்து யாழ்ப்பாணம் போவதென்றால் வலு புளுகம் எனக்கு.

யாழ்ப்பாணம் பஸ் ஸ்ராண்டில் நான் கண்வெட்டாமல் பார்த்துக் கொண்டிருக்கும் ஒரு மனிதர் வைரமாளிகை. வைர மாளிகையைப் பற்றி இப்பொழுது நினைத்தாலும் அவரின் தோற்றம் கண்ணுக்குள் அப்படியே நிற்கிறது.

லண்டனில் இருந்து இப்போது நினைக்கும்போதும் வைர மாளிகை முப்பது வருஷத்துக்கு முன்னால் காலை அகட்டி கையை விரித்துக்கொண்டு கம்பீரத்துடன் நிற்பது கண்ணுக்குள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருக்கிறது. வெளிர் நீல நிறத்தில் பட்டுத் துணியில் 'வைர மாளிகை' என்று எழுதி தோலில் உலக அழகிகள் பட்டத்துக்குப் போடுற மாதிரி துண்டு ஒன்றைப் போட்டிருப்பார்.

'வைர மாளிகை' நகைக்கடையின் விளம்பரமாக அவர் நடமாடினாலும் நகைக்கடைக்கு மக்கள் போகிறார்களோ இல்லையோ இவரை மறக்க மாட்டார்கள். இன்னும் என்னைப் போன்ற நாற்பது வயதுக்காரருக்கு வைரமாளிகை மனத்தில் நிற்கின்ற ஒருவர்தான். லொத்தர் டிக்கட்டுகள், பத்திரிகைகள் விற்பார். சத்தம் போட்டு "22 கரட் தங்க நகைகள் நயம் நம்பிக்கை நிறைந்தது" என்று வைர மாளிகைக்கு விளம்பரம் செய்வார். யாழ்பாணத்தின் விளம்பர உலகத்தை வித்தியாசப்படுத்திய மனிதர் அவர்.

எடுப்பான கறுவல் மனுசன் அவர். அப்பவே 50 வயது மதிக்கலாம். 1960ஆம் ஆண்டு முதல் அவர் விளம்பரங்கள் செய்து வந்தார் என்று கேள்விப்பட்டேன். நல்லூர் கோவில் திருவிழாவில் அவரைக் காணலாம், சென் பற்றிக்ஸ் பெரிய கோவிலில் காணலாம். பெரும்பாலும் யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தைச் சுற்றி சுற்றியே வருவார். திடீரென்று காதுக்கு கிட்ட வந்து உரத்த குரலில் கத்தி ஏதாவது சொல்லுவார். உண்மையில் நான் அவரைக் கண்டு சின்ன காலத்தில் பயந்திருக்கிறேன்.

அவர் ஒரு பயப்படும்படியான மனிதராகவே எனக்கு அப்போது பரிச்சயமானார். நடப்பார், ஓடுவார், பாடுவார், ஆடுவார், வைரமாளிகை ஒரு விகடகவியாகவே இருந்தார். யாழ்ப்பாணத்தில் அவரை விளங்கிக் கொண்டவர்கள் அரிதாகவே இருந்தனர். இவருக்கு என்ன விசரே என்று எனது காதுபட ஆட்கள் சொல்ல கேட்டிருக்கிறேன்.

அவரின் நடை, உடை, பாவனை அப்படி இருந்தது. அவர் ஏன் அப்படி செய்கிறார் என்று பலருக்கு தெரியாது. ஓய்வில்லாத ஒரு மனிதராக அவர் இருந்தார். வைரமாளிகை ஓர் இடத்தில் இருந்து நான் எப்பொழுதும் பார்த்ததில்லை. வலியப் போய் உதவுவார். வன்னியில் இருந்து வந்து பஸ் எதுவென்று தெரியாமல் தடுமாறும் கிராம மக்களுக்கு உதவுவார்.

வயதாளிகள் கண்தெரியாதவர்களைக் கையில் பிடித்து பஸ்ஸில் ஏற்றி விடுவிடுவார். பாதையைக் கடக்க உதவுவார். அவரை ஒரு வேடிக்கை காட்டும் மனிதராகவே மக்கள் பார்த்தார்கள். பேப்பர் விற்கும் போது அதில் வரும் தலைப்பு செய்திகளை உரக்கப் படித்துக் காட்டுவார். அவர் ஒரு நடமாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திக் களஞ்சியமாகத் திரிவார். அவரிடம் எல்லா வகையான செய்திகளும் இருக்கும்.

அவருடைய பிறப்பு, வளர்ப்பு எல்லாம் மானிப்பாய் என்று கேள்விப்பட்டேன். குடும்பம் பற்றித் தெரியாது. இங்கு லண்டனிலும் அவரின் குடும்பத்தினர் யாராவது இருக்கிறார்களா என்று பழையவர்களிடம் விசாரித்து பார்த்தேன். இருப்பதாக இன்னும் தகவல் கிடைக்கவில்லை. அவர் திருமணம் முடிக்கவில்லை. தனிக்கட்டையாகவே வாழ்ந்திருக்கிறார். அவருக்கு 'வைரமாளிகை' நகைக்கடை விளம்பரம் செய்வதற்குச் சம்பளம் அந்த நேரத்தில் மாதம் அறுபது ருபாய் கொடுத்ததாக அறிகிறேன்.

1980ஆம் ஆண்டுகளில் நிலமை மாறத் தொடங்க யாழ்ப்பாணத்து இயல்பு வாழ்வும் மாறத் தொடங்கியது. யாழ்ப்பாணத்தில் மணிக்குரல் றேடியோ சேவை அப்பொழுது ஆரம்பித்தது. யுத்தம் ஆரம்பித்த பிறகு இயல்பு வாழ்வு பறிபோனதற்கு பின்பு வைர மாளிகையால் முன்புபோல வாழ முடியவில்லை என்று அந்தக் காலத்தில் இருந்தவர்கள் சொல்கிறார்கள்.

வைரமாளிகை நகைக்கடை வியாபாரம் முடங்கியது. கடைக்கு விளம்பரம் தேவையில்லாததாகிவிட்டது. 1987ஆம் ஆண்டு வைரமாளிகை தனது விகடத் தொழிலை கிட்டத்தட்ட முழுமையாக விட்டு விட்டார். வயிற்றுப் பசிக்காக சிறிய வியாபாரத்தைச் செய்தார். அவர் உணவுப் பொருட்களை வாங்கி சிறியளவில் விற்றுத் தனது சாப்பாட்டுத் தேவையைப் பூர்த்தி செய்துகொண்டார்.

யாழ்ப்பாண மக்களை அறிவு பூர்வமாக நேசித்த ஒரு கலைஞனை மக்களோடு மக்களாக வாழ்ந்த ஒருவனை வைரமாளிகையை 1987ஆம் ஆண்டு யாரோ ஒரு துப்பாக்கி ஏந்திய தமிழன் சுட்டு விட்டான். அவர் ஆரியகுளம் சந்தியில் செத்துக் கிடந்தார். ஏன் சுட்டான் எதற்காகச் சுட்டான். அந்த விகடகவி என்ன குற்றம் செய்தார் என்று இன்றுவரை மர்மமாகவே இருக்கிறது அவரது கொலை. ஆனால் இந்தியன் ஆமியோடு தொடர்பு வைத்திருந்ததற்காகவே அவரைச் சுட்டார்கள் என்று ஒரு கதை உலாவுகிறது.

1987 உடன் அவரின் கதை முடிந்து விட்டது. அதற்குப் பிறகு ஒரு மனித விளம்பரம் யாழ்ப்பாணத்தில் தோன்றவே இல்லை. அந்தக் காலத்தில் எங்கள் கிராம மக்கள் எந்த விளம்பரத்தையும் எதிர்பார்த்து சாமான் வாங்கவில்லை. வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை வாங்கினார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியாக ஆரோக்கியமாக இருந்தார்கள். எங்கள் புளியங் குளம் கிராமத்திற்கு ஒரு மைல் தூரத்தில் ஒட்டுசுட்டான் இருந்தது. அங்குதான் எங்களுடைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்தோம்.

எளிய வாழ்வுக்கு அங்கு எல்லாம் இருந்தது. நாலு சாரி, மூன்று நாலு முழம், நாலு சாரம், இரண்டு துவாய் என்று ஒரு குடும்பத்தில் உடுதுணிகள் இருக்கும்.

ஒரு புது உடுப்பு என்றால் பொங்கல், புதுவருடம் வரவேண்டும். அந்த நேரம் புது உடுப்பு வந்தாலே ஒரு சந்தோசம். அல்லது மாதாமாதம் கட்டாடி இரத்தினம் உடுப்பை வெளுத்துக் கொண்டு வந்து தருவார். கட்டாடி ரத்தினம் வீட்டுக்கு வந்தாலே எங்களுக்கு சந்தோஷம். மடமட வென்று கஞ்சி போட்டு அயன் பண்ணி உடுப்புகளைக் கொண்டு வருவார். அவர் இப்ப இருக்கிறாரோ, செத்துப் போனாரோ தெரியாது.

“பொலிடோல்” மருந்துக்கு பெரிய விளம்பரத் தட்டி வைத்திருப்பார்கள். ஆனால் யாரும் விளம்பரத்தைப் பார்த்து பொலிடோல் வாங்க மாட்டார்கள். தேவைப்பட்டால் வாங்கி புல்லு சாக அடிப்பார்கள்.

அந்த நேரம் இப்போதுபோல நுகர்வு கலாச்சாரம் இல்லை. இப்போது எமது பிள்ளைகள் இங்கே லண்டனில் காலையில் தொலைக்காட்சி விளம்பரத்தைப் பார்த்துவிட்டு அதில் வருகிற மாதிரி சாப்பாடு வேணும் என்று கேட்கிறார்கள். அந்த சாப்பாடுகள் குறைந்தது மூன்று பவுண் பெறுமதி. முன்பு என்றால் காலையில் வெறும் கஞ்சி குடித்துவிட்டு நான் பள்ளிக்கூடம் போனேன்.

வாழ்வை விளம்பரங்கள் அபகரித்து விட்டன. இப்போது விளம்பரங்கள் பிள்ளைகளையும் பெண்களையும் ஆட்டிப் படைக்கின்றன. இலங்கையில் பரவாயில்லை. காட்டுகிற எல்லாவற்றையும் வாங்க முடியாது. இங்கு லண்டனில் பெண்களும் பிள்ளைகளும் விளம்பரத்துக்குப் பின்னால் தலையைப் பிய்த்துக்கொண்டு ஓடுகிறார்கள். தொலைக்காட்சி யில் காட்டிய டிசைனை உடனே வாங்கி உடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தெய்வக் குற்றம் வந்துவிடும்போல அலை கிறார்கள்.

சும்மா கூகிளில் போய் விளம்பரம் என்று ரைப் பண்ணி னால் 40 கோடியே 30 லட்சம் பதில்கள் வருகின்றன. குடிக்கிற தண்ணியில் இருந்து கக்கூசு பேப்பர்வரை விளம்பரத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தில் தான் தங்கியிருக்கிறது. கை துடைக்கிற பேப்பர் கொம்பனி பெரிய தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை விளம்பரம் செய்கிறது. உண்மையில் மலைத்து விட்டேன். கை துடைப்பது அத்தியா வசியம். அந்தப் பேப்பரை ஆட்கள் கட்டாயம் வாங்குவார்கள். ஆனால் அதுக்கு ஏன் லட்சக்கணக்கான பணம் செலவழித்து விளம்பரம் செய்கிறார்கள்?

1890களில் இருந்தே வயிற்றை நாசம் செய்யும் கொக்கோ கோலா விளம்பரம் செய்கிறது. உலகம் முழுவதும் 500 மில்லியன் அமெரிக்க டொலர் விளம்பரத்துக்காகச் செலவு செய்யப் படுகிறது.

1895இல் உடம்பைக் கூட்டுவதற்கு எடை போடுவதற்கு விளம்பரம் செய்திருக்கிறார்கள் என்றால் பாருங்கள். இன்றைக்கு உடம்பை மெலியச் செய்வதற்கு விளம்பரம் செய்கிறார்கள். அதை வாங்கிக் குடித்துவிட்டு மக்கள் இடுப்பில் சக்தி இல்லாமல் ஒடிந்து விழுந்து விடுவார்களோ என்று பயமாய் இருக்கிறது.

இப்பொழுது பஸ், வான்கள், ரெயில், விமானம், றோட் என்று எங்கும் விளம்பரங்களே தொங்கிக் கொண்டிருக் கின்றன. விளம்பரங்கள் மனிதனைப் பைத்தியமாக்கிக் கொண் டிருக்கின்றன.

போதுமென்ற மனம் படைத்தவர்கள் மாத்திரமே இந்த விளம்பர யுகத்தில் இருந்து நிம்மதி பெறலாம். மற்றவர்கள் விளம்பரம் இழுக்கின்ற திசையில் இழுபட்டுக் கொண்டே இருக்கிறார்கள். பாவம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரணங்களும் அஞ்சலிக் குறிப்பும்

மரணித்தவரின் வீட்டுக்குத் தொலைபேசி எடுத்து எவ்வாறு அஞ்சலி செலுத்துவது என்பது தொடர்பாக நான் இன்னும் குழம்பிப்போயே இருக்கிறேன். "ஹலோ" என்றவுடன் எப்படிப் பேச்சை ஆரம்பிப்பது? நடைபெற்ற மரணத்துக்கான அஞ்சலி என்பதாகவா? எப்படி?

இது ஒரு சங்கடமான நிலமைதான். அப்படி பேசும்போது எதிர் முனையில் இருப்பவர் அழுது விட்டால் எப்படி அடுத்த கதையை ஆரம்பிப்பது எனபது குறித்து எனக்கு இன்னும் மனத்துக்கு விளங்கவில்லை. துக்கப்பட்டுக் கிடக்கும் உறவினர்கள் மேலும் துக்கப்பட வைப்பதாகவே விசாரிப்பு அமைந்து விடுமோ எனும் பயம் எனக்கு இருக்கிறது.

அதனால்தான் தொலைபேசி மூலம் தொடர்பு கொள்ளாமல் புஸ்பராஜாவின் மகனுக்கு ஈமெயில் மூலம் துக்கசெய்தி அனுப்பினேன். அதனால்தான் கலைச்செல்வனின் மரணத்தின்போது லக்ஸ்மியிடம் நான் தொலைபேசியில் துக்கம் விசாரிக்கவில்லை.

அண்மையில் 23 வயது மகளை நோய்க்கு பறி கொடுத்துவிட்டு இருக்கிறார் விமலதாசன். அது பெருங் கொடுமை. ஒரு தந்தையாக 23 வயது மகளை மரணம் பறித்த துன்பத்தை உணருகிறேன். எனக்கு இப்படி நடந்தால் நான் தாங்கிகொள்வேனா என்ற கேள்வி எனது நெஞ்சை அடைக்கிறது. உண்மையில் அது பெருங் கொடுமை. மரணங்களை எப்படி தாங்கிக்கொள்வது?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனைவி இறந்தவருடைய துக்கம் பெரியது. ஐ.தி. சம்பந்தனின் மனைவி இறந்தபோது நான் அவருக்கு தொலைபேசி எடுத்தபோது அவர் தொலைபேசியில் அழுதார். எனக்குப் பெருங்கஷ்டமாக இருந்தது. மனைவியுடன் சண்டை பிடிக்கும்போது கலியாணமே முடிக்காமல் இருந்திருந்தால் நல்லது என்று நினைக்கும் கணவன்மார் மனைவி இறந்த பிறகு அழுது அழுது பெருந்துக்கம் தாளாமல் நடைப்பிண மாகவே போய் விடுவார்கள். கணவன் இறந்தால் மனைவி ஒரு மாதிரி சமாளித்து பிள்ளை குட்டிகளை வளர்த்து ஆளாக்கி விடுவாள். ஆனால் பிள்ளைகளை விட்டுவிட்டு இறந்துபோன மனைவியின் இடத்தை யாராலும் நிரப்ப முடியாமல் இருக்கிற கணவன்மாரை எனக்குத் தெரியும் சிறியவயதில் மனைவி போய்விட தன் பிள்ளைகளை வளர்த்துக்கொண்டிருக்கிற நண்பர் வசந்தனை எனக்குத் தெரியும். அவருக்கு எத்தனை கவலைகள் வரும், மனைவியை நினைத்து?

எங்கள் வீட்டில் எனக்குத் தெரிய நடந்த மூன்று மரணங் களின்போது நான் ஊர் ஊராகத் திரிந்து கொண்டிருந்தேன். அந்த மரணங்கள் எனக்குப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்த வில்லை. சித்தர்போக்காக, கண்ட இடத்தில் சாப்பிட்டு கண்ட இடத்தில் படுத்தெழும்பிய வாழ்வாக இருந்தநேரத்தில் அந்த மூன்று மரணங்களும் என்னை ஒன்றுமே செய்யவில்லை. ஒன்று எனது சித்தப்பாவுக்குப் பிறந்த அம்மாவின் இரணைப் பிள்ளையான பெண் பிள்ளை இறந்து விட்டது. அடுத்தது என்னை 15 வயதுவரை வளர்த்து ஆளாக்கிய எனது அம்மையயா போனது. அடுத்தது எனது அம்மம்மா செத்தது. இந்த மூன்று மரணங்களும் என்னைப் பாதிக்கவில்லை.

பிரான்ஸில் புஸ்பராஜா இறந்தபோது நான் மனதளவில் மிகுந்த பாதிப்பை உணர்ந்தேன். நித்தி, மீனா, நண்பர்கள் எல்லோருமே மிகுந்த துக்கமடைந்திருந்தார்கள்.

ஃபிராங்பர்ட் ரஞ்சினி அழுதுகொண்டேயிருந்தாள். முதலில் எனக்குப் புஸ்பராஜாவின் மரணச் சேதியை சொன்னது ரஞ்சனிதான். உடனடியாக நான் சார்ந்த தொலைக்காட்சியில் நித்தி எழுதி தந்த புஸ்பராஜா பற்றிய குறிப்பை ஒளிபரப்பிவிட்டு நண்பர் வ.ஐ.ச ஜெயபாலனுடை யதும் என்னதும் ரஞ்சினியுடையதும் கவிதைகளோடு புஸ்பராஜா தொடர்பான தகவல்களையும் சேர்த்து ஓர் அஞ்சலி நிகழ்ச்சி செய்தேன். இதுவெல்லாம் புஸ்பராஜா என்மீது கொண்ட கரிசனைக்குச் சமமாகாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1997ஆம் ஆண்டு பாரிஸில் நடைபெற்ற இலக்கியச்சந்திப்பு நிகழ்ச்சியில் என்னைக் கலந்துகொள்ள வைக்க புஸ்பராஜா யோசித்திருக்கிறார். தொண்ணூறுகளிலிருந்து புலம்பெயர் சஞ்சிகைகளோடு எனக்கிருந்த தொடர்பின் காரணமாக என்னை அழைக்க யோசித்திருக்கலாம் என்று நினைக்கிறேன். எனக்கு எனது பூமி தொடர்பாகவும் எனது நிலைப்பாடு எனது மக்கள் தொடர்பாக ஒளிக்காமல் தைரியமாக எல்லாத்தையும் எழுத ஒரு சந்தர்ப்பத்தை புலம்பெயர் சஞ்சிகைகள் சந்தர்ப்பம் தந்தன. இலங்கையில் இருந்துகொண்டு எழுத முடியாத எல்லா அரசியலையும் எழுத வாய்ப்பை எனக்கு புலம்பெயர் சஞ்சிகைகள் வழங்கின.

1990களில் இருந்து புலம்பெயர் சஞ்சிகைகளுடன் எனக்கு பரிச்சயம் ஏற்பட்டது. அனேகமாக எல்லா சஞ்சிகைகளுக்கும் ஆக்கங்கள் எழுதி அனுப்புவேன். அந்தக்காலத்தில் இப்போது போல தொலைபேசி அழைப்புகள் மலிவாக இல்லை, இலங்கை யில் இருந்து பேச முடியாது. காட் வாங்கி உரஞ்சித்தான் பேச வேண்டும். அது மிகவும் செலவான வேலை. ஃபக்ஸில் ஆக்கங்களை அனுப்புவேன்.

கனடா கலப்பை எனது கவிதைக்கு 5 டொலர் நோட்டு ஒன்று வைத்து அனுப்பியிருந்தது. அது மட்டும்தான் எனக்கு 1990களில் வெளி நாட்டில் இருந்து எழுதுவதற்காக வந்த பணம். ஆனால் மனுசி கேட்ட 'இலக்கியம் சோறு போடுமா' என்ற கேள்விக்கும் காமிலா சொன்ன 'தமிழைப் படிச்சு என்ன செய்யப்போகிறீர்கள்' என்ற கேள்விக்கெல்லாம் இப்போது 13 வருடமாக தீபம் தொலைக்காட்சியில் இருந்து வருகிற லண்டன் சம்பளத்தை நான் நினைத்து பார்க்கிறேன். மனைவி இப்போது சொல்லும் "எழுத்து, தமிழ் எங்களுக்கு சோறு போடுகிறது உண்மைதான்." எழுத்துதான் என்னை இங்குவரை அழைத்து வந்திருக்கிறது என்று பெருமையாகச் சொல்கிறேன். அதற்கு புஸ்பராஜாதான் முதல் அத்திவாரம் போட்டார்.

அன்று ஆர்வம் மிகுதியால் 25 சஞ்சிகைகளுக்கு எழுதி யிருப்பேன். எல்லாம் எனது செலவில் தபாலில் அனுப்புவேன். காசில்லாமல் இருக்கும். கஷ்டப்பட்டுதான் அனுப்புவேன். நான் எழுதிய ஆக்கங்கள் புலம்பெயர் சஞ்சிகைகளில் வரும் போது மகிழ்வாக இருக்கும். அந்த சஞ்சிகை எனக்கு இலங்கை யில் கிடைக்கும்போது இன்னும் மகிழ்வாக இருக்கும்.

1997ஆம் ஆண்டில் பாரிஸ் இலக்கியச் சந்திப்புக்கு அழைப் பதற்கு புஸ்பராஜா ஸ்பொன்ஸர் லெட்டர் எல்லாம் அனுப்பி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டார். மேரி (கவுன்ஸில்) லெட்டர் கேட்டார்கள். அது வர தாமதம் ஆனதில் பிரான்ஸ் பயணம் தடைப்பட்டு விட்டது.

அவர் லண்டனுக்குத் தனது தங்கையைப் பார்க்க வரும்போதும் பிரான்ஸில் இருக்கும்போதும் தொலைபேசி மூலமாக என்னுடன் தொடர்புகொண்டு உரையாடியபடியே இருப்பார். இப்போதும் காதில் கேட்கிறது அவரின் குரல்.

பாரிஸ் இலக்கியச் சந்திப்புக்கு நான் வரமுடியாமல் போனதற்கு பிறகு ஜேர்மனியில் 1998ஆம் ஆண்டு நடைபெற்ற இலக்கிய சந்திப்புக்கு என்னை அழைக்கத் தொடர்ந்தும் முயன்றார் புஸ்பராஜா.

பாரதி-ரஞ்சனியூடாக அந்த வேலைகள் நடந்தன. 1998 மே மாதம் தான் நான் முதன் முதலில் புஸ்பராஜாவை ஜேர்மனியில் சந்தித்தேன். அதுவரைக்கும் கடிதத் தொடர்பு மட்டும்தான். ஜேர்மனியில் இலக்கியச் சந்திப்பு முடிவடைந்த பின்னர் என்னைப் பாரிஸுக்கு கொண்டு போய் எல்லா இடங்களையும் அக்கறையோடு காண்பித்தார். மிகவும் அக்கறையோடு நண்பர்களை அறிமுகப்படுத்தினார்.

தன்னை விட மற்றவர்களின் மேல் மிகவும் கரிசனை கொண்டவர் புஸ்பராஜா. அந்த நல்லெண்ணத்தோற்றம் என்னுள்ளே பதிந்துபோய் கிடக்கிறது.

இறப்பதற்கு முன்னரும் என்னை ஒருமுறை பாரிஸ் இலக்கியச் சந்திப்புக்கு கூப்பிட ஆர்வமாக இருந்தார். ஆனால் அது கைகூடவில்லை.

புஸ்பராஜாவின் நோய் பற்றி கேள்விப்பட்ட உடனேயே புஸ்பா மரணமாகி விடக் கூடாதே என்று நான் நினைத்தேன். 2006 மார்ச் 5ஆம் திகதி ஆனந்த விகடனில் ‘விடைபெறக் காத்திருக்கிறேன்’ என்ற அவரின் பேட்டியை பார்த்ததன் பின்பு எனக்குள் பயமாகவே இருந்தது. மரணம் வரும் என்பது எவ்வளவு உறுதியானது!

கலைச்செல்வனை ஃபிரங்போட் நகரில் இலக்கியச் சந்திப்பின்போது கண்டு கதைத்தது நேற்றுப்போலுள்ளது. அதன் பிறகு கலைச்செல்வனின் வீட்டுக்கு புஸ்பராஜா கூட்டிச்சென்றது, அங்கு லக்ஷ்மி, கலைச்செல்வனோட உணவு உண்டது. 14 வருடங்களின் பின்பும் மனத்தில் பத்திரமாக இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலைச்செல்வன் லண்டன் வந்தபொழுது 1998இல் நான் இங்கு லண்டன் வந்த அனுபவ பயணமாகிய 'கென்டயினர் பயணம்' கட்டுரையை எழுதி அவரிடம் கொடுக்க, அவர் அதை அவர் வித்தியாசமாக இருக்கிறது என்று பாராட்டி விட்டுப் பிரான்ஸ் கொண்டு போய் எக்ஸிலில் பிரசுரித்தார்.

நான் லண்டனில் இருக்கும் போதும் பல தடவைகள் என்னை, "எழுது எழுது சும்மா இராதே" என்று தூண்டிக் கொண்டிருப்பார். கட்டிப்பிடித்துக் கொஞ்சி பொய்மையில்லாத ஆத்மார்த்தமான அன்பை வெளிப்படுத்தி அரவணைப்பதில் கலைச்செல்வனைப் போல யாரையும் நான் பார்க்கவில்லை.

உயிருடன் நெருக்கமாக எம்மோடு பழகியவர்கள் எம்மோடு ஒரே மேசையில் இருந்து அன்பு செலுத்தியவர்கள் கண் முன்னால் மரணமாகிப்போவது எவ்வளவு வேதனை யானது. எனது மனத்தில் பதிந்துபோன இரண்டு நண்பர்களின் மரணங்களிவை.

உண்மையிலேயே இவர்களோடு கூட வாழ்ந்தவர்களுக்கு எப்பேர்பட்ட இழப்பு இது. இப்படித்தானே இருக்கும் எம்மோடு வாழ்வபவர்களுக்கும் எமது மரணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திக்வயல் தர்மகுலசிங்கம்

இறந்து போன ஒருவரின் கையெழுத்தில் எனக்கு விலாசமிட்டு வந்த சஞ்சிகை என்றால் அது நண்பர் திக்வயல் தர்மகுலசிங்கத்தின் *சுவைத்திரள்*தான். அவரின் கையெழுத்தோடு இருந்த விலாசப்பேப்பரை கிழித்தபோது என் மனது கசங்கிப்போனது. எனது இதயத்தை திருகுவது போல உணர்வு ஏற்பட்டது.

மனிதன் 2011ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 2ஆம் திகதி புதன்கிழமை மட்டக்களப்பில் தனது 64ஆவது வயதில் மரணமடைந்துவிட்டார். அவரது இறுதி கிரியைகள் மட்டக்களப்பு கள்ளியங்காடு இந்து மயானத்தில் 3ஆம் திகதி நடந்து முடிந்துவிட்டது.

ஆனால் எனக்கு அவர் விலாசம் எழுதி ஒட்டி வைத்த சுவைத்திரள் 37ஆவதும் கடைசியுமான இதழ் லண்டனில் எனது கைக்கு கிடைத்தது 2012 பெப்ரவரி மாதம் 23ஆம் திகதி வியாழக்கிழமை.

அன்று எனது வேலைகளுக்கு மத்தியில் பெரும் குழப்பமான மனநிலையில் இருந்தேன். அவரது மனைவி, விலாசம் ஒட்டிக்கிடந்த *சுவைத்திர*ளை எடுத்து அனுப்பி வைத்திருந்தார்; அதில் தர்மகுலசிங்கம் இறந்ததாகத் தனக்கு ஒரு கடிதம் இருந்ததாக இங்கு ஈஸ்ட்ஹாமில் இருந்து நண்பர் போஸ் சொன்னார். எனக்கும் ஒரு கடிதம் இருந்தது.

இப்போதும் அந்த மஞ்சள் நிறமான அவரது கடைசி *சுவைத்திரள்* எனக்கு முன்னால் இருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

19 வருசமாகப் பெரும் கஷ்டத்துக்கு மத்தியில் *சுவைத்திரளைக்* கொண்டுவரவேண்டும் என்ற மன வைராக்கியத்தால் கொண்டு வந்திருக்கிறார் தர்மகுலசிங்கம்.

அவரை நான் கண்டதில்லை. ஆனால் கடிதம் மூலமும் தொலைபேசி மூலமும் என்னை எழுத சொல்லி கேட்பார்; எனக்குச் சீரியசான விடயங்கள் தானே எழுத வரும். எப்படி நகைச்சுவை இதழுக்கு எழுதுவது என்று நான் யோசித்து விட்டு 'ஒரு பனைக்கள்' என்ற நகைச்சுவை சிறுகதை ஒன்றை இலங்கையில் இருந்தபோது *சுவைத்திரளுக்கு* எழுதினேன்.

அந்த கதை 1995ஆம் ஆண்டு ஆடி – ஆவணி *சுவைத்திரளில்* வெளிவந்தது.

அதற்கு பிறகு இங்கே லண்டனில் *சுவைத்திரளுக்கு* சந்தா பிடித்து தருமாறு கேட்டு எனக்குக் கடிதம் எழுதினார். நான் இருக்கும் வேலைப்பளுவுக்கு மத்தியில் அந்த வேண்டுகோளை என்னால் பூர்த்திசெய்ய முடியவில்லை. நண்பர் போஸூம் நானும் சந்தா கட்டி *சுவைத்திரளை* பெற்று வந்தோம். கடந்த வருடம் நான் இங்கே *சுவைத்திரளை* பரப்ப வேண்டும் என்று கேட்டுக்கொண்டார், ஆனால் அது முழுமையாகக் கை கூடவில்லை. அவரும் போய்சேர்ந்து விட்டார். அவரின் இறுதிக் காலங்களில் செங்கை ஆழியான், மலேசியா மார்க்கிரட், ஓவியர்சாமி, மாஸ்டர் சிவலிங்கம், பாலா சங்குப்பிள்ளை அகளங்கன், அலி அக்பர் போன்ற எழுத்தாளர்கள் சுவைத்திரளில் பங்காற்றி இருக்கின்றனர்.

கடைசி சுவைத்திரளில் மட்டக்களப்பு கண்ணகி விழா தொடர்பான முக்கியமான விவாதம் ஒன்றுக்கான தலைப்பை தந்துவிட்டு போய்விட்டார் தர்மகுல சிங்கம்.

அவரது மனைவிக்கும் குடும்பத்துக்கும் எனது ஆறுதல்கள். அது மட்டுமல்ல அவர் சுவைத்திரளுக்காக கடன் பட்டிருக்கிறார். அச்சகத்துக்கு காசு கடன் நிற்பதாக மனைவி லக்சுமிதேவி எனக்கு கடிதம் எழுதியிருக்கிறார். அவருக்கு இலக்கியப் புரவலர்கள் உதவி செய்தால் அவரது கடைசிக் காலத்தில் தமிழ் இலக்கியத்துக்காகப் பட்ட கடனை அடைக்க முடியும் என்று நினைக்கிறேன். புரவலர் ஹாஸிம் உமர் போன்றவர்களின் கவனத்துக்கு இந்த விடயத்தை கொண்டு வர விரும்புகிறேன். நானும் என்னாலானதை வெகு விரைவில் அனுப்பி வைப்பேன். ஏனெனில் ஒரு சஞ்சிகையைக் கொண்டு வரும் கஷ்டத்தை டொமினிக் ஜீவா, ஞானசேகரன் பொன்றவர்கள் சொல்லி கேட்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆர்வலர்கள் திருமதி லக்ஸ்மி தேவி தர்மகுலசிங்கம், இலக்கம் 15, பெயிலி வீதி, கோட்டைமுனை, மட்டக்களப்பு என்ற விலாசத்தில் தொடர்பு கொள்ளலாம்.

சிரித்திரன் சிவஞான சுந்தரம் அவர்களை தனது மனதிருத்தி சுவைத்திரளை சிரித்திரன் போலவே கொண்டு வந்த தர்மகுலசிங்கத்தின் பணியும் ஓர்மமும் எங்கள் மனதை விட்டகலா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேராசான் கா. சிவத்தம்பி

## (10.05.1932 - 06.07.2011)

பேராசிரியர் சிவத்தம்பியின் பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கொழும்பு கனத்தை மைதானத்துக்கு எடுத்துச் செல்லும்போது அவரது மனைவி மக்கள் ஓவென்று அழுதார்கள்.

அங்கு நின்ற பெரியவர்கள், படித்தவர்கள், மாணவர்கள் எல்லோரும்தான் அழுதார்கள். சிலரின் கண்களில் இருந்து தாரைதாரையாகக் கண்ணீர் சொரிந்த வண்ணம் இருந்தது.

உண்மையில் உற்ற தோழன் ஒருவரை இழந்த தவிப்பு எங்கள் எல்லோர் மனத்திலும் இருந்தது. நெஞ்சில் வலி இருந்தது.

பேராசிரியரின் உடலை இங்கு லண்டனில் தொலைக்காட்சியில் வீடியோவாக பார்த்தபோது நான் எழுந்து நின்று அஞ்சலி செலுத்தினேன்.

அவர் மிகவும் மரியாதைக்குரிய ஒருவராக இருந்தார்.

பேராசிரியர் இறந்து விட்டார். என்பது மனத்தில் பெரியதொரு வலியாக இன்னும் இருக்கிறது.

நான் முதன்முதலில் பேராசிரியரோடு தொலைபேசியில் பேசியது 'சுன்னத்து செய்தல்' என்ற கட்டுரைக்காக அதற்கு முதல் அவரது கட்டுரைகள், அரசியல் ஆய்வுகள், மேடைப் பேச்சுகள் எல்லாவற்றையும் கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றேன் ... எட்ட நின்று அவரின் புலமையை என்னுள்ளே பிரமித்து மகிழ்ந்திருக்கின்றேன். கிட்டப் போய் பேசவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'சுன்னத்து செய்தல்' தொடர்பாக நான் கேட்ட எல்லா கேள்விகளுக்கும் வரலாற்று ஆதாரங்களோடு உடனுக்குடன் மிகுந்த தோழமையோடு பதிலளித்தார்.

மிகவும் பொறுமையாக நேரமெடுத்து பதிலளித்தார். எந்த மாணவர்கள் எந்த நேரத்தில் எதைப் பற்றிக் கேட்டாலும் பதில் சொல்லக்கூடிய ஒரு பேராசிரிய நண்பனாகத்தான் அவரை நான் மட்டுமல்ல எல்லோரும் மனதார நேசிக்கிறார்கள். அவர் இலங்கைத் தமிழர்களுக்குப் பெரும்கொடையாக விளங்கினார். அவரது மேடைப் பேச்சுகள் வலு சுவாரஸ்யமாக இருக்கும்.

ஒருமுறை பத்திரிகையாளர்களுக்கு பரிசு வழங்கும் விழா ஒன்றில் ஆங்கில, சிங்கள தமிழ் பத்திரிகையாளர்கள் நிறைந்திருந்த ஒரு மேடையில் வைத்து "இலங்கையில் இருந்து வருகின்ற தமிழ், சிங்களப் பத்திரிகைகளை பார்த்தால் இரண்டும் இரண்டு நாடுகளின் பத்திரிகைகள்போல இருக்கின்றன. அது பெரும் கவலையாக இருக்கிறது" என்று சொன்னார். தமிழ்ப் பத்திரிகைகள் தமிழர் சார்பாக மட்டும் எழுதுகின்றன.

சிங்களப் பத்திரிகைகள் தமிழர்களை எதிரிகளாக மட்டுமே எழுதுகின்றன என்ற கவலை அவரிடம் அதிகமாக இருந்தது. ஊடகங்கள் இன ஒற்றுமையை விடுத்து இனப் பிரச்சினைக்கு தொடர்ந்து தூபமிட்ட வண்ணமே இருந்தன என்ற விடயத்தை அவர் தெளிவுற சொன்னார். முக்கிய பத்திரிகையாளர்களுக்கு அன்று உறைத்திருக்கும்.

அவர் சொல்ல வந்த விடயத்தை மிகவும் ஆணித்தரமாக முன்னிறுத்தி பேசுவார். பேசும்போது தமிழ் வார்த்தைகள் கேட்பதற்கு மிகவும் இனிமையாக இருக்கும். அது அவரின் மேடைப் பேச்சின் அழகு.

தினக்குரல் பத்திரிகையில் 'பீஷ்மர்' எனும் புனைபெயரில் வாராவாரம் இலங்கையின் அரசியல் போக்குகளை அலசி ஆராய்ந்து வந்தார்.

கட்டுரை வந்தவுடன் அதிலுள்ள கருத்துகள் தொடர்பாக அவருடன் உரையாடுவேன். அப்போது "நான் சொல்ல வந்த கருத்து உனக்கு விளங்குதோடா" என்று வாஞ்சையோடு கேட்பார்.

அவர் எப்போதும் யாருக்கும் விளங்காத மொழியில் எழுதுவதேயில்லை. எல்லோரும் புரியும்படிதான் எழுதுவார். அவரின் அரசியல் கட்டுரைகளில் யுத்த நெருக்கடி காலங்களில் பிரபாகரனுக்கும் அரசாங்கத்துக்கும் முக்கியமான ஆலோசனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைச் சொல்லுவார். ஆனால் அதை யாரும் கேட்கமாட்டார்கள். கேட்கும் மனநிலையில் பிரபாகரனும் இருக்கவில்லை. அரசாங்கமும் இருக்கவில்லை.

இப்போதும் இலங்கை சுவடிக்கூடத்தில் இருக்கும் தினக்குரல் பத்திரிகையின் பழைய பிரதிகளை எடுத்து பீஷ்மரின் கட்டுரைகளை வாசித்தால் புரியும், எவ்வளவு முக்கியமான அரசியல் ஆலோசனைகள் அவை என்று.

அவருடைய அரசியல் கட்டுரைகளால் அரசாங்கத்துக்கும் நெருக்கடி இருந்தது. புலிகளும் சில நேரங்களில் அவரை விரும்பவில்லை. ஆனாலும் தொடர்ந்து ஒரு தமிழறிஞராக தனது கடமையை அவர் செய்து கொண்டுதானிருந்தார்.

நான் சார்ந்த தொலைக்காட்சிக்காக "செவ்வி காண வேண்டும் சேர்" என்று ஒரு வேண்டுகோளை வைத்த போது "வா" என்று ஒரு நாளைக் குறித்துத் தந்தார்.

கமரா கருவிகளோடு போனபோது இங்கு லண்டனில் இருக்கின்ற ஒரு பொக்ஸ் ரூமைப் போன்ற ஒரு நெருக்கடிமிக்க சிறிய அறையில் தனது பெரிய உடம்பை அசைக்க முடியாமல் இருந்தார். லுங்கியோடும் சேட்டோடும் அவரை இயல்பாக வைத்துப் பேட்டி எடுத்தேன்.

அந்த புழுக்கமான அறையில் லைட்டை வைக்க வேண்டும். ஒரு காத்தாடி இருந்தது. அதனை நிறுத்த முடியவில்லை.

ஒலிவாங்கிக்கு காற்று அடிக்க அது புஸ்... புஸ்... என்கிறது. இவ்வாறான நெருக்கடிக்குள் அரைமணி நேரம் அரசியலும் அரைமணி நேரம் இலக்கியமும் பேசினோம்.

இலங்கையின் மிக முக்கியமான பெரும் அறிவுச் செல்வத்தை எப்படிப் பாதுகாக்க வேண்டும்?

அவருக்கு ஒரு வசதியான ரூம்கூட இல்லாமல் இருந்தது.

எத்தனை பெரிய தமிழ்ப் பணக்காரர்கள் இலங்கையிலும் வெளிநாடுகளிலும் இருந்தாலும் கொழும்பில், யாழ்ப்பாணத்தில் வெண்கல மணி வாங்கவும், கோபுரம் கட்டவும் கோடிக்கணக்கான ரூபாய்களை கோவில்களுக்குக் கொட்டிக் கொடுக்கின்ற எந்தப் பணக்காரரும் சிவத்தம்பி என்ற பொக்கிஷத்தைப் பாதுகாக்க முன்வரவில்லை.

அவர் சிரமப்பட்டுக் கொண்டுதான் இருந்தார். அவருக்கு மாடியில்தான் அறை இருந்தது. நெருக்கடியான லிப்ட் ஒன்றில் தனது கம்பி ஊன்று கோலுடன் கீழே வருவதற்குப் பெரும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குடும்பத்தினர் பார்க்கட்டும் என்று அறிஞர்களை அந்தரத்தில் விடுவது இந்தத் தமிழ் சமூகம் மட்டும்தான் என்று நினைக்கின்றேன். அப்படி ஒரு கவலை எனக்கு வந்தது. ஆனால் அவர் எல்லாவற்றையும் பொறுத்துக் கொண்டு வாழ்ந்திருக்கிறார். அதுதான் அவரின் பெருந்தனம்.

அவ்வளவு சிரமத்தோடும் பேராசிரியர் செம்மொழி மாநாட்டுக்குப் போனதைப் பெரிதுபடுத்தி அவரிடம் படித்த ஒருவர் கூட "சவத்தம்பி" என்று கிண்டலடித்துக் கட்டுரை எழுதிப் பிரசுரத்திற்கு விட்ட பொழுது அவர் என்னிடம் சொன்னது "அவனைப் பல்கலைக்கழகத்தில் பாஸ் மார்க் போட்டு மேலே அனுப்பினது நான்தான். அதுக்கு நன்றியாக இப்படி எழுதுகிறான். எழுதட்டும், எழுதட்டும்."

அவர் எதற்கும் பெரிதாக அலட்டிக் கொள்ளாதவராக இருந்தார்.

தன்மீது முன்வைக்கப்படும் விமர்சனங்களை அவர் நேரடியாக எதிர்கொள்ளுவார். அவரது இறுதி காலங்களில் அவர் தமிழா? அரசியலா? என்று வரும்போது தமிழுக்கே முன்னுரிமை கொடுத்தது சிலருக்குப் பிடிக்கவில்லை. ஆனால் அதைச் சட்டை செய்யாமல் தனக்கு சரி என்று பட்டதை தெளிவாக முன்னெடுத்துக் கொண்டு போனவர் அவர்.

அது என்னவாக இருந்தாலும் தனது ஆழ் அறிவாலும் சுயமான சிந்தனையாலும் தனது கருத்துகளைத் தெளிவோடு வெளிப்படுத்தியவர் அவர்.

தமிழ் நாடகத்துக்கு தனது ஆய்வின் மூலமாகப் பெரும் பங்களிப்பும் பிரகாசமும் ஏற்படச் செய்தவர் அவர்.

விமர்சனங்களுக்கு மாக்சிய நோக்குகளை முன்வைத்து புதிய விமர்சனப் பாங்கை ஏற்படுத்தியவர்.

தமிழ்மொழிக்கு எப்பொழுதும் பெருமை சேர்ப்பவராக பேராசிரியர் தனது வாழ் முழுவதும் இருந்தார்.

பேராசிரியர் மு. இளங்கோவன் பேராசான் சிவத்தம்பியைப் பற்றி சொல்லும்போது "மார்க்ஸ் முல்லர் உள்ளிட்ட பலர், சமஸ்கிருத மொழி இந்தியா முழுவதும் பரவியிருந்த மொழி எனவும் இலக்கண, இலக்கிய வளங்களைப் பிற மொழிகளுக்கு வழங்கிய மொழி எனவும் கருத்துகளைப் பரப்பி மேற்குலகம் முழுமைக்கும் சமஸ்கிருத முதன்மையைப் பதிவு செய்திருந்த காலத்தில் பழந்தமிழ் இலக்கியங்கள் கிரேக்க, உரோம இலக்கியங்களுக்கு நிகரான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைமையை உடையது, சிறப்பை உடையது எனத் தக்க சான்றுகளுடன் நிறுவிக்காட்டி சங்க நூல்கள் மேற்குலகில் கவனம் பெற உழைத்த கைலாசபதி, சிவத்தம்பி எனும் இருவரும் என்றென்றைக்கும் தமிழர்களால் நன்றியுணர்வுடன் போற்றத் தக்கவர்களே' என்று மனதாரக் குறிப்பிடுகின்றார்.

உண்மைதான். பேராசிரியர் சிவத்தம்பியைத் தமிழக அறிஞர்கள் மாத்திரமன்றி உலக அறிஞர்களும் என்றும் போற்றுவார்கள்.

தமிழுக்கு இணையான ஆங்கில புலமை அவரை உலகம் முழுவதும் பிரகாசிக்கச் செய்தது.

இந்தியா, இங்கிலாந்து, ஜெர்மனி பல்கலைக்கழகங்களி லும் பேராசிரியரின் விரிவுரைகள் முக்கியமாகப் பேசப்பட்டன.

நாடகங்களை மிகவும் வாஞ்சையோடு மேடையேற்றி நடித்தார். இலங்கை வானொலியில் அவர் நடித்த 'விதானையார் வீட்டில்' நாடகம் இன்னும் பேசப்படும் ஒன்று. பேராசிரியர் என்ற பெருந்தனத்தை அவரிடம் நான் எப்போதும் பார்க்க வில்லை. மக்களோடு மக்களாக, மாணவர்களோடு மாணவராக அவர் கலந்துபோய் நின்றதுதான் அவரை ஒரு தோழனாக நினைக்க தோன்றுகிறது.

இப்படிப்பட்ட ஆசிரியர்கள் தமிழில் அருமை. பேராசிரிய ரின் இழப்பை "இணையற்ற இலக்கிய வரலாற்றாசிரியரின் மறைவு" என்று அதனால்தான் நாமெல்லோரும் சொல்லி வேதனைப்படுகின்றோம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போர்கள் அடர்ந்த சொந்த
நிலத்திருந்து விரட்டியடிக்கப்பட்ட
ஒருவனின் எழுத்துகள். அவை
பல்லாயிரம் கடல் மைல்கள்
தாண்டிச் சென்று தன் பால்யச்
சித்திரத்தைத் தீண்டிப் பார்க்கின்றன.
சமகாலத்தின் மிக முக்கியமான
அரசியல் நிகழ்வுகளைப்
பதிவுசெய்கின்றன. வாழ
நேர்ந்துவிட்ட மேற்கத்தியச் சூழலை
ஒரு கீழ்த் திசை மனிதன் தனது
மனத்தில் ஏந்திப் பதிவுசெய்யும்
இவ்வெழுத்துகளில் எவ்விதமான
கருத்துத் திணிப்புகளும் இல்லை.
மாறாகக் கடந்து செல்லும் நம்
காலத்தைப் பற்றிய ஓர் எளிய
மனிதனின் எதிர்வினைகளாக இவை
எழுகின்றன.

ரூ. 130
காலச்சுவடு பதிப்பகம்
ISBN 978-93-81969-65-6

Cover Design
Rashmy

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org